# அழகப்பா பல்கலைக்கழகம்

தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுத் தர மதிப்பீட்டில் A+(CGPA:3.64)
தகுதியும் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின்
முதல் தரப் பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதியும் பெற்றது




## காரைக்குடி– 630003.

## தொலைநிலைக்கல்வி இயக்ககம்

# B.A Economics

## 136 33

## MACRO ECONOMICS -I

## பேரியல்பொருளாதாரம் - I

**Copy Right Reserved** **For Private Use Only**

**Author :**
**Dr.R. Nagehwari**
Associate Professor & Head,
Seerhalakshmi Achi College for Women,
Pallathur.

**"The Copyright shall be vested with Alagappa University"**

**All rights reserved. No part of this publication which is material protected by this copyright notice may be reproduced or transmitted or utilized or stored in any form or by any means now known or hereinafter invented, electronic, digital or mechanical, including photocopying, scanning, recording or by any information storage or retrieval system, without prior written permission from the Alagappa University, Karaikudi, Tamil Nadu.**

# SYLLABI-BOOK MAPPING TABLE

## பேரியல் பொருளாதாரம் - 1

| Syllabi | Mapping in Book |
|---|---|
| **அலகு - 1:** பேரியல் பொருளாதாரத்தின் இயற்கை மற்றும் நோக்கம் நுண்ணிய மற்றும் பேரியல் பொருளாதாரம் ஆகியவற்றிற்கு இடையேவேறுபாடு | 1-18 |
| **அலகு - 2:** வருவாய் சுழற்சி- பங்குமற்றும் ஓட்டம் கருத்துக்கள் இரண்டுபிரிவுமாதிரி | 19-21 |
| **அலகு - 3:** தேசியவருமானம்- வரையறைகருத்துகள் அளவீட்டுசமூகக் கணக்கு- அதனபயன்கள | 22-41 |
| **அலகு - 4:** தொன்மையானவேலைவாய்ப்புகோட்பாடுமற்றும் வருவாய் - சந்தையின் சந்தை | 42-53 |
| **அலகு – 5:** போஸ்ட்கீனிசியன் பேரியல் பகுத்தாய்வு கருத்துக்கள்- கின்சின் பங்களிப்பு- ஹான்சன்ISLM வரைபடம். | 54-63 |
| **அலகு - 6:** நுகர்வுசெயல்பாடுபொருள் - நுகர்வுசெயல்பாடுகள் கோட்பாடுகள் | 64-74 |
| **அலகு – 7 :** முதலீட்டுசெயல்பாடு–பொருள் -முதலீட்டுதீர்மானங்கள் - மூலதனத்தின் ஓரளவுதிறன் - முதலீட்டின் ஓரளவுசெயல்திறன | 75-95 |
| **அலகு - 8 :**கீன்ஸின் மாதிரிவருமானம்மற்றும்வேலைவாய்ப்பு தீர்மானத்தின் எளியகீனிசியன் மாதிரி | 96-102 |
| **அலகு - 9:** பெருக்கிஊகங்கள் - கசிவுநிலையானமற்றும் டைனமிக் பெருக்கி–அதன் முக்கியத்துவம். | 103-115 |

| Syllabi | Mapping in Book |
|---|---|
| **அலகு - 10:** முடுக்கிகருத்துகள் - முடுக்கம் கோட்பாடுகள் முடுக்கம் கோட்பாட்டின் செயல்பாடு –அதன் பயன்பாடு | **116-122** |
| **அலகு - 11:** வேலைவாய்ப்பபைபெருக்கிகருத்துகள் - வருவாய் மற்றும் வெலைவாய்ப்புகளின் பரஸ்பரஅடிப்படையின் கொள்கை. | **123-126** |
| **அலகு - 12:** பேரியல் பொருளாதாரகொள்கை மற்றும் அடைவுகள்- முழு வேலைவாய்ப்புநிலை,நிலைப்புத்தன்மை | **127-131** |
| **அலகு-13:** வளர்ச்சிமற்றும்விநியோகம்பொருள் பொருளாதாரவளர்ச்சி வருமானம் மற்றும் செல்வத்தின் விநியோகம். | **132-148** |
| **அலகு - 14:** வளரும் நாடுகளின் நாணய நிதி மற்றும் வருமானம் சார்ந்தகொள்கைகள | **149-166** |

# பொருளடக்கம்

**அலகு-1 பேரியல் பொருளாதாரத்தின் இயற்கை மற்றும் நோக்கம்** **1-18**

1.1. நோக்கங்கள்

1.2. பேரியல் பொருளாதாரத்தின் இயற்கை

**1.2.1** பேரியல் பொருளாதாரத்தின் நோக்கங்கள

1.3. உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்க

1.4. உங்கள் முன்னேற்றத்தைச் சரிப்பார்க்க

1.5 நுண்ணியல் மற்றும் பேரிய பொருளாதாரம்இவற்றிக்கு இடையேயான வேறுபாடு.

**அலகு-2 வருவாயின் வட்ட ஓட்டம்** **19-21**

2.0. அறிமுகம்

2.1. நோக்கங்கள்

2.2. வருவாய்சுழற்சி

2.3 வருவாயின் வட்ட ஓட்டத்தின் பங்கு்

2.4. உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்க.

2.5 வருவாயின் வட்ட ஓட்டம் மாதிரிகள்

2.6. உங்கள் முன்னேற்றத்தைச் சரிப்பார்க்க

**அலகு-3 தேசிய வருமானம்** **22-41**

3.0 நோக்கங்கள்

3.1. தேசிய வருமானம் வரையறை

3.2 தேசிய வருமானம்-கருத்துகள்

3.3. உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்க

3.4. அளவீட்டு சமூக கணக்கு அதன் பயன்கள்

3.5. உங்கள் முன்னேற்றத்தைச் சரிப்பார்க்க

**அலகு - 4 தொன்மையான் வேலை வாய்ப்பு கோட்பாடு** **42-53**

4.1. நோக்கங்கள்

4.2. வேலை வாய்ப்பு கோட்பாடு

4.3 வருவாய்-

4.4. உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்க

4.5. சந்தையின˙ சந்தை

4.6. உங்கள் முன்னேற்றத்தைச் சரிப்பார்க்க

**அலகு 5 போஸ்ட் கீனீசியனின் பேரியல் பகுப்பாய்வு 54-63**

565.1. நோக்கங்கள்

5.2. போஸ்ட் கீனீசியன் பேரியல் பகுப்பாயவ்

5.3 கீனிசியனீன் வரைபட விளக்கம்

5.4. உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்க

5.5. ஹிக்ஸின் பங்களிப்பு ISLM

5.6. உங்கள் முன்னேற்றத்தைச் சரிப்பார்க்க

**அலகு - 6 நுகர்வு சார்பு 64-74**

6.1. நோக்கங்கள்

6.2. நுகர்வு செயல்பாடு-பொருள்

**6.2.1** நுகர்வுச் சார்பின் வகைகள்

6.2.2 இறுதி நிலை நுகர்வு விருப்பம

**6.2.3** இறுத நிலை நுகர்வு விருப்பத்தின் தன்மைகள

6.3. உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்க

6.4. நுகர்வு செயல்பாடு கோட்பாடுகள

6..5 உங்கள் முன்னேற்றத்தைச் சரிப்பார்க்க

**அலகு- 7 முதலீட்டுச் செயல்பாடு 75-95**

7.1. நோக்கங்கள்

7.2. முதலீட்டுச்செயல்பாடு - பொருள்

7.3 மூலதனத்தின் ஒரளவு திறன்(MEC)

7.4. உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்க

7.5 மூலதனத்தின் ஒரளவு செயல்திறன(MEI)

7.6. உங்கள் முன்னேற்றத்தைச் சரிப்பார்க்க

**அலகு 8 கீன்ஸின் வேலைக் கோட்பாடு 96-102**

8.1. நோக்கங்கள்

8.2. கீன்ஸின் மாதிரி வருமானம்

8.3. உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்க

8.4 கீன்ஸின் வேலைவாய்ப்பு தீர்மானம்

8.5. உங்கள் முன்னேற்றத்தைச் சரிப்பார்க்க

**அலகு-9 பெருக்கி ( Multiplier )** **103-115**

9.1 நோக்கங்கள்

9.2. பெருக்கி

9.3 ஊகங்கள் கசிவு

9.4. உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்க

9.5. நிலையான மற்றும் டைனமிக் பெருக்கி முக்கியத்துவம்

9.6. உங்கள் முன்னேற்றத்தைச் சரிப்பார்க்க

**அலகு-10 முடுக்கி(Accelerator)** **116-122**

10.1. நோக்கங்கள்

10.2. முடுக்கி கருத்துகள்.

10.3. முடுக்கிக் கோட்பாட்டின் செயல்பாடு

10.4. உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்க

10.5 முடுக்கியின் பயன்பாடு

10.6. உங்கள் முன்னேற்றத்தைச் சரிப்பார்க்க

**அலகு-11 வேலை வாய்ப்புக் பெருக்கி** **123-126**

11.1. நோக்கங்கள்

11.2. வேலை வாய்ப்பு பெருக்கி

11.3 கருத்துகள்

11.4. உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்க

11.5 .வருவாய் மற்றும் வேலை வாய்ப்புகளுக்கான கொள்கை

**அலகு-12 பேரியல் பொருளாதாரக் கொள்கை** **127-131**

12.1. நோக்கங்கள்

12.2. பேரியல் பொருளாதாரக் கொள்கை

12.3. உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்க

12.4 பேரியல் பொருளாதாரக் கொள்கையின்நோக்கங்கள

12.5. உங்கள் முன்னேற்றத்தைச் சரிப்பார்க்க

**அலகு-13 வளர்ச்சி மற்றும் விநியோகம்** **132-148**

13.1. நோக்கங்கள்

13.2 வளர்ச்சி மற்றும் விநியோகம்

13.3. உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்க

13.4. உங்கள் முன்னேற்றத்தைச் சரிப்பார்க்க

13.5. பொருளாதார வளர்ச்சி

**அலகு 14 வளரும் நாடுகளின் நாணய நிதி மற்றும் வருமானம் சார்ந்தகொள்கைகள் 149-166**

14.0: நோக்கங்கள்

14.1: வளரும் நாடுகளின் நாணய நிதி

14.2: உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்க

14.3: வருமானம் சார்ந்தகொள்கைகள்

14.4: உங்கள் முன்னேற்றத்தைச் சரிப்பார்க்க

**மாதிரி வினாக்கள் 167**

குறிப்பு

# அலகு-1 பேரியல் பொருளாதாரத்தின் இயற்கை மற்றும் நோக்கம்

1.1. நோக்கங்கள்
1.2. பேரியல் பொருளாதாரத்தின் இயற்கை
1.2.1 பேரியல் பொருளாதாரத்தின் நோக்கங்களள
1.3. உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்க
1.4. உங்கள் முன்னேற்றத்தைச் சரிப்பார்க்க
1.5 நுண்ணியல் மற்றும் பேரியல் பொருளாதாரம்இவற்றிக்கு இடையேயான வேறுபாடு.

## 1.1. நோக்கங்கள்

1. பேரியல் பொருளாதாரத்தின் இயற்கை மற்றும் நோக்கம் பற்றி அறிவதற்காக.

2. நுண்ணியல் மற்றும் பேரியல் பொருளாதாரம் இடையே வேறுபாடுகளை பற்றி தெரிவதற்காக.

**அறிமுகம்**

அண்மைக்காலத்தில் பொருளியல் கோட்பாட்டினை "நுண்ணினப் பொருளியல்' அல்லது 'சிறுநோக்குப் பொருளியல்' என்றும் 'பேரியல் பொருளாதாரம்' அல்லது தொகையினப் பொருளியல்' என்றும் இரு பிரிவுகளாகப் பகுக்கின்றோம். நுண்ணினம்' 'பேரினம்' என்னும் இந்த இரண்டு மூலச்சொற்களையும் முதன் முதலில் 1933-ஆம் ஆண்டில் ஆஸ்லோ பல்கலைக் கழகத்தை சேர்ந்த ஸ்வீடன் நாட்டுப் பொருளியலறிஞரான பேராசிரியர் ரக்னா.ஃ.பிரஷ் (Ragnar Fresh) பயன்படுத்தினர். இந்த இரண்டு சொற்களும் இப்பொழுது பொருளியலின் இருபெரும் பிரிவுகளை-ஆய்வு முறைகளான பிரிவுகளைக்-காட்டுகிற கலைச் சொற்களாக மாறியிருக்கின்றன.

நுண்ணினம் என்பதைக் குறிக்கும் 'மைக்ரோ' (Micro) என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு மூலமாக 'ஆமைசழள' என்னும் கிரேக்கச் சொல் அமைந்தது. அதற்குச் 'சிறியது' என்பது பொருள்.

**பேரியல் பொருளாதாரம்-விளக்கம்:-**

பேரினம் என்பதைக் குறிக்கும் 'மேக்ரோ' (Macro) என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு மூலமான (Makros) என்ற கிரேக்கச் சொல்லுக்கு 'பெரியது' என்பது பொருளாகும்.

**நுண்ணினப் பொருளியலும் பேரியல் பொருளாதாரமும்**

நுண்ணினப் பொருளியலும் பேரியல் பொருளாதாரமும் அவை ஆய்கின்ற முறையாலும், எடுத்துக்கொள்ளும் பாடப் பொருளின் அளவாலம், நோக்காலும் வேறுபடுகின்றன.

நுண்ணினப் பொருளியலில் பொருளாதாரத்தின் பகுதிகளைத் தனித்தனியாகப் பயில்கின்றோம். குறிப்பிட்ட பொருட்களின் உற்பத்தி,

குறிப்பு

தனிப்பட்ட நிறுவனங்கள், தொழில்களின் பணிகள், தனி அங்காடியில் ஒவ்வொரு குடும்பமும் எவ்வளவு செலவிடுகின்றது. என்பன போன்றவற்றைப் பயிலகின்றோம். எடுத்துகாட்டாக, ஒரு நிறுவனம்- மொத்தப் பொருளாதாரத்தின் ஒரு பகுதி-எந்த அளவு பொருட்களை உற்பத்தி செய்கின்றது, எப்படி உச்ச நிலை ஆதாயத்தைப் பெறுகின்றது என்பனவற்றை ஆராய்கின்றோம்.

மாறாக, பேரியல் பொருளாதாரம் எப்படி பொருளாதாரம் மொத்தமாகச் செயல்படுகின்றது என்பதைப் பற்றி ஆராய்கின்றது. பொருளாதாரத்தில் மொத்த உற்பத்தி எப்படி அமைகின்றது. இவற்றில் மாற்றம் ஏற்பட்டால் எந்த அளவு எப்படி அமைகின்றது. இவற்றில் மாற்றம் ஏற்பட்டால் எந்த அளவு எப்படி எதனால் ஏற்படுகின்றது எனபன பற்றி பெரிய அளவில் பயில்கின்றோம். ஆனால் நுண்ணினப் பொருளியல் மொத்த உற்பத்தி மொத்த வேலைவாய்ப்பு. மொத்த செலவிடும் தொகை ஆகியவற்றை அப்படியே இருப்பனவவாகக் கொண்டு (given) தனிப்பட்ட நிறுவனங்கள் தொழில்கள் ஆகியவற்றின் உற்பத்தி, வேலைவாய்ப்பு, விலைநிர்ணயம் ஆகியவைபற்றியும் அவற்றில் ஏற்படும் மாற்றங்கள் பற்றியும் ஆராய்கின்றது. ஆதலால் தான் கே.இ.போல்டிங், ‘நுண்ணினப் பொருளியல் என்பது தனிப்பட்ட நிறுவனங்கள், தனிப்பட்ட இல்லங்கள், தனிவிலைகள், கூலிகள், வருவாய்கள், தனித்தொழில்கள் குறிப்பிட்ட பொருட்கள் ஆகியவை பற்றிய படிப்பாகும்’’, என்று கூறுகின்றார்.

## 1.2 பேரியல் பொருளாதாரத்தின் இயற்கை

பேரியல் பொருளாதாரம் பொருளாதார அமைப்பு முறையை மொத்தமாக, ஒரே தொகுதியாக நோக்குகையில், நுண்ணினப் பொருளியல் அந்த மொத்தத்தை உருவாக்கும் பகுதிகளை நோக்குகின்றது. இவற்றை பேராசிரியர் பெர்குசனும், கிரப்சும் ஒரு தோப்பை மொத்தமாக ஆராய்வதற்கும். அதிலுள்ள மரங்களைத் தனித்தனியாக ஆராய்வதற்கும், ஒப்பிடுகின்றனர்.

- பேரியல் பொருளாதாரம் தோப்பைஇமரங்களின் மொத்தத் தொகுதியை ஆராய்வதைப் போன்றது.
- நுண்ணினப் பொருளியல் தோப்பிலுள்ள ஒவ்வொரு தனிமரத்தையும் ஆராய்வதைப் போன்றது. தனிமரத்தைப் பார்க்கின்றவர்கள் தோப்பை மொத்தமாக காண்பதில்லை.

நுண்ணினப் பொருளியலுக்கும் பேரியல் பொருளாதாரத்திற்கும் உள்ள வேறுபாட்டை பேராசிரியர் ஹார்வேயும், ஜான்சனும் ஓர் எளிய எடுத்துகாட்டின் மூலம் கீழ்கண்டவாறு விளக்குகின்றனர். ‘‘நுண்ணினப் பொருளியலும் பேரியல் பொருளாதாரமும் அவை பயில்கின்ற பாடப்பொருளின் வகையால் வேறுபடுவதால் அவை ஆராய்கின்ற முறைகளாலும்வேறுபடுகின்றன. இது எப்படி என்பதை ஓர் உவமையின்

மூலம் விளக்கலாம். நாம் ஒரு மோட்டார் வண்டி எப்படி செயல்படுகின்றதென்பதை அவற்றின் பல்வேறு பகுதிகளைத் தனித்தனியாக ஆராய்வதன் மூலமாகவும் அறிந்து கொள்ளலாம். நாம் சக்கரங்களையும் விசைப்பெட்டியையும், எந்திரத்தையும் கார்பரேட்டரையும், மின்சக்தி செல்லும் குழாயையும், பிறவற்றையும் தனித்தனியாகப் பார்க்கின்றோம். இந்த முறையில் காரின் ஒவ்வொரு பகுதியும் எப்படிச் செயல்படுகின்ற தென்பதை விரிவாக ஆராய்கிறோம். இந்த வகையான (நுண்ணின) ஆய்வு மிகவும் முக்கியமானதானவும் பயனுள்ளதாகவும இருந்த போதிலும் இதில் குறைகளும் உள்ளன. இது ஏனென்றால், நாம் ஒரு பகுதியினைக் கூர்ந்து எப்படி செயல்படுகின்றதென்று ஆராய்கின்றபொழுது காரின் மற்றைப் பகுதிகளைக் கவனிப்பதில்லை கார் செயல்படுவதை மொத்தமாக ஒரு பகுதிக்கும் மற்றைய பகுதிகளுக்கமிடையிலுள்ள தொடர்புகளோடு ஆராய்வது போன்றதே பேரியல் பொருளாதாரம்.

பொதுவாக நுண்ணினப் பொருளியல் நாம் எந்தப் பகுதயை அல்லது நிகழ்ச்சியைப் பற்றி ஆராய்கின்றோமோ, அதனைப்பற்றியே பகுத்தாய்வோம். மற்றய பகுதிகள் எல்லாம் மாறாமல் அப்படியே இருப்பதாகக் (Static) கருதுவோம். ஆனால் பேரியல் பொருளாதாரத்தில், பொருளாதாரத்தை மொத்தமாகத் தொகுத்துப் பகுத்தாய்கையில் அதனுடைய பகுதிகள் இணைந்து, ஒன்றோடொன்று தொடர்பு கொண்டு எப்படிப் பொருளாதார மாற்றங்கள் ஏற்படுகின்றன வென்பதை கற்கின்றோம்.

நுண்ணினப் பொருளியலுக்கும் பேரியல் பொருளாதாரத்திற்குமுள்ள வேறுபாட்டைத் திட்டவட்டமாகக் கூறமுடியுமா தென்பதைச் சிலர் சுட்டிக்காட்டுகின்றனர். ஒரு சூழ்நிலையில் பேரியல் பொருளாதார எல்லைக்குள் வருவது மற்றொரு சூழ்நிலையில் நுண்ணினப் பொருளியலாகின்றது. எடுத்துகாட்டாக, ஒரு நாட்டின் தேசிய வருவாயைப் பற்றிய ஆய்வு பேரியல் பொருளாதாரத்தில் வருகின்றது. ஆனால் உலக வருவாய் ஆய்வு பேரியல் பொருளாதாரத்திலும் தேசிய வருவாய் ஆய்வு நுண்ணினப் பொருளியலும் அடங்குவதைக் காணலாம்.

நுண்ணினப் பொருளியலும் பேரியல் பொருளாதாரமும் ஒன்றுக்கு ஒன்று முரண்பட்டதல்ல.ஒன்றின் பகுப்பாய்வு மற்றதன் பகுத்தாய்வுக்கு துணை செய்கின்றது.

**பேரியல் பொருளாதாரம்-கருத்து வளர்ச்சி:-**

பேரியல் பொருளாதாரம் என்ற சொல்லை1933 இல் ரகக்னர்பிரிஷ் உருவாக்கிய போதிலும், பேரியல் பொருளாதாரம் முக்கியத்துவம் பெறுவதற்கு ஜே.எம்.கீன்சுதான் காரணமென்று போல்டிங் நிலை நாட்டிய போதிலும் பேரியல் பொருளாதாரத்திற்கு ஒரு நீண்ட வரலாற்றுப் பின்புலம் இருப்பதனை மறக்கவோ, மறுக்கவோ இயலாது. பொருளியலில் ‘குறிப்பிட்ட சமநிலை’ (Particular Equilibrium) nghJr; yrkepi (General Equilibrium )

குறிப்பு

என்னும் பகுத்தாய்வு முறை நீண்டகாலமாக இருந்தது. ஆனால், இந்த ஆய்வு முறைகளைத் திட்டவட்டமாகவும், தெளிவாகவும், விளக்கவோ, முக்கியத்துவத்தை உணரவோ பொருளியலறிஞர்கள் தவறிவிட்டனர்.

பொருளியல் சிந்தனை வளர்ச்சி வரலாற்றினை நோக்கினால் பொருளியல் தொடக்க வளர்ச்சி பேரியல் பொருளாதாரமாக இருந்ததைக் காணலாம். பொருளியலின் முன்னோடிச் சிந்தனையாளர்களான 'வாணிபத்தத்துவத்தினர் (Mercantilists) நாட்டின் வளங்களை எல்லாம் எப்படிச் சிறப்பாகப் பயன்படுத்தி நாட்டைச் சிறந்த, உயர்ந்த நிலைக்கு (வாணிபத்தின் மூலம்) கொண்டு வருவதென்பதைப் பற்றி எண்ணிப்பார்க்கையில் பொருளாதார அமைப்பினை ஒட்டு மொத்தமாகவே கருதினார். பிரான்சில் 1857க்குப் பிறகு இருபதாண்டுகள் செல்வாக்குப் பெற்றிருந்த இயற்கை வாதிகள் (Physiocrates) பொருளாதாரத்தை மொத்தமாக நோக்கினார். அவர்கள் செல்வத்தின் வட்ட ஓட்டக் (Circular flow of Wealth) கருத்தை சமுதாயத்தின் மூன்று வகுப்புகளாகப் பகிர்ந்து விளக்கினர். இந்த கருத்தை வால்ரஸ் (Walras), போம்பவர்க் (Bohm Bawerk), சும்பீட்டர் (Schumpeter) போன்றவர்கள் வளர்த்து தேசிய வருவாய் செலவு பகுத்தாய்வாக (பேரியல் நோக்கு) உருவாக்கினர்.

**பொருளியலின் தந்தையான ஆடம்ஸ்மித்** (Adamsmith) நாடுகளின் செல்வம் பற்றி ஆராய்வதைப் பொருளியலாகக் கருதியபோதிலும் நுண்ணின ஆய்வுக்கு வழிவகுத்தார். அவரைத் தொடர்ந்து வந்த மரபுவழிப் (Classical) பொருளியல் சிந்தனையாளர்களின் எழுத்துக்களில் எல்லாம் நுண்ணினப் பேரியல் பொருளாதாரக் கோட்பாட்டுகளின் கருத்துக்கள் கலந்து பின்னிப்பிணைந்து இருப்பதைக் காணலாம். தொன்மைப் பொருளியறிஞர்கள் முதலாளித்துவப் பொருளாதாரத்தில் கட்டுப்பாடற்ற அங்காடி எப்படிச் செயல்படுகின்றதென்பதை ஆராய்ந்தனர். ரிக்கார்டோ (Ricardo), மார்க்ஸ் (Marx) இருவரும் ஆய்ந்தமுறை பேரியல் பொருளாதாரச் சிந்தனைக்கு உரமளித்தது. மால்தஸ் (T.S.Malthus) குறிப்பிடத்தக்க முறையில் பேரியல் பொருளாதார அணுகுமுறை வளர்ச்சிக்குத் துணை செய்தார். கீன்சின் பொதுகோட்பாடு உருவாக மால்தசின் அணுகுமுறையே தூண்டுதலாக அமைந்தது.

ஆல்பிரட் மார்ஷலும் (Alfred Marshall) அவரைச் சார்ந்த புதிய மரபு வழி (Neoclassical) பொருளியல் சிந்தனையாளர்களும் பேரியல் பொருளாதார ஆய்வு முறையை முற்றிலும் புறக்கணித்தார்கள். நுண்ணிய ஆய்வு முறையை முழு அளவுக்கு வளர்த்தார்கள். மொத்தப் பொருளாதார அமைப்பைப் பின் புலமாகக் கொண்டு, தனிப்பகுதிகளை நுணுகி ஆராய்ந்து கோட்டுபாடுகளைச் செம்மைப்படுத்தினார்கள். சேயின் விதியை (Say's Law) அப்படியே ஏற்றுக்கொண்டனர். மால்தஸ், சிஸ்மாண்டி (Sismondi), ஹாப்சன்

குறிப்பு

(J.A.Hobson) ஆகியோா் சேயின் விதியை கடுமையாகச் சாடியதைப் பொருட்படுத்தவில்லை.

**உலகப் பெருமந்தம் (Great Depression – 1929-33) :**

சோவியத் ரஷ்யா தவிர எல்லா நாடுகளையும் ஊருவிப் பாதித்து விலைகளையும், வருவாயையும், வேலைவாய்பையும் வீழ்ச்சியடையச் செய்து, நாட்டு பொருளாதாரத்தைதை நிலைகுலையச் செய்தபொழுது முதலில் மரபுவழிப் பொருளியல் சிந்தனையாளா்களின் கருத்துப்படி ஒவ்வொரு நாட்டிலும் பொருளாதாரம் தானே சீா்பட்டுவிடுமென்று நம்பினா். ஆனால் நிலை சீா்கேடடைந்து கொண்டே இருந்ததுவே தவிர, பொருளதார மீட்சி ஏற்படவில்லை. இந்நிலையில் தேசிய வருவாய், மொத்த உற்பத்தி, செலவு, நுகா்வு, சேமிப்பு, முதலீடு போன்று தொகுதிகளைப் பற்றி எண்ணிப்பாா்க்க வேண்டிய தேவையை உணா்ந்தனா்.

1936 இல் ஜான் மேனாா்டு கீன்சின் (John Meynard Keynes) வேலை வாய்ப்பு, வட்டி, பணம் பற்றிய பொதுக்கோட்பாடு'' (General Theory of Employment, Interest and Mony) நூல் வெளி வந்தது. கீன்ஸ் தொன்மை, புதிய மரபு வழிச் சிந்தனையாளா்களின் கருத்துக்களிலிருந்து மாறுபட்ட கருத்துக்களைச் கூறினாா். தன்னலநோக்கால் எல்லாச் சமயங்களிலும் முழு நிறை வேலை வாய்ப்பு நிலவுவதில்லை என்பதை நிலை நாட்டினாா். கீன்சின் புரட்சியால் (Keynesian Revolution) 'புதுப் பொருளியல்' (New Economics) என்னும் பெயா் பதிய பொருளாதாரச் சிந்தனைக்கு வந்தது. கீன்சைப் போன்றே பிரெஞ்சுப் பொருளியலறிஞரான லியோன் வால்ரஸ் (Leon Walras), (Knwt Wicksell) அமெரிக்கப் பொருளியல் வல்லுநரான இா்விங் பிஷா் (Irving Fisher) ஆகியோா் கீன்சுக்கு முன்பே பேரியல் பொருளாதார நோக்கை வலியுறுத்தி பின்பற்றி எழுதியிருந்தனா். ஆனால் கீன்ஸ் சேயின் விதியை மறுத்து தொகையின ஆய்வு முறையை நிலை நாட்டியபிறகு பேரியல் பொருளாதார அணுகுமுறை சிறப்பான இடத்தைப் பெற்றது.

பேரியல் அணுகு முறையின் தேவையை இன்று எல்லாப் பொருளியலறிஞா்களும் ஏற்றுக்கொள்கின்றனா். நுண்ணினப் பொருளியலின் துணையால் மொத்தப் பொருளாதாரமும் செயல்படுவதை போதுமான அளவில் விளக்க இயலவில்லை. மேலும் நுண்ணின ஆய்வுமுறை, பொருளாதாரம் பற்றிய தவறான முடிவுக்கு சில வேளைகளில் நம்மை அழைத்துச் செல்கின்றது. பொருளாதாரத்தில் ஒரு பகுதிக்கு எது உண்மையானதாக இருக்கின்றதோ, அதுவே பொருளாதாரம் முழுமைக்கும் சரியானதாக இருக்குமென்று கூறமுடியாது. எடுத்துக்காட்டாக, சேமிப்பைக் கூறலாம். சேமிப்பு தனிமனிதருக்கு நல்லது. ஆனால் சமுதாயத்தில் எல்லோரும் சேமித்தால், மொத்தத் தேவை குறைய வேலைவாய்ப்புப் பாதிக்க பெருமந்தம் ஏற்படும். ஆதலால் பொருளாதாரத்தை மொத்தமாகப்

குறிப்பு

பார்ப்பது தேவையாகின்றது. உலகப் பெருமந்தமும் இரண்டாம் உலகப்போருக்குப்பின் தோன்றிய பணவீக்கமும், வளர்ச்சி பெற்ற நாடுகளில் வாணிபச் சுழ்லகளைக் கட்டுப்படுத்த வேண்டிய தேவையும், பின்தங்கிய நாடுகள் பெறமுயலும் பொருளாதார தேவையும், பின்தங்கிய பேரியல் பொருளாதாரத்தின் தேவையும் முக்கியத்துவத்தையும் கூட்டியுள்ளன.

**88.⁚.1.2.1 பேரியல் பொருளாதாரத்தின் நோக்கங்கள்**

தற்காலத்தில் பேரியல் பொருளாதாரச் சிந்தனைகன் இடம் பெற்றிருப்பதற்குச் சில குறிப்பிடத்தக்க **நோக்கங்களக்** உள்ளன. அவற்றைற இங்கு தொகுத்துக் கூறலாம்.

1. **அரசின் பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்க:**

அரசின் பொருளாதாரக் கொள்கைகளைச் சரியான முறையில் உருவாக்கவும், திறமையாகச் செயல்படுத்தவும் பேரியல் பொருளாதாரம் துணை செய்கின்றது. இப்பொழுது முதலாளித்துவ அரசோ, சமதா்ம அரசோ, பொதுவுடைமை அரசோ தனிப்பட்ட மனிதா்களின் பொருளாதார நடவடிக்கைகளை மட்டுமல்ல, குழுக்களின் நடவடிக்கைகளையும் மொத்தப் பொருளாதாரத்தையும் நெறிபடுத்தவும், கட்டுப்படுத்தவும், வேண்டியதிருக்கின்றது. பொது விலை மட்டம், பொது உற்பத்திநிலை, மொத்த வாணிபம் ஆகியவை தொடா்பான கொள்கைகளை உருவாக்க தொகுப்பு மாறிகளின் (Aggregative variables) விவரங்கள் தேவைப்படுகின்றன. பேரியல் பொருளாதாரம் தான் இதற்குத் துணை செய்கின்றது.

2. **தற்காலப் பொருளாதார அமைப்பு முறையை அறிய :**

இன்றையப் பொருளாதார அமைப்பு முறை சிக்கலானதாக இருக்கின்றது. பல்வேறு சக்திகள் செயல்படுகின்றன. தேசிய வருவாய், மொத்த உற்பத்தி, மொத்தச் செலவு, மொத்தச் சேமிப்பு, மொத்த முதலீடு போன்ற மாறிகள் நாட்டின் பொருளாதாரம் செயல்படுவதில் பெரும்பங்கு பெறுகின்றன. இவற்றைப் புரிந்து கொள்ளாமல் பொருளாதார அமைப்பையும், அது செயல்படும் முறையையும், அதில் தோன்றும் சிக்கல்களையும் புரிந்து கொள்ள இயலாது. இவற்றை அறிய பேரியல் பொருளாதார நோக்கை தேவைப்படுகின்றது.

3. **தொகுதிகளின் முக்கியத்துவம் :**

ஒன்றை முழுமையாக அறிய முயலும் எந்து அறிவியலும் தனித்தனி உறுப்புகளை மட்டும் ஆராய்ந்தால் போதாது. ஒன்றில் எண்ணற்றவை இருக்கின்றபெழுது தொகுதிகளின் பொதுமைகளை அறிந்தால்தான் மொத்தத்தைப் பற்றிய உண்மையை உணர முடியும் பொருளாதாரம் விரிந்து பரந்ததாகவும், எண்ணற்ற பகுதிகளைக் கொண்டதாகவும் இருப்பதால், தனிப்பட்ட சிலவற்றிலிருந்து பொருளாதாரம் முழுமைக்குமான உண்மைகளை அறிய முடியாது. பொருளாதார உறுப்புகளின் தொகுதிகளையும், சராசரிகளையும் அறிய பேரியல் பொருளாதார அணுகு முறைதான் ஏற்றதாக இருக்கின்றது.

குறிப்பு

**4. பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் கட்டுப்படுத்த :**

நமது பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்படுகின்ற ஏற்றத்தாழ்வுகள் பொருளாதாரத்தைப் பெரிதும் பாதிக்கின்றன. மந்தம், பணவீக்கம், வாணிபச்சூழல் போன்றவை முதலாளித்துவப் பொருளாதாரத்தை ஆட்டிப்படைக்கின்றன. பொருளாதார ஊஞ்சலாட்டங்களின்றி நிலையான பொருளாதாரவளர்ச்சியைப் பெற எல்லா நாடுகளும் முயல்கின்றன. இதற்கு மொத்தச் சேமிப்பு, முதலீடு ஆகியவற்றைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டியது தேவைகளாகும். பேரியல் பொருளாதார ஆய்வின் மூலம்தான் இவற்றின் போக்கினை அறிந்து கட்டுக்குள் அடக்கி பொருளாதார நடவடிக்கைகள் திடீரென்று கூடுவதையோ குறைவதையோ முற்றிலும் நீக்க முடியாவிட்டாலும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர இயலும்.

**5. எதிர்காலப் போக்கைச் சரியாகக் கணிக்க:**

பொருளாதாரத்தின் பொதுமைப் போக்குகளை எதிர்காலத்தில் எப்படி அமையுமென்று கூற, மூலதனம், மக்கள் தொகை, வாணிபம், தொழில் ஆகியவை பற்றிய தொகுப்புப் புள்ளி விவரங்கள் தேவை பொருளாதாரத்தின் முக்கிய கூறுகள் தொகுதியின் முறையில் எப்படி மாறுகின்றனவென்ற பேரியல் கண்ணோட்டமில்லாமல் அவை எதிர்காலத்தில் மாறும் என்பதையோ, பொருளாதாரம் எப்படி இருக்கும் என்பதையோ முன்கூட்டியே ஊகித்துக் கூற முடியாது.

**6. பொருளியல் கோட்பாடுகளை ஆராய :**

நுண்ணின நோக்கில் பொருளியல் கோட்பாடுகளை ஆராய்வது முழுமையானதாக இருப்பதில்லை என்பதைப் பொருளியலறிஞர்கள் உணர்கின்றனர். பொருளாதாரத்தின் மொத்த நிலையை விளக்க இயலாமல் தொன்மைக் கோட்பாடுகள் தடுமாறுகின்றன. ஆதலால் பேரியல் அணுகுமுறையில் பொருளாதார நிலையை விளக்கும் கோட்பாடுகளை உருவாக்குவதும் ஆராய்வதும் தேவையாகின்றன.

**7. நுண்ணினப் பொருளியலுக்கு உதவி:**

பேரினப் பொருளியல் நுண்ணினப் பொருளியலின் கோட்பாடுகளை உருவாக்குவதற்கும் புரிந்து கொள்வதற்கும் துணை செய்கின்றது. தொகையின அணுகுமுறையில் தொகுதிகளைப் பெருமளவில் ஆராய்வது பொருளியல் கோட்பாடுகளை உருவாக்க வழிவகுக்கின்றது. எடுத்துக்காட்டாக, குறைந்து செல் பயன்பாட்டு விதியை உருவாக்க எண்ணற்ற நுகர்வோரின் அனுபவங்களைத் தொகுத்து அறிவது துணை செய்கின்றது. இதே போல இருக்கின்ற நுண்ணினப் பொருளியல் கோட்பாடுகளைச் சரிதானா வென்று சோதித்துப் பார்க்கவும் பேரியல் பொருளாதாரம் உதவுகின்றது.

**8. வாணிபச் சுழல் கோட்பாடுகள்:**

முதலாளித்துவப் பொருளாதாரத்தில் உள்ளார்ந்த சீர்கேடாக வாணிபச் சுழல் இருக்கின்றது. 1930 வரை வாணிபச் சுழலைப் பற்றி உருவான

குறிப்பு

கோட்பாடுகள் எல்லாம் ஏதாவது ஒரு நோக்கிலேயே வாணிபச் சுழலை ஆராய்ந்தன. பேரியல் பொருளாதாரம் வளர்ச்சி பெற்றிருப்பதால் இப்பொழுது வாணிபச்சுழலை மொத்தப் பொருளாதார நோக்கில் ஆராய்ந்து, அதனைத் தீர்க்க பண, நிதி, பிற நடவடிக்கைகளை எப்படி மேற்கொள்வதென்பதைப் பற்றித் தீர்மானிக்க இயல்கின்றது.

**9. முழுநிறை வேலை வாய்ப்பு:**

நாட்டிலுள்ள மக்களுக்கெல்லாம் வேலைவாய்ப்பை வழங்குவது இன்றைய அரசின் தலையாய பொறுப்பாயிருக்கின்றது. முழுநிறை வேலைவாய்ப்பைத் தீர்மானிக்கின்ற வருவாய், நுகர்வு, சேமிப்பு, முதலீடு ஆகிய எல்லாம் பேரியல் பொருளாதாரத்தின் கருத்துக்களாகும். பொதுச் சமநிலையைப் பற்றி ஆராயும் பேரியல் பொருளாதார அணுகுமுறையின் மூலம்தான் வேலைவாய்ப்பை அடைய இயலும்.

**10. தேசிய வருவாயை அளக்க, ஆராய:**

எல்லா நாடுகளும் தங்களது வருவாயைப் பெருக்குவதில், கண்ணும் கருத்துமாக இருக்கின்றறன. கீன்சுக்கு முன்னால் மார்ஷல், பிஷர் போன்றவர்கள் தேசிய வருவாயைப் பற்றி ஆராய்ந்தபோதிலும் கீன்சின் பொருளியல் கருத்துக்குப் பிறகே நாட்டு வருமானத்தில் முக்கியத்துவத்தை உணர்ந்து அறிவியலடிப்படையில் அதனை ஆராய்ந்தனர். பேரியல் பொருளாதார வளர்ச்சி நாட்டு வருமானத்தைக் கணிக்கவும், ஆராயவும் வாய்ப்பளித்துள்ளது. 1971-ல் அமெரிக்கப் பொருளியலறிஞரான சைமன் குஸ்நட்ஸ் (Simon Kuznet) நாட்டு வருமான ஆய்வில் அரிய கருத்துக்களைக் கூறி நோபல் பரிசு பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

**11. பொருளாதார வளர்ச்சி :**

ஐக்கிய நாடுகள் சபையின் முயற்சியால் உலக நாடுகள் பொருளாதார வளர்ச்சி பெறப்பாடுபடுகின்றன. சில நாடுகள் மிகவும் முன்னேறியும், சில நாடுகள் வறுமையில் வாடிக்கொண்டும் இருக்கின்ற நிலையை மாற்றுவது தேவையாகின்றது. வறுமை வளர்ச்சிச் சிக்கல்களை ஆராயவும் தொகுதிக் கண்ணோட்டமே தேவையாகின்றது. பேரியல் பொருளாதார ஆய்வின் விளைவால் விரைவான பொருளாதார வளர்ச்சிக்கான வழிமுறைகளைக் கூற இயல்கின்றது.

**12. பணவீக்கமும் பணவாட்டமும்:**

நாட்டு மக்களின் வாழ்க்கையை பணவீக்கமும் பணவாட்டமும் அடிக்கடி பாதிக்கின்றன. ஒரே சீராக அமையும் பொருளாதார வாழ்க்கையைப் பணவீக்கமும் பணவாட்டமும் பாதிக்கின்றனவென்று கீன்ஸ் கருதுகின்றார். இரண்டும் நுகர்வுச்செலவு, முதலீடு, உற்பத்தி ஆகியவற்றை ஒட்டியே ஏற்படுகின்றன. இவற்றின் தன்மைகளை ஆராயவுட், இவற்றைத் தீர்க்கவும் பேரியல் பொருளாதார அணுகுமுறையே துணை செய்கின்றது.

மொத்தத்தில் பொருளாதாரத்தை முழுமையாக அறிந்து கொள்ள, தேசிய வருவாய், உற்பத்தி, முதலீடு சேமிப்பு, நுகர்வு ஆகிய

குறிப்பு

தொகுதியினக் கருத்துக்கள் துணை செய்கின்றன. பேரியல் பொருளாதார அணுகுமுறை பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் தூண்டுதலாக உள்ளது.

**பேரியல் பொருளாதாரத்தின் வரையறைகள்**

தற்காலத்தில் பேரியல் பொருளாதாரம் மிகவும் முக்கியத்துவம் பெற்று வருகின்றது. அதனால் பல பயன்கள் கிடைக்கின்றன. இருந்தாலும் பேரியல் பொருளாதார ஆய்விலும் அணுகு முறைகளிலும் சில உணர்ந்த குறைகளும் வரையறைகளும் உள்ளன. அவற்றை இங்கு சுட்டிக்காட்டலாம்.

1. **தொகுத்துப் பொதுமைப் படுத்துதல் :** பேரியல் பொருளாதாரம் காணும் உண்மைகளைத் தொகுத்து பொதுமைப்படுத்தி மொத்தப் பொருளாதாரத்திற்குக் கூறுகின்றது. தொகையின ஆய்வில் தனிமனிதர், சிறு பகுதிகள் ஆகியவற்றை ஆராய்ந்தே பகுதிகளில் உண்மையாக இருப்பது மொத்தத்திற்கும் உண்மையாக இருக்குமென்ற முடிவுக்கு வருகின்றோம். ஆனால் இந்த தர்க்க இயல்போக்கில் தவறான முடிவுக்கு வரவாயப்பு இருக்கின்றது. அளவுக்கு மிகுதியாகப் பொதுமைப்படுத்துகின்ற பொழுது அது தவறாகிவிடலாம். தனிப்பட்டவர்களுக்குச் சரியாக இருப்பதெல்லாம் மொத்தத்திற்கும் சரியாக இருக்காது. எடுத்துக்காட்டாக, வங்கியிலிருந்து ஒருவர் தனது எல்லாப்பணத்தையும் திரும்பப்பெறுவதால் தீங்கில்லை. ஆனால் வைப்பாளர்கள் எல்லோரும் ஒரே நேரத்தில் திரும்பப் பெற்றால் வங்கி முறிந்துவிடும்.

2. **தனிப்பட்டவற்றைப் புறக்கணித்தல்:** பேரியல் பொருளாதாரம் எல்லாவற்றையும் பொதுமைப்படுத்தும் முயற்சியில் தனிப்பட்டவற்றையும் தனிப்பட்டவர்களையும் புறக்கணித்து விடுகின்றது. சமுதாய நலனை வளர்க்கத் திட்டம் தீட்டுகையில் முற்றிலும் தனிப்பட்டவர்களைப் புறக்கணித்துவிட முடியாது. தனிப்பட்டவர்களின் தொகுதிதான் சமுதாயம் என்பதால், நலப்பொருளியல் கொள்கைகளை உருவாக்க பேரியல் பொருளாதாரம் மட்டுமே போதுமானதாக இருக்கவில்லை.

3. **தொகுதியிலுள்ளவை ஒரே சீரானதாக இல்லை:**பேரியல் பொருளாதாரம் உள்ளவை எல்லாம் ஒன்று போல இருப்பதாகக் கருதுகின்றது. ஆனால் நடைமுறையில் தொகுதியில் உள்ளவை வேறுபாடுகளைக் கொண்டவைகளாக உள்ளன. பேரியல் பொருளாதாரம் இத்தகைய வேறுபடுகின்ற கூறுகளை (Heterogenous Elements) புறக்கணித்து விடுகின்றது. எடுத்துக்காட்டாக நாட்டிலுள்ள சராசரி கூலிவீதத்தை, மொத்தக்கூலியை வேலை செய்பவர்களின் எண்ணிக்கையால் வகுத்து அறிகின்றோம். கூலி பெறுகின்றவர்கள் எல்லாம் ஒன்று போல இருப்பதில்லை. கூலி பெறுகின்ற வேளாண்மைக் கூலியாளுக்கும், பெருந்தொழிலில் பணிசெய்பவருக்கும், ஆசிரியருக்கும் இடையில்

குறிப்பு

வேறுபாடுகள் உள்ளன. இவற்றைக் கணக்கிலெடுத்துக் கொள்ளாத தொகுதி நோக்கு தவறான கருத்தை தோற்றுவிக்கலாம்.

4. **தொகுதிகளை அமைப்பதில சிக்கல்:** ஒரு தொகுதியில் உள்ளவை எல்லாம் ஒருமையானதாக இருப்பதில்லை. போல்டிங் கூறுவதைப் போல, 2 ஆப்பிள் , 3 ஆராஞ்சுகள் , 5 பழங்கள் என்பதை ஒரு தொகுதியாகக் கொள்ளலாம். ஆனால் 2 ஆப்பிள்கள் , 3 ஆராஞ்சுகள் , 3 மேல்மாடிக் கட்டிடங்கள் ஆகியவற்றை அர்த்தமுள்ள தொகுதியாகக் கருதமுடியாது. இப்படி வேறுபட்டிருக்கும் தொகுதியை அளவிட முடியாது. பணத்தின் மதிப்பு நிலையாக இருப்பதில்லை. ஒன்றின் மதிப்புக் கூடுகின்ற பொழுது மற்றதன் மதிப்புக் குறையலாம். இதனால் தொகுதிகளைப் பற்றிச் சரியாகக் கணக்கிட முடிவதில்லை.

5. **தொகுதி மாறிகளின் முக்கியமின்மை :** பேரியல் பொருளாதாரம் கணித்துக்கூறும் தொகுதி மாறிகள் (Variables) நடைமுறை முக்கியத்துவ மற்றிருப்பதாகச் சிலர் கருதுகின்றனர். எடுத்துக்காட்டாக, தேசிய வருவாய் கூடுகின்ற பொழுது எல்லா மக்களின் வருவாயும் கூடுலதாகக் கூற முடியாது. சில செல்வந்தர்களின் வருவாய் கூடுவதாலேயே நாட்டின் மொத்த வருமானம் கூடியிருக்கலாம்.

6. **எல்லாவற்றிற்கும் பயன்படாமை :** நடைமுறையிலுள்ள எல்லாச் சிக்கல்களையும் பேரியல் பொருளாதார நோக்கில் அணுகி தீர்வு காண முயல்வது தவறாகி விடலாம். பொது விலைகளைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளும் நடவடிக்கை ஒரு குறிப்பிட்ட பொருளின் தனி விலையைக் கட்டுப்படுத்தவும் பயன்படுமென்று கூறமுடியாது.

7. **தொகுதியின் அக அமைப்பு முறையைக் கவனியாமை:** தொகுதியாகக் கருதுபவைகளின் அக அமைப்பில் வேறுபாடுகள் இருக்கலாம். தொகுதியின் மொத்த அமைப்பை மட்டும் கவனித்து, அக அமைப்பைப் புறக்கணித்துப் பெறும் முடிவு தவறாகிவிடலாம். எடுத்துக்காட்டாக, எல்லாவிடுதிகளிலும் உள்ள மாணவர்களை ஒரு தொகுதியாகக் கருதுவதைக் கூறலாம். நகரக் கல்லூரி விடுதி மாணவத் தொகுதிக்கும், கிராமப்புறக் கல்லூரி விடுதி மாணவத் தொகுதிக்கும் வேறுபாடு இருப்பதனைச் சுட்டிக் காட்டலாம்.

**மதிப்பீடு :** பேரியல் பொருளாதார அணுகு முறையில் கூறுகின்ற குறைகள் எல்லாம் நடைமுறையில் இதனைப் பயன்படுத்துகின்றபொழுது, வேறுபட்டவற்றை உள்ளடக்கிய தொகுதிகளால் தோன்றக் கூடியவைகளே. இதனால் பேரியல் பொருளாதாரத்தைப் பயனற்றதென்று கூறிவிட முடியாது. குறைகள் இருந்தாலும், இன்றைய உலகில் பேரியல் பொருளாதாரத்திற்கு இருக்கின்ற முக்கியத்துவத்தை மறக்கக் கூடாது.

## 1.3 உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்க

1.பேரியல் பொருளாதாரதம் என்றால் என்ன?
--------------------------------------------------------------------------------------------------------
2. பேரியல் பொருளாதாரத்தின் முக்கியத்துவம பற்றி கூறுக?----------------------
------------------------------------------------------------------------------------

குறிப்பு

**நுண்ணின பேரியல் ஆய்வு முறைகளின் தொடர்பு**

நுண்ணின ஆய்வு முறையும் பேரியல் ஆய்வுமுறையும் வெளப்படையாக, மேற்போக்காகத் தோற்றுவது போல, தனித்திருக்க வில்லை. ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கின்றன. ஓர் ஆய்வு முறை முழுமை பெற அடுத்த ஆய்வுமுறை துணை செய்கின்றது.

நுண்ணினப் பொருளியியலில் ஒரு சிக்கலுக்குத் தீர்வுகாண பேரியல் பொருளாதார ஆய்வுமுறையும் தேவைப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, ஏதாவது ஒரு பொருளின் விலை கூடுவதனைப் பற்றி ஆராய்கின்றோமென்று வைத்துக்கொள்வோம். அந்தப் பொருளின் விலை தனித்து நிர்ணயிக்கபடுவதில்லை. அதன் விலைக்கும், மற்றய பொருட்களின் விலைக்கும், நாட்டின் வருவாய் பகிர்வு, உற்பத்திநிலை போன்றவவற்றிக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. எல்லாவற்றையும் தொகுத்து ஆராயாமல் ஒரு பொருளின் விலை ஏற்றத்திற்கு உண்மையான காரணங்களைக் கண்டு தீர்வு கூற இயலாது.

நுண்ணினப் பொருளியல் ஆய்வுக்குப் பேரியல் பொருளாதார ஆய்வு துணை நிற்பதைப்போல, பேரியல் பொருளாதார ஆய்வு சரியாகவும், முழுமையாகவும் அமைய நுண்ணினப் பொருளியல் ஆய்வு வேண்டியதிருக்கிறது. பொருளியில் அமைப்பினை முழுமையாகத் தெரிந்து கொள்ள அவற்றின் பகுதிகளைப் பற்றிய தெளிவான அறிவு தேவைப்படுகின்றது. பகுதிகளின் தொகுதிதான் முழுமையான அமைப்பு என்பதை மறந்துவிடக் கூடாது. ஆதலால் முழுமையான அமைப்பைப் பற்றிய பேரியல் ஆய்வு, பகுதிகளைப் பற்றிய நுண்ணின ஆய்வு வழியே நடைபெறுவதைக் காண்கின்றோம்.

பொருளியல் கோட்பாடு முழுமைபெற நுண்ணினப், பொருளியலும் பேரியல் பொருளாதாரமும் தேவைப்படுகின்றன. இருவகை ஆய்வு முறைகளையும் ஒருங்கிணைந்த முறையில் அறிந்து கொண்டால்தான் பொருளியல் அறிவு நிறைவுபெறும். ஆதலால் தான் பேராசிரியர் சாமுவேல்சன், ‘உண்மையில் நுண்ணினப் பொருளியலுக்கும், பேரியல் பொருளாதாரத்திற்கும் இடையில் எந்த முரண்பாடும் இல்லை. இரண்டும் மிகவும் முக்கியமானவையே. ஒன்றை அறிந்து மற்றதை அறியாமிருந்தால் நீங்கள் பாதிக்கும் குறைவாகவே பொருளியலைக் கற்றவராக இருப்பீர்கள்’’ என்று கூறுகின்றார். நாம் ஓரளவு எச்சரிக்கையோடு நுண்ணினப் பேரியல்

குறிப்பு

பொருளாதாரச் சிக்கல்களைத் தொகையின ஆய்வு நோக்கிலும் ஆராய்ந்தால் பயனுள்ள தீர்வுகளைப் பெற இயலும்.

**இயங்கா நிலைப் பொருளியலும் இ இயங்கு நிலைப் பொருளியலும்**

இயங்கா நிலைக்கும் இயங்கு நிலைக்கும் இடையிலுள்ள வேறுபாட்டை அறிந்து கொண்டு பொருளாதாரக் கோட்பாடுகளை உருவாக்குவது தற்காலத்தில் பொருளாதார ஆய்வு முறைகளில் சிறப்பான இடத்தைப் பெறுகின்றது. சில பொருளியலறிஞர்கள் பொருளியல் கோட்பாடுகளை இயங்கா நிலையோடு தொடர்புடையவை, இயங்கு நிலையோடு தொடர்புடையவை என்று இருபெரும் பிரிவுகளாகப் பகுக்கின்றனர். ஆதலால், இரண்டினைப் பற்றியும் தெளிவாக வேறுபடுத்தி அறிந்துகொள்வது தேவையாகின்றது.

தொடக்க காலத்தில் பொருளியல் சிந்தனை பெரிதும் நிலையாக இருக்கும் இயங்கா நிலையோடு தொடர்புடையதாகவே இருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின்பகுதியில் தான் இயங்கும் நிலைக்கும், இயங்கா நிலைக்கும் இடையில் வேறுபாட்டை உணர்ந்து பொருளியல் ஆய்வில் பயன்படுத்தினர்.

இயங்கா நிலை (Dtatic), இயங்குநிலை (Dynamic) என்னும் இரண்டு சொற்களும் இயற்பியலில் இயந்திரவியல் பகுதியில் பயன்படுத்தப்பெற்றன. இவற்றை முதன் முதலில் ஆகஸ்ட் கோம்டே (August Comte 1798-1857) என்னும் இயற்பியல் அறிஞர் ாலளஉைளைவ) சமுதாய இயலில் பயன்படுத்தினார். இந்தக் கருத்தாழமிக்க கலைச்சொற்களைப் பொருளியலில் சேர்த்த பெருமை ஜே.எஸ்.மில் (J.S.Mill) என்பவருக்கே சேரும். இருந்தாலும் இவற்றைப் பற்றிய கருத்து வேறுபாடுகளும், குழப்பமும் பொருளியல் சிந்தனையாளர்களிடம் இருந்தன. 1928 இல் ராக்னர் ∴பிரிஷ் (Ragnat Frish) என்பவர் இரண்டினையும் அறிவியலடிப்படையில் வேறுபடுத்தி சிறப்பாக விளக்கினார். அதன் பின்பு சாமுவேல்சன், டிம்பெர்ஜன் (து.Timberen)> `hh;ngyħ (ŕeberaler ) போன்ற பொருளியலரிஞர்கள் இந்தக் கருத்துக்களைப் பெரிதும் புழக்கத்திற்குக் கொண்டுவந்தனர்.

இயங்கா நிலைப் பொருளியல் ஆய்வில் காலத்தைக் கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை. எல்லாம் நிலைத்திருப்பதாகக் கொண்டு பொருளாதார ஆய்வு நடைபெறுகின்றது. இயங்கு நிலைப் பொருளியல் ஆய்வில் காலப்போக்கில் ஏற்படுகின்ற மாறுதல்களைக் கணக்கிலெடுத்துக் கொண்டு கோட்பாடுகளை உருவாக்குகின்றனர். இந்த இரண்டு முறைகளையும் தனித்தனியாக ஆராயலாம்.

**இயங்காநிலைப் பொருளியல்**: பொதுவாக ''இயங்காநிலை'' என்பது ஒரு நிலையில் மாற்றமற்று நிலைத்திருப்பதைக் குறிக்கும் நிழற்படம் எப்படி

ஒரு குறிப்பிட்ட நிலையில் உள்ளதை அப்படியே காட்டுகின்றதோ அதைப் போல அமைவதையே இயங்கா நிலை என்கின்றோம். ஆனால், பொருளியலில் இயங்காநிலை என்பது முழுவதும் இயக்க மற்ற நிலையைக் குறிப்பிடுவதில்லை. பொருளியல் நடவடிக்கை தொடர்ந்து ஒரே சீராக, மாற்ற மற்ற நிலையில் நடப்பதையே இயங்காநிலை (நிலைத்திருப்பது) என்ற சொல் குறிக்கின்றது. இதனை பிகு (ீபைழர)இ "ஓடையிலுள்ள தண்ணீரின் துளிகள் தொடர்ந்து இடம் மாறினாலும் நீரோட்டத்தின் உருவம் மாறாமலிப்பதைப் போல இயங்காநிலையில் காரணிகள் மாறினாலும் எந்தமாற்றமும் ஏற்படாது," என்று கூறுகின்றார்.

குறிப்பு

பொருளாதார இயங்காநிலை இரண்டு மாறிகளுக்கிடையிலுள்ள வினைத்தொடர்பு ஒரு குறிப்பிட்ட காலத்தில் எப்படி இருக்கிறதென்பதை ஆராய்கின்றது. ஒரு பொருளின் விலை ஒரு குறிப்பிட்ட காலத்தில் எப்படி நிர்ணயிக்கப்படுகின்றதென்பதை ஆராய்வதை எடுத்துக்காட்டாகக் கூறலாம். இதில் விலை, தேவை, அளிப்பு ஆகிய மூன்றும் ஒரு குறிப்பிட்ட காலத்தோடு தொடர்புடையனவாக இருக்க வேண்டும். இவற்றில் காலவேறுபாடு ஏற்பட்டால் நிலையான தொடர்பு இருக்காது. பல்வேறு காலங்களை ஒட்டிய ஆய்வு சிக்கலுடையதாகின்றது. ஆனால் குறிப்பிட்ட காலக்கட்டத்தை மட்டும் ஆய்வது எளிதாகின்றது. இது ஓர் இயந்திரத்தைப் பற்றி நுணுகி ஆராய, அது இயங்காமல் இருக்கின்றபொழுது அதன் பல்வேறு பாகங்களைப் பற்றி தெரிந்து கொள்வதைப் போன்றதாகும்.

இயங்காநிலைப் பொருளாதார ஆய்வு முறையை இருகாரணங்களுக்காக முக்கியமானதாகக் கருதலாம் முதலாவதாக, தொன்மைப் பொருளில் கோட்பாடுகளில் பொரும்பாலானவை இம்முறையில் உருவாக்கப் பெற்றவை. இரண்டாவதாக, இயங்கு நிலையைச் சரியாகவும், முழுமையாகவும் புரிந்து கொள்ள இயங்காநிலையைப் பற்றிய கருத்துச் தெளிவு தேவைப்பெறுகின்றது.

"மற்றவைகள் மாறாமலிக்கின்றன", என்ற அடிப்படையில் பொருளாதாரச் சிக்கல்களை ஆராய்கின்றபொழுதெல்லாம் இயங்காநிலை ஆய்வு முறையையே பயன்படுத்துகின்றோம். விலை-தேவை – அளிப்பு தொடர்புகள், குறைந்துசெல் பயன்பாட்டுவிதி, நாட்டு வருவாய்ப் பங்கீடு, வாராக்கோட்பாடு, இறுதிநிலை பகுத்தாய்வு போன்றவற்றை இம்முறையின் மூலமே ஆராய்வதைச் சுட்டிக் காட்டலாம்.

இயங்காநிலை ஆய்வுமுறையின் சிறப்புகளைச் சுட்டிக்காட்டலாம். 1) இது மிகவும் எளிதான முறை சிக்கலான பொருளாதார நடவடிக்கையைக்கூட மற்றவை மாறாமலிருப்பதாகக் கொண்டு ஒவ்வொரு காரணியின் பங்கையும் ஆராயலாம். 2) இயங்கு நிலையை அறிய இயங்கா நிலை ஆய்வு துணை செய்கின்றது. இயங்காநிலைகளின் தொகுப்பே இயங்கும் நிலையாகும். 3) இது மிகவும் தெளிவான, துல்லியமான முறை.

குறிப்பு

4) விளைவுகளையும் சமநிலையையும் ஆராயப் பெரிதும் பயன்படுகின்றது.
5) இம்முறையை விரிவாகப் பயன்படுத்தலாம்.

இம்முறையிலுள்ள குறிப்பிடத்தக்க குறைகளையும் தொகுத்துக் கூறலாம். 1) இது உண்மையான சூழ்நிலையிலிருந்து நம்மை வேறுபடுத்தி விடுகின்றது. இதில் பல நடைமுறைக்கு ஒவ்வாத எடுகோள்கள் அடிப்படையாக உள்ளன. 2) மாறக்கூடிய மக்கள் தொகை, விருப்பங்கள், தொழில் நுணுக்கச்சாதனங்கள் போன்றவற்றை மாறாதவைகளாகக் கொண்டு கோட்பாடுகளை உருவாக்குகின்றனர். ஆனால் நடைமுறை உலகில் இவை எல்லாம் தொடர்ந்து மாறுவதைக் காண்கின்றோம். இதனால் தான் பேராசிரியர் எட்ஜ்வொர்த் (நுனபநறழசவா), ''மாறக்கூடியதை மாறாததாகக் கொள்வதே பொருளியலில் பெரும்பாலான தவறுகள் ஏற்படக் காரணமாகின்றது'', என்று கூறுகின்றார்.
3) இதில் காலத்தைக் கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை. பொருளாதாரச் சிக்கல்கள்காலப்போக்கோடு
தொடர்புடையவை.ஆதலால்இம்முறையால்இவற்றைமுழுமையாக
ஆராயமுடியவில்லை.

**இயங்கு நிலைப் பொருளியல் :**

இயங்கு நிலை என்பது ஒரே நிலையில் நிலைத்திருக்காமல் நகர்ந்து கொண்டும் மாறிக் கொண்டும் இருக்கின்ற நிலையைக் குறிக்கும். பொருளாதார மாற்றத்தை ஆராய்வதே இயங்குநிலைப் பொருளியல்முறையாகும். இயங்காநிலைக்கு எடுத்துக்காட்டாக, நிழற்படத்தைக் (ீழவழ) கூறினால் இயங்கு நிலைக்கு திரைப்படத்தைக் கூறலாம். இயங்குநிலைப் பொருளியல் காலப்போக்கில் ஏற்படுகின்ற வளர்ச்சியை ஒட்டிய மாற்றங்களை ஆராய்கின்றது.

இயங்குநிலைப் பொருளியலைப் பல்வேறு பொருளியலறிஞர்கள் பல வகைகளில் விளக்குகின்றனர். பேராசிரியர் ஹிக்ஸ், இந்த வகைப் பொருளாதாரக் கோட்பாட்டில் எல்லா அனவுகளுக்கும் காலம் குறிப்பிட வேண்டும்'', என்று கூறுகின்றார். ஹாரோடு (ர்ழசசழன) ''மாறிக்கொண்டிருக்கின்ற உற்பத்தி விகிதங்களைப் பற்றி ஆராய்வதே இயங்கு நிலைப் பொருளியலாகும்'', என்கின்றார். ''சமநிலையில் இல்லாத அமைப்புக்கள், தனி அங்காடிகள் அல்லது மொத்தப் பொருளாதாரம் ஆகியவற்றின் போக்கினை ஆராய்வதே இயங்குநிலைப் பகுத்தாய்வாகும்,'' என்று லிப்சே விளக்குகின்றார்.

பொருளாதார நடவடிக்கை ஒரே மாதிரி அமைவதில்லை, பொருளாதாரச் சமநிலை சீர்கெட்டு, மறுபடியும் புதிய சமநிலை ஏற்படக் காலம் தேவைப்படுகின்றது. கால மாறுபாட்டினால் ஏற்படுகின்ற சிக்கலான நடவடிக்கைகளையும் இயங்குநிலைப் பொருளாதாரம் பகுத்தாய்கின்றது.

குறிப்பு

காலத்தோடு தொடர்புடைய பொருளாதாரச் சிக்கல்களை ஆராய இயங்குநிலைப் பகுத்தாய்வு துணை செய்கின்றது. எடுத்துக்காட்டாக, வாணிபச் சுழல் கோட்பாடு, மக்கள் தொகை வளர்ச்சிக் கோட்பாடு, சேமிப்பு - முதலீட்டுக் கோட்பாடு, ஆதாயக் கோட்பாடு போன்றவை இயங்குநிலைப் பகுத்தாய்வின் மூலமாகவே உருவாகியிருப்பதைச் சுட்டிக் காட்டலாம்.

இயங்குநிலைப் பொருளாதாரப் பகுத்தாய்வின் சிறப்புகளை தொகுத்துக் கூறலாம். (1) இயங்குநிலைப் பொருளியல் நடைமுறைக்கு ஏற்றதாக, உண்மையானதாக இருக்கின்றது. எல்லா மாற்றங்களையும், காலவேறுபாடுகளின் அடிப்படையில் ஆராய்வதால் இது உண்மையான சூழலில் பொருளதாரச்சிக்கலை அறியத்துணை செய்கின்றது. (2) இந்த முறையில் மிகவும் நெகிழ்ச்சித் தன்மை இருக்கின்றது. இதனால் குறிப்பிட்ட பொருளாதாரச் சிக்கலைப் பற்றி பல்வேறு வழிமுறைகளில் ஆராய வாய்ப்பேற்படுகின்றது. பொருளாதாரத் திட்டமிடுதல், வளர்ச்சி, நலம் போன்றவற்றையும் தொடர்ந்து மாறுகின்ற பொருளாதாரச் சிக்கல்களையம் ஆராய இம்முறை சிறந்ததாக இருக்கின்றது.

இந்தமுறைப் பகுத்தாய்வில் சிலகுறைகள் இருப்பதையும் சுட்டிக்காட்டுகின்றனர். 1) இது மிகவும் சிக்கலான ஆய்வு முறையாகும்.இதில் எல்லா மாறிகளையம், காலக் கூறுபாட்டையும் கணக்கில் கொள்வதால் உயர்நிலை கணிதத்தின் துணைகொண்டே முடிவுகளுக்கு வர இயலுகின்றது. இது சிலராலேயே பின்பற்றக்கூடிய முறையாகும். 2 )இம்முறை இன்னும் முழுவளர்ச்சி பெறவில்லை. ஆதலால் சூழ்நிலையில் இம்முறையின் முழுப்பயனையும் பெற இயலவில்லை.

## 1.4. உங்கள் முன்னேற்றத்தைச் சரிப்பார்க்க

1. பேரியல் பொருளாதாரம் எப்படி பொருளாதாரம் மொத்தமாகச் செயல்படுகின்றது என்பதைப் பற்றி ஆராய்கின்றது. பொருளாதாரத்தில் மொத்த உற்பத்தி எப்படி அமைகின்றது. இவற்றில் மாற்றம் ஏற்பட்டால் எந்த அளவு எப்படி அமைகின்றது. இவற்றில் மாற்றம் ஏற்பட்டால் எந்த அளவு எப்படி எதனால் ஏற்படுகின்றது எனபன பற்றி பெரிய அளவில் பயில்கின்றோம்.

2. அரசின் பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்க , தற்காலப் பொருளாதார அமைப்பு முறையை அறிய, தொகுதிகளின் முக்கியத்துவம்: பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் கட்டுப்படுத்த, எதிர்காலப் போக்கைச் சரியாகக் கணிக்க,: பொருளியல் கோட்பாடுகளை ஆராய :நுண்ணினப் பொருளியலுக்கு உதவ செய்ய: வாணிபச் சுழல் கோட்பாடுகள பற்றி அறிய்,:முழுநிறை வேலை வாய்ப்பு பற்றி அறிய,.தேசிய வருவாயை அளக்க, ஆராய:பொருளாதார வளர்ச்சி ,: பணவீக்கம் மற்றும் பணவாட்ட்ம பற்றி இதன் மூலம் அறிந்து கொள்ளலாம்

குறிப்பு

**திரட்டு**

பேரியல ˙என்றசொல் மேக்ரோஎன்றஆங்கிலவார்த்தையின் தமிழாக்கமாகும். இச் சொல் கிரேக்கமொழியிலிருந்துவந்தது. **மேக்ரோ என்ற சொல்லுக்கு பெரியது என்று பொருள் .பேரியல் பொருளாதாரம் பொருளியலை ஒட்டு மொத்தமாக ஆராய்கின்றது**. நாட்டின் மொத்தவருமானம், மொத்தநுகர்வு, மொத்தஉற்பத்தி, மொத்தசேமிப்பு, மொத்தமுதலீடுஎன்று எல்லாவற்றையும் ஆராய்கிறது.

**பேரியல் பொருளாதாரம்**

- நாட்டுவருமானம்,வேலைவாய்ப்பபை விளக்குகிறது.
- கொள்கை மற்றும் வளர்ச்சிபற்றி ஆராய்கிறது.
- கீன்ஸின் கருத்துக்களொடு தொடர்புடையது.

இச்சொல்லைமுதன் முதலில் பயன்படுத்தியவர் ராக்னர்.˙.பிரி' என்னும் ஸ்வீடன் நாட்டுபொருளியல் அறிஞர் ஆவார்.

**இலக்கணம்**

**கல்பெர்டசன்**

பேரியல் பொருளாதாரம் வருவாய்,வேலைவாயப்புவிலைகள் பற்றியகோட்பாடு.

1. **ஆலன்**

   பேரியல் பொருளாதாரம் பரந்தபொருளாதாரதொகுப்புகளுக்கு இடையேஉள்ளதொடர்புகளைஆராய்கின்றன.

2. **மேயர்**

   பேரியல் பொருளாதாரம் பொருளாதாரஅளவுகளின் மொத்தங்கள்,சராசரிகளின்
   இயல்பு,தொட்பு,போக்குஆகியவற்றைஆராய்கின்றது.

பேரியல் பொருளாதாரம் வருவாய்க் கொட்பாடுஎன்றழைக்கப்படுகிது. கீன்ஸ் எழுதியவேலைவாய்ப்புவட்டி,பணம் பற்றியபொதுக் கோட்பாடுஎன்றநூல் பேரியல் பொருளாதாரக் கருத்துக்களைவிளக்கும் மிகமுக்கியமானநூல் ஆகும்.

**பேரியல் பொருளாதாரத்தில் அடங்கும் பகுதிகள்**

1. வருமானம்,வெலைவாய்ப்புமற்றுமம் உற்பத்திக் கோட்பாடு
2. விலைக் கோட்பாடு
3. பொருளாதாரவளர்ச்சிக் கோட்பாடுமற்றும்
4. பேரியல் பகிர்வுகோட்பாடுகள்

**பேரியல் பொருளாதாரத்தின் நோக்கம்**

˙பொருளாதாரக் கொள்கைகள் வகுப்பதற்குஉதவுகிறது.

1. நுண்ணியல்பொருளாதாரக் கோட்பாடுகளைபுரிந்துகொள்ளஉதவுகிறது.
2. பொருளியல்கோட்பாடுகள்மற்றும் ˥திகளைஉருவாக்கதுணைபுரிகிறது.
3. பணவீக்கம்,பணவாட்டம் பொன்றவற்றின
   விளைவுகளைஅறியஉதவுகிறது.
4. நாட்டுவருமானத்தைஅறிந்துகொள்ளவழிவகைசெய்கிறது.

குறிப்பு

**பேரியல் பொருளாதாரத்தின் வரையறைகள்**

பேரியல் பொருளாதாரம் சிலகுறைகளையும் கொண்டுள்ளது. சாமுவேல்சன் இக்குறைபாடுகளைதொகுப்பதில் போலிஎன்றும்,போல்டிங்எனப்வர்பேரியல் பொருளாதாரமுரண்பாடுஎன்றும் கூறுகின்றார்.

1. தொகுப்பைஅளவிடுவதில் சிக்கல்அளவுக்குஅதிகமானதொகப்புதவறானமுடிவைத் தரும். பேராசிரியர் பௌல்டிங் பின்வருமாறு கூறுகிறார்.
2. 6ஆப்பிள்கள் ¸ 7 ஆப்பிள்கள் ஸ்ரீ 13 பழங்கள் என்புது ஓரளவு அர்த்தமுள்ள தொகுப்புஆகும்.

இயங்காநிலை பொருளாதார ஆய்வைவிட இயங்குநிலைப் பொருளாதார ஆய்வு சிறந்ததாகவும் உண்மை நிலையைக் காட்டுவதாகவும் இருக்கின்ற தென்பதில் கருத்து வேறுபாடில்லை. ஆனால் இயங்காநிலைப் பகுத்தாய்வை முழக்கப் புறக்கணித்து விட முடியாது. பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளில் இயங்காநிலை ஆய்வு மூலம் ஆராயவதினல் சிக்கல் பல இருக்கின்றன. மேலும் இயங்காநிலைகளைத தொகுக்கின்ற பொழுதே இயங்குநிலை உருவாகின்றது. ஓர் இயந்திரத்தின் இயக்கத்தைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்ள இது இயங்காத நிலையில் எப்படி இருக்கின்றதென்பதையும் தெரிந்து கொள்வது தேவையாகின்றது.

இயங்காநிலை ஆய்வு முறையும் இயங்குநிலை ஆய்வு முறையும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவையல்ல. இருமுறைகளும் ஒன்றுக்கொன்று துணை செய்யக் கூடியவைகளாகும். பொருளியலின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் இரண்டும் தேவையாக உள்ளன.

## 1.5 சிற்றியல் பொருளாதாரம், பேரியல் பொருளாதாரம் - வேறுபாடுகள்

- சிற்றியல் பொருளாதாரம், பேரியல் பொருளாதாரம் ஆகியவற்றிடையே பின்வரும் வேற்றுமை இயல்புகள் உள்ளன.
- சிற்றியல் பொருளாதார ஆய்வு முறையில் பொருளாதாரத்தின் ஏதேனும் ஒரு அலகை மட்டுமே ஆய்வுக்கு எடுத்துக்கொள்கிறோம். ஆனால் பேரியல் பொருளாதார ஆய்வு முறையில் மொத்தப் பொருளாதாரத்தையும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்கிறோம்.
- சிற்றியல் பொருளாதாரம் பொருளாதாரத்தின் ஒரு பகுதியை மட்டுமே ஆய்வு செய்கிறது.ஆனால் பேரியல் பொருளாதாரம் ஒட்டு மொத்தமாக ஒரு பொருளாதார வாழ்க்கையையே ஆய்வு செய்கிறது.
  - சிற்றியல் பொருளாதாரம் ' மற்றவைகள் மாறாமல் அப்படியே இருக்கின்றன'( ceteris paribus) என்ற அனுமானத்தின் அடிப்படையில் ஆராயப்படுகிறது. பேரியல் பொருளாதாரத்தில்

குறிப்பு

இந்த அனுமானமே இல்லை. உலகம் மாற்றங்கள் நிகழும் ( dynamic) உலகமாக இருக்கிறது.சிற்றியல் பொருளாதார ஆய்வு முறையில் குறிப்பிட்ட அல்லது பகுதிச் சமநிலை ஆய்வுமுறை ( partial equilibrium analysis ) பயன்படுத்தப்படுகிறது. ஆனால் பேரியல் பொருளாதார ஆய்வு முறையில் பொதுச் சமநிலை ஆய்வு முறை ( Generaட equilibrium analysia ) பயன்படுத்தப்படுகிறது.

- சிற்றியல் பொருளாதார ஆய்வு முறையில் முழு வேலைவாய்ப்பு ( full employment ) நிலவுகிறது என்ற அனுமானத்தை எடுத்துக் கொள்கிறோம். ஆனால் பேரியல் பொருளாதார ஆய்வு முறை இந்த அனுமானத்தை அனுமதிக்கவில்லை
- சிற்றியல் பொருளாதாரம் விலை, மதிப்புக் கோட்பாடுகளுடன் தொடர்புடையது, பேரியல் பொருளாதாரம் சேமிப்பு முதலீடு வேலைவாய்ப்பு போன்ற தேசியக் கொள்கைகளுடன் தொடர்புடையது.

- சிற்றியல் பொருளாதாரம் திறந்த பொருளியல் ( open economy ) அமைப்புடன் தொடர்புடையது. பேரியல் பொருளாதாரம் மூடிய பொருளாதார ( open economy ) அமைப்புடன் தொடர்புடையது.
- சிற்றியல் பொருளாதாரம் தனிப்பட்டவர் நடவடிக்கைகளுடன் தொடர்புடையது, பேரியல் பொருளாதாரம் சமுதாய நடவடிக்கைகளுடன் தொடர்புடையது
- சிற்றியல் பொருளாதாரம் விலைக் கோட்பாடு என்றும் பேரியல் பொருளாதாரம் வருவாய்க் கோட்பாடு என்றும் அழைக்கப்படுகிறது
- மார்ஷெல் மற்றும் புதிய தொண்மைப் பொருளியல் அறிஞர்கள் சிற்றியல் பொருளாதாரத்திலும், கின்ஸ் மற்றும் நவீனப் பொருளியல் அறிஞர்கள் பேரியல் பொருளாதாரத்திலும் ஈடுபாடு கொண்டிருந்தனர் சிற்றியல் பொருளாதாரம் பேரியல் பொருளாதாரம் ஆகிய இரண்டும் இரு வேறுபட்ட பொருளாதார ஆய்வு முறைகள் தான். எனினும் அவை இரண்டிற்குமிடையே நெருங்கிய தொடர்பு உள்ளது. நாம் நினைப்பது போல அவை இரண்டும் தனித்து நிற்காமல் ஒன்றையொன்று சார்ந்தே நிற்கின்றன. அதாவது ஓர் ஆய்வுமுறை முழுமை பெற அடுத்த ஆய்வு முறை இன்றியமையாதது ஆகும். எனவே அவைகள் ஒன்றோடொன்று போட்டியிடுபவையாக அன்றி, ஒன்றையொன்று நிறைவு செய்பவையாகவே இருக்கின்றன.

குறிப்பு

# அலகு-2 வருவாயின் வட்ட ஓட்டம்


2.0. அறிமுகம்
2.1. நோக்கங்கள்
2.2. வருவாய்சுழற்சி
2.3 வருவாயின் வட்ட ஓட்டத்தின் பங்கு
2.4. உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்க.
2.5 வருவாயின் வட்ட ஓட்டம் மாதிரிகள்
2.6. உங்கள் முன்னேற்றத்தைச் சரிப்பார்க்க


## 2.1 நோக்கங்கள்

1. வருவாய் சுழற்சி பற்றி அறிந்து கொள்ளுதல்

2. வருவாயின் வட்ட ஓட்டம்,பங்ரு, இரண்டு பிரிவு மாதிரிகளைபற்றி அறிந்து கொள்ளுதல்

## 2.2 வருவாய் சுழற்சி

பொருளாதாரத்திள் ஒரு வட்ட ஒட்டம் என்பது வணிகங்கள் வீடுகள் மற்றும் அரசாங்கம் ஆகிய மூன்று பிரிவுகளுக்கிடையேயான பணத்தின் இயக்கத்தின் பிரதிபலிப்பாகும்

**வருமான சுழற்சி** அல்லது பண சுழற்சி பண பொருளாதாரத்தின் ஓர் இயல்பாகும் ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் பணச் செலுத்தல்களும் பண வருபாய்களும் சுழற்சியாக தொடர்ந்து ஓடுவதை வருமான சுழற்சி ஓடட்டம் என்கிறோம்

**வருவாயின் வட்ட ஓட்டம்**

நாட்டு வருவாய் நிலைத்து ஓர் இடத்தில் இருப்பதில்லை, கைமாறிக் கொண்டே இருப்பதில்லை, கைமாறிக் கொண்டே இருக்கின்றது. ஒரு வட்ட வடிவமான குழாயில் தண்ணீர் ஓடுகின்றதென்று வைத்துக் கொள்வோம். அது எப்படி மாறிமாறி சென்ற வழியிலும் எதிர்வழியிலும் செல்லுமோ அப்படித்தான் பணப் பொருளாதாரத்திலும் நாட்டு வருவாய் ஒரு வட்டமாகச் சுழல்கின்றது. இதனையே 'வருவாயின் வட்ட ஓட்டம்' (Circular Flow of Income) என்கின்றோம்.

## 2.3 வருவாய் சுழற்சி ஓட்டத்தின் பங்கு

இன்றைய பணப் பொருளாதாரத்தில், நிலம், உழைப்பு, முதல், அமைப்பு ஆகிய உற்பத்திக்காரணிகள் தங்களது வருவாயான வாரம், கூலி, வட்டி, ஆதாயம் ஆகியவற்றைப் பணமாகப பெறுகின்றன. அதாவது, இந்த உற்பத்திக் காரணிகளை உடையவர்களுக்கு உற்பத்தியில் பங்கு பெற்றதற்கு வருவாயாகப் பணம் கிடைக்கின்றது. இந்த வருவாயைப் பெற்றவர்கள் பொருட்களை வாங்குவார்கள்.

பொருட்களை விற்ற பணம் உற்பத்தியாளர்களுக்குச் செல்லும். உற்பத்தியாளர்கள் மறுபடியும் உற்பத்தியை மேற்கொள்கின்ற பொழுது, அந்தப் பணத்தை உற்பத்தி காரணிகளுக்கு கொடுப்பார்கள். இது தொடர்ந்து நடைபெறுகின்றவரை பொருளாதார ஓட்டம் தடைப்படாமல்

குறிப்பு

இருக்கும் குடும்பத்தினர் வாங்கிய வருவாயை முழுவதும் செலவழிக்க உற்பத்தியாளர்கள் வருவாயை எல்லாம் உற்பத்தியில் முதலீடு செய்ய பொருளாதாரம் தடையின்றி நடைபெறும் இதனை முதன் முதலில் கீன்ஸ் சுட்டிக்காட்டினார். இல்லத்தினர் வருவாயை எல்லாம் செலவிடாத பொழுது மொத்த தேவை குறைய, மந்தநிலை ஏற்படுகின்றதென்பதைக் கூறினார்.

## 2.4 உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்க

1. வருவாய் சுழற்சி என்றால் என்ன

-----------------------------------------------------------------------------

---

2. 'வருவாயின் வட்ட ஓட்டம் என்றால் என்ன?

## 2.5 வருவாயின் வட்ட ஓட்டம் மாதிரிகள்

வருவாயின் வட்ட ஓட்டத்தை ஓர் எடுத்துக்காட்டின் மூலம் விளக்கலாம். வெளியுலகத் தொடர்பற்ற ஒரு பொருளாதார அமைப்பில் (Closed Economy) இல்லத்துறை (**House – Hold – Sector**) நிறுவனத்துறை (**Firm's Sector**) என்று இருதுறைகள் மட்டும் இருப்பதாகக் கருதுவோம். உற்பத்திக் காரணிகளான நிலம், உழைப்பு, முதல், அமைப்பு எல்லாம் இல்லங்களுக்குச் சொந்தமாக இருக்கின்றன. அவற்றை நிறுவனங்கள் பயன்படுகின்றன. இல்லத்தினர் உற்பத்திக் காரணிகளுக்குப் பெரும் வருவாயைப் கொண்டு நிறுவனங்கள் உற்பத்தி செய்த பொருட்களை வாங்குகின்றனர். இங்கு வருவாய் ஒரு வட்டத்தில் சுழல்கின்றது.


வரைபடத்திலிருந்து வருவாயின் தொடர் ஓட்டத்தைக் காணலாம். இந்தத்துறையிலிருந்து உற்பத்திக் காரணிகளின் பணிகள் நிறுவனங்களுக்குச் செல்கின்றன. நிறுவனங்கள் பொருட்களை உற்பத்தி செய்து அவற்றை உற்பத்திக் காரணிகளுக்கு நுகர்வுக்கு அளிக்கின்றன. இந்தத்துறையினர் உற்பத்தி காரணிகளுக்குப் பெற்ற வருவாயை தங்களுக்குக் கிடைக்கும் பொருட்களுக்கு அளிக்கின்றனர்.

**சேமிப்பு மற்றும் முதலீட்டுடன் பண சுழற்சி ஓட்டம்**

உற்பத்தியாளர்கள் தங்கள் பணம் முழவதையும் செலவிடுவதில்லை. ஆதில் ஒரு பகுமியை பகிர்தளிக்கபடாத இலாபமாக வைத்துள்ளனர் தாறாக மூலதன அங்காடியில் கடன் பத்திரங்கள் பங்குகள் போன்றவற்றில் முதலீடு செய்கின்றனர் இவ்வாறு முலதன அங்காடியில் புகும் சேமிப்பானது வணிகப்பிரிவுனரால் முதலீட்டிற்காக எடுக்கபடுகின்றன. பொருளாதாரத்தில் பணசுழற்சி ஒட்டப் நடைபெறுகிறது.

பின்வரும் வரைபடம் சேமிப்பு முதலீடு நடைபெறும் போது பணசுழற்சி ஓ்ட்டம் ஏற்பவதை காட்டுகிறது்

குறிப்பு



Scanned by CamScanner

வருவாயின் வட்ட ஓட்டம் ஒருவரின் செலவு மற்றவரின் வருவாய் என்ற பேரில் பொருளாதார நோக்கில் அமைகின்றது. நிறுவனங்களின் செலவு இல்லத்துறையினருக்கு வருவாயாகவும் இல்லத்துறையினரின் செலவு நிறுவனங்களுக்கு வருவாயாகவும் அமைகின்றது. மொத்தச் செலவும், மொத்த வருவாயும் சமமாக இருக்கின்ற வரை பொருளாதாரத்தில் சமநிலை நிலவும்.

## 2.6 உங்கள் முன்னேற்றத்தைச் சரிப்பார்க்க

. 1. **வருமான சுழற்சி** அல்லது பண சுழற்சி பண பொருளாதாரத்தின் ஓர் இயல்பாகும் ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் பணச் செலுத்தல்களும் பண வருபாய்களும் சுழற்சியாக தொடர்ந்து ஓடுவதை வருமான சுழற்சி ஓடடடம் என்கிறோம்

2. பணப் பொருளாதாரத்திலும் நாட்டு வருவாய் ஒரு வட்டமாகச் சுழல்கின்றது. இதனையே ‘வருவாயின் வட்ட ஓட்டம்’ (Circular Flow of Income) என்கின்றோம்.

### குறைகள்

வருவாயின் வட்ட ஓட்டக் கருத்தில் சில குறைகளைச் சுட்டிக்காட்டுகின்றனர். முதலாவதாக, நிறுவனங்களுக்கிடையிலும் இல்லங்களுக்கிடையிலும் நடைபெறும் நடவடிக்கைகளை இது கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை. இரண்டாவதாக இது எந்தக் குறிப்பிட்ட தனி இல்லத்தையோ, நிறுவனத்தையோ பற்றிக் கூறாமல் பொதுவான கருத்தைக் கூறுகின்றது. மூன்றவதாக, பணம் பொருளாதாரத்திற்குள் வராதவற்றை இது புறக்கணித்து விடுகின்றது.

நாட்டு வருவாயில் இருப்பு (Stocks) ‘ஓட்டம்’ (Flow) என்ற இக்கருத்துக்களை வேறுபடுத்தி அறிய வேண்டும். ‘இருப்புமாறி’ (Stock Variable) ஒரு குறிப்பிட்டக் காலத்தில் (Point in time) இருக்கும் ஒரு காலகட்டத்தில் (Period of Time) வருவாய் எப்படி மாற்றம் அடைகின்றதென்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

குறிப்பு

# அலகு-3 தேசிய வருமானம்

3.0 நோக்கங்கள்
3.1. தேசிய வருமானம் வரையறை
3.2 தேசிய வருமானம்-கருத்துகள்
3.3. உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்க
3.4. அளவீட்டு சமூக கணக்கு அதன் பயன்கள்
3.5. உங்கள் முன்னேற்றத்தைச் சரிப்பார்க்க

## 3.0 நோக்கங்கள்

1. தேசிய வருமானம்-கருத்துகள் பற்றி அறிய.

.2. அளவீட்டு சமூக கணக்கு மற்றும் அதன் பயன்கள் பற்றிய தெளிவு பெற.

**அறிமுகம்- தேசிய˙ வருவாய்-**

பேரியல் பொருாதாரம் பொருளாதாரத்தை மொத்தமாக அணுகுகின்றது. தொகுதிகளின் வழியாக பொருளாதாரத்தை ஆய்கின்றபொழுது மொத்த வேலைவாய்ப்பு , மொத்த உற்பத்தி, மொத்தச் செலவு போன்ற ஓட்டத் (குடழுற) தொகுதிகளை ஆராய்கின்றோம். எல்லா வகையான பொருளாதார நடவடிக்கைகளும் இணைந்தே இவற்றைத் தீர்மானிக்கின்றன. இவற்றின் மாறியாக (ஏயசயைடிடந) நாட்டின் வருவாய் இருக்கின்றது. ஆதலால் அதனைப்பற்றித் தெளிவாகத் தெரிந்து காள்ளுதல் பேரியல் பொருளாதாரத்தில் தலையாய இடத்தைப் பெறுகின்றது.

## 3.1 தேசிய வருமானம் -கருத்து விளக்கம்

தேசிய வருமானம˙ பல்வேறு வகைகளில் பலரும் விளக்கியுள்ளனர். ஒவ்வொரு விளக்கமும் ஒவ்வொரு கோணத்தில் அமைந்துள்ளது. முக்கியமானவற்றை மட்டும் இங்கு காணலாம்.

தற்காலத்தில் நாட்டுப் பொருளாதாரத்தில் நடப்ப ஆண்டில் உற்பத்தி செய்த பொருட்கள், பணிகளின் மூலம் உற்பத்திக் காரணிகளின் தொகுதிகளுக்குக் கிடைக்கும் வருவாயையே நாட்டு வருவாய் என்கின்றோம். அதனையே மூன்று வகைகளில் விளக்கலாம். 1) மொத்த வருவாயைக் குறிக்கின்றது. 2) இது மொத்தச் செலவைக் குறிக்கின்றது. ஒருவரின் செலவு மற்றவரின் வருவாயாவது கவனிக்கத்தக்கது. 3) மொத்த உற்பத்தியின் மதிப்பு.

நாட்டு வருவாய் விளக்கங்களிலிருந்து மூன்று முக்கிய கருத்துகளைச் சுட்டிக்காட்டலாம். 1) நாட்டு வருவாய் என்பது ஒரு குறிப்பிட்ட நாட்டின் (எடுத்துக்காட்டாக இந்தியாவின்) வருவாயைக் குறிக்கின்றது. 2) இது ஒரு குறிப்பிட்ட காலததில் (ஓராண்டில்) கிடைத்த வருவாயின் அளவைக் கூறுகின்றது. ) ஒரே தடவை கணக்கில் வரும் மாற்று மதிப்புடைய எல்லா வகையான பொருட்களும் பணிகளும் நாட்டு வருவாயில் சேரும்.

குறிப்பு

## 3.2. தேசிய வருமானம் - இலக்கணங்கள்

1. ஹான்ஸன்

" ஒரு நாட்டில் ஓராண்டு காலத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் பணிகள் ஆகியவற்றின் மொத்தப் பண மதிப்பே நாட்டு வருவாய் அல்லது தேசிய வருவாய் எனப்படும்"

2. எட்வின் நிவின்

" ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மக்களிடையே பங்கிடப்பட்டு அவர்களால் நுகரப்பட்ட பொருட்கள், பணிகள் ஆகியவற்றின் மொத்தப் பண மதிப்பே தேசிய வருமானம் ஆகும்.

3. மார்ஷெல்

" இயற்கைச் சாதனங்கள் மீது செயல்படுகின்றன. ஒரு நாட்டின் உழைப்பும், முதலும், பல வகையான பணிகளையும் உள்ளடக்கிய உருவத்தோடும் உருவமற்றும் இருக்கின்ற பொருட்களின் ஒரு குறிப்பிட்ட நிகரத் தொகுதியை ஒவ்வொரு ஆண்டும் உற்பத்தி செய்கின்றன. இது தான் ஒரு நாட்டின் ஓராண்டின் உண்மையான நிகர வருவாய் அல்லது நாட்டின் பங்கு ஆகும்."

4. A.C;. பிகு

" பணத்தால் அளக்ககூடிய அயல் நாட்டிலிருந்து கிடைக்கின்ற வருவாயையும் உள்ளடக்கிய சமுதாயத்தின் பொருள் வருவாயின் பகுதியாக நாட்டின் வருவாய் இருக்கிறது"

5. பௌலி - ஸ்டாம்ப்

" ஒரு நாட்டில் ஓராண்டு காலத்தில் பெறப்படும் கூலி, சம்பளம், இலாபம், வட்டி, நிலம் மற்றும் கட்டடங்கள் மீதான வாரம் ஆகியவற்றின் மொத்தக் கூடுதலே தேசியவருமானம் ஆகும்."

ஆல்பிரட் மார்ஷல், ‘‘ஒரு நாட்டின் உழைப்பும், முதலும் அதனுடைய இயற்கை வளங்களோடு இணைந்து செயல்பட்டு ஆண்டுதோறும் பல்வேறு பணிகளையும் உள்ளடக்கிய புலனாகும். புலனாகாத பொருட்களின் ஒரு குறிப்பிட்ட நிகரத் தொகுதியை உருவாக்குகின்றன. இத்தோடு அன்னிய முதலீட்டின் மூலம் கிடைக்கும் நிகர வருவாயையும் கூட்ட வேண்டும். இதுதான் ‘‘உண்மையான ஆண்டு வருவாய்’’. என்று கூறுகின்றனர். இதில் ‘நிகரம்’ எனபது மொத்த உற்பத்தியின் மதிப்பில் மூலதனத் தேய்மானத்தைக் கழித்து வருவதைக் குறிக்கின்றது.

குறிப்பு

பேராசிரியர் பிகு (Pigou)இ "வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் வருவாயை உள்ளடக்கிய, பணத்தால் அளக்க கூடிய சமுதாயத்தின் மொத்த வருவாயை நாட்டு வருவாய் என்கிறோம்" என்கின்றார்.

பேராசிரியர் பிஷர் (Fisher)இ உற்பத்திக்குப்பதிலாக நுகர்வை அடிப்படையாகக் கொண்டு நாட்டு வருவாயை விளக்குகின்றார். அவர், "நாட்டு வருவாய் என்பது இறுதி நுகர்வோர்கள் அவர்களுடைய உலகியல் அல்லது மனிதச் சூழலில் அடைகின்ற பணிகளைக் கொண்டதாகும்". என்று கூறுகின்றார்.

பேராசிரியர் சாமுவேல்சன் (Samuelson) "ஒரு பொருளாதாரத்தில் ஓர் ஆண்டின் மொத்தமாக உருவாகும் பொருள்களின், பணிகளின் பண அளவுக்கு நாம் பொதுவாகக் கொடுக்கும் பெயர். தேசிய உற்பத்தியை உருவாக்குவதில் எல்லா உழைப்புக்கும் சொத்துக்கும் கிடைக்கும் வருவாயின் மொத்த தொகுதியே 'நாட்டு வருவாய்' என்கின்றார்.

தற்காலத்தில் நாட்டுப் பொருளாதாரத்தில் நடப்பு ஆண்டில் உற்பத்தி செய்த பொருட்கள், பணிகளின் மூலம் உற்பத்திக் காரணிகளின் தொகுதிகளுக்குக் கிடைக்கும் வருவாயையே நாட்டு வருவாய் என்கின்றோம். அதனையே மூன்று வகைகளில் விளக்கலாம். 1) மொத்த வருவாயைக் குறிக்கின்றது. 2) இது மொத்தச் செலவைக் குறிக்கின்றது. ஒருவரின் செலவு மற்றவரின் வருவாயாவது கவனிக்கத்தக்கது. 3) மொத்த உற்பத்தியின் மதிப்பு.

நாட்டு வருவாய் விளக்கங்களிலிருந்து மூன்று முக்கிய கருத்துகளைச் சுட்டிக்காட்டலாம். 1) நாட்டு வருவாய் என்பது ஒரு குறிப்பிட்ட நாட்டின் (எடுத்துக்காட்டாக இந்தியாவின்) வருவாயைக் குறிக்கின்றது. 2) இது ஒரு குறிப்பிட்ட காலததில் (ஓராண்டில்) கிடைத்த வருவாயின் அளவைக் கூறுகின்றது. ) ஒரே தடவை கணக்கில் வரும் மாற்று மதிப்புடைய எல்லா வகையான பொருட்களும் பணிகளும் நாட்டு வருவாயில் சேரும்.

### 3.2.2 நாட்டு வருவாயோடு தொடர்புடைய கருத்துக்கள்:-

### (i)மொத்த தேசிய உற்பத்தி (Gross National Product or G.N.P)

ஒரு நாட்டின் ஓராண்டுக் காலத்தில் உற்பத்தியாகும் எல்லா இறுதி நிலைப் பணிகள், பொருட்களின் மொத்த அங்காடி மதிப்பை மொத்த தேசிய உற்பத்தி அல்லது ஆக்கம் என்கின்றோம். மொத்த நாட்டு உற்பத்தியைக் கணக்கிடும்பொழுது இரு கருத்துக்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும். முதலாவதாக இது நாட்டின் உற்பத்தியான பொருட்கள், பணிகளின் பணமதிப்பையே குறிக்கின்றது. ஆதலால் வெவ்வேறு கால தேசிய வருவாயைக் கணக்கிடும் பொழுது விலை வேறுபாட்டைக் கவனிக்க வேண்டும் இரண்டவதாக, மொத்த தேசிய வருவாயைக் கணிக்கும் பொழத உற்பத்தியான பொருட்கள் பணிகளை ஒரு

குறிப்பு

**1. நாட்டின் வருவாய் என்றால் என்ன?**

---

------------------------------------------------------------------------------------------------------------

**2. நாட்டு வருவாயைக் கணக்கிடும் முறைகளை கூறுக?**

------------------------------------------------------------------------------------------------------------

**3. சமுதாயக் கணக்கீடு என்றால் என்ன?**

தடவை மட்டுமே கணக்கிட வேண்டும் எதுவும் இரண்டாம் முறை கணக்கில் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அதவாது இறுதிநிலைப் பொருட்களின் மதிப்பை மட்டும் எடுத்தக் கொள்ள வேண்டும். பருத்தியின் மதிப்பைக் கணக்கிடக் கூடாது.

பொதுவாக அங்காடி விலையில் மொத்த நாட்டு வருவாயைக் கீழ்கண்டவாறு கூட்டிக் கணக்கிடலாம். 1) தனி மனிதர்களின் நுகர்வுச் செலவுகள் 2) வாணிப நிறுவனங்கள் மாற்றுகின்ற, புத்தாக்கம் செய்கின்ற, புதிய முதலீட்டுச் செலவுகள் அதாவது உள்நாட்டில் ஏற்படுகின்ற மொத்த தனியார் முதலீடு 3) அரசு பொருட்களையும், பணிகளையும் வாங்கச் செலவிடும் தொகை 4) ஏற்றுமதி எச்சமாக அல்லது நிகர வெளிநாட்டு முதலீடாக அமைவது. அதாவத ஒரு நாடு வெளிப்பொருளாதாரத்தில் செலவிடுவதற்கு மேலாக வெளிநாட்டுப் பொருளாதாரம் அந்த நாட்டில் செலவிடுவது.

மொத்த நாட்டு உற்பத்தியைக் கணிப்பதில் 1) பொருட்கள் பணிகளின் அங்காடி விலையை நிர்ணயித்தல் 2) சொந்தக்காரர்களே பயன்படுத்தும் வீடுகள், வண்டிகள் போன்றவற்றின் வருவாயை மதிப்பிடல் 3) வீட்டில் உழைக்கும் தாய்மார்களின் உழைப்புக்குக் கூலியை நிர்ணியத்தல் 4) இடைநிலைப் பொருட்களையும். இறுதி நிலைப் பொருட்களையும் பிரித்தல் போன்ற சிக்கல்கள் எழுகின்றன.

### 3.2.3. (ii) நிகரதேசிய உற்பத்தி
**(Net National Product or N.N.P):**

நாட்டில் உற்பத்தி நடைபெறுகின்றது. கருவிகள், மூலதனங்கள் தேய்வடைகின்றன. ஆதலால், நாட்டின் மொத்த உற்பத்தியில் இழக்கப்படுகின்ற மூலதனத் தேய்மானத்தைக் கழித்துக் கிடைப்பதை நிகர தேசிய உற்பத்தி என்கிறோம். இதன் அங்காடி மதிப்பை நிகர தேசிய வருவாய் என்கின்றோம்.

நிகர தேசிய வருவாயைக் கணிப்பதில் 1) தேய்மானத்தைச் சரியாக மதிப்பிடுதல் 2) விலை ஏற்றக் காலத்தில் எந்திரத்தின் எந்த விலையை எடுப்பதென்பது 3) இடைக்காலத்திலேயே எந்திரம் பழுதடைதல் போன்ற சிக்கல்கள் உள்ளன. நிகர தேசிய உற்பத்திக் கருத்து உண்மையக நாட்டு வருவாய் எவ்வளவு கூடுகின்றதென்று காட்டுவதால் முக்கியத்துவம் பெறுகின்றது. அடுத்து, நாட்டில் சரியான பொருளாதார வளர்ச்சி பெற,

மூலதனத்தின் உற்பத்தியை நீண்ட காலத்தில் எவ்வளவு கூட்ட வேண்டுமெ4. ன்பதை உணர்த்த இக்கருத்து துணை செய்கின்றது.

குறிப்பு

### 3.2.5 (iii) தலா வருவாய் (Per Capital Income):

ஒரு நாட்டின் ஒரு குறிப்பிட்ட ஆண்டில் இருக்கின்ற வருவாயை அந்த நாட்டில் அக்காலத்தில் இருக்கும் மக்கள் தொகையால் வகுத்துப் பெறும் வருவாயை தலா வருவாய் அல்லது சராசரி வருவாய் என்கின்றோம்.

### 3.2.4 (iv) தனிநபர் வருவாய் (Personal Income):

ஒரு நாட்டின் மொத்த வருவாயும் அந்த நாட்டு மக்கள் பெறுகின்ற வருவாயும் செலுத்துகின்ற வரிகள், பகிர்ந்தளிக்காமல் வைத்திருக்கும்

நிதிகள் தனியார் செலுத்தும் முதுமைக்கால ஓய்வு ஊதியப் பங்குத்தொகை ஆகியவற்றைக் கழித்துவருகின்ற தொகையையே தனியார் பெறுகின்றனர். பொதுவாக கூலிகள், சம்பளம், வட்டி, வாரம் பங்குத் தொகை என்று தனிமனிதர்கள் பெறுகின்ற வருவாயை தனிமனித வருவாய் என்று குறிப்பிடுகின்றோம்.தனிமனித வருமானம் நாட்டு மக்களிடம் இருக்கின்ற மொத்த வாங்கும் சக்தியை அறிய உதவுகிறது.

### 3.2.5 (எ) செலவிடத்தக்க வருவாய்: (Disposable Income):

ஒரு மனிதர் பெறுகின்ற வருவாயை எல்லாம் அவர் விருப்பம் போல் செலவிட இயலாது. அவர் பெறுகின்ற வருவாயில் வருமான வரி, சொத்து வரி போன்ற வரிகளையும் , காப்பீட்டுக் கட்டணம் போன்றவற்றையும் கட்டாயம் கட்ட வேண்டியுள்ளது. இவை செலுத்தியது போக எஞ்சும் பணத்தைதான் ஒருவர் சேமிக்கவோ, செலவிடவோ செய்யலாம். இந்தத் தொகைதான் ஒருவரின் உண்மையான வாங்கும் சக்தியை, வாழ்க்கைத் தரத்தைக் காட்டுகின்றது.

### 3.3 உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்க

**நாட்டு வருவாயைக் கணக்கிடுதல்:-**

நாட்டு வருவாயை நிர்ணயிக்கும் காரணிகள்: நாடுகளுக்கடையில் வருவாய் வேறுபாடு உள்ளது. ஏனென்றால், நாட்டு வருவாயை நிர்ணயிக்கின்ற காரணிகள் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. நாட்டு வருவாயை நிர்ணியக்கும் முக்கியமான காரணிகளைக் கூறலாம். (1) நாட்டு வருவாய் நாட்டிலுள்ள உற்பத்திக் காரணிகளின் மொத்த அளவையும் தரத்தையும் வகைகளையும் சார்ந்து அமைகின்றது. வளமான நிலம், மிகுந்த உழைப்பாற்றல், நிறைந்த முதல், சிறந்த அமைப்பாற்றல் உள்ள நாட்டில் நாட்டு வருவாய் மிகுதியாக இருக்கும். (2) நிலையான அரச அமைத்து, மக்கள் அமைதியாக வாழ்ந்தால் நாட்டு வருவாய்க்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. (4) மக்களின் சமுதாயப் பழக்க வழக்கங்கள் ஒட்டியும் அறிவியலைப் பயன்படுத்தும் விருப்பத்தை ஒட்டியும் நாட்டு வருவாயின் அளவு அமையும். (5) நாட்டிலுள்ள சாலை, செய்திப் போக்குவரத்து, கல்வி, சுகாதாரம், மின்சாரம் போன்ற அக அமைப்புகளை (Infra structure) ஒட்டியும் நாட்டு வருவாய் இருக்கும்.

**கணக்கிடுதல் (Measurement):** தனியார் வருவாய்க்கு கணக்கு வைத்து (Social Accounting) நாட்டு வருவாயைக் கணக்கிடுவது தேவையாகின்றது. நாட்டு வருவாயை மூன்று கோணங்களில் பார்ப்பதைப் போன்றே மூன்று வழிமுறைகளில் கணக்கிடுகின்றனர். உற்பத்தி நடைபெறுகின்றபொழுது உற்பத்திக் காரணிகள் வருவாய் பெறுகின்றன. வருவாய் ஓட்டம் போன்று உற்பத்தி ஓட்டமும் இருக்கின்றது. உற்பத்தியானவற்றை வாங்க மக்கள் செலவிடுகின்றனர். ஆதலால் மொத்த உற்பத்தி, மொத்த வருவாய், மொத்தச் செலவு ஆகிய மூன்றும் நாட்டு வருவாயின் மூன்று சமபக்கங்கள் என்பதை அறிகின்றோம். இந்த மூன்று நோக்கிலேயே நாட்டு வருவாயைக் கணக்கிடுகின்றனர்.

குறிப்பு

1. **உற்பத்தி முறை** (Product Method or Inventory Method) :

இம்முறையில் ஒரு நாட்டில், ஒரு குறிப்பிட்ட காலத்தில் உற்பத்தியான எல்லா இறுதிநிலைப் பொருட்கள், பணிகளின் அங்காடி மதிப்பைக் கணக்கிடுகின்றனர். பொருளாதாரத்தில் வேளாண்மை, வாணிபம், போக்குவரத்து, சுரங்கம், அரசுத் துறை என்று பல்வேறு துறைகள் உள்ளன. இத்துறைகளின் வருவாய்களையும், வெளி நாடுகளிலிருந்து கிடைக்கும் நிகர வருவாயையும் மொத்தமாகக் கூட்டி நாட்டு வருவாயைக் கணக்கிடுகின்றோம்.

2. **வருவாய் முறை** (Income Method) : பகிர்வின் நோக்கில் இம்முறையில் வருவாயைக் கணக்கிடுகின்றனர். நாட்டின் வருவாய் மக்கள் பெறுகின்ற வருவாய்களின் கூட்டுத்தொகைக்குச் சமமாக இருக்கும். மக்கள் பெறுகின்ற வருவாய் உழைப்புக்குப் பெறும் கூலியாகவும், ஊதியமாகவும், நிலத்திற்குப்பெறும் வாரமாகவும், வாடகையாகவும் முதலுக்குப் பெறும் வட்டியாகவும், அமைப்புக்குக் கிடைக்கும் ஆதாயமாகவும், நிறுவனங்களின் வருவாயின் பங்குத் தொகைகளாகவும் இருக்கும். இவற்றை எல்லாம் ஒட்டு மொத்தமாகக் கூட்டி நாட்டு வருவாயை அறியலாம்.

3. **செலவு முறை** (Expenditure Methode) : இம்முறையில்

சமுதாயத்திலுள்ள எல்லாச் செலவுகளையும் கூட்டுகின்றோம். மொத்தச் செலவென்பது (தனிப்பட்டவர்களின் நுகர்வுச் செலவு மொத்த தனி உள்நாட்டு முதலீடுகள், அயல்நாட்டு முதலீடுகள் அரசு வாங்கும் பொருட்கள், பணிகளுக்காகச் செலவிடுவது ஆகியவற்றின் கூட்டுத்தொகையாக இருக்கும். இது நாட்டு வருவாய்க்குச் சமமாக இருக்கிறது.

உற்பத்தி, வருவாய், செலவு ஆகிய மூன்று முறைகளிலும் நாட்டு வருவாயைக் கணக்கிட்டால், ஒன்றோடொன்று ஒப்பிட்டு பார்த்து கணக்கீடு சரிதானாவென்று தெரிந்து கொள்ளலாம்.

குறிப்பு

**.நாட்டு வருவாயைக் கணக்கிடுவதிலுள்ள சிக்கல்கள்:-** நாட்டு வருவாயைக் கணக்கிடுவதில் பல நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன. அவற்றில் முக்கியமானவற்றை இங்கு கூறலாம்.

1. **விலையற்ற பொருட்களும், பணிகளும்:** பணமதிப்புள்ள பொருட்களையும், பணிகளையும் நாட்டு வருவாய்க்கணக்கெடுப்பில் சேர்க்க முடிகின்றது. ஆனால் பொருளாதார மதிப்புள்ள, பணம் செலுத்தாத அன்புக்காகச் செய்யும் பணிகள் நாட்டு வருவாயில் சேர்வதில்லை. எடுத்துக்காட்டாக வீட்டிலுள்ள பெண்கள் செய்யும் பணிகள், வீட்டிற்காக உற்பத்தி செய்யும் பொருட்கள் ஆகியவை சேர்வதில்லை. இதனால் உண்மையான நாட்டு வருவாயை அறிய முடியாது.

2. **அரசின் பங்கு :** நாட்டு வருவாயில் அரசின் பங்கைக் கணக்கிடுவதில் கருத்து வேறுபாடு உள்ளது. அரசின் பணிகளின் மதிப்பை அவற்றின் செலவுக்குச் சமமாகக் கருதுகின்றனர் இதனைக் கணக்கிடுவதிலும் தொல்லை இருக்கின்றது.

3. **அயல்நாட்டு நிறுவனங்கள் :** ஒரு நாட்டிலுள்ள அயல்நாட்டு நிறுவனங்களின் வருவாயை நாட்டு வருவாயில் சேர்த்துக் கொள்வதிலும் சிக்கல் இருக்கின்றது. வருவாயின் ஒரு பகுதி அயல்நாட்டுக்குச் செல்வதால் கணக்கிடுவது சிக்கரலாகின்றது.

4. **நாட்டை வரையறுப்பது :** ஒரு நாட்டின் வருவாயில் அந்த நாட்டில்கிடைப்பது மட்டுமின்றி, நாட்டுக்கு வெளியில் சம்பாதிப்பதும் சேர்வதால் நாட்டின் எல்லையைத் திட்டவட்டமாக வரையறுக்க இயல்வதில்லை.

5. **பின்பற்றும் முறை:** உற்பத்தி, வருவாய், செலவு ஆகிய முறைகளில் ஒன்று மட்டும் போதுமானதாக இல்லை. மூன்று முறைகளையும் ஒன்றுபோலப் பயன்படுத்தினால் தான் ஓரளவு நாட்டு வருவாயைச் சரியாகக் கணக்கிட இயலும்.

6. தொடங்கும் நிலை: நாட்டு வருவாய்க் கணக்கெடுப்பை உற்பத்தி நிலையிலோ, நுகர்வு நிலையிலோ, எங்கு தொடங்குவதென்பதில் கருத்து வேறுபாடு உள்ளது. நாட்டு வருவாய்க் கணக்கெடுப்பின் நோக்கத்தை ஒட்டியே தொடங்கும் நிலை அமையும்.

7. **புள்ளி விவரங்கள் கிடைக்காமை** : நம்பிக்கைக்குரிய சரியான புள்ளிவிவரங்கள் போதுமான அளவில் கிடைப்பதில்லை. பின்தங்கிய நாடுகளில் இது நாட்டு வருவாய்க் கணக்கெடுப்பில் பெருந்தடையாக உள்ளது.

8. **இருமுறைக் கணக்கீடுகள் (**Double Counting**) :** எந்த ஒரு வருவாயையும் இருமுறை நாட்டு வருவாயில் சேராமல் பார்க்க வேண்டும். விவசாயி விற்கின்ற பருத்தியின் மதிப்பையும், அந்த பருத்தியால் ஆன துணியை ஆலை விற்பதையும்

குறிப்பு

அப்படியே சேர்த்துவிட்டால் நாட்டு வருவாய் மிகுதியாகிவிடும். இதனைத் தவிர்க்க இருமுறைகளைக் கூறுகின்றனர். ஒன்று இறுதிநிலைப் பொருட்களின் மதிப்பை மட்டும் கணக்கிடும் இறுதிநிலை உற்பத்தி முறையாகும் (குயைெட ீசழனரஉவள) மற்றொன்று ஒவ்வொரு நிலையிலும் பொருளின் கூடுகின்ற மதிப்பை மட்டும் கணக்கில் சேர்த்துக் கொள்கின்ற மதிப்புக் கூட்டுதல் முறையாகும் (Value Added Method).

9. **மாற்றும் தொகைகள்**: வருவாய் முறையில் நாட்வருவாயைக் கணக்கிடும்பொழுது, ஒருவரின் வருவாயில்வரும் பகுதியை மற்றவருக்கு மாற்றும்பொழுது, அந்தத் தொகை அவரின் வருவாயிலும் சேர்த்து மற்றவரின் வருவாயிலும் சேராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக, ஆயிரம் ரூபாய் வருவாய் பெறுபவர் முந்நூறு ரூபாயை பெற்றோருக்குக் கொடுத்தால், அவர் வருவாய் ரூ.1000 பெற்றோர் வருவாய் ரூ.300 என்று கணக்கிட்டால் தவறு ஏற்படும்.

10. **உற்பத்தியாளரே நுகர்வது:** உற்பத்தியாளர்களே உற்பத்தி செய்தவற்றில் ஒரு பகுதியை நுகரலாம். விவசாயிகளிடம் மிகுதியும் இப்போக்கைக் காணலாம். சொந்த நுகர்வை வருவாயில் சேர்ப்பதில் நடைமுறைச் சிக்கல் உள்ளது.

11. **பல்வேறு தொழில்கள்** : இன்று நாட்டில் எண்ணற்ற வரையறுக்கப்பெற்ற வரையறுக்கப்படாத தொழில்கள் உள்ளன. அவற்றில் உள்ள அனைவரின் வருவாயையும் கணக்கிட இயல்வதில்லை. ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட தொழில்களைச் செய்யும் பொழுது அவரது வருவாயை எல்லாம் கணக்கிட்டுச் சேர்க்காத நிலை வருகின்றது.

12. **மக்களின் மனப்பான்மை** : நாட்டிலுள்ள எல்லா மக்களும் எல்லாவருவாய் விவரங்களையும் கூற முன்வருவதில்லை அறியாமையாலோ, குருட்டு நம்பிக்கையாலோ, வேறு நோக்கத்தாலோ உண்மை விவரங்களை மறைத்துவிடலாம்.

பின்தங்கிய நாடுகளில் மேற்கூறிய பொது சிக்கல்களோடு நாட்டு வருவாயைக் கணக்கிடுவதில் சில தனிவகைச் சிக்கல்களும் உள்ளன. நமது நாடு போன்ற நாடுகளில் காணப்படும் அவற்றையும் இங்கு கூறலாம்.

1. **பணக்கணக்கில் வராதவை** : வளர்ச்சி குறைந்த நாடுகளின் பணமதிப்பில் வாரத பொருட்களும் பணிகளும் பெருமளவில் உள்ளன. பண்டமாற்று முறையில் பொருட்களை மாற்றிக்கொள்வதும் உண்டு. கிராமப் பொருளாதாரத்தில் குறிப்பாக வேளாண்மைத் துறையில் இச்சிக்கல் மிகுதியாக உள்ளது.

2. **அறியாமை:** பெரும்பாலானவர்கள் கல்வியறிவற்றவர்களாக இருப்பதால் அவர்களுடைய உற்பத்தி வருவாய் பற்றி

குறிப்பு

அவர்களே சரியாக கணக்கு வைப்பதில்லை. இதனால் சரியான விவரங்கள் கிடைப்பதில்லை.

3. வேலைப் பகுப்பு – தொழில் பகுப்பின்மை : ஒருவரே பல தொழில்களைச் செய்வதும், தொழிலும் வருவாயும் மாறிக் கொண்டிருப்பதும் வருவாய் கணக்கெடுப்பைச் சிக்கலுடைய தாக்குகின்றன.

4. **நம்ப முடியாத புள்ளி விவரங்கள்** : கிடைக்கின்ற புள்ளி விவரங்களும் நம்பக் கூடியனவாகவும், சரியானதாகவும் போதுமானதாகவும் இருப்பதில்லை.

## 3.4 உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்க

1) .நாட்டுப் பொருளாதாரத்தில் நடப்ப ஆண்டில் உற்பத்தி செய்த பொருட்கள், பணிகளின் மூலம் உற்பத்திக் காரணிகளின் தொகுதிகளுக்குக் கிடைக்கும் வருவாயையே **நாட்டு வருவாய்** என்கின்றோம்.

**2)உற்பத்தி முறை**

இம்முறையில் ஒரு நாட்டில், ஒரு குறிப்பிட்ட காலத்தில் உற்பத்தியான எல்லா இறுதிநிலைப் பொருட்கள், பணிகளின் அங்காடி மதிப்பைக் கணக்கிடுகின்றனர். பொருளாதாரத்தில் வேளாண்மை, வாணிபம், போக்குவரத்து, சுரங்கம், அரசுத் துறை என்று பல்வேறு துறைகள் உள்ளன. இத்துறைகளின் வருவாய்களையும், வெளி நாடுகளிலிருந்து கிடைக்கும் நிகர வருவாயையும் மொத்தமாகக் கூட்டி நாட்டு வருவாயைக் கணக்கிடுகின்றோம்.

**வருவாய் முறை :**

பகிர்வின் நோக்கில் இம்முறையில் வருவாயைக் கணக்கிடுகின்றனர். நாட்டின் வருவாய் மக்கள் பெறுகின்ற வருவாய்களின் கூட்டுத்தொகைக்குச் சமமாக இருக்கும். மக்கள் பெறுகின்ற வருவாய் உழைப்புக்குப் பெறும் கூலியாகவும், ஊதியமாகவும், நிலத்திற்குப்பெறும் வாரமாகவும், வாடகையாகவும் முதலுக்குப் பெறும் வட்டியாகவும், அமைப்புக்குக் கிடைக்கும் ஆதாயமாகவும், நிறுவனங்களின் வருவாயின் பங்குத் தொகைகளாகவும் இருக்கும். இவற்றை எல்லாம் ஒட்டு மொத்தமாகக் கூட்டி நாட்டு வருவாயை அறியலாம்.

**செலவு முறை :**

இம்முறையில் சமுதாயத்திலுள்ள எல்லாச் செலவுகளையும் கூட்டுகின்றோம். மொத்தச் செலவென்பது (தனிப்பட்டவர்களின் நுகர்வுச் செலவு மொத்த தனி உள்நாட்டு முதலீடுகள், அயல்நாட்டு முதலீடுகள் அரசு வாங்கும் பொருட்கள், பணிகளுக்காகச் செலவிடுவது ஆகியவற்றின் கூட்டுத்தொகையாக இருக்கும். இது நாட்டு வருவாய்க்குச் சமமாக இருக்கிறது.

3). நாடு முழுமைக்கும் இருமுறை கணக்கு வைப்பு முறையின் மூலம் எல்லா வரவுகளையும், செலவுகளையும் கணக்கெழுதும் முறையை

**சமுதாயக் கணக்கு** வைப்பு என்று கூறலாம

நுகர்வுக்காகவும், முதலீட்டிற்காகவும் பண்டங்கள், பணிகள் முதலியவற்றை வாங்குவதற்க்காச் செலவிடப்படும் மொத்த தேசியச் செலவு ஆகும்

குறிப்பு

**நாட்டு வருவாய் விவரத்தின் முக்கியத்துவம்**

நாட்டு வருவாய் பற்றிய கணக்கீடும், புள்ளி விவரங்களும் பொருளாதாரத்தில் மிகவும் முக்கியத்துவமுடையதாகவும், பல்வேறு பயன்களைக் கொண்டதாகவும் இருக்கின்றன. நாட்டுப் பொருளாதாரம் செயல்படுவதையும் அதன் பல்வேறு இனங்களையும் பற்றி அறியவும் உதவி செய்கின்றன. கீன்சின் "வேலை வாய்ப்பு, வட்டி, பணம் பற்றிய பொதுக்கோட்பாடு (1936) என்ற நூல் வெளியாகி, பேரியல் பொருளாதார நோக்கில் முக்கியத்துவம் பெற்றபிறகு நாட்டு வருவாயைப் பற்றி எல்லோரும் எண்ணிப்பார்க்கத் தொடங்கினர். நாட்டு வருவாய் மதிப்பீடுகளின் பயன்களை இங்கு தொகுத்துக் கூறலாம்.

1. **உற்பத்தி நிலையை அறிய** : நாட்டு வருவாய் மதிப்பீடு நாட்டின் உற்பத்தி

அளவைக் காட்டுகின்றது. உற்பத்தியைச் சார்ந்தே மக்களின் நலம் அமைகின்றது. நாட்டு வருவாய், தலை வருவாய் மதிப்பீட்டிலிருந்து உற்பத்தி நிலை, மக்கள் நலம் ஆகியவற்றை அறியலாம்.

2. **பொருளாதார நிலை** : சில ஆண்டுகளில் நாட்டு வருவாய்

மதிப்பீட்டுகளிலிருந்து பொருளாதாரம் வளர்கின்றதா, தேக்கநிலையில் உள்ளதா, தேய்கின்றதாவென்பதை அறியலாம். பொருளாதார வளர்ச்சி வீதத்தை அளக்கவும் நாட்டு வருவாய் பற்றிய விவபரங்கள் துணை செய்கின்றன.

3. **பொளாதாரக் கொள்கையை உருவாக்க :** பேரியல் நோக்கில் நாட்டின் மொத்தப் பொருளாதார நடவடிக்கைகளை ஆராயவும், எதிர்காலப் பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்கவும் நாட்டு வருவாய் பற்றிய விவரங்கள் துணை செய்கின்றன.

4. **திட்டமிடுதல் :** பொருளாதராத் திட்டங்களை உருவாக்கவும் நாட்டு வருவாய் பற்றிய விவரங்கள உற்ற துணையாக உள்ளன. வருவாயின் போக்குத் தெரிந்தால்தான் நாட்டின் வளர்ச்சிக்குத் திட்டமிட இயலும்.

5. **பல்வேறு துறைகள் :** நாட்டு வருவாய் விவரங்கள் நாட்டு வருவாயில் நாட்டிலுள்ள பொருளதாரத் துறைகளின் பங்கினை அறிய உதவுகின்றன. எடுத்துக்காட்டாக நமது நாட்டு வருவாயில் 50மூ வேளாண்மை மூலம் கிடைக்கின்றது. இதிலிருந்து நமது பொருளாதாரத்தில் வேளாண்மையின் முக்கியத்துவத்தை அறிகின்றோம்.

குறிப்பு

6. **பகிர்வை அறிய** : நாட்டு வருவாய் கூலியாக, வாரமாக, வட்டியாக, ஆதாயமாக எந்த விகிதத்தில் பகிரப்படுப்பட்டிக்கின்றதென்பதையும், வருவாய் ஏற்றத்தாழ்வு எப்படி, எந்த வீதத்தில் இருக்கின்றதென்பதையும் நாட்டு வருவாய் விவரங்களிலிருந்து அறியலாம்.

7. **வரவு செலவுத் திட்டம்** : அரசின் வரவு செலவுத் திட்டத்தை உருவாக்க நாட்டு விவரங்கள் உதவுகின்றன. பணவீக்க, பணவாட்டப் போக்கை அறிய, வாணிபச் சுழலைத் தடுக்க, எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைத் தீர்மானிக்க வரிவிதித்தல், பொதுக்கடன் வாங்குதல் ஆகியவற்றின் வாய்ப்புகளைக் காண வருவாய் விவரங்கள் வழி காட்டுகின்றன.

8. **தேசியச் செலவு** : நாட்டில் நுகர்வுச் செலவும், முதலீட்டுச் செலவும் எப்படி அமைகின்றதென்பதையும், எந்த அளவிற்கு மூலதனக் கழிவுக்கு நிதி ஒதுக்க வேண்டுமென்பதையும் வுருவாய் விவரங்களிலிருந்து கண்டு கொள்ளலாம்.

9. **மானிய உதவி** : கூட்டாட்சியில் மத்திய அரசு மாநில அரசுகளுக்கு அளிக்கும் மானிய அளவைத் தீர்மானிக்கும் காரணிகளில் முக்கியமானதாக நாட்டு வருவாய் உள்ளது.

10. **வாழ்க்கைத் தரத்தை ஒப்பிட** : பல்வேறு நாடுகளில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரங்களையும், ஒரே நாட்டில் பல்வேறு காலங்களில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கைத் தரங்களையும் ஒப்பிட்டுப் பார்க்க நாட்டு வருவாய் விவரங்கள் பெரிதும் துணை செய்கின்றன.

11. **பன்னாட்டுப் பொருளாதாரத் தொடர்புகள்** : ஐக்கிய நாட்டுச்சபை, பன்னாட்டுபணநிதி, உலக வங்கி போன்ற நிறுவனங்கள் நாடுகளுக்கிடையில் கடன் பொறுப்புக்களை நிர்ணயிக்கின்ற பொழுது நாட்டு வருவாய் விவரங்களைப் பயன்படுத்துகின்றன.

12. **பொதுத் துறையின் பங்கு** : நாட்டு வருவாய் விவரங்களிலிருந்து தனியார் துறையும், பொதுத்துறையும் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளில் எந்த அளவில் பங்கு பெறுகின்றனவென்பதை அறியலாம். பொதுத் துறையின் பங்கு என்வென்பதை நாட்டு வருவாயின் பகிர்விலிருந்து சரியாக மதிப்பிடலாம்.

**நாட்டு வருவாய்ப் பகுத்தாய்வும் கீன்சும்**

கீன்ஸ் பொருளியல் பகுத்தாய்வில் செய்த புரட்சியின் விளைவுகளில் ஒன்று நாட்டு வருவாயின் முக்கியத்துவத்தை உலகநாடுகள் உணர்ந்ததாகும். கீன்சின் பொதுக்கோட்பாடு வெளிவரும் வரை நாட்டு வருவாய் பற்றிப்போசப்பட்டாலும், நாட்டு வருவாய் தொடர்பான புள்ளிவிவரங்களை அரசுகள் சேகரித்து தொகுத்து, பகுத்து வெளியிடுவதில்லை. கீன்ஸ் நுகர்வு, முதலீட்டுச் செலவுகள் எப்படி வருவாய் ஓட்டத்தைப் பாதிக்கின்றதென்பதை விளக்கினார். பணவீக்க இடைவெளி, பணவாட்ட இடைவெளிக் கருத்துக்களின் மூலம் அரசின் பொதுப்பணிகளின் தேவையை வலியுறுத்தினார்.

வருவாய்ப் பகுத்தாய்வுக்கு கீன்ஸ் அளித்த கருத்துக்களை சுட்டிக்காட்டாலாம். வருவாய், நுகர்வுக்கும் முதலீட்டுக்கும் சமமாக இருக்குமென்பதை

Y - C +1

Y - வருவாய்,

C - நுகர்வு,

I - முதலீடு

என்ற சமன்பாட்டின் மூலம் விளக்குகின்றார். இதில் எல்லாமாறிகளும் பணத்தொடர்பானவை.கீன்சின் வருவாய்ப் பகுத்தாய்வு, வருவாய், நுகர்வு, சேமிப்பு முதலீடு போன்ற பேரியல் பகுதிகளின் தொடர்புகளைத் எல்லாச் செலவுகளையும் நுகர்வுச் செலவு, முதலீட்டுச் செலவு என்று பகுத்ததன் மூலம் சிக்கலான செலவு, மாறிகளை எளிமைப்படுத்தி விட்டார். கீன்சின் வருவாய்ப் பகுத்தாய்வின் மூலம் பொருளாதார சிந்தனை மொத்தத்தில் விரிவடைந்திருக்கின்றதென்று கூறலாம்.

**மொத்த நாட்டு உற்பத்தி (** Gross National Product or GNP )

ஒரு நாட்டில் ஓராண்டு காலத்தில் பொருளாதாரத்துறைகள் அனைத்தும் சேர்ந்து உற்பத்தி

GNP = C + I+ G + (X - M)+ ( R- P )

ஒரு நாட்டின் மொத்த வருவாயைக் கணிக்கும்போது கவனிக்க வேண்டிய விதிகள் 1) ஒரு பொருளின் மதிப்பு ஒரு முறை மட்டுமே கணக்கில் எடுக்கப்பட வேண்டும்

2) உற்பத்தி முடிவடைந்து நுகர்ச்சிக்குத் தயார் நிலையிலுள்ள பொருட்கள் மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவேண்டும்

3) அங்காடி விலைகளினடிப்படையில் பொருட்களின் மதிப்புகள் கணக்கிடப்பட வேண்டும்.பின்வரும் நான்கு இனங்களின் மொத்த நாட்டின் மொத்த வருவாயக எடுத்துக் கொள்ளப்படலாம்.

1) தனி நபர்களின் நுகர்வுச் செலவுகள்

2) உள் நாட்டின் முதலீடு

3) அந்நிய நாடுகளின் நிகர முதலீடு

4) அரசு வாங்கும் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் மதிப்பு

குறிப்பு

### 3.1.3 நிகர நாட்டு உற்பத்தி (NNP )

மொத்த நாட்டு உற்பத்தியிலிருந்து மூலதனப் பொருட்களின் தேய்மானத்தை கழித்து விட்டால் நிகர நாட்டு உற்பத்தி ( Net National Product =NNP) கிடைக்கும் நிகர நாட்டு உற்பத்தின் மொத்த பண மதிப்பே நிகர நாட்டு வருவாய் ( Net National Income ) ஆகும்.

NNP= GNP-D

தேய்மானம் என்பது எந்திரங்கள் பழுதடைந்து மதிப்பிழப்பது ஆகும்

தேய்மானத்தைக் கணிப்பதில் சிக்கல்கள் எழலாம் எனினும் பின்வரும் சமன்பாட்டின் உதவியினால் நிகரநாட்டு வருவாயை துல்லியமாகக் கணக்கிட இயலும்.

நிகர நாட்டு வருவாய் = மொத்த நாட்டு வருவாய் - ( மூலதனப் பொருட்களின்தேய்மானம் ூ+ூ மூலதனப் பொருட்களைப் பயன்படுத்துவதற்கும் பராமரிப்பதற்குமான செலவுகளூ+ மறைமுக வரிகள; + சாதக அயல்நாட்டு செலுத்து நிலைகயின் பண மதிப்பு ூ ஓராண்டு காலத்தில் ஆக்க நடவடிக்கை ஆகியவற்றின் பண மதிப்பு + ஒரு நாட்டில் வெளி நாட்டுக் கடன்களில் ஏற்படும் நிகர உயர்வு அல்லது ஒரு நாடு வெளிநாடுகளுக்கு அளித்திருக்கும் கடன்களின் நிகரக் குறைவு )

1. நாட்டின் மொத்த வருவாய் என்பது ஓர் எளிய கருத்து இதனைக் கணித்தலும் எளிது. ஆனால் நாட்டின் நிகர வருவாய் ஓர் குழப்பமான கருத்து மூலதனப் பொருட்களின் தேய்மானத்தைக் கழிப்பதில் உள்ள தன்னிச்சையான போக்கால் இதனை கணித்தலும் சிரமம்.

2. நாட்டின் மொத்த வருவாய் குறுகிய கால ஆய்வுகளுக்குச் சிறந்தது. ஆனால் நாட்டின் நிகர வருவாய் வளரும் நீண்ட கால ஆய்வுகளுக்கு ஏற்றமுடையது.

3. நாட்டின் மொத்த வருவாய் நிலையான பொருளாதாரத்திற்குப் பொருத்தமானது. நாட்டின் நிகர வருவாய் வளரும் பொருளாதாரத்திற்குப் பொருத்தமானது.

### நாட்டு வருவாய் ( NI )

ஒரு நாட்டில் குறிப்பிட்ட ஆண்டில் அந் நாட்டின் உற்பத்திக் காரணிகளான நிலம், உழைப்பு, முதல் தொழிலமைப்பு ஆகியவை வாரம், கூலி, வட்டி, இலாபம் என்று பெறும் வருமானங்களின் கூட்டுத் தொகையே நாட்டு வருவாய் ( யேவழையெட ஐஉெழஅந ) எனப்படும். இ∴து நிகர் நாட்டு உற்பத்திக்குச் சமமாக இருக்கும். இதன் மதிப்பு உற்பத்திக் காரணிகள் விலைகளின் அடிப்படையில் கணிக்கப்படுகிறது. இதுவே உண்மையான நாட்டு வருவாய் ஆகும்.

மொத்த நாட்டு உற்பத்தியும் நிகர நாட்டு உற்பத்தியும் நாட்டின் வருவாயை உற்பத்தி நோக்கில் கணிக்கின்றன ஆனால் உண்மையான நாட்டு வருவாய் நாட்டின் வருவாயை பகிர்வு நோக்கில் கணிக்கின்றது.

குறிப்பு

**தனி நபர் வருவாய் ( PI )**

மொத்த தேசிய வருவாயைக் கணிக்க வேண்டும். அதிலிருந்து கூட்டுப் பங்கு நிறுவனங்கள் பகிர்ந்து கொடுக்காத லாப்ம், அவற்றின் வருமான வரி, சமுதாயக் காப்பீடு நன்மைகள். அரசு பத்திரங்களிலிருந்து கிடைக்கும் வட்டி போன்றவற்றைச் சேர்த்துக் கொண்டால் தனி நபர் வருவாய் கிடைக்கும் பின்வரும் சம்பாட்டைப் பயன்படுத்தி தனிநபர் வருவாய் கணிக்க வேண்டும்.

தனி நபர் வருவாய் ஸ்ரீ நாட்டு வருவாய் ( சமுதாயக் காப்பீட்டிற்காகச் செலுத்துதல்இ கூட்டுப் பங்கு நிறுவனங்களின் வருமான வரிஇ கூட்டு பங்கு நிறுவனங்களின் பகிர்ந்துகொடுக்காத லாபம்இமாற்றுச் செலுத்தல்கள் )

மக்களின் ஒரு ஆண்டின் வருவாய் ஆகுமீ

PI= நாட்டு வருமானம் ∴ மக்கள்தொகை

**செலவிடத்தக்க வருவாய் ( DI )**

தனி மனிதனீன் வருவாயிலிருந்து நேர்முக வரிகளை கழித்துவிட்டால், எஞ்சியிருப்பது செலவிடத்தக்க வருவாய் எனப்படும். இதில் தனி மனிதர்கள் நுகர்ச்சிக்காக செலவிட்டது போக எஞ்சியிருப்பதை சேமிக்கின்றனர்.

செலவிடத்தக்க வருவாய் ஸ்ரீ நுகர்ச்சிச்செலவு ¸ சேமிப்பு ( அ) ஸ்ரீ தனி நபர் வருவாய் - நேர்முக வரிகள்

. DI = PI - T

**நாட்டு வருவாயைக் கணிக்கும் முறைகள்**

ஒரு நாட்டு வருவாயைக் கணிப்பதற்குப் பொதுவாகப் பின் வரும் மூன்று முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

**உற்பத்தி முறை ( Production Method )**

இம்முறையில் ஒரு நாட்டில் நிலவும் அங்காடி விலைகளுக்கேற்ப ஓராண்டில் உற்பத்தி செய்யப்பட்டு நுகரப்படும் பொருட்கள் மற்றும் பணிகள் ஆகியவற்றின் நிகரப் பண மதிப்பளவே அந்நாட்டின் வருவாய் ஆகும். இம் முறைக்கு பொருள் - பணி முறை ( Commodity - Service Method ) உற்பத்தி முறை ( Output Method ) ன்னும் வேறு பெயர்களும் உள்ளன.

இம்முறையில் ஒரு நாட்டில் ஓராண்டு காலத்தில் ஏற்படும் உற்பத்தி அளவின் அடிப்படையில் நாட்டு வருவாய் கணிக்கப்படுகிறது. உற்பத்தியாகும் பொருட்கள், பணிகள் ஆகியவற்றின் நிகர பண மதிப்பை பின்வரும் முறையில் கணக்கிடலாம்.

குறிப்பு

ஒரு நாட்டில் இயங்கி வரும் உற்பத்தித் துறைகளின் நிகர உற்பத்தி அளவின் மொத்த பண மதிப்பைக் கூட்டினால் நாட்டு வருவாயைக் கணக்கிடலாம். அதாவது, பொருளாதாரத்தை வேளாண்மை, சுரங்கம், பேரளவு உற்பத்தி நிறுவனங்கள் சிற்றளவு உற்பத்தி நிறுவனங்கள் போக்குவரத்து, வாணிபம் செய்தித் தொடர்பு என்று பல்வேறு துறைகளாகப் பிரித்து பின்னர் ஓராண்டு காலத்தில் ஒவ்வொரு துறைகளிலும் உற்பத்தியாகும் பண்டங்கள், பணிகளின் நிகரப் பண மதிப்பைக் கணக்கிட வேண்டும் ஒரு துறையினுடைய நிகரப் பண மதிப்பைக் அத்துறையின் உற்பத்தியின் மொத்தபண மதிப்பிலிருந்து அத்துறையானது பிற துறைகளிலிருந்து வாங்கிய பண்டங்கள் பணிகளின் மொத்த மதிப்பை கழிப்பதின் மூலம் காணலாம்.∵.

இவ்வாறு காணப்படும் பல்வேறு துறைகளின் நிகரப் பண மதிப்புகளின் மொத்த நாட்டு வருவாயுடன் அயல் நாடுகளிலிருந்து பெறப்படும் நிகரப் பண மதிப்பைக் கூட்ட, மொத்த நாட்டு வருவாய் கிடைக்கும்.

**மொத்த நாட்டு வருவாயிலிருந்து தேய்மானத்தின் மதிப்பைக் கழிக்க** நிகர நாட்டு வருவாய் கிடைக்கும்

**சிறப்புக்கள் :**

1) ஆண்டுதோறும் உற்பத்தி பற்றிய அனைத்து விவரங்களும் சேகரிக்கப்படும் நாடுகளில், இம்முறை சிறந்த பயனைத் தரும்

2) இம்முறையின் மூலம் பல்வேறு துறைகளின் முக்கியத்துவம் அறியப்படுகிறது.

**குறைகள்:**

1) எல்லா நாடுகளிலும் உற்பத்தி பற்றிய புள்ளி விவரங்கள் சரிவரக் கிடைப்பதில்லை

2) தேய்மானத்தைத் துல்லியமாகக் கணக்கிட முடியாது.

இம்முறையைப் பயன்படுத்தும்போது பின்வரும் கருத்துக்களை மனதிற் கொள்ளவேண்டும்

1) ஒரு பொருளின் மதிப்பு ஒரு முறை மட்டுமே சேர்க்கப்பட வேண்டும்

2) உற்பத்தி முடிவடைந்து நுகர்வுக்குத் தயார் நிலையிலுள்ள பொருள்கள் மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்

3) அங்காடி விலைகளினடிப்படையில் பொருட்களின் மதிப்புகள் கணக்கிடப்பட வேண்டும்.

4) வாணிப உற்பத்திப் புள்ளி விவரங்களைப் பயன்படுத்தி நாட்டின் வருவாயைக் கணக்கிட முடியும்.

**வருவாய் முறை ( Income Method )**

ஒரு நாட்டில் இருக்கின்ற தனி நபர்கள் மற்றும் வியாபார நிறுவனங்கள் ஓராண்டு காலத்தில் பெறும் வருமானங்களைக் கூட்டுவதன் மூலம் நாட்டின் வருவாயைக் கணக்கிட முடியும். உற்பத்திக் காரணிகள் ஓராண்டுக் காலத்தில் பெறுகின்ற வருமானங்களை கூட்டுவதாலும், நாட்டின் வருவாயைக் கணக்கிட முடியும்.

இம்முறையைப் பயன்படுத்தும்போது பின்வரும் கருத்துக்களை மனதில் கொள்ள வேண்டும்.

1) மாற்றுச் செலுத்தல்கள் ( அன்பளிப்பு ), பழைய வீடு, கார், இருப்பு, பங்கு பத்திரங்கள் இவற்றை விற்பதன் மூலம் கிடைக்கும் வருமானங்கள் இவற்றைச் சேர்க்கக் கூடாது

2) தொழிலதிபர்களால் சொந்த உற்பத்திக் காரணிகளுக்குச் செலுத்தப்படும் சன்மானங்கள் சேர்க்கப்பட வேண்டும்

3) வியாபார நிறுவனங்களின் பகிர்ந்தளிக்கப்படாத இலாபம் சேர்க்கப்பட வேண்டும் .

4) அரசு வரித்துறைகள், வணிக நிறுவனங்களிலிருந்து பெறப்படும் புள்ளி விவரங்களை பயன்படுத்தி நாட்டு வருவாயைக் கணக்கிட வேண்டும்.

**செலவு முறை ( Expenditure method )**

ஒரு நாட்டில் ஓராண்டுக் காலத்தில் செய்யப்படும் செலவுகளையும், சேமிப்புகளையும் கூட்டுவதன் மூலம் நாட்டின் வருவாயைக் கணக்கிட முடியும். இம்முறைக்கு செலவு - சேமிப்பு முறை என்று பெயர்

இம்முறையைப் பயன்படுத்தும்போது பின்வரும் கருத்துக்களை மனதில் கொள்ள வேண்டும் 1) தனி நபர்கள், வியாபார நிறுவனங்கள், அரசு செலவுகள் சேர்க்கப்பட வேண்டும்

2) முதலீட்டின் அளவு சேர்க்கப்பட வேண்டும்

3) ஏற்றுமதியளவு சேர்க்கப்பட வேண்டும்

4) இறக்குமதியளவு சேர்க்கப்படக் கூடாது.

இம்முறையைப் பயன்படுத்தப் போதுமான புள்ளி விவரங்கள் கிடைப்பதில்லை எனவே இம்முறை பொதுவாகப் பயன்படுத்தப்படுவதில்லை.

## நாட்டு வருவாய்க் கணிப்பில் ஏற்படும் பிரச்சனைகள்

### பொதுவான சிக்கல்கள்

பொருளாதாரத்தின் பல்வேறு துறைகள் பற்றிய புள்ளி விவரங்கள் முழுமையான அளவிலும் நம்பிக்கையான தரத்திலும் கிடைப்பதில்லை

குறிப்பு

நாட்டு வருவாய் பற்றிய தெளிவான கருத்தை உருவாக்குவதில் சில சிக்கல்கள் உள்ளன.நாட்டு வருவாய் பணத்தின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. ஆனால் பண மதிப்பைக் கணக்கிட முடியாத அனேக பணிகள் உள்ளன.பணத்தின் அடிப்படையில் கணிக்கப்படும் நாட்டு வருவாய் சில வேளைகளில் வினோதமான முடிவுகளைக் கொடுக்கும். உதாரணம் ஒரு குடும்பத்தை நிர்வகிக்கும் பெண் ஒருவரின் ஊதியம் நாட்டு வருவாயில் சேரும். ஆனால் அதே பெண் அந்த குடும்பத்தின் தலைவரைத் திருமணம் செய்து கொண்ட பின்னர் அதே பணியை அவர் செய்தால் அது நாட்டு வருவாயில் சேராமல் போகும் .

சட்டத்திற்கு புறம்பான வழிகளில் சம்பாதிக்கப்படும் வருமானம் நாட்டு வருவாயில் சேர்வதில்லை.அரசின் செலவுகளை கணித்து நாட்டு வருவாயில் சேர்ப்பது எப்படி என்பது பற்றி கருத்து வேறுபாடுகள் உள்ளன.அயல்நாட்டு நிறுவனங்களின் நடவடிக்கைகளால் தோன்றும் வருமானங்களை நாட்டு வருவாயில் சேர்ப்பதில் ஏற்படும் இடையூறுகள் நாட்டு வருவாய்க் கணிப்பைச் சிக்கலா்குகின்றன.

**பின் தங்கிய நாடுகளிலுள்ள சிக்கல்கள்**

1. போதிய அளவில் நம்பத் தகுந்த புள்ளிவிவரங்கள் கிடைப்பதில்லை. உதாரணம்˙ வேளாண்மைப் புள்ளி விவரங்கள்

2. பின் தங்கிய நாடுகளில் பணப் பொருளாதாரத்திற்குள் வராத சில துறைகள் இருக்கின்றன. இங்கு பண்டமாற்று முறையே இன்னும் அமுலில் உள்ளது. இவற்றின் பணமதிப்பைக் கணிப்பது கடினம்.

3. அனேக உற்பத்தியாளர்கள் சிறிய அளவிலேயே உற்பத்தியை மேற்கொள்கின்றனர். இவர்கள் உற்பத்தி அளவுகளையும் அவற்றின் பண மதிப்பையும் சரிவரக் கணக்கு வைப்பதில்லை.

4. ஒருவரே பல பணிகளைச் செய்கின்ற பொழுது, அப்பணிகளின் பண மதிப்பைக் கணக்கிடுவதில் சிக்கல் உண்டு.

5. கல்வியறிவு குறைவாக இருப்பதால் புள்ளி விவரங்கள் சரிவரக் கிடைப்பதில்லை.

**நாட்டு வருவாயை நிர்ணயிக்கும் காரணிகள்**

- **நாட்டின் இயற்கை வளங்கள்:**

ஒரு நாட்டில் நல்ல மண்ணும் வற்றாத ஆறுகளும் கனிமவளங்களும் மற்றும் மழை வளமும் மிகுந்து இருப்பின் அந்நாட்டின் தேசிய வருவாய் மிகுதியாக இருக்கும்.

குறிப்பு

- **போதுமான உழைப்பு**

ஒரு நாட்டில் திறமை மிகுந்த உழைப்பாளர்கள் போதுமான அளவில் இருந்தால் அந்நாட்டின் உற்பத்தி மிகுதியாக இருக்கும் அதனால் அந்நாட்டின் தேசிய வருவாயும் மிக அதிகமாக இருக்கும்.

- **மூலதனத் திரட்சி**

மூலதனத் திரட்சி மிகுந்துள்ள நாட்டின் தேசிய வருவாய் அதிகமாகவும், மூலதனத் திரட்சி குறைவாக உள்ள நாட்டின் தேசிய வருவாய் குறைவாகவும் இருக்கும். ஒரு நாட்டின் மூலதனத் திரட்சி அந்நாட்டிலுள்ள மக்களின் சேமிக்கும் திறமையையும், சேமிக்கும் விருப்பத்தையும் பொறுத்து அமையும்

- **திறமையான தொழிலமைப்பு :**

ஒரு நாட்டின் தேசிய வருவாய் அந்நாட்டின் தொழிலைமைப்பாளர்களின் திறமையைப் பொறுத்தும் அமையும். திறமையான தொழிலமைப்பாளர்கள் மிகுந்திருக்கும் நாட்டின் தேசிய வருவாய் அதிகமாக இருக்கும். அதனால் தான் ஒவ்வொரு நாட்டிலும் தொழிலமைப்பாளரின் திறமையை அதிகரிக்க பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- **சமுதாய அரசியல் அமைப்புகள்:**

சேமிக்கும் விருப்பத்தையும் ஆற்றலையும் கொண்ட அரசியல் அமைப்பையும் நிலையான அரசாங்கத்தைக் கொண்ட அரசியல் அமைப்பையும் கொண்ட நாட்டின் தேசிய வருமானம் அதிகமாகமாக இருக்கும்.

**நாட்டு வருவாயும் சமுதாய நலனும்**

சமுதாய நலன் அளவை கணிப்பதற்கு நாட்டு வருவாய் மிகச் சிறந்த அளவையாகப் பயன்படுகிறது.

- நாட்டு வருவாய் அதிகரிப்பு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அல்லது முன்னேற்றத்தை மதிப்பீடு செய்ய முடிகிறது. எனினும் எல்லா நாட்டு வருவாய் உயர்வும் நாட்டின் பொருளாதார வளர்ச்சியைக் குறிப்பிடுவதில்லை. எனவே தான் நாட்டு வருவாய் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மதிப்பீடு செய்ய சரியான அளவுகோல் அல்ல என்று சிலர் கருதுகின்றனர்.
- நாட்டில் உற்பத்தி அதிகரிக்காத நிலையில், விலை மட்டம் உயர்வதால் நாட்டு வருவாய் அதிகரிக்கும், நாட்டு வருவாயை நிகழ் கால விலைகளினடிப்படையில் கணிக்கும் போது இது நிகழும்.

குறிப்பு

எனவே நாட்டு வருவாயை மாறா விலைகளினடிப்படையில் காண்பதே சிறந்தது.

- மாறா விலை மட்டத்தில் நாட்டு வருவாயைக் கணிப்பதும் குறைபாடுடையதே ஆகும் என வேறுச் சிலர் கருதுகின்றனர். ஏனெனில் மக்கட்தொகை அதிகரிக்காமல் இருக்க வேண்டும் அல்லது நாட்டு வருவாய் அதிகரிப்பை விட மக்கள் தொகை அதிகரிப்பு விகிதம் குறைவாக இருக்க வேண்டும். அப்படியாயின் தனி நபர் வருமானம் அதிகரிக்கும். இதனை பொருளாதார முன்னேற்றம் என்று கருதலாம். அதனால் தான் பலர் நாட்டு வருவாயைவிட, தனி நபர் வருவாயைக் கொண்டு பொருளாதார முன்னேற்றத்தை கணிப்பது சிறந்தது என்று அறிஞர்கள் கூறுகின்றனர். J R ஹிக்ஸ் ( J.R. Hicks ) என்னும் பொருளாதார மேதையும் கூட இதே கருத்தை வலியுறுத்துகின்றனர்.
- வேறு சில பொருளாதார மேதைகள் நாட்டு வருவாயும், தனிநபர் வருவாயும் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தைக் கணிப்பதற்குப் பொருத்தமான அளவுகோல்கள் இல்லை என்றும், மக்களின் வாழ்க்கைத் தர உயர்வு தான் சரியான அளவுகோல் என்றும் கூறுகின்றனர். அவர்கள் பின்வரும் வாதங்களை முன் வைக்கின்றனர்.

1) தனி நபர் வருவாய் என்பது நாட்டு வருவாயை மக்கள் தொகையால் வகுக்கக் கிடைக்கும் ஈவே ஆகும்.

2) கூட்டுச் சராசி முறையில் தனிநபர் வருவாய் கணிப்பை காண்கிறோம். கூட்டுச் சராசி முறை எப்போதுமே பெரிய எண்களை நோக்கியே செல்லும் தன்மையைக் கொண்டது. எனவே இம்முறை நாட்டு வருவாய் மக்களிடம் சமச் சீராகப் பங்கிடப்பட்டிருக்கும் நிலையில் மட்டுமே இம்முறை பயன்தரும்.

3) இம்முறை பண்டங்களின் தரத்தில் ஏற்படும் உயர்வுகள் பற்றி கருத்தில் கொள்ளத் தவறிவிட்டது.

4) இம்முறையில் நாட்டு உற்பத்தியில் அத்தியாவசியப் பண்டங்கள், ஆடம்பரப் பண்டங்கள் இவற்றின் விகிதம் கருத்தில் கொள்ள்ப்படவில்லை

5) இம்முறை பண்டங்களின் தரத்தில் ஏற்படும் உயர்வுகள் பற்றி கருத்தில் கொள்ளத் தவறிவிட்டது.

6) இம்முறையில் நாட்டு வருவாய் எவ்வாறு அதிகரித்தது என்பது பற்றிய கருத்தைக் கொள்ளவில்லை. இத்துணைக் காரணங்களால் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அளப்பதற்கு நாட்டு வருவாய் மற்றும் தனி நபர் வருவாய் சிறந்த அளவு கோல்கள் அல்ல என்ற கருத்து வலுப்பெற்றுள்ளது

## 3.5 சமுதாயக் கணக்கீடு

குறிப்பு

தனிப்பட்ட நிறுவனங்கள் இருமுறைக் கணக்கு வைப்பு மூலம் வரவுகளையும், செலவுகளையும் கணக்கு வைத்து, இறுதியில் இருப்பு நிலைக்குறிப்பு தயாரிக்கின்றன. இதேபோல ஒரு நாடு முழுமைக்கும் இருமுறை கணக்கு வைப்பு முறையின் மூலம் எல்லா வரவுகளையும், செலவுகளையும் கணக்கெழுதும் முறையை சமுதாயக் கணக்கு வைப்பு என்று கூறலாம். இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் சமீபகாலத்தில் இம்முறை முக்கியத்துவம் பெற்றுவருகின்றது.

சமுதாயக் கணக்கு வைப்பு முறையில் நாட்டு வருவாயின் மதிப்பீடுகளைப் பல வழிகளில் வெளியிடலாம். அவற்றில் ஒன்று பொருளதாரத்தை

1. தனி மனிதத் துறை (இல்லத் துறையும் நிறுவனமும்)
2. வாணிபத்துறை,
3. அரசுத்துறை,
4. அயல்நாட்டுத்துறை

என்று நான்காப் பகுத்து ஒவ்வொன்றைப் பற்றியும் விரிவாகக் கணக்கு வைக்கலாம்.

இன்னொரு வகையில், சமுதாயத்தின் பொருளாதார நடவடிக்கைகளை 1.நுகர்வு 2.உற்பத்தி 3.முதலாக்கம் செய்கின்ற 1. நுகர்வோர்கள் 2.உற்பத்தியாளர்கள் 3.சேமிப்பாளர்கள் 4)வெளிநாட்டுப் பணிகளில் ஈடுபடுவர்கள் என்ற அடிப்படையில் 1..நுகர்வுக் கணக்கு அல்லது செலவுக்கணக்கு 2..உற்பத்தி கணக்கு 3.மூலதனக் கணக்கு 4.வெளிக்கணக்கு என்று கணக்குகளை வைக்கலாம்.

சமுதாயக் கணக்கு வைப்பு முறையால் சில குறிப்பிடத் தக்க பயன்கள் கிடைக்கின்றன. நாட்டு வருவாயை வகைப்படுத்த முடிகின்றது. எந்தெந்த நடவடிக்கைகளில் வருவாய் கிடைக்கின்ற தென்பதையும், எந்தெந்த வழிகளில் செலவான தென்பதற்கும் கணக்கு இருக்கும். சமுதாயக் கணக்கு வைப்பு பொருளாதார அமைப்பையும், அதில் பல்வேறு துறைகளின் பங்கையுமம் உணரச் செய்து பொருளாதார முன்னேற்றத்திற்குததுவை

### 3.5.1 நாட்டு வருவாய்க் கணிப்பின் பயன்கள்:

1. நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அறிய உதவுகிறது.

2. நாட்டின் பல்வேறு பொருளாதாரத் துறைகளின் வருவாயைக் கணக்கிட்டு ஒப்பிட முடியும்

3. பண வீக்கம், பண வாட்டம் ஆகிய நிலைகளை அறிய தேசிய வருவாய்ப் புள்ளி விவரங்கள் துணை செய்கின்றன.

4. வாணிப நிலையின் போக்கை அறியலாம்.

5. நாட்டின் பொருளாதார அமைப்பையும், அதில் பல்வேறு துறைகளின் பங்கையும் அறிய முடியும்.

6. அரசின் பல்வேறு செலவினங்கள் பற்றி ஆராய முடியும்

7. நாட்டு வளர்ச்சிக்குத் திட்டமிடுவதற்கு தேசிய வருவாய்ப் புள்ளி விவரங்கள் துணை செய்கின்றன.

குறிப்பு

# அலகு - 4 தொன்மையான் வேலை வாய்ப்பு கோட்பாடு

4.1. நோக்கங்கள்
4.2. வேலை வாய்ப்பு கோட்பாடு
4.3 வருவாய்-
4.4. உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்க
4.5. சந்தையின் சந்தை
4.6. உங்கள் முன்னேற்றத்தைச் சரிப்பார்க்க

## 4.1 நோக்கங்கள்

1. தொன்மையான் வேலை வாய்ப்பு மற்றும் வருவாய் பற்றி தெரிந்து கொள்ளுதல.
2 .சந்தை பற்றி தெளிவு பெற.

## அறிமுகம்

முழு நிறை வேலை வாய்ப்பு நிலை என்பது முதலாளித்துவ நாடுகளில் நிலவும் ஓர் இயல்பான நிலை ஆகும். மேலும், இந்நாடுகளில் முழு நிறை வேலை வாய்ப்பு நிலையானது அங்காடிக் காரணிகளால் தானாகவே ஏற்படுத்தப்படுகிறது. முழு நிறை வேலை வாய்ப்பு நிலையில் ஒரு குறிப்பிட்ட சகவிகித அளவில், பருவ கால, பிறழ்ச்சிக்காரண, அமைப்பு முறை, தொழில் நுட்ப மற்றும் சுய விருப்பம் ஆகிய காரணங்களால் வேலையின்மை நிலவலாம். எனினும், அங்கு சுய விருப்ப மற்ற வேலையின்மை இருக்காது.

## 4.2. வேலை கோட்பாடு

முதலாளித்துவ நாடுகளில் உபரி உற்பத்தியோ, பற்றாக்குறை உற்பத்தியோ இருப்பதில்லை பொது வேலையின்மையும் நிலவுவதில்லை. ( மால்தஸ் இக் கருத்தினை ஏற்றுக் கொள்ளவில்லை). ஏதேனும் ஒரு சமயத்தில் வேலையின்மை நிலவினால், அது தற்காலிகமானதாகவும், விரைவிலேயே தானாகவே முழு நிறை வேலை வாய்ப்பு நிலை மறுபடியும் தோற்றுவிக்கப்படும் வகையிலும் இருக்கும்.இதுதான் முழு நிறை வேலை வாய்ப்பு நிலை பற்றிய தொன்மைப் பொருளியல் அறிஞர்களின் கருத்தாகும்.

**பிகுவின் கருத்து:**

தொன்மைப் பொருளியல் அறிஞர்களில் மிகவும் முக்கியமானவராகக் கருதப்பட்ட பிகு ( Pigou) சற்று மாறுபட்ட கருத்தினை முன்னுரைத்தார். தடையற்ற முதலாளித்துவ நாடுகளில் உழைப்பு அங்காடியில் முழு நிறை வேலைவாய்ப்பு நிலை தானாகவே தோற்றுவிக்கப்படுகிறது. வேலையின்மை தோன்றினால் அதற்கு கூலி அமைப்பிலுள்ள நெகிழ்ச்சியற்ற நிலையும், அரசு மற்றும் தொழிற் சங்கங்களின் தலையீடுமே காரணங்களாகும்.

வேலையின்மை அளவைக் குறைத்து, முழு நிறை வேலை வாய்ப்பு நிலையை அடைவதற்குகூலி மட்டத்தைக் குறைக்க வேண்டும் என அவர் திட்டமான கொள்கையை கொண்டிருந்தார்.

குறிப்பு

**தொன்மைக் கோட்பாடு முக்கியக் கருத்துகள்**

1. தொன்மைப் பொருளியல் அறிஞர்கள் தலையிடாக் கொள்கையினைஆதரித்தனர்.

2. அவர்களின் கருத்துப்படி அரசுகுறைவான பணிகளையே ஆற்றவேண்டும்.

3. கூலி குறைப்பு அதிக வேலைவாய்ப்பினை உருவாக்கும்.

4. பொளாதாரத்தில் முழு வேலைவாய்ப்பு (Full employment) எப்போதும் நிலவும

5. சேயின் அங்காடி விதி = அளிப்பு தன் தேவையை தானே உருவாக்குகிறது.

6 சேயின் விதிபண்டமாற்றபொருளாதாரஅமைப்புமுறையில் மட்டுமே உண்மையாகிறது.

7. கீன்ஸ்இசேயின் விதியை எதிர்த்தா ;.J.S. மில் ஆதரித்தார்.

8. தொன்மைப் பொருளாதார முறை பதினெட்டாம் நூற்றாண்டு மற்றும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இங்கிலாந்தில் வளர்ச்சியுற்றது.

9. தொன்மைப் பள்ளியின் முதன்மைப் பொருளியல் அறிஞர்கள்: ரிக்கார்டோ து.ளு.மில் மார்'ல் மற்றும் பிகு.

10. தொன்மைப் பொருளாதாரத்தின் முக்கியக் குறிக்கோள் முதலாளித்துவ பொருளாதாரச் செயல்பாடுகளை விளக்குவதாகும்.

11 .தொன்மைக் கோட்பாடுபொருளாதார மந்தத்தின் காரணமாகவும்இகீன்ஸின் மாற்றுக் கோட்பாட்டினாலும் மதிப்பிழந்தது.

12 .தொன்மைப் பொருளியல் அறிஞர்கள் என்னும் கருத்தைமுதன் முதலில் பயன்படுத்தியவர் கார்ல் மார்க்ஸ்.

13. தொன்மைப் பொருளியலின் அடிப்படை சேயின் அங்காடிவிதி.

## 4.3 வருமான கோட்பாடு

1.கீன்ஸின் வருமானம் உற்பத்திமற்றும் வேலைவாய்ப்புகோட்பாட்டின் அடிப்படைஉறுதித் தேவையாகும்.

2. விளைவுள்ள தேவை என்பது தொகுதேவையும் தொகு அளிப்பும் சமமாக இருப்பதாகும்.

குறிப்பு

(விளைவுள்ளதேவை = தொகுதேவை + தொகுஅளிப்பு )

3. தொகுத்தேவை = C+1+G+(X-M) =Y= ED

4. கீன்ஸ் குறை நிலை வேலைவாய்ப்பில் பொருளாதாரம் சம நிலையில் இருக்கின்றது

என்பதைக் குறிப்பிடுகிறார்.

5. கீன்ஸ் பணக்கோட்பாட்டைப் பொதுக் கோட்பாட்டுடன் இணைத்தார்.

6. ஒரு நாட்டில் உற்பத்தி அதிகரிக்கும் போது வேலை வாய்ப்பு அதிகரிக்கிறது. உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பிற் கிடையே நேரடித் தொடர்பு நிலவுகிறது.

7. மொத்த உற்பத்தியை நிர்ணயிப்பது உறுதித் தேவையாகும்.

8. கீன்ஸின் பொருளியலபுதிய பொருளியல்எனவும் பொருளியல் புரட்சிஎனவும் அழைக்கப்படுகிறது.

9. கீன்ஸின் வருமானப் பெருக்க ஆய்விற்கு நிலையான பகுத்தாய்வு(Static analysis) என்று பெயர்.

10.ஊகநோக்கத்திற்கானபணத்தேவை வட்டி நெகிழ்ச்சியுடையது .(Interest Elasticity)

11.வேலை வாய்ப்பு அதிகரிக்கும் போது நாட்டுவருமானம் அதிகரிக்கும்.

12.விளைவுள்ள தேவை = தேசியவருமானம

;= தேசிய உற்பத்தி

**கின்ஸின் கருத்து**

முழு நிறை வேலைவாய்ப்பு பற்றிய கீன்ஸ்-ன் கருத்துகளைப் பின்வருமாறு தொகுத்து உரைக்கலாம்.

1. நடைமுறையிலுள்ள கூலி விகிதத்தில் வேலை செய்ய விரும்புகின்ற ஒவ்வொருவரும் உண்மையில் வேலையில் அமர்த்தப்படும் நிலை முழு நிறை வேலைவாய்ப்பு நிலையாகும். இந்நிலையில் ஒரு குறிப்பிட்ட சத விகித அளவில் வேலையின்மை நிலவும் பிறழ்ச்சி, அமைப்பு முறை, தொழில் நுட்ப மற்றும் சுய விருப்பம் ஆகிய காரணங்களால் இந்த வேலையின்மை நிலவுகிறது. எனினும், இந்நிலையில் சுய விருப்பமற்ற

குறிப்பு

வேலையின்மை நில்வுவதில்லை. இது தொன்மைப் பொருளியல் அறிஞர்களின் கருத்தே ஆகும். இதனை கின்ஸ் அப்படியே ஏற்றுகொண்டுள்ளார்.

2. பொருளாதாரம் தானே இயல்பாக முழு நிறைவேலை வாய்ப்பு நிலையை அடையும் என்ற தொன்மைப் பொருளியல் அறிஞர்களின் கருத்தினை கின்ஸ் ஏற்றுக் கொள்ளவில்லை. ஒரு பொருளாதாரம் முழு நிறை வேலை " வாய்ப்பு நிலைக்கும் குறைவாகவே சமநிலையில் இருக்கும் என்று அவர் கருதுகிறார் இச் சம நிலையை அடைவதற்கு அரசின் தலையீடு அவசியமென்று அவர் கூறுகிறார்.

3. " திறனுள்ள தேவை அளவில் ஏற்படும் கூடுதலால் உற்பத்தி அளவு அதிகரிக்காத நிலையே முழு நிறை வேலை வாய்ப்பு நிலையாகும்" என கீன்ஸ் தந்த ˙ பொதுக் கோட்பாடு என்னும் நூலில் வேறோரு இடத்தில் இலக்கணம் கூறுகிறார். இந்நிலையின்போது, உற்பத்தி நெகிழ்ச்சியற்றிருப்பதால், திறனுள்ள தேவையில் ஏற்படும் கூடுதலால், பணவீக்கம் தோன்றும்.

4. முழு நிறை வேலை வாய்ப்பு நிலை தொன்மைப் பொருளியல் அறிஞர்கள் கூறுவது போல ஓர் இயல்பான நிலை அல்ல. அதை அடைவதற்கு அரசின் தலையீடு அவசியமாகும் என கீன்ஸ் கருதுகிறார்.

**முழு நிறை வேலை வாய்ப்பை அடைய எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள்**

முழு நிறை வேலை வாய்ப்பை அடைதல் என்பது பேரியல் பொருளாதாரத்தின் மிக முக்கியமான கொள்கையாகும். திறனுள்ள தேவை அளவை அதிகரிப்பதற்கு நாம் முதலீடு அல்லது நுகர்வு அல்லது இரண்டையும் ஊக்குவிக்க வேண்டும். இதற்காக தற்கால அரசுகள் பொருத்தமான பணக் கொள்கை, நிதிக் கொள்கை மற்றும் இதரக் கொள்கைகளையும் பின்பற்ற வேண்டும். இவை பற்றி இங்கு சுருக்கமாக ஆராய்வோம்.

## 4.4 உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்க

1. கெயின்சன் கோட்பாடு பற்றி கூறுக

----------------------------------------------------------------------------------------------------------

2. முழு நிறை வேலை வாய்ப்பை அடைய எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள்

----------------------------------------------------------------------------------------------------------

குறிப்பு

**பணக் கொள்கை (** Monetary Policy **)**

பணத்தால் ஏற்படும் நன்மைகளை மிகைப்படுத்தவும், பணத்தால் விழையும் தீமைகளை குறைத்திடவும் ஒவ்வொரு நாட்டின் மைய வங்கியும் பின்பற்றும் கொள்கை பணக் கொள்கை எனப்படும். முழு நிறை வேலை வாய்ப்பு நிலையை அடையப் பின்வரும் பணக் கருவிகளைப் பயன்படுத்த வேண்டும்.

1. வட்கி வீதத்தை மைய வங்கி குறைக்க வேண்டும்

2. மைய வங்கி வெளி அங்காடியில் விற்பனையாகும் குறுங்கால, நீண்ட காலக் கடன் பத்திரங்களை விலைக்கு வாங்க வேண்டும்.

3. மைய வங்கி, வணிக வங்கிகள் வைத்திருக்க வேண்டிய ரொக்க இருப்பு விகிதத்தைக் குறைக்க வேண்டும்.

இம்முறைகளைப் பின்பற்றுவதனால், நாட்டில் பண அளிப்பு அதிர்கரித்து, முதலீட்டளவு உயர்ந்து, உற்பத்தியும், தேசிய வருவாயும், வேலை வாய்ப்பும் அதிகரிக்கிறது. முழு நிறை வேலை வாய்ப்பு நிலையில் சேமிப்பும் முதலீடும் சமமாக இருக்கும்.

**2. நிதிக் கொள்கை (** Fiscal Policy **)**

வரி விதித்தல், பொதுச் செலவு, பொதுக் கடன், பற்றாக் குறை நிதியாக்கம், நிதி நிர்வாகம், சம்பந்தமான ஓர் அரசின் கொள்கை அந்த அரசின் நிதிக் கொள்கை எனப்படும். பல்வேறு நோக்கங்களில் முழு நிறை வேலைவாய்ப்பு நிலையை அடைதல் என்பது நிதிக் கொள்கையின் ஓர் முக்கியமான நோக்கமாகும். முழு நிறை வேலை வாய்ப்பை அடைவதற்கு அரசு பின்வரும் நிதிக் கருவிகளைப் பயன்படுத்த வேண்டும்.

1. அரசு பற்றாக் குறை வரவு - செலவுத் திட்டத்தை தயாரித்து, பற்றாக்குறை நிதியாக்கத்கை மேற்கொள்ள வேண்டும்.

2. வரிகள் குறைக்கப்பட வேண்டும். 'புதிய வரி விதிப்பு தவிர்க்கப்பட வேண்டும்'.

3. பொதுச் செலவு அதிகரிக்கப்பட வேண்டும். பொதுச் செலவை அதிகரிப்பதற்கு குழாய் நிரப்புகை ( pump priming)ஈடு கட்டும் செலவு ( compensatory spending ) ஆகிய முறைகளைப் பின்பற்றலாம்.

4. அரசு எழுப்பும் பொதுக் கடன் அளவைக் குறைத்து, ஏற்கனவே அரசு பெற்றிருந்த கடன்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்

**தொன்மைப் பொருளியல் வேலைவாய்ப்புக் கோட்பாடு ( Classical Theory of Employment )**

குறிப்பு

“தொன்மைப் பொருளாதாரப் பள்ளி”( classical school of economics) என்னும் சொல்லை முதன் முதலாத கார்ல் மார்க்ஸ் ( Karl Marx ) பயன்படுத்தினார். அவர் ரிகார்டோ மற்றும் ஆடம் ஸ்மித் உட்பட அவர்களுக்கு முன்னோர்களை மட்டுமே தொன்மைப் பொருளாதாரப் பள்ளியைச் சேர்ந்தவர்கள் எனக் கருதினார். ஆனால் கீன்ஸ் ( J.M. Keynes), ரிக்கோர்டா மற்றும் அவரது பின்னோர்களான மில், ஆல்.ஃபிரெட், மார்ஷெல், பிகு முதலியோரை இப்பள்ளியைச் சேர்ந்தவர்களாகக் கருதினார். ஐரோப்பாவில் இப் பள்ளீக்கு அடித்தளம் அமைத்தவர் ஆடம் ஸ்மித் ஆவார். வரலாறு படைத்த அவரது நாடுகளின் செல்வம் ( Wealth of Nations ) என்னும் நூல்தான் இப்பள்ளியின் தொடக்க நிலையை விழம்புகிறது. மாஸ்கஸ் - ரிகார்டோ முதலானோர் இங்கிலாந்தில் இப்பள்ளிக்கு அஸ்திவாரம் அமைத்தனர். இப்பள்ளியின் கோட்பாடுகள் 18-ம் மற்றும் 19-ம் நூற்றாண்டுகளில் ஐரோப்பா முழுமையும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தன .

ஜெரமி பெந்தம் சே.சீனியர், ஜே.எஸ்.மில், ஆல்.ஃபிரெட் மார்ஷெல், பிகு முதலியோர் இப்பள்ளியின் கோட்பாடுகளையும் கருத்துக்களையும் பரப்பியவர்களில் முக்கியமானவர் ஆவர்.

**தொன்மைப் பொருளாதாரப் பள்ளியின் கருத்துக்கள்**

1. அரசு பொருளாதார நடவடிக்கைகளில் தலையிடாக் கொள்கையைப் ( laissez faire policy ) பின்பற்றுகிறது. நாட்டுப் பிரஜைகளின் உயிரையும், உரிமையையும், சொத்துக்களையும் பாதுகாப்பதைத் தவிர வேறெந்த பணிகளையும் அரசு செய்வதில்லை.

2. நாட்டில் அங்காடிப் பொருளாதாரம் ( market economy) நிலவுகிறது.

3. நாட்டில் நிறைவுப் போட்டி ( perfect competition) நிலவுகிறது.

4. நாட்டில் முழு வேலை வாய்ப்பு நிலை ( full employment ) நிலவுகிறது. அங்காடிக் காரணிகளால் நாட்டின் முழு வேலை வாய்ப்பு நிலை தானாகவே கொண்டு வரப்படுகிறது.

5. சே - யின் அங்காடி விதி ( Say's Law of Market ) தொன்மைப் பொருளியல் அறிஞர்களால் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. ‘ ஒவ்வொரு அளிப்பும் அதற்கான தேவையை தானே எழுப்புகிறது’ என்று சே

கூறுகிறார். எனவே நாட்டில் அதிகளவு உற்பத்தியோ அல்லது வேலையின்மை நிலையோ தோன்றுவதில்லை.

குறிப்பு

6. தன்னலம் ( சுய நலம் ) அடிப்படையில் தான் பொது நலம் தோன்றுகிறது என்ற கருத்து எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

7. சேமிப்பும் முதலீடும் சமமாக இருக்கும். இவை இரண்டுமே வட்டி விகிதத்தால் நிர்ணயிக்கப்படுகின்றன. மேலும், வட்டி விகிதத்தில் ஏற்படும் மாற்றங்களால் இவை சம நிலைக்குக் கொண்டு வரப்படுகின்றன.

8. பணக் கூலிக்கும் உண்மைக் கூலிக்குமிடையே நேர்முகக் உறவு நிலவுகிறது.

9. பணத்தின் அளிப்புக்கும் பொதுவான கூலி மட்டத்திற்குமிடையே நேர்முக உறவு நிலவுகிறது.

10. ஓர் பண்டத்தின் மதிப்பு நிர்ணயத்தில் அதனை ஆக்கச் செலவிடப்படும் உழைப்பின் மதிப்பின் முக்கியத்துவத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டிருந்தனர்.

11. பொருளாதார முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் கவனம் செலுத்திய பொருளியல் அறிஞர்களில் இவர்களே முதன் மையானவர்கள்.

12. பொருளாதாரக் கோட்பாடுகள், எல்லாக் காலங்களுக்கும், எல்லா இடங்களுக்கும், எல்லா இடங்களுக்கும், எல்லாச் சூழ்நிலைகளுக்கும் பொருந்தக் கூடியவை.

13. பொருளாதாரப் பிரச்சனைகளைப் பகுத்தாய்வு முறை ( deductive method ) மூலமே ஆய்வு செய்ய முடியும்.

14. குறுகிய காலத்தைக் காட்டிலும் நீண்ட காலமே முக்கியமானது. நீண்ட காலச் சம நிலைக்கே இவர்கள் முக்கியத்துவம் அளிக்கின்றனர்.

15 தொன்மைப் பொருளாதாரம் நுண்ணினப் பொருளாதாரம் ஆகும். நுண்ணினப் பொருளாதாரத்தை இவர்கள் தேசியப் பிரச்சனைகளை ஆராயப் பயன்படுத்தினர்

## 4.5 சந்தை விதி

பிரெஞ்சுப் பொருளியல் மேதை து.டீ. சே- யின் அங்காடி விதி தான் வேலை வாய்ப்பு பற்றிய தொன்மைப் பொருளாதாரக் கோட்பாட்டின் இதயப் பகுதியாகும். தொன்மைப் பொருளாதார மேதைகல் இக் கோட்பாட்டின் மீது தகர்க்க இயலாத நம்பிக்கை கொண்டிருந்தனர். “ ஒவ்வொரு அளிப்பும்

அதற்கான தேவையை நானே தோற்றுவிக்கிறது" என்று து.டீ சே-யின் அங்காடி விதி கூறுகிறது.

குறிப்பு

1. நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளில் அரசு தலையிடாக் கொள்கையைப் பின்பற்றுகிறது.

2. நாட்டில் முதலாளித்துவப் பொருளாதார அமைப்பு உள்ளது.

3. அங்காடி அளவு விரிவடையத் தடையில்லை.

4. எல்லா சேமிப்புகளும் முதலீடு செய்யப்படுகின்றன.

5. சேமிப்பு, முதலீடு இவை சமமாக இருக்கும்.

6. பொருளாதாரம் தானே இயங்குகின்றது.

7. வெளிநாட்டு சக்திகள் உள்நாட்டு பொருளாதாரத்தை எவ்வகையிலும் பாதிக்காது.

8. நாட்டில் உற்பத்திக் காரணிகள் அங்காடியிலும், பண்ட அங்காடியிலும் நிறைவுப் போட்டி நிலவுகிறது.

9. மக்கள் பெறுகின்ற வருமானம் முழுமையாகச் செலவிடப்படுகிறது. வருமானத்தில் எவ்வித கசிவும் இருக்காது.

10. பணக் கூலிக்கும் உண்மைக் கூலிக்கும் நேர்முக உறவு நிலவுகிறது.

11. பண அளிப்புக்கும் பொது விலை மட்டத்திற்கும் நேரடித் தொடர்பு நிலவுகிறது.

12. பண அளிப்பு, மூலதன இருப்பு மற்றும் தொழில் நுட்ப அறிவு நிலை முதலியன மாறாதிருக்கின்றன.

13. பணம் பண்டமாற்று முறையிலுள்ள இடையூறுகளை நீக்கும் முகத்தான் மாற்று மையமாகச் செயல்படுகிறது.

**தத்துவங்கள்**

சே- யின் அங்காடி விதியின் தத்துவங்களை இங்கு வரிசைபடுத்தலாம்.

1. நாட்டில் உபரி உற்பத்தியோ வேலையின்மை நிலையோ தோன்றாது. நாட்டில் எப்போதும் முழு வேலை வாய்ப்பு நிலை தான் நிலவுகிறது.

2. எப்போதேனும் வேலையின்மை தோன்றுமாயின், அது தற்காலிகமானதாகவும், காலப் போக்கில் அது தானாகவே மறைந்து போகக் கூடியதாகவும் இருக்கும்.

3. பணக்கூலி குறைவதனால் முழு வேலை வாய்ப்பு நிலை தோன்றி, நிலை பெறுகிறது.

குறிப்பு

4. பொருளாதாரத்தில் உற்பத்திக்கும் நுகர்வுக்குமிடையே - அளிப்புக்கும் தேவைக்குமிடையே தானே இயங்குகின்ற இணக்க நிலை ( automatic adjustment ) நிலவுகிறது. எனவே தான் பொருளாதார நடவடிக்கைகளில் அரசு தலையிடாக் கொள்கையைப் பின்பற்றுகின்றது.

5. நாட்டில் வேலையில்லா உற்பத்திக் காரணிகளை முழு வேலை வாய்ப்பு நிலை வரைப் பயன்படுத்துதல் இலாபகரமாக இருக்கும்.

6. சேமிப்பும் ஒரு வகையான முதலிடே ஆகும். சேமிப்பு முழுமையும் முதலீடாக்கப்படுவதால், சேமிப்பும், முதலீடும் சமமாகவே இருக்கின்றன. வட்டி வீதத்தில் ஏற்படும் மாறுதல்களால் சேமிப்பு, முதலீடு இவற்றினிடையே சமநிலை தோற்றுவிக்கப்படுகிறது.

**பிகுவின் மறு விளக்கம்:**

வேலை வாய்ப்பு பற்றிய தொன்மைப் பொருளியல் கோட்பாடு யு.ஊ.பிகு என்பவரால் சற்று திருத்தி, மீண்டும் விளக்கப்பட்டது. இவர் இக் கோட்பாட்டை உழைப்பு அங்காடிக்கும் பொருந்துமாறு விளக்கினார். உழைப்பாளிகள் தங்கள்து இறுதி நிலை உற்பத்திக் திறனுக்குச் சமமான கூலியைப் பெற்றுக் கொள்ள முன் வருவாரெனில், நாட்டில் பொதுவான வேலையின்மை தோன்றாது என்றும், நாட்டில் நிலவும் தடையற்ற நிறைவுப் போட்டியின் காரணமாக உழைப்பு அங்காடியில் முழு வேலை வாய்ப்பு நிலை தோன்றுகிறது என்று கூறுகிறார்.

பிகுவின் வேலைவாய்ப்பு கோட்பாட்டை பின்வரும் சூத்திரத்தின மூலம் விளக்கலாம்

$$N = qY / W$$

N – வேலை செய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கை

Y - நாட்டு வருமானம்

Q - நாட்டு வருவாயில் கூலியின் விகிதம்


W – பணக்கூலி விகிதம

மேலும், சுய விருப்பமற்ற வேலையின்மை ( involuntary unemployment) கூலி அமைப்பில் காணப்படும் நெகிழ்ச்சியற்ற தன்மையினால் தோன்றுகிறது. இதற்கு அரசாங்கமும், தொழிற்சங்கங்களும் தடையற்ற அங்காடிப் பொருளாதார நடவடிக்கைகளில் உண்டாகும் தலையீடே காரணமாகும். அரசாங்கம் தொழிற் சங்கங்களை ஏற்றுக் கொண்டு, அவை கேட்கும் குறைந்தபட்ச ஊதிய சட்டங்களை நிறைவேற்றுமாயின்,

குறிப்பு

தொழிலாளர்களின் ஊதியம் உயர்ந்து, வேலையின்மை தோன்றுகிறது. எனவே வேலையின்மை நிலையைப் போக்குவதற்கு அரசு தலையீட்டை தவிர்த்து ஊதியங்களைக் குறைப்பது மட்டுமே ஒரே வழியாகும். இதனால் கூலி அமைப்பில் தோன்றும் நெகிழ்வுத் தன்மையால் பணக்கூலி மட்டம் குறைந்து முழு வேலைவாய்ப்பு நிலை தனாகவே மீண்டும் தோன்றி விடும், கூலி மட்டம் குறைவதால் விலைகள் குறைந்து, மக்கள் கையிருப்பின் மதிப்பு அதிகரித்து தேவை மிகுந்து, முழுவேலை வாய்ப்பு தோன்றும். இது பிகு விளை ( Pigon Effect ) அல்லது உண்மை இருப்பு விளைவு ( Real Balance Effect ) என்று அழைக்கப்படுகிறது.

பீின் வரும் வரைபடத்தின் மூலம் பிகுவின் கோட்பாட்டைவிளக்கலாம.



மேற் கூறிய வரைபடத்தில் SL என்பது உழைப்பின் அளிப்பு கோடாகும்.. DL என்பது உழைப்பின் தேவை கோடாகும். E என்பது முழுநிறை வேலை நிலைப்புள்ளியாகும்

OW1 = கூலி -

உழைப்பின் அளிப்பு = W1B

உழைப்பின தேவை = W1A

வேலையின்மை – AB

குறிப்பு

முழுநிறை வேலை = OW2 ((உழைப்பின் அளிப்பு = உழைப்பின தேவை)

· அதிக தொழிலாளர்கள் வேலை பார்க்கும் போது அவர்களின் இறுதி நிலை உற்பத்தி திறன் குறைந்து செல்வதை MPL கோடு காட்டுகிறது. தொன்மைப் பொருளியல் வேலை வாய்ப்புக் கோட்பாட்டிற்கெதிராக J.M.கீன்ஸ் சில குறைகளைச் சுட்டிக் காட்டினார். அதனால் சே-யின் அங்காடி விதி 20-ஆம் நூற்றாண்டுப் பொருளியல் மேதைகளால் ஒதுக்கித் தள்ளப்பட்டு விட்டது.

1. முழு நிறை வேலை வாய்ப்பின்மை நிலை : பொருளாதாரத்தில் முழு வேலை வாய்ப்பு நிலை தானாகவே தோன்றுகிறது என்றும் கருத்தை கீன்ஸ் ஏற்றுக் கொள்ளவில்லை. முதலாளித்துவ நாட்டில் பொதுவாக சுய விருப்பமற்ற வேலையின்மை ( involuntary unemployment) நிலவுகிறது என்பதே அவரது கருத்தாகும்.

2. உற்பத்தி நுகர்வினிடையே தானெழும் இணக்க வேலையின்மை: உற்பத்தி - நுகர்வு, அளிப்பு - தேவை இவற்றிடையே தானெழும் இணக்கம் ( automatic adjustment ) நிலவுவதாக சே- கூறுகிறார். ஆனால் கீன்ஸ் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. முதலாளித்துவ நாடுகளில் வருமானம் செல்வம் மக்களிடையே சமச்சீராகப் பங்கிடப்பட்டிருக்காதென்பதால், செல்வந்தர்களின் நுகர்வு விருப்பம் குறைவாக இருக்கும். அதனால் மொத்த உற்பத்தியும், மொத்த தேவையும் சமமாக இருப்பதில்லை.

3. வருவாய் முழுமையும் செலவிடப்படுவதில்லை: உற்பத்திக் காரணிகள் பெறுகின்ற சன்மானங்கள் முழுமையாகச் செலவிடப்படுகிறது என **சே** கூறுகிறார். ஆனால் நடைமுறையில் இது உண்மையன்று. வருவாயின் சுற்று வட்டப்போக்கு ( circular flow of income) நிலையாக இருப்பதில்லை. இறுதி நிலை நுகரும் விரும்பும் 1க்குச் சமமாக இல்லாமல், ஒன்றை விடக் குறைவாகவே இருக்கிறது.

4. சேமிப்பு - முதலீடு சமநிலைக்கான காரணம்: வட்டி விகிதத்தில் ஏற்படும் மாறுதல்களால் சேமிப்பு - முதலீடு சமநிலை தோன்றுகிறது என்று கீன்ஸ் கூறுகிறார்.

5. கூலி குறைப்பும் முழு நிறை வேலை வாய்ப்பும்: கூலி குறைந்தால் முழு வேலை வாய்ப்புநிலை தோன்றும் என்று சே கூறுகிறார். ஆனால் கூலி குறைந்தால், திறனுள்ள தேவையின் அளவு குறைந்து, வேலையின்மை தோன்றும்.

குறிப்பு

6. அரசின் தலையீடு: சேமிப்பு முதலீடு, அளிப்பு - தேவை சமநிலை தானெழுந்த இணக்கத்தால் தோன்றும் என சே கூறுகிறார். ஆனால் இச் சம நிலைகள் அரசின் தலையீட்டால் மட்டுமே முடியும் என கீன்ஸ் கூறுகிறார்.

7. நுண்ணினப் பொருளியலும் பேரியல் பொருளியலும்: சே-யின் அங்காடி விதியானது, நுண்ணினப் பொருளியல் பேரியல் பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு விரிவாக்கம் செய்திட முடியும் எனக் கருதுகிறது. ஆனால் இக் கருத்தினை ஏற்றுக் கொள்ள இயலாது. தனியொரு நபருக்குப் பொருத்துவதெல்லாம் சமுதாயத்திற்குப் பொருத்துமெனக் கருதுவது தவறு ஆகும்.

8. பணத்தின் பணி: பேர நோக்கத்தை நிறைவு செய்ய மட்டுமே பணம் தேவைப்படுகிறது என்று சே-யின் அங்காடி விதி கருதுகிறது. ஆனால் ஊக நோக்கத்தை நிறைவு செய்யவும் பணம் தேவைப்படுகிறது என்று கீன்ஸ் கூறுகிறார்.

9. வரலாற்றுச் சான்றுகள் இன்மை: சே-யின் அங்காடி விதி தவறென 1936-ம் ஆண்டின் உலகப் பெரு மந்தம் நிரூபித்துவிட்டது.

1) கெயின்ஸ் 1935-ல் வேலை, வட்டி, பணம் பற்றிய பொதுக் கோட்பாடு என்ற நூலை வெளியிட்டார். இதில் வணிகச் சுழலுக்கான காரணங்களை விளக்குகிறார்.

மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத் திறனால் (ஆயசபயைெட நககளைஉநைஉெல ழக உயிவையட) ஏற்படும் மாறுதல்களால் வாணிபச்சுழல் ஏற்படுகிறது என்று கெயின்ஸ் குறிப்பிடுகிறார்.

2 முழு நிறை வேலை வாய்ப்பை அடைதல் என்பது பேரியல் பொருளாதாரத்தின் மிக முக்கியமான கொள்கையாகும். திறனுள்ள தேவை அளவை அதிகரிப்பதற்கு நாம் முதலீடு அல்லது நுகர்வு அல்லது இரண்டையும் ஊக்குவிக்க வேண்டும். இதற்காக தற்கால அரசுகள் பொருத்தமான பணக் கொள்கை, நிதிக் கொள்கை மற்றும் இதரக் கொள்கைகளையும் பின்பற்ற வேண்டும்.

குறிப்பு

# அலகு 5 போஸ்ட் கீனீசியனின் பேரியல் பகுப்பாய்வு

5.1. நோக்கங்கள்
5.2. போஸ்ட் கீனீசியன் பேரியல் பகுப்பாயவு
5.3 கீனிசியனின் வரைபட விளக்கம்
5.4. உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்க
5.5. ஹிக்ஸின் பங்களிப்பு ISLM
5.6. உங்கள் முன்னேற்றத்தைச் சரிப்பார்க்க

## 5.1 நோக்கங்கள்

1. பாஸ்ட் கீனீசியன் பேரியல் பகுப்பாயவு பாஸ்ட் கீனீசியன் பேரியல் பகுப்பாயவு பற்றி தெளிவு பெற்.
2. ஹிக்ஸின் பங்களிப்பு ISLM பற்றி தெளிவு பெற.

## அறிமுகம்

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற பொருளியல் மேதை பேரா. து.ஆ.கீன்ஸ் தான் முதன் முதலாக வேலை வாய்ப்புப் பற்றிய ஓர் ஒழுங்கான கோட்பாட்டை உருவாக்கித் தந்தவர். 1936-ம் ஆண்டு அவர் எழுதி, வெளியிட்ட " வேலை வாய்ப்பு, வட்டி மற்றும் பணம் பற்றிய பொதுக் கோட்பாடு" என்னும் நூல் அவரை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்து அவரை ' இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற பொருளியல் மேதை' என உலகுக்கு அடையாளம் காட்டியது. இந்நூல் பாதுகாப்பான கோட்டையில் கொலுவீற்றிருந்த தொன்மைப் பொருளாதாரத்தை மங்கச் செய்துவிட்டதோடன்றி, பொருளாதார சிந்தனைகளில் பெரும் புரட்சி ஒன்றை உருவாக்கிய பெருமையையும் பெற்றது.

1930-ம் ஆண்டுகளின் உலகப் பெருமந்தத்தின் போது பொருளாதார சீரழிவுகளிலிருந்து நாடுகளைப் பாதுகாத்து பொருளாதார மீட்சியை அடைய சே-யின் அங்காடி விதி தவறியது. தடையற்ற முதளாளித்துவ நாடுகளின் பொது வேலையின்மை தோன்றிய காரணங்களை அக் கோட்பாட்டால் விளக்க இயலவில்லை. மேலும், வட்டி விகிதம் மிக மிகக் குறைவாக இருந்த போதிலும், முதலீட்டளவு அதிகரிக்கவில்லை. இக் காரணங்களால் கீன்ஸ் " வருவாய் - முதலீடு கோட்பாடு ( Income and Investment Theory ) ஒன்றை உருவாக்கினார்.

## 5.2 பாஸ்ட் கீனீசியன் பேரியல் பகுப்பாயவு- கருத்துக்கள்

- தொன்மைப் பொருளியல் வேலை வாய்ப்புக் கோட்பாடு முழுநிறை வேலை வாய்ப்பு நிலைக்கு மட்டுமே பொருந்தக் கூடியது ஆகும்.

ஆனால் கீன்ஸின் கோட்பாடு குறை நிலை வேலைவாய்ப்பு, அரைகுறை வேலை வாய்ப்பு, முழு நிறை வேலை வாய்ப்பு ஆகிய எல்லா நிலைகளுக்கும் பொருந்தக் கூடியது ஆகும். கீன்ஸ் பொருளாதார அமைப்பு முறையை முழுமையாக ஆராய்கிறார். இதனால் இது ' பொதுவானது ' என்னும் சிறப்பை பெறுகிறது.

- தொன்மைப் பொருளியல் வேலை வாய்ப்புக் கோட்பாடு முழுநிறை வேலை வாய்ப்புச் சமநிலை பற்றியே ஆராய்கிறது. முழு நிறை வேலை வாய்ப்பு சம நிலையானது அது ஒரு தேக்க நிலை சம நிலை ( ளவயவழையெசல நஙரடைடிசரைஅ ) ஆகும். ஆனால் கீன்ஸின் வேலை வாய்ப்புக் கோட்பாடு குறை நிலை வேலை வாய்ப்புச் சமநிலை பற்றி ஆராய்கிறது. குறை நிலை வேலை வாய்ப்புச் சமநிலை பற்றி ஆராய்கிறது. குறை நிலை வேலை வாய்ப்புச் சமநிலையானது ஒரு மாறுகின்ற சமநிலை ( shifting equilibrium) ஆகும்.
- தொன்மைப் பொருளியல் வேலை வாய்ப்புக் கோட்பாடு ஓர் நீண்ட காலக் கண்ணோட்டமாகும். ஆனால் கீன்ஸின் வேலை வாய்ப்புக் கோட்பாடு ஓர் காலக் கண்ணோட்டமாகும்.
- தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் வேலை வாய்ப்புக் கோட்பாடு பொருளாதார நடவடிக்கைகளில் அரசு தலையிடக் கூடாதென்ற கருத்தினைக் கொண்டிருந்தது. ஆனால் கீன்ஸின் வேலை வாய்ப்புக் கோட்பாடு, பொருளாதார நடவடிக்கைகளில் அரசு தலையிட வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்தது.
- தொன்மைப் பொருளியல் வேலை வாய்ப்புக் கோட்பாடு வெறும் கருத்தியல் அடிப்படையில் அமைந்தது ஆகும். ஆனால் கீன்ஸின் வேலை வாய்ப்புக் கோட்பாடு வெறும் கருத்தியல் அடிப்படையில் அமைந்தது அல்ல. இது நடைமுறைக்கேற்றது. செயல் திட்டங்களுக்கும், கொள்கைகளுக்கும் அது அடித்தளத்தை அமைத்துக் தருகிறது.
- கீன்ஸ், தனது பொருளாதார ஆய்வினை விளக்குவதற்கு நுகர்வுச் சார்வு, நுகர்வு விருப்பம், பெருக்கி, முடுக்கி, மூலதன இறுதி நிலை ஆக்கத்திறன், வட்டிவீதம், அரசின் செலவு, நீர்மை விருப்பம், திறனுள்ள தேவைபோன்ற அனேக கருவிகளைப் பயன்படுத்தினார். இவை பற்றி முதலில் அறிந்து கொள்வது நலமாகும்.

**திறனுள்ள தேவை**

- திறனுள்ள தேவை அளவானது, அந் நாட்டில் உள்ள மொத்தத் தேவை, மொத்த அளிப்பு இவற்றின் சமநிலைப் புள்ளியின் நிர்ணயிக்கப்படுகிறது.

குறிப்பு

- மொத்தத் தேவை ( Aggregate demand ) என்பது அந்நாட்டில் நுகர்வுக்காகவும், முதலீட்டிற்காகவும் வாங்கப்படும் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றிற்கான தேவையைக் குறிக்கும்.
- மொத்த அளிப்பு ( Aggregate supply) என்பது நுகர்வுக்காகவும், முதலீட்டிற்காகவும் பண்டங்கள், பணிகள் முதலியவற்றை வாங்குவதற்காகச் செலவிடப்படும் மொத்த தேசியச் செலவு ( national expenditure ) ஆகும். திறனுள்ள தேவை அளவானது
- திறனுள்ள தேவை ( Effective demand ) என்பது நுகர்வுக்காகவும், முதலீட்டிற்காகவும் பண்டங்கள், பணிகள் முதலியவற்றை வாங்குவதற்க்காச் செலவிடப்படும் மொத்த தேசியச் செலவு ( national expenditure) ஆகும். திறனுள்ள தேவை அளவானது மொத்தத் தேவை, மொத்த அளிப்பு ஆகிய இரு காரணிகளைச் சார்ந்து அமையும்.

**நுகர்வுச் சார்பு**

- நுகர்வு வருவாயைச் சார்ந்து இருக்கிறது. நுகர்வுக்கும் வருவாய்க்குமிடையே ஓர் உறவு நிலவுகிறது. இதுவே, நுகர்வுச் சார்பு ( consumption function) எனப்படும். கணித அடிப்படையில், இதனை

  C= f (Y) என்று குறிப்பிடுவது மரபு.

- கீன்ஸ் பொருளாதார மந்தக் காலத்தில் வருவாய் குறைவாக இருக்கும். மேலும் வருவாய் அதிகரித்துச் செல்லும் காலத்தில் இறுதி நிலை நுகரும் விருப்பம் குறைந்து கொண்டு செல்லும் என்னும் கருத்துகளைக் கொண்டிருந்தார். இதனால், நுகர்வைக் கூட்டி, திறனுள்ள தேவையை மிகுதிப்படுத்தி, வேலை வாய்ப்பை அதிகரிக்க முடியாது என்னும் கருத்து தெளிவாகி தெளிவாகிறது.

**மூலதனத்தின் இறுதி நிலை ஆக்கத் திறன்:**

- மூதலீட்டளவைத் தூண்ட முடியும். முதலீடு மூலதனத்தின் இறுதி நிலைத் திறனையும், வட்டி விகிதத்தையும் சார்ந்திருக்கிறது. இந்த உறவை முதலீட்டுச் சார்பு என்கிறோம். கணித அடிப்படையில், இதனை

  I = f ( MEC> R) என்று குறிப்பிடுவது மரபு.

- மந்தக் காலத்தில் இலாபம் குறைவாக இருப்பதால், முதலீட்டின் இறுதி நிலை ஆக்கத் திறன் குறைவாகவே இருக்கும்.

இந்நிலையில் வட்டிவீதத்தைக் குறைத்து. முதலீட்டை அதிகரிக்க இயலாது. தனியார் முதலீட்டளவும் கூட அதிகரிப்பது சற்று சிரமமே.

குறிப்பு

- மூலதனத்தின் இறுதி நிலை ஆக்கத் திறன் எதிர்பார்க்கும் ஆதாயம், மூலதனச் சொத்துக்களின் அளிப்பு விலை ஆகிய இரண்டு காரணிகளைச் சார்ந்து இருக்கும் . எனவே மூலதனத்தின் இறுதி நிலை ஆக்கத் திறனை உடனே அதிகரிக்க முடியாது .

**வட்டி விகிதம்**

- வட்டி விகிதம் நாட்டில் புழகத்திலிருக்கும் பணத்தின் அளவையும், ரொக்க விருப்பத்தையும் ஒட்டி அமையும்.
- பண அளிப்பானது, பொதுவாகக் குறிப்பிட்ட காலத்தில் மக்கள் செலவு செய்வதற்காக தாங்கள் வைத்திருக்கும் பண அளவுவைக் குறிக்கும்.
- பண அளிப்பு ஸ்ரீ காகிதப் பணம்ஃ நாணயப் பணம் ஃ வங்கிகளின் கையிருப்புஃ மைய வங்கியின் பிற வைப்புகள்
- ரொக்க விருப்பமானது பேர நோக்கம், முனெச்சரிக்கை நோக்கம், மற்றும் ஊக நோக்கம் ஆகிய மூன்று நோக்கங்களைச் சார்ந்து அமையும்.
- எனவே, முதலீட்டை ஆதாயமாக்கும் அளவுக்கு உடனே வட்டி விகிதத்தைக் குறைக்க இயலாது.

## அரசின் செலவு

- பொருளாதார மந்தக் காலத்தில் தனியார் செலவு அதிகரிப்பதில்லை. எனவே அரசின் செலவைக் கூட்டி, நுகர்வையும் முதலீட்டையும் தூண்டி திறனுள்ள தேவையை அதிகரித்து, வேலை வாய்ப்பைப் பெருக்க முடியும் எனக் கீன்ஸ் கருதுகின்றார்.

**கோட்பாடு விளக்கம் :**

- ஒரு நாட்டின் மொத்த உற்பத்தியை அந்நாட்டில் உள்ள வேலை வாய்ப்பின் அடிப்படையில் மட்டுமே தீர்மானிக்க இயலும். மொத்த உற்பத்தியைக் கணிக்க வேலை வாய்ப்பு தவிர வேறு சிறந்த அளவை ஏதுமில்லை. மொத்த உற்பத்தி அதிகமாக இருந்தால் வேலை வாய்ப்பளவு குறைவாகவும் இருக்கும். மொத்த உற்பத்திக்கும் வேலைவாய்ப்பளவுக்குமிடையே நேர்முக உறவு நிலவுகிறது. மொத்த உற்பத்தியும், வேலைவாய்ப்பளவும் அந்நாட்டின் நிலவும் திறனுள்ள தேவையளவைச் சார்ந்து இருக்கும். எனவே இறுதி நிலை ஆக்கத் திறனுக்கிணையான கூலியைப் பெற்றுக் கொள்ள உழைப்பாளர்கள் மறுப்பது தான்

குறிப்பு

வேலையின்மைக்கு முக்கியமான காரணமாகும் என சே மற்றும் பிகு கூறுவது போலல்லாது. குறைவான திறனுள்ள தேவை அளவுதான் வேலையின்மைக்கு முக்கியமான காரணமாகும் எனவே வேலையின்மை அளவை குறைத்து " வேலை வாய்ப்பினை அதிகரிக்க முதலீட்டளவை அதிகரித்து திறனுள்ள தேவை அளவை உயர்த்த வேண்டும்.


## 5.3 கீன்ஸின் வரைபட விளக்கம்

கீன்ஸின் வேலைபாய்ப்புக் கோட்பாட்டை பின் கண்டவாறு விளக்கலாம். வேலை வாய்ப்பு திறனுள்ள தேவையைச் சார்ந்திருக்கின்றது. திறனுள்ள தேவையானது தொகு தேவைச் சார்பையும் ( aggregate demand function ), தொகு அளிப்புச் சார்பையும் ( aggregate supply function ) சார்ந்திருக்கிறது. அதாவது, தொகு தேவையும், தொகு நிர்ணயிக்கப்படுகிறது. கீன்ஸின் இக் கோட்பாட்டை வரைப்படம் ஒன்றன் மூலம் விளக்கலாம்.

இதை IS-LM மாதிரி என்றும் குறிப்பிடலாம்

IS- என்பது முதலீடு – சேமிப்பு சமநிலைக் குறிக்கிறது

- LM- என்பது பணத்திற்கான தேவை மற்றும் பண அளிப்பை குறிக்கின்றது




வரைபடத்தை பார் >X - அச்சில் வேலை வாய்ப்பு, அவ்ருவாய், உற்பத்தியையும்,லு- அச்சில் விற்பனைச் செலவையும் ( அளிப்பு ) விற்பனை வருவாயையும் ( தேவை ) அளவிடுகிறோம். வரைபடத்தில் யுனுகு வளைகோடு தொகு தேவைச் சார்பையும். யுளுகு வளைகோடு தொகு அளிப்புச் சார்பையும் காட்டுகின்றன. இவ்விரு வளைகோடுகளும் E என்ற புள்ளில் ஒன்றையொன்று வெட்டிச் செல்கின்றன. இந்நிலையில் தான் திறனுள்ள தேவை நிர்ணயிக்கப்படுகிறது. இந்நிலையில் தொகு தேவையும் தொகு அளிப்பும் இனைந்து வேலை வாய்ப்பு, வருவாய், உற்பத்தி சம நிலையைத் தீர்மானிக்கின்றன.நு என்னும் சமநிலைப் புள்ளிகள், மொத்த தேவையும் ( நிறுவனங்களின் வருவாய் ) மொத்த அளிப்பும் (

நிறுவனங்களின் உற்பத்திச் செலவு) சமநிலையில் இருக்கின்றன. அவை முஆக்குச் சமமாக இருக்கின்றன. இப்புள்ளியில், வேலை வாய்ப்பு மற்றும் உற்பத்தி OQ வாக இருக்கின்றன.நு என்னும் புள்ளியைத் தவிர வேறெந்தப் புள்ளியிலும் இவ்விரு வளைகோடுகளும் ஒன்றையொன்று வெட்டிக்கொண்டு செல்வதில்லை. இப்புள்ளிக்கு இடது புறமாக எந்தப் புள்ளியை எடுத்துக் கொண்டாலும், மொத்தத் தேவையை விட மொத்த அளிப்பு குறைவாகவும், இப்புள்ளிக்கு வலது புறமாக எந்தப் புள்ளியை எடுத்துக் கொண்டாலும், மொத்தத் தேவையை விட மொத்த அளிப்பு அதிகமாகவும் இருக்கும். மொத்த தேவையானது, மொத்த அளிப்பை விட அதிகமாக இருக்குமாயின் அவையிரண்டும் சமமாக மாறும் வரை உற்பத்தியாளர்கள் தொழிலாளர்களை அதிகமாக வேலையிலமர்த்துவர். இப்புள்ளியை அடைந்ததும், அதற்குமேல் வேலை வாய்ப்பு அதிகரிக்கப்படாது.எனினும் முஞ வேலை வாய்ப்பு சம நிலையானது, முழு நிறை வேலை வாய்ப்புச் சமநிலையன்று முழு நிறை வேலைவாய்ப்பு நிலையை அடையும் முன்னரே, மொத்தத் தேவையும் மொத்த அளிப்பும் சம நிலைக்கு வந்து விடுகின்றன.

மேலும், திறனுள்ள தேவை நிணயங்களான, மொத்த தேவை மொத்த அளிப்பு இவ்விரண்டில், கீன்ஸ் மொத்தத் தேவைக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கிறார்.

கீன்ஸ்-ன் ஆய்வு குறுங்கால ஆய்வு என்பதால், குறுகிய காலத்தில் மொத்த அளிப்பு மாறாமல், நிலையாக இருக்கும். ஆனால் மொத்த அளிப்பு மாறாமல், நிலையாக இருக்கும். ஆனால் மொத்தத் தேவை மாறும் தன்மையது. மொத்தத் தேவையானது நுகர்வு விருப்பம், முதலீட்டு ஊக்கம் ஆகிய இரண்டு காரணிகளைச் சார்ந்து இருக்கும். எனவே நாட்டில் வேலையின்மை அதிகரித்துச் செல்லும் போது அல்லது வேலை வாய்ப்புக்களை அதிகரிக்க வேண்டுமெனில், மொத்தத் தேவையை அதிகரிப்பது ஒன்றே சரியான வழியாகும். இதனால் நாட்டில் பணவீக்கம் நிலவுமாயின் மொத்த நுகர்வுச் செலவு மற்றும் முதலீட்டுச் செலவு இவற்றைக் குறைப்பதன் மூலம் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும். இவ்வாறு கீன்ஸின் பொருளாதாரம் பணவாட்டம், பணவீக்கம் ஆகிய இரு நிலைகளுக்கும் பொருந்துகிறது.

## ஹிக்ஸ்மற்றும் ஹேன்ஸன் (Hicks’ and Hanson0


## IS - LM Diagram

பொருட்கன் சந்தை சமநிலை கால அட்டவனை IS வளைவு (அட்டவனை) ஆகும். இது வட்டி விகிதங்களின்


சேர்க்கை மற்றும் திட்டமிட்ட செலவு போன்ற வருமானம் சமமான வெளியீடுகளின் அளவைக்காட்டுகிறது.


குறிப்பு


பொருட்களின் சந்தை சமநிலை அடடவனை 45டிகிரி வரி வரைபடத்துடன் கூடிய பருமான நிர்ணயத்தின் எளிமையான விரிவாக்கமாகும் இப்போது முதலீடு முழுமையாக வெளிப்படையாக இல்லை. ஆனால் வட்டி வீதத்தால் தீர்மானிக்கப்படுகிறது. வட்டி விகிதத்தில் திட்டமிட்ட அளவிலான முதலீடு காட்டுகிறது. ஆதிக வட்டி வட்டி விகிதம் மூலதன பங்குகளுக்கு கூடுதல் லாபத்தை குறைக்கும் என்பதால் அவை முதலீட்டுச் செலவீனங்களை குறைவான திட்டமிட்ட விகிதங்களைக
குறிக்கின்றன.



குறிப்பு




## IS வளைவு

IS வளைவு எவ்வாறு பெறப்படுகிறது என்பதை படதட காட்டுகிறது. வட்டி விகிதத்தில் பொருட்களின் சந்தையில்

குறிப்பு

R சமநிலை என்பது Y –ன் வருமான அளவுடன் உருவத்தின் மேல் பகுதியில் புள்ளி E ஆகும்.

IS வளைவுகோட்டின் பண்புகள்


**IS வளைவீன் சரிவு**

வட்டி விகிதம் உயர்ந்த மட்டத்தில் முதலீட்டுச செலவீனங்களைக் குறிக்கிறது. இதன் மூலம் ஓட்டு பொத்த தேவை மற்றும் வருவாயின் அளவு குறைக்கபடுவதால் IS வளைவு எதிர்மறையாக குறைக்கப்படுகிறது. வுளைவின் செங்குத்தான தன்மை முதலீட்டின் வட்டி நெகிழ்வுத்தன்மை மேலும் முதலீடு பெருக்கத்தில் உள்ளது.

**IS வளைவு நிலை**

IS வளைவின் நிலை தன்னாட்சி செலவின் அளவைப் பொறுத்தது. துன்னியக்க செலவின் அளவைப் பொறுத்து தன்னியக்க செலவு அதிகரிக்கிறது என்றால் **IS** வளைவு வலப்பக்கம் மாறுகிறது

**IS வளைவின் முனைகள் E1,F1** ஆகும்



**குறிப்பு**

## IS வளைகோடு பற்றிய முக்கிய புள்ளிகள்

**1.** IS வளைவு என்பது வட்டி வீதத்தின் கூட்டுத் தொகை மற்றும் வருவாயின் அளவு ந்தை சமநிலையில் அருக்கும் காலமாகும்

2. வட்டி வீதத்தில் அதிகரிப்பு திட்டமிட்ட முதலீட்டுச் செலவுகளை குறைத்து , அதனால் மொத்த தேவைகளை குறைக்கிறது. இதன் மூலம் பருவாயின் சமநிலை அளவு குறைக்கப்படுகிறது.

3. தன்னாட்சி செலவில் மாற்றங்கள் மூலம் **IS** வளைவு மாற்றப்படுகிறது

4. வளைவின் வலதுபுறம் சுட்டிக்காட்டுவது சந்தையில் அதிகமாக வழங்கப்படுவது வளைவின் இடதுபுறத்தில் புள்ளிகளுக்கு மேல் அதிக பொருட்கள் தேவைப்படும்

## 5.4 உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்க

**இரண்டு வகையான முதலீடு**

ஹிக்ஸின் கருத்துப்படி முதலீடு இரண்டு வகைப்படும்:

1. சுயேச்சை முதலீடு 2) தூண்டப்பட்ட முதலீடு சுயேச்சை முதலீடு என்பது வளர்ச்சிக் காரணங்களான மக்கள் தொகைப் பெருக்கம், புதிய கண்டுபிடிப்புக்கள் போன்றவற்றில் ஒன்று அல்லது ஒன்றுக்கு அதிகமான காரணிகளால் ஏற்படும் முதலீட்டை குறிக்கும். வளர்ந்துவரும் பொருளாதாரத்தில் சுயேச்சை முதலீடு மாறாவிகிதத்தில் அதிகரித்துவரும் சுயேச்சை முதலீட்டினால் தான் வேலைவாய்ப்பு, உற்பத்தி போன்றவை அதிகரிக்கின்றன. இது பெருக்கியைப் பொறுத்து அமைகிறது. ஆனால் சுயேச்சை முதலீட்டின் விளைவு குறுகிய காலத்திற்கே கிடைக்கிறது. தூண்டப்பட்ட முதலீடு என்பது உற்பத்திப் பெருக்கத்தால் ஏற்படும் முதலீட்டை குறிக்கும், தூண்டப்பட்ட முதலீடு முடுக்கியைப் பொறுத்து அமைகிறது.

குறிப்பு

# அலகு- 6 நுகர்வு சார்பு

6.1. நோக்கங்கள்
6.2. நுகர்வு செயல்பாடு-பொருள்
**6.2.1** நுகர்வுச் சார்பின் வகைகள்
6.2.2 இறுதி நிலை நுகர்வு விருப்பம
**6.2.3** இறுத நிலை நுகர்வு விருப்பத்தின் தன்மைகள
6.3. உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்க
6.4. நுகர்வு செயல்பாடு கோட்பாடுகள
6..5 உங்கள் முன்னேற்றத்தைச் சரிப்பார்க்க

## 6.1 நோக்கங்கள்

1. **நுகர்வு செயல்பாடு பொருள் பறிறி தெளிவு பெற.**
2. **நுகர்வு செயல்பாடு கோட்பாடுகள் பற்றி தெரிந்து கொள்ளுதல்**

. அறிமுகம்

வருவாய்க்கும் நுகர்வுக்கு முள்ள தொடர்பு நுகர்வுச் சார்பு ( Consumption function ) எனப்படும். இதனை நுகர்வு விருப்பம் ( propensity to consume ) என்றும் கூறலாம். இது பல்வேறு வருவாய் நிலைகளில் நுகர்வு எவ்வாறு மாறுகிறது என்பதை விளக்குகிறது. இந்த C = f( Y ) என்னும் சமன்பாட்டால் குறிப்பது மரபு.

## 6.2 நுகர்வு செயல்பாடு

மிகக் குறைந்த வருவாய் நிலையில் மக்கள் தங்களின் நடப்பு வருவாய்க்கும் அதிகமாச் செலவிடுவர். உயிர் வாழ்வதற்காக மக்கள் தங்கள் நடப்பு வருவாய், மற்றும் முந்தைய சேமிப்பின் ஒரு பகுதியையும் சேர்த்து செலவிடுவர். வருவாய் அதிகரிக்கும் பொழுது, நுகர்வுச் செலவும் அதிகரிக்கும், எனினும், வருவாய் உயரும், விகிதத்தைக் காட்டிலும் குறைவான விகிதத்திலேயே நுகர்வுச் செலவு அதிகரிக்கும். இதுவே நுகர்வுச் சார்பு அல்லது நுகர்வு விருப்பம் ஆகும்.

### 6.2.1 நுகர்வுச் சார்பின் வகைகள்

**1 சராசரி நுகர்வு விருப்பம் (** Average propensity to consume )

ஏதேனும் ஒரு குறிப்பிட்ட காலக் கட்டத்தில் நாட்டின் மொத்த நுகர்வுச் செலவுக்கும், மொத்த வருவாய்க்குமுள்ள விகிதமே சராசரி நுகர்வு விருப்பம் ஆகும். மொத்த நுகர்வுச் செலவை மொத்த வருவாயால் வகுக்க, சராசரி நுகர்வு விருப்பம் கிடைக்கும். இதனை யீஊ ஸ்ரீ ஊலு என்னும் சமன்பாட்டால் குறிப்பிடுவது மரபு. இதனைச் சதவிகிதத்திலும் குறிப்பிடலாம்.

குறிப்பு

### 6.2.2 இறுதி நிலை நுகர்வு விருப்பம் ( Marginal propensity to consume )

மொத்த நுகர்வுச் செலவு மாற்றத்திற்கும் மொத்த வருவாய் மாற்றத்திற்குமுள்ள விகிதத்தை இறுதி நிலை நுகர்வுச் சார்பு என்கிறோம். மொத்தச் செலவில் ஏற்படும் மாற்றத்தை, மொத்த வருவாயில் ஏற்படும் மாற்றத்தால் வகுக்க, இறுதி நிலை நுகர்வு விருப்பம் கிடைக்கும்.

1. ஆரம்பக் கட்டத்தில், கூடுகின்ற வருவாயை முழுவதுமாகச் செலவிடுகின்றபோது, சராசரி நுகர்வு நிலையாக இருக்கிறது. சராசரி நுகர்வுச் சார்பு நிலையாக இருக்கும்போது இறுதி நிலை நுகர்வு விருப்பமும் நிலையாக இருக்கும். இறுதி நிலை நுகர்வுச் சார்பு கோடு நேர்கோடாக இருக்கும்.

2. இரண்டாவது நிலையில், வருவாய் கூடுகின்ற பொழுது இறுதி நிலை நுகர்வு விருப்பம் குறைகின்றது. ஆனால் சராசரி நுகர்வு விருப்பத்தைக் காட்டிலும் இறுதி நிலை நுகர்வு விருப்பம் வேகமாகக் குறைகின்றது.

3. மூன்றாவது நிலையில், வருவாய் குறைகின்ற பொழுது இறுதிநிலை நுகர்வு விருப்பம் கூடுகின்றது. ஆனால், சராசி நுகர்வு விருப்பத்தைக் காட்டிலும், இறுதி நிலை நுகர்வு விருப்பம் மெதுவாகவே கூடுகின்றது.

### 6.2.3 இறுதி நிலை நுகர்வு விருப்பத்தின் தன்மைகள்:

- வருவாய் அதிகரிக்கும்போது நுகர்வுச் செலவும் அதிகரிக்கும் என்பதால், இறுதி நிலை நுகர்வு விருப்பம் மிகையெண்ணாகவே இருக்கும்
- இறுதி நிலை நுகர்வு விருப்பம் பூச்சியத்தை விட அதிகமாகவும் 1ஐ விடக் குறைவாகவும் இருக்கும்.
- வருவாய் அதிகரித்துச் செல்கையில், இறுதி நிலை நுகர்வு விருப்பம் குறைந்து கொண்டு செல்லும்
- இறுதி நிலை நுகர்வு விருப்பம் ஏழை நாடுகளில் அதிகமாகவும், வளர்ந்த நாடுகளில் குறைவாகவும் இருக்கும்.

## 6.3 உளவியல் விதி கோட்பாடுகள்

நுகர்வுச் சார்பின் அடிப்படையில், கீன்ஸ் நுகர்வு பற்றிய உளவியல் விதி ஒன்றினை உருவாக்கித் தந்துள்ளார் “ மொத்த உண்மை வருவாய் கூடுகின்ற பொழுது, மொத்த நுகர்வும் கூடுகின்றது. ஆனால் வருவாய் கூடுகின்ற அளவில் அல்ல” என்று கீன்ஸ் இக் கோட்பாட்டை விளக்குகிறார். மக்கள் மனநிலையை ஒட்டியே இவ்விதியை கீன்ஸ் உருவாக்கியுள்ளார்.

குறிப்பு

**அடிப்படைக் கருத்துக்கள்**

- வருவாய் கூடிக்கொண்டே செல்லும்போது இறுதி நிலை நுகர்வு விருப்பம் குறைந்து கொண்டே செல்லுகின்றது
- கூடுகின்ற வருவாய் நுகர்வுக்கும் சேமிப்புக்குமிடையே பங்கிடப்படுகின்றது. அதாவது கூடுகின்ற வருவாயில் ஒரு பகுதி நுகர்வுச் செலவுக்குப் பயன்படுத்தப்படுகின்றது, மீதி சேமிக்கப்படுகிறது.
- வருவாய் கூடிக் கொண்டே செல்லும் போது இறுதி நிலை சேமிப்பு விருப்பம் அதிகரித்துக் கொண்டே செல்லும். அதாவது சேமிப்பு விகிதம் அதிகரிக்கும்.
- வருவாய் கூடிக் கொண்டே செல்லும் போது, நுகர்வு, சேமிப்பு இரண்டுமே அதிகரித்துக் கொண்டு செல்லும்.

**எடுகோள்கள்**

- ❖ செலவு சம்பந்தப்பட்ட மக்களின் நடவடிக்கைகள் மாறுவதில்லை. அதாவது, மக்களின் நுகர்வு விருப்பம் நிறையாக இருக்க வேண்டும். அதாவது, நுகர்வு வருவாயை மட்டுமே சார்ந்திருக்கிறது் பிற காரணிகளைச் சார்ந்திருப்பதில்லை.
- ❖ நாட்டில் இயல்பான சூழ் நிலைகள் நிலவ வேண்டும் அதாவது, நாட்டில் பணவீக்கும், யுத்தம், புரட்சி, அரசியல் குழப்பங்கள் போன்ற இயல்பற்ற சூழ் நிலைகள் நிலவக் கூடாது.
- ❖ நாட்டில் தலையீடற்ற, மிகவும் செழிப்பான முதலாளித்துவப் பொருளாதார அமைப்பு நிலவ வேண்டும்.

## 6.4 உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்க:

1. **நுகர்வுச் சார்பின் எடுகோள்கள்** யாவை?

-----------------------------------------------------------------------------------------

2.. வணிக நோக்கங்கள் யாவை?

**நுகர்வுச் சார்புக் கருத்தின் முக்கியத்துவம்**

**1. முதலீட்டின் முக்கியத்துவத்தை விளக்குகிறது**

முதலீடு அதிகரிப்பதால் வேலை வாய்ப்பு அதிகரிக்கிறது. வேலைவாய்ப்பு, உற்பத்தி, வருமானம் முதலியனவற்றை முதலீட்டை அதிகரிப்பதன் மூலம்

மட்டுமே அதிகரிக்க முடியும். வருவாய்க்கும் நுகர்வுக்குமிடைப்பட்ட வித்தியாசத்தை முதலீடு நீக்குகிறது

குறிப்பு

**2. மிகை உற்பத்தி நிலை**

மக்களின் இறுதி நிலை நுகரும் விருப்பம் பூச்சியத்திற்குக் குறைவாக இருக்கும் போது, நாட்டில் மிக உற்பத்தி நிலை தோன்றுமென்னும் கருத்தினை விளக்குகிறது.

**3. அரசின் தலையீடு**

பெறப்படும் வருமானம் அனைத்தும் தானாகவே செலவழிக்கப்படுவதில்லை . அச் சூழ்நிலைகளில் செலவை அதிகரிப்பதற்கான பொறுப்பை அரசே ஏற்றுக் கொள்கிறது. நாட்டில் பணவாட்டமும் வேலையின்மையும் நிலவுகிற போது, அரசே தலையிட்டு பொதுச் செலவை அதிகரிக்க வேண்டும் என்னும் கருத்தை இவ்விதி விளக்குகிறது.

**4. சே-யின் விதியை மறுத்தல்**

சே-யின் விதிப்படி, நாட்டில் பொதுவான மிகை உற்பத்தியோ, பொதுவான வேலையின்மையோ இருக்காது ஒவ்வொரு அளிப்பும் ஒரு தேவையை உருவாக்குகிறது என்னும் சே-யின் கருத்துக்களை கீன்ஸின் விதி மறுக்கிறது.

**5. மிகுதியாகச் சேமித்தல்**

மக்களின் நுகரும் விருப்பம் ஒன்றுக்கும் குறைவாக இருக்கும் போது, வருவாய்க்கும் நுகர்வுக்குமுள்ள இடைவெளி அதிகரித்து சேமிப்பு மிகுதியாக இருக்கும். இதனால் பாதகமான விளைவு ஏற்படக் கூடும். இப் பாதகமான விளைவைத் தவிர்க்க வேண்டுமாயின் மக்களின் நுகரும் விருப்பத்தை அதிகரிக்க வேண்டும் அல்லது மக்களின் சேமிப்பு விருப்பத்தைக் குறைக்க வேண்டும். அப்படியானால் தான் சம நிலையை உருவாக்க முடியும் என்று இவ்விதி கூறுகிறது.

**6. MEC-ன் குறையும் போக்கு**

தடையற்ற முதலாளித்துவப் பொருளாதாரத்தில் இறுதி நிலை நுகர்வு விருப்பம் ( MEC ) குறைகின்ற போக்குத் தோன்றுமென்பதை இவ்விதி சுட்டிக் காட்டுகின்றது. வருவாய் அதிஅகரித்தல் --, நுகர்வு விருப்பம் , குறைதல் ----,நுகர் பொருட்களின் தேவை , குறைதல் ---, பொருட்களின் , தேக்க நிலை ----, உற்பத்தி குறைதல் ----,ஆதாய விகிதம் ( முதலின் இறுதி நிலை ஆக்கத் திறன்) குறைதல், முதலின் இறுதி நிலை ஆக்கத் திறன் குறைந்து செல்கையில், முதலீட்டை அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களே இல்லை

குறிப்பு

**7. நீண்ட காலத் தேக்கம்**

வளர்ச்சியடைந்த பொருளாதாரங்களில், நுகர்வு விருப்பம் குறைவதால், முதலீட்டு வாய்ப்புகள் அதிகரிப்பதில்லை. இந்நிலையில் நீண்ட காலத் தேக்க நிலை தோன்றுகிறது. இக்காலத்தில் முழு நிறை வேலை வாய்ப்பு நிலையைப் பாதுகாக்கும் நோக்கத்தினடிப்படையில், நடப்பு சேமிப்பை முழுமையாகப் பயன்படுத்திட இயலாது.

**8. குறை வேலை வாய்ப்புச் சமநிலையை விளக்குதல்**

தொன்மைப் பொருளியலறிஞர்கள் கூறிய முழு நிறை வேலைவாய்ப்பு நிலைச் சமநிலை உண்மை வாழ்க்கையில் காண அரிதாக உள்ளது. அதற்கு மாறாக, கீன்ஸ் குறைவேலை வாய்ப்புச் சமநிலையை அறிமுகப்படுத்தியுள்ளார். மக்களின் இறுதி நிலை நுகர்வு விருப்பம் ஒன்றுக்குக் குறைவாக இருக்கும் போது, நுகர்வோர் அதிகமாகக் கிடைக்கும் வருவாயை செலவழிக்காமல் சேமிக்க முனைகின்றனர். இதனால் குறை வேலை வாய்ப்பு நிலையிலேயே சமநிலை தோன்றுகிறது என்பதை இக்கோட்பாடு விளக்குகிறது.

**9. வருவாய்ப் பெருக்குதல்**

முதலில் செய்யப்படும் முதலீடு பெருக்கி விளிவின் மூலம் எவ்வாறு சிறிது சிறிதாக வருவாயை அதிகரிக்கிறது என்பதை இக்கோட்பாடு விளக்குகிறது.

**10. வாணிபச் சுழலின் திருப்பு முனைகளை விளக்குகிறது**

வாணிபச் சுழனின் ஏற்ற, இறக்கங்கள் எப்படி ஏற்படுகின்றன என்பதை விளக்குகிறது

**நுகர்வுச் சார்பை நிர்ணயிக்கும் காரணிகள்**

நுகர்வுச் சார்பு பல்வேறு காரணிகளைச் சார்ந்து அமையும் இக்காரணிகளை அகக் காரணிகள், புறக் காரணிகள் என்று இரு வகையாகக் கீன்ஸ் வகைப்படுத்தியுள்ளார்.

**1. அகக் காரணிகள் (** Subkective of Endogenous factors )

அகக்காரணிகள் என்பவை பொருளாதார அமைப்பில் உள்ளார்ந்தவைகளாக இருப்பவை. இவை மனித இயல்பைச் சார்ந்த உளவில்யல், சமுதாய மரபுகள், பழக்க வழக்கங்கள், நிறுவன ஏற்பாடுகள் பற்றிய தொடர்புடையனவாகும். இவை குறுங்காலத்தில் மாறாமல் நிலையான இருக்கின்றன. அதனால்தான் குறுங்கால நுகர்வுச் சார்பு நிலையாக இருக்கிறது. கீன்ஸ் இங்கு பன்னிரெண்டு அகக் காரணகளைப் பற்றிக் கூறுகிறார். இவற்றில் எட்டை அ) தொழில் நோக்கங்கள் என்றும் , நான்கினை ஆ) வணிக நோக்கங்கல் என்றும் பிரித்துரைக்கிறார்.

குறிப்பு

**அ) தொழில் நோக்கங்கள் (** Industrial Motives **)**

1. முன்னெச்சரிக்கை நோக்கம் - எதிர்பாராத இடர்களைத் தாங்குவதற்காக காப்பு நிதியை உருவாக்கும் நோக்கம்.

2. முன் கணிப்பு நோக்கம் - வயது முதிர்வு, நோய் போன்ற எதிர்காலத் தேவைகளைக் கணித்து, அவற்றிற்காகச் சேமிப்பை மேற்கொள்ளும் நோக்கம்.

3. கணிப்பு நோக்கம் - வட்டி, சொத்து மதிப்புக் கூடுதல் போன்ற எதிர் காலத்தில் மிகுதியாக வருவாய் பெற்று மகிழும் விருப்பம்.

4. முன்னேற்ற நோக்கம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டி செலவைப் படிப்படியாக கூட்ட வேண்டுமென்ற நோக்கம்.

5. சுதந்திர நோக்கம் - சுதந்திரமாக இருக்கவும், செயல்படும் ஆற்றலைப் பெறவும் வேண்டுமென்ற விருப்பம்.

6. நிறுவன நோக்கம் - ஊகமான வாணிப நோக்கங்களை செயல்படுத்தும் நோக்கம்

7. பெருமை நோக்கம் சொத்துக்களைப் பெற்று, பெருமை சேர்க்க வேண்டுமென்ற விருப்பம்.

8. கஞ்சத்தன நோக்கம் - கஞ்சத்தன நோக்கத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற விருப்பம்

**ஆ) வணிக நோக்கங்கள் ( Business Motives )**

1. பெரு முயற்சி நோக்கம் - வாணிபத்தை விரிவுபடுத்தி பேரளவில் வாணிபம் செய்ய விருப்பம் நோக்கம்.

2. ரொக்க விருப்பம் - அவசர நிலைகளைச் சமாளிக்கும் பொருட்டு ரொக்கம் வைத்துக் கொள்ள விரும்பும் நோக்கம்.

3. பேரளவு வருவாய் நோக்கம் - அதிகளவ்ல் வருவாயைப் பெற விரும்பும் நோக்கம்

4. நிதி அறிவு நோக்கம் - தேய்மானம், பழையனவற்றைக் கழித்தல், கடனைத் தீர்த்தல் போன்றவற்றிற்காக நிதியைப் பெற விரும்பும் நோக்கம்.

புறக்காரணிகள் ( Objective or Exogenous factors )

புறக்காரணிகள் என்பவை பொருளாதார அமைப்புக்குப் புறம்பானவைகளாகும். இவை பெரும் மாற்றங்களுக்கு ஆட்படுபவையாக

குறிப்பு

இருக்கும். விரைவாக மாறுகின்ற நுகர்வில் இவை பெரும் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.

**1. வருவாய்ப் பகிர்வு :**

பொதுவாக நுகரும் விருப்பம் ஏழைகளிடம் அதிகமாகவும், செல்வந்தவர்களிடம் குறைவாகவும் இருக்கிறது. எனவே நாட்டு வருமானத்தைச் சமச் சீராகப் பகிர்ந்து கொடுப்பதால், நாட்டின் மொத்த நுகர்வு அதிகமாகக் கூடும்.

**2. நிதிக் கொள்கை :**

அரசு பின்பற்றும் நிதிக் கொள்கையும் நுகர்வைப் பாதிக்கும். அரசு வரிவித்ப்பை அதிகரிக்கும் போது, நுகர்வு குறையும் அரசு வரி விதிப்பைக் குறைக்கும் போது, நுகர்வு அதிகரிக்கும்.

**3. வணிக நிறுவனங்களின் நிதிக் கொள்கை:**

வணிக நிறுவனங்கள் பின்பற்றும் நிதிக் கொள்கையும் நுகர்வைப் பாதிக்கும். நிறுவனங்கள் பெறும் மொத்த இலாபத்தில் மிகுதியாக காப்பு நிதிக்கும், குறைவாக பங்குதாரர்களின் பங்குக்கும் ஒதுக்குமானால், நுகர்வு குறையும், மாறாக, காப்பு நிதிக்கு குறைவாகவும், பங்குதாரர்களின் பங்குக்கு மிகுதியாகவும் ஒதுக்குமானால், நுகர்வு அதிகரிக்கும்.

**4. எதிர்பார்ப்புகள்:**

பண்டங்களின் விலைகள் எதிர்காலத்தில் எவ்வாறு மாறுமென்ற மக்களின் எதிர்பார்ப்புக்கள் நுகர்வைப் பாதிக்கின்றன. எதிர்காலத்தில் பண்டங்களின் விலைகள் கூடுமென்று எதிர்பார்த்தால், நடப்பு நுகர்வு அதிகரிக்கும். எதிர்காலத்தில் பண்டங்களின் விலைகள் குறையுமென எதிர்பார்த்தால் நடப்பு நுகர்வு குறையும்

**5. திடீர்வருமானம் அல்லது இழப்பு :**

மக்களுக்கு எதிர்பாராமல் திடீரென்று வருமானம் கிடைத்தால், நுகர்வு அதிகரிக்கும் மக்களுக்கு எதிர்பாரமல் திடீரென்று வருமான இழப்பு ஏற்பட்டால், நுகர்வு குறையும்.

**6. நீர்மைத் தன்மையுள்ள சொத்துக்கள் :**

கையிருப்புப் பணம், சேமிப்பு வங்கியிலிருக்கும் பணம், அரசு பத்திரங்கள் பங்கு பத்திரங்கள் போன்றவைதான் நீர்மைத் தன்மையுள்ள சொத்துக்கள் ஆகும். மக்களிடம் இருக்கும் நீர்மைத் தன்மையுள்ள சொத்துக்கள்

அதிகரிக்குமாயின், நுகர்வும் அதிகரிக்கும் நீர்மைத் தன்மையுள்ள சொத்துக்கள் குறையுமாயின், நுகர்வும் குறையும்.

குறிப்பு

**7. வட்டி வீத மாறுதல்கள் :**

வட்டி வீதத்தில் ஏற்படும் மாறுதல்களாலும், நுகர்வு பாதிக்கப்படுகிறது. வட்டி வீதம் உயர்ந்தால், சேமிப்பு கூடி நுகர்வு குறைவு, வட்டி வீதம் குறைந்தால், சேமிப்பு குறைந்து , நுகர்வு அதிகரிக்கும்.

**8. விற்பனை முயற்சி :**

விளம்பரங்கள் போன்ற விற்பனை முயற்ச்சியினாலும் நுகர்வு பாதிக்கப்படுகிறது. விளம்பரங்களுக்கு அதிகமாகச் செலவுகள் செய்வதால், நுகர்வு அதிகரிக்கும் விளம்பரங்களுக்குக் குறைவாகச் செலவுகள் செய்தால், நுகர்வு குறையும்.

**9 சார்புப் பண்ட விலை மாற்றங்கள் :**

தொடர்புப் பண்டங்களின் விலை மாற்றங்களாலும், நுகர்வு பாதிக்கப்படுகிறது.

**10 செல்வ அளவு :**

செல்வ அளவு மாறுதல்களாலும் நுகர்வு பாதிக்கப்படுகிறது. செல்வம் அதிகரிக்குமானால் நுகர்வு கூடும் செல்வம் குறையுமாயின் நுகர்வு குறையும்.

**11.மக்கட் தொகை :**

மக்கட் தொகையில் ஏற்படும் மாறுதல்களாலும் நுகர்வு பாதிக்கப்படும். மக்கட் தொகை அதிகரிக்கும் போது, நுகர்வும் அதிகரிக்கும் மக்கட் தொகை குறையும் போது, நுகர்வும் குறையும்.

**12 பண வருவாய் :**

மக்களின் வருமானம் அதிகரிக்கும் போது, நுகர்வும் அதிகரிக்கும் மக்களின் வருமானம் குறையும் போது நுகர்வும் குறையும்

**13 நுகர்வோரின் நாகரிகம் விருப்பம்:**

நுகர்வோரின் நாகரிகத்திலும் விருப்பத்திலும் ஏற்படும் மாறுதல்களாலும், நுகர்வு பாதிக்கப்படுகிறது.

**14 சமுதாய பாதுகாப்புத் திட்டங்கள் :**

ஆயுள் காப்பீட்டு திட்டம், ஓய்வு கால நல ஊதியத் திட்டம், சேம நல நிதி போன்ற சமுதாயப் பாதுகாப்புத் திட்டங்களுக்காக மக்கள் அதிகப்

பணம் செலுத்தும் போது நுகர்வு குறைவாகவும், குறைவாகப் பணம் செலுத்தும் போது, நுகர்வு அதிகமாகவும் இருக்கும்.

**15 புதிய பண்ட அறிமுகம்:**

குறிப்பு

அங்காடியில் புதிய பண்டங்கல் அறிமுகப்படுத்தப்படும் போது நுகர்வு அதிகரிக்கும்.

**16 கூலி மாறுதல்கள் :**

கூலி மட்டம் உயரும் போது நுகர்வும் கூடும், கூலி மட்டம் குறையும் போது நுகருவும் குறையும் பிகுவும் இதே கருத்தை பிகு விளைவு என வலியுறுத்தினார்.

**17 நுகர்வோரின் சிக்கனம் பற்றிய கண்ணோட்டம்**

நுகர்வோர்கள் சிக்கனம் பற்றி வைத்திருக்கும் கண்ணோட்டமும் நுகர்வைப் பாதிக்கிறது. மக்களும் சிக்கனமாக இருப்பது ஓர் நற்பண்பெனக் கருதினால் நுகர்வு குறையும் அன்றேல் நுகர்வு அதிகரிக்கும்.

**நுகர்வு விருப்பத்தைக் கூட்டும் வழிமுறைகள்**

நுகர்வு விருப்பம் குறுங்காலத்தில் மாறாது, நிலையாக இருக்கும். ஆனால் அது நீண்ட காலத்தில் மாறக் கூடியதே நீண்ட காலத்தில் நுகர்வு விருப்பம் அதிகரித்துச் செல்ல வேண்டுமெனில், கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

1. தேசிய வருவாயை மறு பங்கீடு செய்து, ஏழைகளின் வருவாயைக் கூட்ட வேண்டும்.

2. கூலிகளை உயர்த்த வேண்டும்

3. வேலையற்றோர், முதியோர், பெண்கள், குழந்தைகள் ஆகியோருக்கு சமூக நல உதவித் தொகைகள் வழங்க வேண்டும்.

4. மக்களுக்கு குறைந்த வட்டியில் அதிகக் கடன்கள் கிடைக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

5. விளம்பரச் செலவுகளை அதிகரித்து விற்பனையைப் பெருக்க வேண்டும்

6 போக்குவரத்து வசதிகள் எல்லா இடங்களுக்கும் விரிவுபடுத்தவேண்டும்

7. அனேக நகரங்கள் உருவாக்கப்பட வேண்டும், கிராமங்களிலிருந்து மக்கள் இடம் பெயர்ந்து நகரங்களுக்குச் செல்ல வேண்டும்.

## நுகர்வுச் சார்புக் கருத்து பற்றிய திறனாய்வு:

குறிப்பு

தற்காலப் பொருளியலறிஞர்கள் கீன்ஸ்ஸின் நுகர்வுச் சார்புக் கருத்தில் சில குறைகளைச் சுட்டிகாட்டுகின்றனர்.

**1. வராலாற்று உண்மையல்ல :**

நுகர்வுச் சார்புக்கு வரலாற்று சான்று இல்லை. அது மட்டுமின்றி, நுகர்வுச் சார்புக் கருத்து சரியானதல்ல என்று வரலாறு கூறுகிறது.

**2. தெளிவற்ற கருத்து:**

நுகர்வுச் சார்பு உளவியல் சார்ந்த ஓர் கருத்தாகும். எனவே இதனைத் தெளிவாக விளக்கவோ, துல்லியமாக அளக்கவோ இயலாது.

**3. தெரிந்த உண்மையே:**

நுகர்வுச் சார்பு என்னும் கருத்து அனைவருக்கும் தெரிந்த ஓர் கருத்தே ஆகும். இதில் புதிதாக ஏதும் கூறப்படவில்லை.

**4. நீண்ட கால நுகர்வுச் சார்பு:**

நுகர்வுச் சார்பை கீன்ஸ் குறுங்கால நுகர்வுச் சார்பு, நீண்ட கால நுகர்வுச் சார்பு என்று இரு கூறாகப் பகுத்துள்ளார். குறுங்கால நுகர்வுச் சார்பு நிலையானதென்றும், நீண்ட கால நுகர்வுச் சார்பு நெகிழ்வுள்ளது என்றும் அவர் கருதுகின்றார். இரண்டுக்கும் அனேக வேற்றுமை இயல்புகள் உள்ளவென்றும் அவர் கருதுகிறார், எனினும் இக்கருத்து அவ்வளவு முக்கமானதன்று.

**5. உண்மைக்குப் புறம்பானது :**

நுகர்வுச் சார்பு உண்மைக்குப் புறம்பானது. ஹேஸ்ஸிலிட் என்னும் பொருளிடல் மேதி “ நுகர்வுச் சார்பு என்னும் கருத்து நம்மிடம் மயக்கத்தை ஏற்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டு, தேவைக்கும் அதிகமாக செல்வாக்கும் பெற்றுவிட்ட கருத்து ஆகும்” எனக் கூறுகிறார்

குறிப்பு

## 6.5 உங்கள் முன்னேற்றத்தைச் சரிப்பார்க்க:

1. செலவு சம்பந்தப்பட்ட மக்களின் நடவடிக்கைகள் மாறுவதில்லை.

அதாவது, மக்களின் நுகர்வு விருப்பம் நிறையாக இருக்க வேண்டும்.

அதாவது, நுகர்வு வருவாயை மட்டுமே சார்ந்திருக்கிறது் பிற காரணிகளைச் சார்ந்திருப்பதில்லை.

நாட்டில் இயல்பான சூழ் நிலைகள் நிலவ வேண்டும் அதாவது,

நாட்டில் பணவீக்கும், யுத்தம், புரட்சி, அரசியல் குழப்பங்கள்

போன்ற இயல்பற்ற சூழ் நிலைகள் நிலவக் கூடாது.நாட்டில்

தலையீடற்ற, மிகவும் செழிப்பான முதலாளித்துவப் பொருளாதார

அமைப்பு நிலவ வேண்டும்.

2) 1.பெரு முயற்சி நோக்கம்

2. ரொக்க விருப்பம்

3. பேரளவு வருவாய் நோக்கம் -

4. நிதி அறிவு நோக்கம்

குறிப்பு

# அலகு- 7 முதலீட்டுச் செயல்பாடு

7.1. நோக்கங்கள்
7.2. முதலீட்டுச்செயல்பாடு - பொருள்
7.3 மூலதனத்தின் ஒரளவு திறன்(MEC)
7.4. உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்க
7.5 மூலதனத்தின் ஒரளவு செயல்திறன(MEI)
7.6. உங்கள் முன்னேற்றத்தைச் சரிப்பார்க்க

## 7.1 நோக்கங்கள்

1. முதலீட்டுச்செயல்பாடு பொருள் தீர்மானங்கள் பற்றி தெளிவு பெற.

2. மூலதனத்தின் ஒரளவு திறன் ஒரளவு செயல்திறன் பற்றி தெரிந்து கொள்ள.

## அறிமுகம்

‘‘முழுநிறை வேலை நிலைக்கு மிகவும் இன்றியமையாத தேவை முதலீட்டாகும். முதலளித்துவப் பொருளாதாரத்தில் அதுதான் வளத்தின் திறவுகோலாக இருக்கின்றது’’ என்ற கென்னத் குரிகாரா குறிப்பிடுகின்றார். விளைவுல்ல தேவையைச் சார்ந்தே நாட்டின் வேலைவாய்ப்பு , உற்பத்தி , வருவாய் அமைகின்றது. விளைவுள்ள தேவை நுகர்வையும் முதலீட்டையும் சார்ந்துள்ளது. நுகர்வு குறுகிய காலத்தில் ஏறத்தாழ நிலையாக உள்லது. ஆதலால் முதலீட்டைக் கூட்டுவதன் மூலமாகத்தான் வேலை வாய்ப்பைக் கூட்ட வேண்டியுள்ளது. இந்த அடிப்படியின் கீன்ஸ் முதலீட்டை ஆற்றல்மிக்க மாறியாகக் ( Strategic variable ) கருதுகின்றார்

## 7.2 முதலீட்டுச்செயல்பாடு – பொருள்

நுகர்வுச் செலவு தவிர ஏனைய அனைத்துச் செலவினங்களின் மொத்த மதிப்பை முதலீடு என்கிறோம். ,ச்சொலவினங்கள் பணமாகவோ அல்லது பண்டங்களாகவோ ,ருக்கலாம். ,.இதனை ஒரு குறிப்பிட்ட காலத்தில், புதிய கட்டுமானங்களாகவும் தோன்றும் மாற்றமே முதலீடாகும்” என முதலீட்டை வரையறை செய்யலாம்

### 1. தனிநபர் முதலீடு , சமுதாய முதலீடு

தனிநபர் அல்லது நிறுவனங்கள் மேற்கொள்ளும் முதலீட்டை தனி நபர் முதலீடு என்கிறோம். தனி நபர் முதலீடு பொதுவாக ஆதாய நோக்கத்தோடு மேற்கொள்ளப்படுகின்றது. ,து முதலின் ,றுதி நிலை ஆக்கத் திறனையும், வட்டி வீதத்தையும் சார்ந்து அமையும்.

நாட்டு மக்கள், மற்றும் அரசு அனைவரது தனித் தனியான முதலீடுகளைக் கூட்ட, சமுதாய அல்லது பொது முதலீடு கிடைக்கும். ,வை பொதுவாக பொதுப் பயன்பாட்டு நோக்கங்களை நிறைவு செய்யவே மேற்கொள்ளப்படுகின்றன.

குறிப்பு

2. **நிதி முதிலீடு, உண்மை முதலீடு**

ஏற்கனவே இருக்கும் நிறுவனங்களின் பங்குகளையும், பத்திரங்களையும் வாங்கும்போது, நிதி முதலீடு தோன்றுகிறது. பங்குகளையும், பத்திரங்களையும் வாங்கும்போது ,ருக்கின்ற முதலீடு கைமாறுகின்றனவே. தவிர, மொத்த முதலீட்டில் எவ்வித மாற்றமும் ,ருப்பதில்லை. மேலும், பொருளாதாரத்தின் உற்பத்தித் திறனும் அதிகரிக்கப்பபோவதில்லை.

**முதலீட்டை நிர்ணயிக்கும் காரணிகள்**

1. முதலின் இறுதி நிலை ஆக்கத் திறன்

முதலின் இறுதிநிலை ஆக்கத் திறன் அதிகமாக இருந்தால் முதலீட்டின் அளவு கூடும். முதலின் இறுதி நிலை ஆக்கத் திறன் குறைவாக இருந்தால், முதலீட்டின் அளவு குறையும்

2. **வட்டி வீதம்**

வட்டி வீதம் குறைவாக இருந்தால், முதலீட்டின் அளவு கூடும், வட்டி வீதம் அதிகமாக இருந்தால், முதலீட்டின் அளவு குறையும்

3 **மூலதனப் பண்டங்களின் இருப்பு**

மூலதனப் பண்டங்கள் மிகுதியாக இருந்தால் , முதலீட்டின் அளவு குறையும், மூலதனப் பண்டங்கள் குறைவாக இருந்தால் முதலீட்டின் அளவு அதிகரிக்கும்

4 **வருவாய் நிலை**

மக்களின் வருவாய் உயர்வாக இருப்பின் முதலீட்டின் அளவு அதிகரிக்கும், மக்களின் வருவாய் குறைவாக இருப்பின் முதலீட்டின் அளவு குறையும்

5 **வாணிப எதிர்பார்ப்புக்கள்**

எதிர்காலத்தில் ஆதாயம் அதிகமாக் கிடைக்கும் என எதிர் பார்த்தால், முதலீடு அதிகரிக்கும், எதிர்காலத்தில் ஆதாயம் குறைவாகக் கிடைக்கும் என எதிர்பார்த்தால், முதலீடு குறையும்

6 **நுகர்வோர் தேவை மாற்றங்கள்**

நுகர்வோர் தேவை கூடினால் முதலீடும் அதிகரிக்கும் நுகர்வோர் தேவை குறைந்தால் முதலீடும் குறையும்

7 நீர்மைத் தன்மை சொத்துக்கள்

நாட்டில் நீர்மைத் தன்மையுள்ள சொத்துக்கள் அதிகமாக இருந்தால். முதலீடு அதிகமாக இருக்கும் நாட்டில் நீர்மைத் தன்மையுள்ள சொத்துக்கள் குறைவாக இருந்தால் முதலீடு குறைவாக இருக்கும்.

8 **கண்டுபிடிப்புக்களும் புத்தாக்கங்களும்**

குறிப்பு

புதிய கண்டுபிடிப்புகளும், புத்தாக்கங்களும் அதிகமாக இருந்தால் முதலீடு அதிகமாக இருக்கும் இல்லையெனில் முதலீடு குறைவாக இருக்கும்.

9 **மக்கட் தொகை**

நாட்டின் மக்கள் தொகை அதிகமாக இருந்தால் , முதலீடு அதிகமாக இருக்கும். மக்கள்தொகை குறைவாக இருந்தால் முதலீடு குறைவாக இருக்கும்,

10 **அரசின் வரிக் கொள்கை**

அரசு குறைவான அளவு வரிகளை விதித்தால், முதலீடு அதிகமாகவும் அதிகமான வரிகளை விதித்தால் முதலீடு குறைவாகவும் இருக்கும்.

11 **அரசியல் சூழ்நிலை**

நாட்டில் அமைதியான சூழ்நிலை நிலவினால் முதலீடு அதிகமாக இருக்கும் .நாட்டில் அமையற்ற சூழ்நிலை நிலவினால் முதலீடு குறைவாக இருக்கும்

## 7.3 மூலதனத்தின் இறுதி நிலை ஆக்கத் திறன '(MEC)

ஒரு நாட்டின் உற்பத்தி மற்றும் வேலை வாய்ப்பு அளவு அந்த நாட்டில் நிலவும் நுகர்வுச் சார்பு மற்றும் முதலீட்டுச் சார்பு ஆகியவற்றைச் சார்ந்து அமையும் என்றும், குறுங்காலத்தில் நுகர்வுச் சார்பு நிலையாக இருப்பதால் உற்பத்தி வேலை வாப்பளவைத் தீர்மானிப்பதில், முதலீட்டுச் சார்வின் பங்கே அதிகமாக இருக்கிறது என்று கீன்ஸின் பொது கோட்பாடு கூறுகிறது.

சமன்பாடு

° = Q1/ (1+R) + Q2 /(1+R) ^2 + Q3 / (1+R) ^3.............+ Qn / (1+R)n

இதில் Q1, Q2, Q3, = எதிர்பார்க்கப்படும் விளைவுகள்

1 ,2 , 3 = ஆண்டுகள்

R = fopT வீதம்

முதலீடு பொது முதலீடு , தனியார் முதலீடு என்று இருவகைப்படும் என்றும் பொது ( தானேமும்) முதலீட்டின் அளவில்


குறிப்பு


ஏற்றத் தாழ்வுகள் இருக்காது. தனியார் ( தூண்டப் பெற்ற ) முதலீட்டில் பல்வேறு காரணங்களினால் ஏற்றத் தாழ்வுகள் இருக்குமென்றும் நாம் ஏற்கனவே கண்டறிந்தோம். தனியார் முதலீட்டளவு முதலின் இறுதி நிலை ஆக்கத் திறனையும், வட்டி விகிதத்தையும் சார்ந்திருக்கும் இவற்றில் வட்டி விகிதம் குறுங்காலத்தில் ஓரளவு நிலையானதாக இருப்பதால், தனியார் முதலீட்டளவு முதலின் இறுதி நிலை ஆக்கத் திறனைச் சார்ந்திருக்கும் எனக் கீன்ஸ் கருதுகிறார். அதாவது முதலின் இறுதி நிலை ஆக்கத் திறனால் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளால் தான், தனியார் அல்லது தூண்டப்பெற்ற முதலீட்டளவு ஏற்றத் தாழ்வுகளுக்குக் காரணமாகும் என அவர் கருதுகிறார்.

கூடுகின்ற மூலதனச் சொத்தின் ஒரு அலகிலிருந்து அதன் ஆயுட் காலம் முழுவதிலும் அதனைப் பயன்படுத்துவதற்கான செலவுக்கு மேல் அதன் முதலீட்டாளர் எதிர்பார்க்கின்ற ஆதாய விகிதமே முதலின் இறுதி நிலை ஆக்கத் திறன் எனப்படும். அதாவது முதலீட்டாளர் ஒருவரு அவர் மேற்கொண்ட கூடுதல் முதலீட்டிலிருந்து எதிர்பார்க்கும் ஆதாயத்திற்கு, அம் மூலதனச் சொத்தின் அளிப்பு விலைக்குமுள்ள விகிதமே முதலின் இறுதி நிலை ஆக்கத் திற்ன் எனப்படும்

இயங்கு நிலைப் பொருளாதாரத்தில் மூலதனத்தின் இறுதி நிலை ஆக்கத் திறனைக் கணித்தல் கடினமாகும், மூலதனத்தின் அளிப்பு விலையை விட எதிர்பார்க்கும் வருவாய் அதிகமாக இருக்கும் வரை தான், ஒருவர் முதலீட்டை அதிகரித்துக்கொண்டே செல்வார் எப்பொழுது அளிப்பு விலையும் எதிர்பார்க்கும் வருவாயும் சமமாக இருக்குமோ அப்பொழுது முதலீட்டைக் கூட்டுவதை நிறுத்திக் கொள்வார்.

MEC **கோடு**




குறிப்பு

குறிப்பு

படத்தில் இறுதி நிலை ஆக்கத் திறனிற்க்கும் முதலீட்டிற்க்கும் உள்ள எதிர்மறை தொடர்பை கீழ் நோக்கி செல்லும் கோடு குறிக்கிறது.

**முதலீட்டின் வகைகள்**

**i) தூண்டப் பெற்ற முதலீடு** ( Induced Investment ):

ஹிக்ஸ் முதலீட்டை தூண்டப்பெற்ற முதலீடு என்றும் தானே ஏற்படும் முதலீடு என்றும் இருவகைகளாகப் பிரிக்கின்றார் . தூண்டப்பெற்ற முதலீடு தனியார் முதலீடார்க இருக்கின்றது . தூண்டப்பெற்ற முதலீடு உண்மை முதலீடாக இருக்கும். தூண்டப்பெற்ற முதலீடு ஆதாய நோக்கமுடையதாக, அதாவது வருவாய் நோக்கமுடையதாக இருக்கும். விலைகள் , கூலிகள், வட்டி மாற்றங்கள் போன்றவை ஆதாயத்தைப் பாதிப்பதன் மூலமாக முதலீட்டை தூண்டுகின்றன. விளைவுள்ள தாவை முதலீட்டிற்கு ஆக்கம் தருகின்றது. வருவாய் கூடுகின்ற பொழுது நுகர்வு கூடுகின்றது. அதிகிரிக்கின்ற நுகர்வுத் தேவைக்கேற்பப் பொருட்களை உற்பத்திசெய்ய முதலீட்டை கூட்ட வேண்டியுள்ளது. தூண்டுகின்ற முதலீடு வருவாய்ச் சார்புடையதாகும். அதாவது வருவாய் நெகிழ்ச்சியுடையதாகும் வருவாய் விகிதம் கூடுவதற்கும் குறைவதற்குமேற்ப முதலீடு கூடவும் குறையவும் செய்கின்றது.

**ii) தானே ஏற்படும் முதலீடு** ( Autonomous Investment ):

வருவாய் , உற்பத்தி நிலைகளைச் சாராமல் செய்யக் கூடிய முதலீட்டை தானே ஏற்படும் முதலீடு அல்லது சுயாதிகார முதலீடு என்கின்றோம். ஆதாய நோக்கமின்றியே ஏற்படுவது இவ்வகை முதலீடாகும். இது பொதுத்துறை முதலீடாக அமைகின்றது. “ பொது முதலீடு , கண்டுபிடிப்புக்களோடு நேரடித் தொடர்பில் ஏற்படக் கூடிய முதலீடுகள், நீண்ட காலத்தில் தங்களது செலவைத் தாங்களே செலுத்துமென்று எதிர்பாக்கின்ற மிக நீண்ட கால முதலீடுகள் ஆகியவை எல்லாவற்றையும் தானே ஏற்படும் முதலீடு எனக் கருதலாம்

தானே ஏற்படும் முதலீடு வருவாய் மாற்றங்களால் பாதிக்கப்படுவதில்லை . அதாவது வருவாய் வருவாய் மாற்றங்களால் பாதிக்கப்படுவதில்லை. அதாவது வருவாய் நெகிழ்ச்சியற்றதாக இருக்கின்றது. இது பெரும்பாலும் கண்டுபிடிப்புகள், புத்தகங்கள் மக்கள் தொகை பெருக்கம், உழைப்புச் சக்திப் பெருக்கம், ஆராய்ச்சிகள். சமுதாய சட்ட நிறுவனங்கள், பருவகால மாற்றங்கள், போர்புரட்சி போன்ற புறக்காரணிகளால் ஏற்படுகின்றது. ஆனால் இது தேவை மாற்றங்களால் பாதிக்கப்படுவதில்லை. மாறாக இது தேவையை

மாற்றுகின்றது. தனியாராலோ அரசாலோ மேற்கொள்ளப்பெறுகின்ற சமுதாய , பொருளாதார மேல்நிலை முதலீட்டுச் செலவுகள் இவ்வகையைச் சார்ந்தவையே . எடுத்துக்காட்டாக , கட்டிடங்கள், அணைக்கட்டுகள், சாலைகள் , கால்வாய்கள் , பள்ளிகள், மருத்துவநிலையங்கள் ஆகியவற்றைக் கூறலாம். இவை அரசின் கொள்கையை ஒட்டி அமைபவை ஆதலால்தான், தானே ஏற்படும் முதலீடு பொதுத்துறை முதலீடாக இருக்குமென்று கூறுகின்றார்.

குறிப்பு

**iii)** தனியார் முதலீடு ( Private Investment ) :

தனிப்பட்ட மனிதர்களும், நிறுவனங்களும் ஆதாய நோக்கத்தோடு செய்வது தனியார் முதலீடாகும். தனியார் முதலீடு ஆதாய நெகிழ்ச்சியுடையது. இது தூண்டப்பெற்ற முதலீடாகும். தனியார் முதலீடும் ஒரு பக்கம் வட்டி வீதத்தையும் மறுபக்கம் மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறனையும் சார்ந்து அமைகின்றது. இறுதிநிலை ஆக்கத்திறன் மிகுதியாகவும் வட்டிவீதம் குறைவாகவும் இருக்கின்றவரை தனியார் முதலீடு கூடும் .

**iv) பொதுத்துறை முதலீடு (** Public Investment **):**

அரசின் பல்வேறு துறைகளும் செய்வதை பொதுத்துறை முதலீடு என்கின்றோம். நமது நாட்டில் மத்திய அரசு இருப்புப்பாதைகள், கனரகத் தொழிற்சாலைகள், செய்தித்துறைகள், பல்நோக்கு அணைக்கட்டுகள் போன்றவற்றில் முதலீடு செய்வதையும், மாநில அரசுகள் மருத்துவ நிலையங்கள், கால்வாய்கள், பள்ளிகள் , சாலைகள் போன்றவற்றிற்குச் செலவு செய்வதையும் பொதுத்துறை முதலீட்டிற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். பொதுத்துறை முதலீடுகள் பொதுப் பயன்பாட்டு நோக்கத்திலேயே ஏற்படுகின்றன. தற்காலத்தில் ஆதாய நோக்கத்திலும் பொதுத்துறை முதலீடுகளை மேற்கொள்கின்றனர். ஆதலால் எல்லா பொதுத்துறை முதலீடுகளை மேற்கொள்கின்றனர். ஆதலால் எல்லா பொதுத்துறை முதலீடுகளையும் தானே ஏற்படுபவை என்று கூறமுடியாது. அவை தூண்டப்பெற்ற முதலீடுகளாகவும் உள்ளன.

**v) உள்நோக்கமுடைய , உள்நோக்கமற்ற முதலீடுகள் :**

உண்மை முதலீடுகள் உள்நோக்கமுடைய முதலீடுகள் என்றும் உள்நோக்கம்ற்ற முதலீடுகள் என்றும் இருவகைகளாகப் பிரிக்கலாம். உள்நோக்கமுடைய முதலீடுகள் என்பவை திட்டமிட்ட ஆக்கத்திறனைக் கூட்டுவது ஆக்கச் செலவைக் குறைப்பது எதிர்கால ஆதாயத்தைப் பெருக்குவது போன்று குறிப்பிட்ட நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்பெறுவைகளாகும்.

குறிப்பு

எதிர்பாராத வாணிப தொழில்மாற்றங்களால் குறிப்பிட்ட நோக்கமின்றி முதலீடு செய்வதை உள்நோக்கமற்ற முதலீடு என்கின்றோம்.

**திட்டமிட்ட முதலீடுக் மேற்கொள்ளும் முதலீடும்**

முதலீட்டை திட்டமிட்ட, விரும்பிய, எதிர்பார்த்த முதலீடு என்றும் , உண்மையான மேற்கொள்ளப்பெற்ற முதலீடு என்றும் இருவகைகளாகப் பிரிக்கலாம்.

திட்டமிட்ட முதலீடும் உண்மையில் மேற்கொள்ளப் பெற்ற முதலீடும் எல்லாச் சமயங்களிலும் சமமாக , ஒன்றாக இருப்பதில்லை, திட்டமிடும் முதலீடு என்பது முதலீட்டாளர்கள் முதலீடு செய்ய எதிர்பார்க்கின்ற முதலீட்டளவைக் குறிக்கின்றது. உண்மையில் மேற்கொள்கின்ற முதலீடு சமுதாயத்தில் வருகின்ற சேமிப்பைச் சார்ந்து அமைகிறது. தற்கால இயங்குநிலைச் சமுதாயத்தில் முதலீட்டாளர்கள் வேறாகவும் சேமிப்பாளர்கள் வேறாகவும் இருக்கின்றனர். சேமிப்பவர்களின் தீர்மானங்களும் முதலீட்டாளர்களின் தீர்மானங்களும் வெவ்வேறு அடிப்படையில் தொடர்பின்றி அமைக்கின்றன. ஆதலால் திட்டமிட்ட முதலீடும் உண்மை முதலீடும் வேறுபடுகின்றன.

வருவாய்ச் சமநிலை சேமிப்பாளர்களும் முதலீட்டாளர்களும் சமநிலையில் இருக்கின்ற பொழுதுதான் ஏற்படுகின்றன. உண்மையான சேமிப்பு என்பது வருவாயில் நுகரப் பெறுவதாகும் . உண்மையான முதலீடு என்பது எஞ்சுவதாகும். இந்த விளக்கப்படி உண்மையான சேமிப்பு உண்மையான முதலீடும் சமமாக உள்ளன. ஆனால் திட்டமிட்ட முதலீடும் உண்மைச் சேமிப்பும் சமமாக இருக்க வேண்டுமென்பதில்லை.

திட்டமிட்ட முதலீட்டிற்கும் சேமிப்பிற்கும் இடையேயுள்ள ஏற்றத்தாழ்வு நீங்கி இரண்டும் எப்படி சமநிலைக்கு வருகின்றன என்பதை விளக்கலாம் . திட்டமிட்ட முதலீடு சேமிப்பைவிட மிகுதியாக இருந்தால் வருவாய் கூடும் . வருவாய் கூடுகின்ற பொழுது சேமிப்புக் கூடும். காலப்போக்கில் முதலீடும் சேமிப்பும் சமமாகும் . மாறாக , திட்டமிட்ட முதலீட்டைவிட சேமிப்பு மிகுதியாக இருக்குமானால் வருவாய் குறையும், வருவாய் குறைகின்ற பொழுது சேமிப்புக் குறையும். இறுதியில் சேமிப்பு முதலீட்டிற்குச் சமமாகும்.

**தனியார் முதலீட்டை பெருக்கும் வழிமுறைகள்**

முதலீட்டை சார்ந்து வேலைவாய்ப்பு , வருவாய் அமைகின்றன. தனியார் முதலீடு மந்த காலங்களில் குறைவாக உள்ளது. தனியார் முதலீட்டை எப்படி தூண்டலாமென்பதைச் சுட்டிக்காட்டலாம்

குறிப்பு

**1. மலிவுப் பணக்கொள்கை :** அரசு மலிவுப் பணக்கொள்கையைப் பின்பற்றி குறைந்த வட்டிக்கு கடன் கொடுப்பதன் மூலம் தனியார் முதலீட்டை தூண்டலாம். ஆனால் எந்த அளவிற்கு வட்டியை குறைப்பதென்பது எளிதாக தீர்மானிக்க இயல்வதில்லை.

**2. வரிச்சலுகைகள் :** தொழில் நிறுவனங்களுக்கு வரிச் சலுகைகள் வழங்கலாம். அவை ஆதாயத்தின் முதலீடு செய்கின்ற பகுதிக்கு வரிவிலக்கு அளிப்பதன் மூலம் அவற்றை முதலீடு செய்யத் தூண்டலாம். வரிச்சலுகையளிக்கும் முறையை ஹேன்சன், லெர்னர், கிளென் போன்றவர்கள் ஆதரிக்கின்றனர்.

**3.அரசு செலவிடுதல்:** அரசுஅணைகள், வீடுகள், தொழிற்சாலைகள் கட்டுதல் , கிணறுகள் , கால்வாய்கள் வெட்டுதல் போன்றவற்றில் மிகுதியாகப் பணத்தைச் செலவிடலாம். இதனை “ குழாய் ஏற்றுக் கொள்கை “ என்று கூறலாம். அரசின் செலவு மக்களின் வருவாயைக் கூட்டி கூடுகின்றபொழுது ஆதாயம் மிகுதிப்படுவதால் தனியார் முதலீட்டிற்குத் தூண்டுதல் கிடைக்கின்றது.

**4. கூலியைக் குறைத்தல் :** கூலியைத் குறைப்பதன் மூலம் முதலீட்டைத் தூண்டலாமென்ற கருத்தை சிலர் கூறுகின்றனர் . கூலி குறைகின்ற பொழுது ஆதாயம் கூடும் மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறன் உயர்வதால் தனியார் முதலீட்டைக் கூட்டுவார்கள். ஆனால் கூலி குறைகின்றபொழுது தொழிலாலர்களின் வருவாய் குறைவதால், நுகர்வு குறைய வழி ஏற்பாடுமென்பது கவனிக்கத்தக்கது. இது முதலீட்டைப் பாதிக்கலாம்.

**5. விலைக்கொள்கை:** அடிக்கடி விலையில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டால் தனியார் முதலீடு செய்யத் தயங்குவார்கள். ஆதலால் அரசு விலைகளை நிலைப்படுத்துவதன் மூலம் முதலீட்டை ஊக்குவிக்கலாம். விலைகள் குறையும் பொழுது அரசு பொருட்களை வாங்கி இருப்புவைத்து விலைகள் குறையாமல் தடுக்கலாம். விலைகள் ஓரளவுக்குமேல் கூடினால் அரசு வாங்கிய பொருட்களை விற்பனை செய்து விலையை நிலைப்படுத்தலாம்.

**6. முற்றுரிமைகளை நீக்குதல்:** பெரிய நிறுவனங்கள் முற்றுரிமை பெற்று விளங்கினால் , அந்தத்துறைகளில் சிறிய நிறுவனங்கள் முதலீடு செய்யத் தயங்கும், முன்னுரிமைகளை நீக்கிவிட்டால் சின்னஞ்சிறு நிறுவனங்கள் துணிச்சலாக முதலீடு செய்யுமென்றுகௌளன் கருதுகின்றார்.

**7.ஆராய்ச்சியை தூண்டுதல் :** அரசு பல்வேறு வகையான ஆராய்ச்சிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் தரலாம். ஆராய்ச்சியின் பயனைத் தனியார் பயன்படுத்துகின்றபொழுது முதலீட்டைக் கூட்டுவார்கள்

குறிப்பு

**முதலீட்டைத் தூண்டுகின்ற ( தீர்மானிக்கின்ற ) காரணிகள்**

தனியார் முதலீட்டைத் தூண்டுகின்ற காரணிகள் பல்வேறு வகையான உள்ளன. நீண்ட காலத்தில் சமுதாய , பொருளாதார , பண்பாட்டுக் காரணிகள் முதலீட்டைப் பாதிக்கின்றன. கீன்ஸ் குறுகியகாலத்தில் மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறனும் வட்டிவீதம் முதலீட்டை நிர்ணயிப்பதாகக் கருதினார் . ஆனால் பொதுவாக முதலீட்டை நிர்ணயிக்கும் காரணிகளை தொகுத்துக் கூறலாம்.

**1. வட்டி வீதம்** : முதலீடு வட்டி விதத்தைச் சார்ந்துள்ளது. வட்டி வீதத்தை ரொக்க விருப்பம் நிர்ணயிக்கின்றது. குறைந்த வட்டிக்குக் கடன் கிடைத்தால் முதலீட்டைக் கூட்டுவார்கள். பணத்தின் தேவையும் அளிப்பும் வட்டிவீதத்தைத் தீர்மானிக்கின்றன.

**2. மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறன்:** முதலீடு கூடுவதன் மூலம் எதிர்பார்க்கின்ற ஆதாயத்தை இறுதிநிலை ஆக்கத்திறன் குறிக்கின்றது , வட்டி வீதத்தைவிட இறுதிநிலை ஆக்கத் திறன் மிகுதியாக இருக்கின்றவரை முதலீட்டைக் கூட்டுவார்கள்

**3. மூலதனப் பொருட்களின் இருப்பு** : மூலதனப் பொருட்கள் மிகுதியாக இருந்தால் முதலீட்டைக் கூட்டமாட்டார்கள் எச்சநிலையில் மூலதனக் கருவிகள் இருந்தால் அவற்றை முழுமையாகப் பயன்படுத்துவார்களே தவிர முதலீட்டைக் கூட்டமாட்டார்கள்

**4. வருவாய் நிலை:** நாட்டின் வருவாய் கூடுகின்ற பொழுது, நுகர்வும் கூடும், இதனால் பொருட்களில் தேவை கூட முதலீடு தூண்டுதலையும்.

**5 வாணிப எதிர்பார்ப்புக்கள்:** எதிர்காலத்தில் ஆதாயம் நிறையக் கிடைக்குமென்று எதிர்பார்த்தால் முதலீட்டைக் கூட்டுவார்கள். இல்லையேல் முதலீட்டைக் குறைப்பார்கள்.

**6. நுகர்வோர் தேவை:** நாட்டில் நுகர்வோரின் தேவை கூடினால் முதலீடும் கூடும். எதிர்காலத்தில் தேவை கூடுமென்று எதிர்பார்த்தாலும் முதலீடு கூடும் . ஆனால் தேவை குறைந்தால் முதலீடு குறையும்.

**7. நிர்மைத்தன்மைச் சொத்துக்கள்** : நிறுவனங்களில் பகிர்ந்து கொடுக்காத ஆதாயம், ஒதுக்கு நிதிகள் போன்றவை மிகுதியாக இருந்தால் முதலீடு கூடும். நீர்மைத்தன்மையுள்ள சொத்துக்கள் குறைவாக இருந்தால் முதலீடு கூடும். நீர்மைத்தன்மையுள்ள சொத்துக்கள் குறைவாக இருந்தால் முதலீடும் குறையும்.

**8. கண்டுபிடிப்புக்களும் புத்தாக்கங்களும்:** உற்பத்திச் செலவைக் குறைக்கக் கூடிய கண்டுபிடிப்புக்களும் புத்தாக்கங்களும் மிகுதியாகத் தோன்றினால் முதலீட்டைக் கூட்டுவார்கள்.

**9. புதிய பொருட்கள் :** புதுப்புது பொருட்களை குறைந்த செலவில் உற்பத்திச் செய்து அதிக விலைக்கு விற்பனை செய்யும் வாய்ப்பு இருந்தால் முதலீடு கூடும்.

குறிப்பு

**10. மக்கட் பெருக்கம்:** மக்கள் தொகை பெறுகின்ற பொழுது எல்லாவகையான பொருட்களுக்கும் தேவை கூடும் இதனால் முதலீடு உயரும்.

**11. அரசின் கொள்கை:** அரசு குறைவாக வரிவிதித்தால் முதலீடு கூடும், முதலீட்டைத் தூண்டுகின்ற அரசின் கொள்கை முதலீட்டைப் பெருக்கும்.

**12. அரசியல் சூழல் :** நாட்டில் அமைதியான அரசியல் சூழ்நிலை முதலீட்டைக் கூட்டும். நாட்டில் போராட்டங்களும் கலகங்களும் இருந்தால் முதலீடு குறையும்.

## 7.4 உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்க:

1. முதலீட்டின் வகைகள் யாவை?
2. இறுதி நிலை ஆக்கத் திறன் என்றால் என்ன?

ஒரு நாட்டின் உற்பத்தி மற்றும் வேலை வாய்ப்பு அளவு அந்த நாட்டில் நிலவும் நுகர்வுச் சார்பு மற்றும் முதலீட்டுச் சார்பு ஆகியவற்றைச் சார்ந்து அமையும் என்றும், குறுங்காலத்தில் நுகர்வுச் சார்பு நிலையாக இருப்பதால் உற்பத்தி வேலை வாப்பளவைத் தீர்மானிப்பதில், முதலீட்டுச் சார்வின் பங்கே அதிகமாக இருக்கிறது என்று கீன்ஸின் பொது கோட்பாடு கூறுகிறது.

முதலீடு பொது முதலீடு , தனியார் முதலீடு என்று இருவகைப்படும் என்றும் . பொது ( தானேமும்) முதலீட்டின் அளவில் ஏற்றத் தாழ்வுகள் இருக்காது. தனியார் ( தூண்டப் பெற்ற ) முதலீட்டில் பல்வேறு காரணங்களினால் ஏற்றத் தாழ்வுகள் இருக்குமென்றும் நாம் ஏற்கனவே கண்டறிந்தோம். தனியார் முதலீட்டளவு முதலின் இறுதி நிலை ஆக்கத் திறனையும், வட்டி விகிதத்தையும் சார்ந்திருக்கும் இவற்றில் வட்டி விகிதம் குறுங்காலத்தில் ஓரளவு நிலையானதாக இருப்பதால், தனியார் முதலீட்டளவு முதலின் இறுதி நிலை ஆக்கத் திறனைச் சார்ந்திருக்கும் எனக் கீன்ஸ் கருதுகிறார். அதாவது முதலின் இறுதி நிலை ஆக்கத் திறனால் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளால் தான், தனியார் அல்லது தூண்டப்பெற்ற முதலீட்டளவு ஏற்றத் தாழ்வுகளுக்குக் காரணமாகும் என அவர் கருதுகிறார்.

கூடுகின்ற மூலதனச் சொத்தின் ஒரு அலகிலிருந்து அதன் ஆயுட் காலம் முழுவதிலும் அதனைப் பயன்படுத்துவதற்கான செலவுக்கு மேல் அதன் முதலீட்டாளர் எதிர்பார்க்கின்ற ஆதாய விகிதமே முதலின் இறுதி நிலை ஆக்கத் திறன் எனப்படும். அதாவது முதலீட்டாளர் ஒருவரு அவர்

மேற்கொண்ட கூடுதல் முதலீட்டிலிருந்து எதிர்பார்க்கும் ஆதாயத்திற்கு, அம் மூலதனச் சொத்தின் அளிப்பு விலைக்குமுள்ள விகிதமே முதலின் இறுதி நிலை ஆக்கத் திற்ன் எனப்படும்

குறிப்பு

இயங்கு நிலைப் பொருளாதாரத்தில் மூலதனத்தின் இறுதி நிலை ஆக்கத் திறனைக் கணித்தல் கடினமாகும், மூலதனத்தின் அளிப்பு விலையை விட எதிர்பார்க்கும் வருவாய் அதிகமாக இருக்கும் வரை தான், ஒருவர் முதலீட்டை அதிகரித்துக்கொண்டே செல்வார் எப்பொழுது அளிப்பு விலையும் எதிர்பார்க்கும் வருவாயும் சமமாக இருக்குமோ அப்பொழுது முதலீட்டைக் கூட்டுவதை நிறுத்திக் கொள்வார்

**முதலின் இறுதி நிலை ஆக்கத் திறனை நிர்ணயிக்கும் காரணிகள்**

நடைமுறையில் ஓர் மூலதனச் சொத்திலிருந்து அதின் ஆயுட்காலத்தில் முதலீட்டாளர் ஒருவர் எதிர்பாக்கும் ஆதாய விகிதத்தையோ அல்லது மூலதனச் சொத்தின் ஆயுட் காலத்தையோ நிர்ணயிப்பது அவ்வளவு எளிதான காரியமன்று.

**குறுகிய கால காரணிகள்**

1. எதிர்கலத் தேவை

எதிர்காலத் தேவை கூடுமென எதிர்பார்க்கப்பட்டால் முதலின் இறுதி நிலை ஆக்கத்திறன் அதிகமாகவும், எதிர்காலத் தேவை குறையுமென எதிர்பார்க்கப்பட்டால், முதலின் இறுதி நிலை ஆக்கத்திறன் குறைவாகவும் இருக்கும்

2 உற்பத்திச் செலவு விலைகள்

எதிர்காலத்தில் உற்பத்திச் செலவுகள், விலைகள் கூடுமென எதிர்பார்க்கப்பட்டால், முதலின் இறுதி நிலை ஆக்கத் திறன் அதிகமாகவும், எதிர்காலத்தில் உற்பத்திச் செலவுகளும், விலைகளும் குறையுமென எதிர்பார்க்கப்பட்டால் முதலின் இறுதிநிலை ஆக்கத் திறன் குறைவாகவும் இருக்கும்

3 நுகரும் விருப்பம்

மக்களின் நுகரும் விருப்பம் அதிகரித்தால் முதலின் இறுதி நிலை ஆக்கத் திறன் அதிகரிக்கும் . மக்களின் நுகரும் விருப்பம் குறைந்தால் முதலின் இறுதி நிலை ஆக்கத் திறன் குறையும்

4 வருவாய் மாற்றங்கள்

மக்களின் வருவாய்கள் அதிகரித்தால் முதலின் இறுதி நிலை ஆக்கத் திறன் அதிகரிக்கும், மக்களின் வருவாய் குறைத்தால் முதலின் இறுதி நிலை ஆக்கத் திறன் குறையும்

குறிப்பு

5 வரி விதிப்பு

வரிகள் அதிகமாக்கப்பட்டால் முதலின் இறுதி நிலை ஆக்கத் திறன் குறையும் வரிகள் குறைக்கப்பட்டால் முதலின் இறுதி நிலை ஆக்கத் திறன் உயரும்

6 எதிர் கால வாணிபம் பற்றிய நம்பிக்கை

எதிர்காலத்தில் வாணிபம் செழித்தோங்கும் என வணிகர்கள் நம்பினால் முதலின் இறுதி நிலை ஆக்கத் திறன் உயரும் எதிர்காலத்தில் வாணிபம் மந்தமடையும் என நம்பினால் முதலின் இறுதி நிலை ஆக்கத் திறன் குறையும்

7 நடப்புக் கால எதிர்பார்ப்புக்கள்

நடப்பு காலத்தில் முதலீட்டாளர்களின் ஆதாயம் மிகுதியாக இருந்தால் எதிர்காலத்தில் முதலின் இறுதி நிலை ஆக்கத் திறன் கூடும், நடப்புக் காலத்தில் அவர்களது ஆதாயம் குறைவாக இருந்தால் எதிர்காலத்தில் முதலின் இறுதி நிலை ஆக்கத்திறன் குறையும்

8 அரசின் பொதுச் செலவு

அரசின் பொதுச் செலவு கூடினால் முதலின் இறுதி நிலை ஆக்கத் திறன் உயரும். அரசின் பொதுச் செலவு குறந்தால் முதலின் இறுதி நிலை ஆக்கத் திறன் குறையும்

9 நீர்மைத் தன்மையுள்ள சொத்துக்கள்

முதலீட்டாளர்களிடம் நீர்மைத் தன்மை மிகுந்துள்ள சொத்துக்கள் அதிகமக இருப்பீன் முதலில் இறுதிந்லை ஆக்கத்திறன் அதிகமாக இருக்கும் இல்லையெனில் முதலின் இறுதி நிலை ஆக்கத் திறன் குறைவாக இருக்கும்.

**நீண்ட காலக் காரணிகள்**

1 மக்கள் தொகைப்பெருக்க வீதம் அதிகமாக இருந்தால் முதலின் இறுதி நிலை ஆக்கத் திறன் அதிகமாக இருக்கும். மக்கள் தொகைப் பெருக்க வீதம் குறைவாக இருந்தால் முதலின் இறுதிநிலை ஆக்கத் திறன் குறைவாக இருக்கும்

2 புதிய பகுதிகளின் முன்னேற்றம்

நாட்டின் புதிய பகுதிகளில் முன்னேற்றம் தோன்றினால் போக்குவரத்து மின்சாரம் குடியிருப்பு தொழில்கள் வேளாண்மை போன்ற துறைகளின் வளர்ச்சிக்காக முதலீடு அதிகரிக்கப்படும்.

3 தொழில் நுட்ப முன்னேற்றம்

நாட்டில் தொழில் நுட்ப முன்னேற்றங்கள் ஏற்பட்டால் முதலின இறுதி நிலை ஆக்கத் திறன் அதிகரிக்கும்.

4 இருக்கின்ற மூலதனக் கருவிகளின் இருப்புஏற்கனவே இருக்கின்ற மூலதனக் கருவிகளின் இருப்பு , மக்கள்தொகை கூடுவதால் ஏற்படக் கூடிய தேவையை சமாளிக்கப் போதுமானவையாயின் புதிதாக முதலீடு அதிகரிக்காது. எச்சத்திறன் இல்லையெனில் புதிய முதலீடு அதிகரிக்கும்.

குறிப்பு

5 நடப்பி ,முதலீட்டு விகிதம்

நடப்பு முதலீடு அதிகமாக இருந்தால், புதிய முதலீடு அதிகரிக்காது நடப்பு முதலீடு குறைவாக இருந்தால் புதிய முதலீடு அதிகரிக்கும்.

மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறன் ( MEC) என்பது புதிய மூலதனச் சொத்தின் மூலம் எதிர்பார்க்கின்ற ஆதாய விகிதத்தைக் குறிக்கின்றது. அதாவது கூட்டுகின்ற மூலதனச் சொத்தினைப் பயன்படுத்துவதற்காகும் செலவுக்கு மேல் கிடைக்கின்ற எதிர்பார்க்கும் ஆதாய விகிதமாகும். முதலாவதாக , மூலதனத்தின் இறுதிநிலை அலகைக் கவனிக்க வேண்டும் . இரண்டாவதாக அதனுடைய செலவை அதனுடைய வருவாயிலிருந்து கழிக்க வேண்டும் அதாவது இறுதிநிலை ஆக்கத்திறன் இரு காரணிகளைச் சார்ந்திருக்கின்றது . முதலாவது , மூலதனத்தின் அளிப்புவிலை . இந்த இரு காரணிகளின் விகிதமே இறுதிநிலை ஆக்கத்திறனாகும்.

கீன்ஸின் கருத்துப்படி ஒரு மூலதனச் சொத்தின் எதிர்பார்க்கும் வாருவாய் ( Prospective Yield ) என்பது ஒரு சொத்திலிருந்து அதனுடைய வாழ்க்கைக் காலம் முழுவதும் எதிர்பார்க்கின்ற நிகர வருவாயாகும். ஒரு சொத்திலிருந்து கிடைக்கின்ற ஆண்டு வருவாய்களை R1> R2>R3....Rn என்று குறித்தால், இவற்றை எல்லாம் கூட்டி சொத்திலிருந்து மொத்தம் எதிர்பார்க்கும் வருவாயைக் கணிக்கலாம். ஒருவர் முதலீடு செய்கின்ற பொழுது அதன் வருவாயை மட்டுமல்ல , அதனைப் பெறுவதற்கு ஆகின்ற செலவையும் கணக்கிலெடுத்துக் கொள்வார். ஒரு முதலீட்டின் மூலம் எதிர்நோக்கும் வருவாய் அந்த முதலீட்டைப் பெறுவதற்குரிய செலவைவிட மிகுதியாக இருந்தால் தான் ஒருவர் முதலீட்டை மேற்கொள்வார், கூட்டுகின்ற முதலீட்டிலிருந்து அதனுடைய செலவுக்கு மேல் எதிர்பார்க்கின்ற ஆதாயத்தை அல்லது வருவாயையே கீன்ஸ் மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத் திறன் என்கின்றார்.

இறுதி நிலை ஆக்கத்திறனைத் தீர்மானிக்கும் காரணிகள்: தனியார் பொருளாதார அமைப்பில் மூலதனத்தின் இறுதிந்லை ஆக்கத்திறனைப் பல்வேறு வகையான காரணிகள் பாதிக்கின்றன. அவற்றை குறுகிய காலக் காரணிகள் , நீண்டகாலக் காரணிகள் என்று பகுத்தும் தொகுத்தும் கூறலாம்.

## 7.5 மொத்த இறுதிநிலை முதலீடு(MEI)

குறிப்பு

நிதிச் சந்தை, பணம், பத்திரங்கள் ˙ மற்றும் பிற வருவாய், வருவாய் சொத்துக்களை விற்பனை செய்யப்படும் சந்தையை குறிக்கிறது. இங்கே நாம் பணச் சந்தைக்கு நம்மை கட்டுப்படுதுகிறோம். பணம் சந்தையில் சமநிலையைப் பற்றிக் கொள்வதற்கு நாம் சந்தையின் இரண்டு பக்கங்களையும், விநியோகபக்கத்தையும் கோரிக்கை பக்கத்தையும் குறிக்க வேண்டும் பணம் (ஆ) மத்திய வங்கியால் தீர்மானிக்கப்படுகிறது. ஆகவே வட்டி விகிதம் மற்றும் உண்மையான வருவாயின் ஒரு பணமாக பணத்திற்கான கோரிக்கையை காட்டுகிறது . படத்தில் காட்டியபடி


Y என்பது வருமானம்


r என்பது வட்டிவீதம்

L=KPY.hrK, h>0 2 என்று பணத்திற்க்கான தேவையை காட்டுகிறது. KPY = பணத்திற்க்கான6 பரிவர்தனை முன்னெச்சரிக்கை கோரிக்கை HR . பணத்திற்க்கான கோரிக்கை , வட்டிவிகிதத்தின் செயல்பாடு என வரையறுக்கப்படுகிறது.

வட்டி விகிதம் அதிகமானால் நிலையான அளவு வருமானத்தில் குறைந்த அளவு பணம் தேவைப்படுகிறது. வருமானத்தில் அதிகரிப்பு பணத்திற்கான தேவை எழுப்புகிறது. இது பணம் கோரிக்கை அட்டவணையில் ஒரு வலதுசாரி மாற்றத்தால் காண்பிக்கப்படுகிறது.

குறிப்பு


வட்டி விகிதம் (r)
KΔY
L1=KPY1-hr
L2=KPY2-hr
O
(a)
L
X
M
r2
F1
E1
r2
O
Y1
Y2
Y
வருமானம் , வெளியீடு


இரண்டுச் சந்தைகளின் சமநிலையற்றத் தன்மை
ESG
EDG
ESM
ESM
வட்டி விகிதம்
r0
I
Ir
ESG
EDM
O
yd
y
வருமானம், வெளியீடு

## 7.6 உங்கள் முன்னேற்றத்தைச் சரிப்பார்க்க

குறிப்பு

முதலீடு இரண்டு வகைப்படும்:

1. சுயேச்சை முதலீடு


2) தூண்டப்பட்ட முதலீடு

**சுயேச்சை முதலீடு** என்பது வளர்ச்சிக் காரணங்களான மக்கள் தொகைப் பெருக்கம், புதிய கண்டுபிடிப்புக்கள் போன்றவற்றில் ஒன்று அல்லது ஒன்றுக்கு அதிகமான காரணிகளால் ஏற்படும் முதலீட்டை குறிக்கும். வளர்ந்துவரும் பொருளாதாரத்தில் சுயேச்சை முதலீடு மாறாவிகிதத்தில் அதிகரித்துவரும் சுயேச்சை முதலீட்டினால் தான் வேலைவாய்ப்பு, உற்பத்தி போன்றவை அதிகரிக்கின்றன. இது பெருக்கியைப் பொறுத்து அமைகிறது. ஆனால் சுயேச்சை முதலீட்டின் விளைவு குறுகிய காலத்திற்கே கிடைக்கிறது.

**தூண்டப்பட்ட முதலீடு** என்பது உற்பத்திப் பெருக்கத்தால் ஏற்படும் முதலீட்டை குறிக்கும், தூண்டப்பட்ட முதலீடு முடுக்கியைப் பொறுத்து அமைகிறது.


2) கூடுகின்ற மூலதனச் சொத்தின் ஒரு அலகிலிருந்து அதன் ஆயுட் காலம் முழுவதிலும் அதனைப் பயன்படுத்துவதற்கான செலவுக்கு மேல் அதன் முதலீட்டாளர் எதிர்பார்க்கின்ற ஆதாய விகிதமே முதலின் **இறுதி நிலை ஆக்கத் திறன்** எனப்படும்.


குறிப்பு




G$^1$
$r_2$
F$^1$
H$^1$
$L_2$
$r_1$
$L_1$
O
$\bar{M}$
L
Real Balances
(a)
M
E$^1$
$r_1$
M$^1$
வட்டி விகிதம்
$r_2$
L
L$^1$
O
L$^1$
$\bar{M_2}$
L
வருமான வெளியீடு
EDM
$r_1$
E
$r_2$
F
O
$\bar{M_1}$
பணத்தின் அளிப்பு
மற்றும் அளிப்பு தேவை
ESM


குறிப்பு


அங்காடிச் சந்தை மற்றும் பணச் சந்தையின் அளிப்பு
I
M
E
$r_0$
L
S
O
$Y_0$
வட்டி விகிதம்(r)
வருமானம், வெளியீடு



$I^1$
$I^1$
I
M
F
E
m(ΔI)
L
Δy
$S^1$
$S^2$
O
$y_0$
$y_1$
வட்டி விகிதம்
வருமானம் வெளியீடு

குறிப்பு


அங்காடிச் சந்தை மற்றும் பணச் சந்தையின் அளிப்பு
வட்டி விகிதம்(r)
$r_0$
I
M
E
L
S
O
$Y_0$
வருமானம், வெளியீடு


I¹
I¹
I
M
F
E
m(ΔI)
L
Δy
S¹
S²
வட்டி விகிதம்
O
$y_0$
$y_1$
வருமானம் வெளியீடு

குறிப்பு




துாண்டப்பட்ட முதலீடு சுயேச்சை முதலீடு என்பது வளர்ச்சிக் காரணங்களான மக்கள் தொகைப் பெருக்கம், புதிய கண்டுபிடிப்புக்கள் போன்றவற்றில் ஒன்று அல்லது ஒன்றுக்கு அதிகமான காரணிகளால் ஏற்படும் முதலீட்டை குறிக்கும். வளர்ந்துவரும் பொருளாதாரத்தில் சுயேச்சை முதலீடு மாறாவிகிதத்தில் அதிகரித்துவரும் சுயேச்சை முதலீட்டினால் தான் வேலைவாய்ப்பு, உற்பத்தி போன்றவை அதிகரிக்கின்றன. இது பெருக்கியைப் பொறுத்து அமைகிறது. ஆனால் சுயேச்சை முதலீட்டின் விளைவு குறுகிய காலத்திற்கே கிடைக்கிறது. துாண்டப்பட்ட முதலீடு என்பது உற்பத்திப் பெருக்கத்தால் ஏற்படும் முதலீட்டை குறிக்கும், துாண்டப்பட்ட முதலீடு முடுக்கியைப் பொறுத்து அமைகிறது.

குறிப்பு

# அலகு 8 கீன்ஸின் வேலைக் கோட்பாடு

8.1. நோக்கங்கள்
8.2. கீன்ஸின் மாதிரி வருமானம்
8.3. உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்க
8.4 கீன்ஸின் வேலைவாய்ப்பு தீர்மானம்
8.5. உங்கள் முன்னேற்றத்தைச் சரிப்பார்க்க

## 8.1 நோக்கங்கள்

1. கீன்ஸின் மாதிரி வருமானம பற்றி அறிய மற்றும்
2. கீன்ஸின் வேலைவாய்ப்பு தீர்மானம் பற்றி அறிந்து கொள்ளுதல்

**அறிமுகம்**

தொன்மைப் பொருளியலறிஞர்களின் கோட்பாட்டின்படி முழு நிறை வேலைவாய்ப்பு நிலையில் சமநிலை நிலவும். கீன்ஸின் கோட்பாட்டின் படி குறை வேலை வாய்ப்பு நிலையிலேயே சம நிலை நிலவும்.கீன்சின் வேலை கோட்பாடானது வருமானம் வேலை சிலைகனை இவைகனை திருப்திகரமாக வினக்கி பொருனியலில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியது. எனவே கீன்சின் பொருனாதாரத்தை **கீன்சின் புரட்சி (Keynesian Revolution)** என்கிறோம் நுண்ணியல் என்ற பழைய பாதையிலிருந்து விலகி பேரியல் என்ற புதுப்பாதையை அமைத்தார். எனவே கீன்சின் பொருனாதாரும் புதுப்பொருனாதாரும் (New Economics) என அழைக்கபடுகிறது.

**கீன்ஸ கோட்பாட்டின் எடுகோன்கள்**

**1 நிறைவுப்போட்டி.**

நிறைவுப்போட்டிநிலவும் போது தான் மொத்த தேவை மொத்த அனிப்ர் இவைகனில் சமநிலை ஏற்படும்

2. **வேலைக்குறைவு**

நீண்ட காலத்திலும் வேலைக்குறைவு நிலவுகிறது்

3. **மூடிய போருனாதாரம்**

வேனிநாட்டு வணிக தொடர்பில்லை.

4. சுகர்வு சார்பில் மாற்றமில்லை

5. குறுகிய கால ஆய்வு.

**கீன்ஸின் வேலை கோட்பாடு**

கீன்ஸின் பொது கோட்பாடானது ஒரு நாட்டின் வேலை நிலை உற்பத்தி வருமானம் ஆகியவற்றை நிர்ணயிக்கும் காருணிகனை வினக்குகறது.

வேலை வாய்பானது தொகு தேவையை பொருத்தது. தொகு தேவையானது முதலீட்டை பொருத்தது.முதலீடானத மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கதிறனை பொருத்தாகும்


குறிப்பு

உறுதியுள்ள தேவை = நாட்டு உற்பத்தி = நாட்டு

வருமானம் = மொத்தசெலவு = நுகர்ச்சி = முதலீட்டுச்செலவு

அதாவது

$$ED = O = Y = C + I$$




வருமானம் அதிகரிக்கின்றபோது, வருமானத்தில் நுகர்வுக்காக செலவிடுவது குறையும், முழுநிலை வருமானத்திற்கும், நுகர்வுக்கும் உள்ள தொடர்பு சரிசமளீத அளவற்றது ( Non Proportionate )

கீன்சின் முழுநிலை வருமான கோட்பாடு உணர்த்தும் முக்கிய கருத்துக்கள் பின்வருமாறு

நுகர்வுச் செலவானது நடப்பு முழு வருமானத்தைப் பொருத்ததாகும் முழு வருமானத்திற்கும், நுகர்வுக்கும் உள்ள தொடர்பு நேரடியானதாகும்.

நுகர்வுச் செலவிற்கும், வருமானத்திற்கும் சரிசமவிகித தொடர்பு இல்லை வருவாய் அதிகரிக்கும்போது. குறைந்த அளவு வருமான விகிதமே நுகரப்படுகின்றது.

வருமானம் அதிகரிக்கும்போது சராசரி நுகர்வு நாட்டமானது (APC) குறைகின்றது. அதே சமயம் இறுதிநிலை நுகர்வு நாட்டமானது (MPC) சராசரி நுகர்வு நாட்டத்தைவிட குறைவாக இருக்கும் ( MPC < APC).

குறிப்பு

வருமானம் அதிகரிக்கும்போது சராசரி நுகர்வு நாட்டம் குறைவதற்கு காரணம் வருமானத்தில் சேமிக்கும் விகிதம் அதிகரிக்கின்றது.

ஏழைக் குடும்பங்களைவிட பணக்காரக் குடும்பங்கள் வருமானத்தில் நுகர்வுக்குச் செலவிடக்கூடிய விகிதம் குறைவாக இருக்கும். எனவே பணக்காரக் குடும்பங்கள் ஏழை குடும்பங்களைவிட வருவாயில் அதிக விகிதத்தை சேமிக்கின்றனர்.

கீன்சின் வருமான வேலைக்கோட்பாட்டில் சராசரி நுகர்வு நாட்டம் மற்றும் இறுதிநிலை நுகர்வுநாட்டம் குறைகிறது என்ற எடுகோள் முக்கிய பங்கு வகிக்கின்றது. இதிலிருந்து வருவாய் அதிகரிக்கும்போது நாட்டு வருவாயில் அதிக விகிதமானது சேமிக்கப்படும் என தெரிகிறது. முழுவேலை நிலையை அடையவும், அதனை தக்க வைக்கவும் நாட்டு வருமானத்தில் அதிகரித்த பகுதியானது முதலீடு செய்யப்படவேண்டும்.

**சார்பான வருமானக் கோட்பாடு :**

சார்பான வருமானக் கருதுகோள் கருத்தை முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர்கள் டோரதி பிரதி, ரோஸ் பிரைடுமேன் ஆவார்கள் இக்கருதுகோளின்படி

“ நுகர்வுச் செலவானது முழுநிலை வருமானத்தைச் சார்ந்ததல்ல. மாறாக சார்பான வருமானத்தைப் பொருத்தமாகும்” இக்கருத்தை ஜேம்ஸ் டூசென்பெரி தனது நூலான “ வருமானம், சேமிப்பு மற்றும் நுகர்வோர் நடத்தைக் கோட்பாடு” என்பதில் புள்ளி விபரங்கள் மற்றும் உளவியல் அடிப்படையில் விளக்கியுள்ளார்.

தனிநபர்களின் நுகர்வு நடவடிக்கையானது தன்னிச்சையானதல்ல பிறருடைய நுகர்வு நடவடிக்கையுடன் தொடர்புடையது ( வெளிக்காட்டும் விளைவு)

நுகர்வுத் தொடர்புகள் ( Consumption Relations) காலப்போக்கில் மாறக்கூடியவை அல்ல ( ரேட்சீட் விளைவு)

**முழு நிறை வேலை வாய்ப்பு-**

நாட்டில் முழு நிறை வேலை வாய்ப்பு நிலை இயல்பாகவே நிலவும். பொருளாதாரத்தில் வேலையின்மை நிலை தோன்றாது. அப்படித் தோன்றினாலும். அது தற்காலிகமானதாகவெ இருக்கும். இது தொன்மைப் பொருளியலறிஞர்களின் கருத்து

நாட்டில் குறை வேலை வாய்ப்பு நிலைதான் இயல்பாக நிலவும். முழுநிறை வேலை வாய்ப்பு நிலை எப்பொழுதாவது தான் தோன்றும் இது கீன்ஸின் கருத்து

## 8.2 கீன்ஸின் மாதிரி வருமானம்

குறிப்பு

கீன்ஸின் கருத்து படி மக்களிக் வருமானம் அதிகரிக்கும் போது அவரிகளின் நுகர்வும் அதிகரிககின்றது. ஆனால் வருமானம அதிகரித்த அதே விகிதத்தில் அல்ல. இக் கோட்பாட்டை விரிவுபடுத்தியவர்கள் ஜேம்ஸ் டாபின் ஆரிதர் ஸ்மித் ஆகியோர் ஆவர்

முழு வருவாய் அனுமானதிதின் அடுப்படைக் கருத்து நுகர்வு செலவானது முழு வருமானதிதை சார்ந்துள்ளது.

### சந்தை நிலைகள்

தொன்மைப் பொருளியலறிஞர்களின் கோட்பாடு சே-யின் அங்காடி விதியை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டது நாட்டில் மிகை உற்பத்தி நிலையோ அல்லது குறை வேலையின்மை நிலையோ நிலவக் கூடும் என்னும் கருத்தினை அவர்கள் நிராகரித்து விட்டனர்.

கீன்ஸின் கோட்பாடு திறனுள்ள தேவை என்னும் கருத்தினை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டது. அவர் கருத்துப்படி நாட்டில் நிலவும் வேலை வாய்ப்பு நிலை, உற்பத்தி அளவு, நாட்டின் திறனுள்ள தேவை அளவைச் சார்ந்து இருக்கும். குறை வேலைவாய்ப்புக்கு திறனுள்ள தேவையில் ஏற்படும் பற்றாக்குறை தான் காரணமென்பது கீன்ஸின் வாதமாகும்.

#### அரசு கொள்கையின் தன்மை

அரசு தலையிடாக் கொள்கையைப் பின்பற்ற வேண்டும் பொருளாதாரம் தடையற்ற பொருளாதாரமாக இருக்க வேண்டும். அரசுத் தலையீடு இல்லாமலேயே பொருளாதார நடவடிக்கைகளிலுள்ள ஏற்றத் தாழ்வுகள் சமன் செய்யப்படுகின்றன. இது தொன்மைப் பொருளியலறிஞர்களின் கருத்து.

#### கூலி குறைப்பும் வேலையின்மை நிலையும்

கூலியைக் குறைப்பதால் விருப்பமற்ற வேலையின்மையைக் குறைத்து. வேலை வாய்ப்பைக் கூட்டலமென்று தொன்மைப் பொருளியலறிஞர்கள் நம்பினர்.

ஆனால் நெகிழ்ச்சியுள்ள கூலிக் கொள்கையை விட நெகிழ்ச்சியுள்ள பணக் கொள்கையால் மட்டுமே திறனுள்ள தேவையை அதிகரித்து வேலைவாய்ப்பை அதிகரிக்க முடியுமென்று கீன்ஸ் நம்புகிறார்

குறிப்பு

**சேமிப்பு பற்றிய கண்ணோட்டம்**

சேமிப்பது ஓர் நற்பண்பாகும். சிக்கனமாக இருத்தல் நாட்டுக்கு இன்றியமையாதது ஆகும். சேமிப்பும் சிக்கனமும் அதிகரித்தால், மூலதன ஆக்கம் பெருகும் பொருளாதார முன்னேற்றம் ஏற்படும். இது தொன்மைப் பொருளியலறிஞர்களின் கருத்து. தனி நபர் சேமிப்பு நன்மையானதாக இருப்பினும், பொது சேமிப்பு பொருளாதாரத்திற்கு பாதகம் செய்வதாக இருக்கிறது. சேமிப்பாளர்களே நாட்டின் எதிரிகளாகும் தொகு சேமிப்புக் கூடுவதால், நாட்டின் வேலை வாய்ப்புக் குறையும் வேலையின்மை அதிகரிக்கும்.

**சேமிப்பு - முதலீட்டுச் சமநிலை**

சேமிப்பு, முதலீடு இரண்டுமே வட்டி விகிதத்தைச் சார்ந்திருக்கின்றன. வட்டி, விகிதத்தில் ஏற்படும் மாறுதல்களால் சேமிப்பு முதலீட்டுச் சமநிலை தோன்றுகிறது . இது தொன்மைப் பொருளியலறிஞர்களின் கருத்து

சேமிப்பு முதலீடு இரண்டுமே வருமானத்தைச் சார்ந்திருக்கின்றன. வருமானத்தில் ஏற்படும் மாறுதல்களால் சேமிப்பு முதலீட்டுச் சமநிலை தோன்றுகிறது.

**சேமிப்பு முதலீட்டு நிகழ்ச்சிகள்**

சேமிப்பே முதலீடு ஆகும். சேமிப்பு ஒவ்வொன்றும் முதலீடாகும். இதனால் சேமிப்பும் முதலீடும் வெவ்வேறான நிகழ்ச்சிகளின்றி, ஒரே மாதிரியான நிகழ்ச்சிகள் ஆகும் .இது தொன்மைப் பொருளியலறிஞர்களின் கருத்து.

சேமிப்பாளர்கள்,முதலீட்டாளர்கள்இவர்கள் வெவ்வேறானவர்களே. இவர்களின் நோக்கங்களும் முடிவுகளும் வெவ்வேறானவையே. எல்லா சேமிப்புகளும் முதலீடாக மாறுவதில்லை எனவே சேமிப்பு - முதலீட்டுச் சமநிலையின்மையின் காரணமாக நாட்டில் முழு நிறை வேலையின்மை நிலையை அடைய முடியாது. எனவே, சேமிப்பு முதலீடு இவை இரண்டும் வெவ்வேரான நிகழ்ச்சிகள் தான்

9 **வட்டி வீதம் பற்றிய கண்ணோட்டம்**

வட்டி என்பது காத்டிருப்பதற்காக, காலம் தாழ்த்துவதற்காக , கால விருப்பத்திற்காக அளிக்கப்படும் சன்மானம் ஆகும். சேமிப்பும் முதலீடும் சமமாகும் நிலையில் வட்டிவீதம் நிர்ணயமாகும். இது தொன்மைப் பொருளியலறிஞர்களின் கருத்து ஆகும்.

வட்டி என்பது நீர்மை விருப்பத்தை விட்டுப் பிரிவதற்காகக் கொடுக்கப்படும் சன்மானமே ஆகும். நீர்மை விருப்பமும் பண அளிப்பும் சமமாக இருக்கும் பொழுது, வட்டி வீதம் நிர்ணயிக்கப்படுகிறது.

## 8.3. உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்க

1.கீன்ஸின் மாதிரி வருமானம பற்றி கூறுக.∴

2. சேமிப்பு - முதலீட்டுச் சமநிலை எப்போது தோன்றும்.∴

குறிப்பு

**வாணிபச் சுழல்**

தொன்மைப் பொருளியலறிஞர்கள் வாணிபச் செழிப்பு, வாணிப மந்தம் என்று பொதுவாகக் கூறினார்களே தவிர வாணிபச் சுழல்களுக்காக காரணங்களையோ, திருப்பு முனைகள் ஏன் ஏற்படுகின்றன என்றோ முழுமையாக விளக்கத் தவறிவிட்டனர்.

கீன்ஸ் வாணிபச் சுழல்களின் தன்மைகள் பற்றி பகுத்தாய்கிறார். மேலும் திருப்பு முனைகள் தோன்றுவதற்கான காரணங்களையும் ஆராய்ந்து, வாணிபச் சுழலைக் கட்டுப்படுத்த அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் அழகாக விளக்குகிறார்

**மதிப்புக் கோட்பாடும் பணக் கோட்பாடும்**

தொன்மைப் பொருளியறிஞர்கள் பணக் கோட்பாட்டையுன் , மதிப்புக் கோட்பாட்டையும் வேறுபடுத்தியே வைத்திருந்தனர்.

ஆனால் கீன்ஸ் பணக் கோட்பாட்டையும் மதிப்புக்கோட்பாட்டையும் இணைத்துவிட்டர். பணக்கோட்பாடு இன்று பொது பொருளாதாரக் கோட்பாட்டின் பிரிக்க முடியாத ஓர் பகுதி என மக்களை உணரச் செய்துள்ளார்.

**பண அளிப்பும் விலை மட்டமும்:**

பண அளிப்பு அதிகரிக்கும் ஒவ்வொரு நிலையிலும் விலை உயரும் எனத் தொன்மைப் பொருளியலறிஞர்கள் கருதினர் . பொருளாதாரச் சூழ்நிலைகளுக்கேற்ப , வரவு - செலவுத் திட்டத்தை திட்டமிட வேண்டும். பணவீக்கக் காலத்தில் எச்ச வரவு - செலவுத் திட்டத்தையும், பணவாட்டக் காலத்தில் பற்றாக்குறை வரவு செலவுத் திட்டத்தையும் அரசு பின்பற்றவேண்டும்.

**பணத்தின் பணி**

பணம் நடுநிலையானது, அது மாற்றுரிமப் பணியை மட்டுமே ஆற்றுகின்றது. அது மதிப்பு நிலைக்களானாக செயல்படுவதில்லை. பணப்பொருட்களை கைமாற்றுவதற்கு மட்டுமே துணை செய்கிறது. பணம் பேர நோக்கத்தை மட்டுமே நிறைவு செய்கிறது. இது தொன்மைப் பொருளியலறிஞர்கள் பணம் பற்றி வைத்திருந்த கண்ணோட்டமாகும்.பணம் மாற்றுரிமைப் பணியை செய்வதோடு மட்டுமின்றி மதிப்பு நிலைகளானாகவும் பணி செய்கிறது. பேரா நோக்கதையும் முன்னெச்சரிக்கை நோக்கத்தையும்,

ஊக நோக்கத்தையும் நிறைவு செய்கிறது. இது கீன்ஸ் பணம் பற்றி வைத்திருக்க கண்ணோட்டமாகும்.

## 8.4 கீன்ஸின் வேலைவாய்ப்பு தீர்மானம

குறிப்பு

**பொருளாதாரக் கோட்பாடுகளின் தன்மை**

தொன்மைப் பொருளியலறிஞர்கள் இயங்கா நுண்ணினப் பொருளியல் சார்ந்த கோட்பாடுகளையே உருவாக்கினார். ஆனால் கீன்ஸ் இயங்கு பேரியல் பொருளாதாரக் கோட்பாடுகளை உருவாக்கினார்

**முதலாளித்துவம்**

தொன்மைப் பொருளியலறிஞர்கள் நாட்டில் தடையற்ற முதாளித்துவப் பொருளாதாரம் இயங்க வேண்டுமென்று கருதினர். அதனுடைய குறிபாடுகளை அவர்களால் சுட்டிக் காட்ட முடியவில்லை. பெரு மந்தத்தின் போது வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மீட்க அவர்களால் வழி கூற இயலவில்லைகீன்ஸ் முதலாளித்துவத்தை அப்படியே ஏற்றுக் கொள்ளாமல் அரசு தலையீடுகளால் பொருளாதாரம் கட்டுக் காக்கப்பட வேண்டுமென்று கருதினார்

**பயன்**

தொன்மைப் பொருளியறினர்களின் கோட்பாடு முழு நிறை வேலை வாய்ப்பு நிலைக்கு மட்டுமே பொருந்தும் . கீன்ஸ்ன் கோட்பாடு பொருளாதாரத்தின் எல்லாச் சூழ்நிலைகளுக்கும் பொருந்தும்.

**காலம்** தொன்மைப் பொருளியல் கோட்பாடுகள் நீண்ட காலத்திற்குப் பொருந்தக் கூடியனவாகத் திகழ்ந்தன.

## 8.6 உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்க:

1. கீன்ஸின் கருத்து படி மக்களிக் வருமானம் அதிகரிக்கும் போது அவரிகளின் நுகர்வும் அதிகரிககின்றது. ஆனால் வருமானம அதிகரித்த அதே சேமிப்பு, முதலீடு இரண்டுமே வட்டி விகிதத்தைச் சார்ந்திருக்கின்றன. வட்டி, விகிதத்தில் ஏற்படும் மாறுதல்களால் சேமிப்பு முதலீட்டுச் சமநிலை தோன்றுகிறது விகிதத்தில் அல்ல.

2. சேமிப்பு, முதலீடு இரண்டுமே வட்டி விகிதத்தைச் சார்ந்திருக்கின்றன. வட்டி, விகிதத்தில் ஏற்படும் மாறுதல்களால் சேமிப்பு முதலீட்டுச் சமநிலை தோன்றுகிறது

# அலகு-9 பெருக்கி ( Multiplier )

9.1 நோக்கங்கள்
9.2. பெருக்கி
9.3 ஊகங்கள் கசிவு
9.4. உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்க
9.5. நிலையான மற்றும் டைனமிக் பெருக்கி முக்கியத்துவம்
9.6. உங்கள் முன்னேற்றத்தைச் சரிப்பார்க்க

குறிப்பு

## 9.1 நோக்கங்கள்

1. பெருக்கி ஊகங்கள் கசிவு பற்றி அறிந்து கொள்ள.
2. நிலையான மற்றும் டைனமிக்பெருக்கி அதன் முக்கியத்துவம் பற்றி தெளிவு பெற.

அறிமுகம்

" பெருக்கி" என்னும் சொல்லை முதன் முதலாக சு.கு.கான் என்னும் அறிஞர் தான் பொருளாதாரத்தில் புகுத்தினார். 1931-ம் ஆண்டில் முதலீட்டின் அதிகரிப்பால் வேலை வாய்ப்பில் ஏற்படும் விளைவை ஆராய்வதற்காக வேலை வாய்ப்புப் பெருக்கி ( Employment multiplier ) என்னும் கருத்தினை அறிமுகம் செய்தார். இக்கருத்தினையே மூலமாக எடுத்துக்கொண்டு அதை வளப்படுத்திமாற்றி முதலீட்டுப் பெருக்கி ( investment multiplier) அல்லது வருவாய்ப் பெருக்கி ( Income multiplier ) என்னும் கருத்தினை கீன்ஸ் 1936-ல் அறிமுகப்படுத்தினார்.

## 9.2 பெருக்கி-பொருள்

முதலீட்டில் ஏற்படும் கூடுதலால் வேலை வாய்ப்பு உற்பத்தி மற்றும் வருமானம் இவற்றில் எந்த அளவு இறுதியாக கூடுதல் ஏற்படுகிறது என்பதைப் பற்றி ஆராயப் பயன்படுவது பெருக்கி என்னும் கருத்தாகும்.

இக்கருத்தினைப் பயன்படுத்தி வருவாய்ப் பெருக்கத்தையும் , வாணிபச் சுழலையும் ஆராய முடியும்.முதன் முதலில் ஏற்படும் குறிப்பிட்ட முதலீட்டுக் கூடுதலான வேலை வாய்ப்பு, உற்பத்தி,வருவாய் இவற்றில் இறுதியாகக் கூடுதல் ஏற்படுவது இயற்கையே. முதன் முதலில் ஏற்பட்ட முதலீட்டுக் கூடுதலுக்கும் வேலை வாய்ப்பு உற்பத்தி வருமானம் இவற்றில் ஏதேனும் ஒன்றில் ஏற்படும் கூடுதலுக்குமுள்ள விகிதமே பெருக்கி என்று வரையறை செய்கிறோம்.

### பெருக்கி -- இலக்கணம்

" பெருக்கி என்பது ஓர் எண்ணிக்கையே ஆகும். அதனைக் கொண்டு முதலீட்டு மாற்றத்தைப் பெருக்கினால் வருவாயின்

குறிப்பு

இறுதி மாற்றம் என்னவாக இருக்கும் என்பதைக் காணலாம்” என்று சாமுவேல்சன் கூறுகிறார்.

பெருக்கியை **ஹேன்சன்** “ கூடுகின்ற வருவாயுடன் தொடர்புடைய ஓர் கெழுவே முதலீட்டுப் பெருக்கி எனப்படும் “ என்று வரையறுக்கிறார்.

**பெருக்கி,**

**இறுதி நிலை நுகர்வு விருப்பம், இறுதி நிலை சேமிப்பு விருப்பம்:**

முதலில் கூடுகின்ற முதலீடு 50 கோடி ரூபாய் என்க . இதனால் நாட்டு மக்களின் வருவாய் 50 கோடி ரூபாயாக அதிகரிக்கிறது. மக்களின் இறுதி நிலை நுகர்வு விருப்பம் 0.5 ஆக இருக்குமானால், அதிகமாகக் கிடைத்த வருவாயில் 25 கோடி ரூபாயை மக்கள் நுகர்வுக்காகச் செலவிடுகின்றனர். இவ்வாறு அதிகரித்த செலவு மீண்டும் மக்கள் வருவாஅயை 25 கோடி ரூபாயாக அதிகரிக்கிறது. மக்களின் இறுதி நிலை நுகர்வு விருப்பம் 0.5 என்பதால், மீண்டும் 12.5 கோடி ரூபாயை மக்கள் நுகர்வுக்காகச் செலவிடுகின்றனர். இந்த அளவிற்கு முதலீடு, வருவாய் என்று படிப்படியாக அதிகரிக்கும். 50 கோடி ரூபாய் முதலீடு அதைகரிப்பால் மொத்த வருவாய் அதிகரிப்பு ரூ 200 கோடி ரூபாய் என்றால், பெருக்கி 4 ஆகும்.

பெருக்கியின் உண்மையான அளவு மக்களின் இறுதி நிலைநுகர்வு விருப்பத்தைப் பொறுத்து இருக்கிறது, பெருக்கி, இறுதி நிலை நுகர்வு விருப்பம், இறுதி நிலை சேமிப்பு விருப்பம் ஆகியவற்றினிடையே திட்டவட்டமான தொடர்புகள் நிலவுகின்றன.

1. இறுதி நிலை நுகர்வு விருப்பமும், பெருக்கியின் அளவும் நேர் உறவில் தொடர்புள்ளவையாகும். இறுதி நிலை நுகர்வு விருப்பம் அதிகரித்தால், பெருக்கியின் மதிப்பும் உயரும். இறுதி நிலை நுகர்வு விருப்பம் குறைந்தால் பெருக்கியின் மதிப்பும் குறையும்.

2. இறுதி நிலை நுகர்வு விருப்பத்தைக் கொண்டு குறிப்பிட்ட அளவு முதலீடு கூடுகின்ற பொழுது எவ்வளவு வருவாய் கூடுமென்பதைக் கழிக்கலாம்

3.இறுதிநிலை சேமிப்பு விருப்பமும், பெருக்கியின் அளவும் எதிர்மறை உறவில் தொடர்புள்ளவையாகும் அதாவது இறுதிநிலைச் சேமிப்பு விருப்பம் மிகுதியாக இருந்தால் பெருக்கியின் அளவு குறைவாகவும், இறுதி நிலைச் சேமிப்பு விருப்பம் குறைவக இருந்தால் பெருக்கியின் அளவு அதிகமாகவும் இருக்கும்.

4.பெருக்கியை 1-லிருந்து இறுதி நிலை நுகர்வு விருப்பத்தைக் கழித்தால் கிடைக்கும் தலைகீழ் விகிதம் ஆகும்

5. பெருக்கியை இறுதி நிலைச் சேமிப்பு விருப்பத்தின் பின்னத்தை முழு எண் ஆக்கும் பெருக்கெண் என்றும் கூறலாம்.

குறிப்பு

6. பெருக்கியின் அளவு 0க்கும் 1க்கும் இடையில் மாறும் ஓர் எண்ணாகும். இறுதி நிலை நுகர்வு விருப்பம் பூச்சியமாக இருக்கும் போது, பெருக்கியின் மதிப்பு 1 ஆகும். இறுதி நிலை நுகர்வு விருப்பம் 1 ஆக இருக்கும் பொது, பெருக்கின் மதிப்பு அளவற்றதாக இருக்கும்.


பெருக்கி விளைவு வெற்றிகரமாகச் செயல்பட கீழ்க்கண்ட நிபந்தனைகள் அவசியமாகும்.பெருக்கி செயல்பட வேண்டுமெனில் தானாகத் தோன்றும் முதலீட்டில் மாற்றம் இருக்கலாம் ஆனால் தூண்டப்படும் முதலீட்டில் மாற்றம் இருத்தல் கூடாது.இறுதி நிலை நுகர்வு விருப்பத்தில் எவ்வித மாற்றமும் இருத்தல் கூடாதுநுகர்வு என்பது வருமானத்தினைப் பொருத்து அமைகிறதுபெருக்கிச் செயல்பட கால இடைவெளி இருத்தல் வேண்டும்மொத்த முதலீட்டின் அளவு அதிகரிப்பதாக இருத்தல் வேண்டும்

விளைவுத் தேவைக்கு ஏற்ப நுகர்வுப் பொருட்கள் கிடைப்பதாக இருத்தல் வேண்டும்நாட்டின் வருமான நிலைக்கு ஏற்ப நுகர்வுப் பொருட்களினை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் அதிகமாகத் தோன்றி தேவையினை ஈடுகட்டுவதாக அமைய வேண்டும்.நாட்டின் வருமான நிலைக்கு ஏற்ப நுகர்வுப் பொருட்களினை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் அதிகமாகத் தோன்றி தேவையினை ஈடுகட்டுவதாக அமைய வேண்டும்.பெருக்கி நடைபெற அந்நாட்டின் பொருளாதார அமைப்புமுறை தொழிற்பொருளாதாரமாக இருத்தல் அவசியமாகும்.

நாட்டில் மூல வளங்கள் அனைத்தும் உள் நாட்டிலேயே கிடைப்பதாக இருத்தல் அவசியமாகும்.விலைகளில் பொதுவாக எவ்வித மாற்றமும் இருத்தல் கூடாது.நாட்டில் உள்ள பொருளாதார அமைப்பு முறை முழுவேலை வாய்ப்பு நிலைக்குக் குறைவானதாக இருக்க வேண்டும்.பெருக்கி முழுமையாகச் செயல்பட நாட்டில் மூடப்பெற்ற பொருளாதார அமைப்பு முறை இருக்க வேண்டும்.உற்பத்திக்குத் தேவையான பிற சாதனங்கள் எளிதாக தேவையான அளவில் கிடைக்க வேண்டும்.

குறிப்பு

**பெருக்கி செயல்படும் விதம்**




**பெருக்கி செயல்படுவதில் நடைமுறையில் சில சிக்கல்கள் உள்ளன**

1. உற்பத்தியின் திறமை : நாட்டின் தேவை அளவிற்கு ஏற்றார் போல் நுகர்வுப் பொருட்களின் உற்பத்தி அளவை அதிகரிக்க இயலாது. மக்கள் தங்கள் வருமானம் முழுவதையும் நுகர்வுக்காகச் செலவு செய்வார்கள் என்பதனைத் திட்டவட்டமாக கூற இயலாது. ஆகவே இறுதி நிலை நுகர்வு விருப்பம் குறைய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

2. ஒழுங்கு முதலீடு : பெருக்கின் மதிப்பு முதலீட்டின் அளவு தொடர்ந்து நிலையாக ஒழுங்காக அடிகரிப்பதனைப் பொருத்து அமைகிறது. ஒரு நாட்டினுடைய பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஏற்ப முதலீடு தொடர்ந்து அதிகரிப்பதாக இருத்தல் வேண்டும்.

3 கால இடைவெளி : முதலீட்டின் அதிகரிப்பிற்கும், வருமானம் அதிகரிப்பிற்கும் உள்ள கால இடைவெளி ஒழுங்கானதாக இருத்தல் வேண்டும், இல்லையெனில் பெருக்கி சீராகச் செயல்படாது.

குறை வேலை வாய்ப்பு நிலை: முழு வேலைவாய்ப்பு நிலை ஏற்படும் வரை பெருக்கி செயல்படும். அதன்பின்னர் பெருக்கி செயல்படாது.

4. குறை வேலை வாய்ப்பு நிலை: முழு வேலை வாய்ப்பு நிலை ஏற்படும் வரை பெருக்கி செயல்படும் அதன் பின்னர் பெருக்கி செயல்படாது.

5. வருவாய்ப் பகிர்வு: வருவாய்ப் பகிர்வு ஒன்று போல இல்லாத நேரங்களில், பெருக்கி முழுமையாகச் செயல்படாது. பல நேரங்களில் வருவாய்ப் பகிர்வு ஒன்று போல இருப்பதில்லை.

குறிப்பு

6. வாணிபச் சேமிப்புக்கள்: வணிக நிறுவனங்கள் தாங்கள் ஈட்டும் மொத்த இலாபத்தைப் பங்குதாரர்களிடம் பகிர்ந்தளிக்காமல், பெரும் பகுதிஅயை எதிர்கால முதலீட்டளவைக் கூட்டுவதற்காக சேமித்து வைக்கின்றன. இதனால் பெருக்கியின் செயல்பாடு வலுவிழக்கின்றது.

7. இறுதி நிலை நுகர்வைக் கணித்தல்: நாட்டின் கடந்த கால இறுதி நிலை நுகர்வு விருப்பத்தைக் கணிப்பது எளிது. ஆனால் நடப்புக் காலத்தில் இறுதி நிலை நுகர்வு விருப்பத்தைக் கணித்தல் இயலாது.

8. நுகர்வுச் செலவு மாறுதல்: வருவாய்க்கும் செலவுக்குமுள்ள தொடர்பு மாறாமலிருந்தால் பெருக்கி சீராகச்செயல்படும். ஆனால் வருவாய்க்கும் செலவுக்குமுள்ள தொடர்புகள் அடிக்கடி மாறுகின்றன , அதனால் பெருக்கியின் செயல்பாடு பாதிக்கப்படுகின்றது.

9. பெருக்கியின் பின்னோக்கிய விளைவு : மக்களின் வருவாய் குறைகின்றபோது சிலர் வருவாய் குறைவு தற்காலிகமானதே எனக் கருதி நுகர்வுச் செலவை குறைக மாட்டார்கள் இச் சூழ்நிலைகளில் பெருக்கியின் பின்னோக்கிய விளைவு மிகுதியாக இருக்காது.

## 9.3 பெருக்கியின் கசிவுகள்

வருவாய் உற்பத்தி முறை ஓர் எளிதான தொடர்ச்சியான முறையானது . பெருக்கியின் செயல்பாட்டில் சில கசிவுகள் உண்டாகின்றன. சேமிக்கப்படக் கூடிய வருவாயின் பகுதிகளில் சில கசிவுகள் தோன்றுகின்றன. இக் கசிவுகளால் வருமானம் அதிகரிப்பதில்லை. இத்தகைய கசிவுகளில் சிலவற்றை காண்போம்

வருவாய் உற்பத்தி முறையில் தோன்றக்கூடிய முக்கியமான கசிவு சேமிப்பு ஆகும். உண்மையைக் கூறினால், சேமிப்பு முழுமையுமே ஓர் கசிவு தான், மக்களின் சேமிப்பு விருப்பு அதிகமாக இருந்தால், பெருக்கியின் விளைவு குறைவாகவும், சேமிப்பு விருப்பம் குறைவாக இருந்தால், பெருக்கியின் விளைவு அதிகமாகவும் இருக்கும். நாட்டில் சேமிப்பே இல்லையென்றால், பெருக்கின் விளைவு முழுமையானதாக இருக்கும். காலப்போக்கில் நாட்டில் முழு நிறைவேலை வாய்ப்பு நிலையை அடையமுடியும்.

கடன் தீர்வு :

மக்கள் தங்களுக்கு அதிகமாகக் கிடைத்த வருவாயின் ஒரு பகுதியை பயன்படுத்தாமல், கடந்த காலக் கடன்களைத் தீர்க்கப் பயன்படுத்தலாம், அந்த அளவிற்கு வருவாய் ஓட்டம் குறைய பெருக்கியின் ஆற்றல் குறையும்.

குறிப்பு

இறக்குமதி: புதிய வருவாயின் ஒரு பகுதி இறக்குமதிப் பண்டங்கள் மீது செலவிடப்படுமாயின் அந்த அளவுக்கு வருவாய் ஓட்டம் குறைய, பெருக்கியின் ஆற்றல் குறையும்

**ரொக்க விருப்பம்** : கூடுகின்ற வருவாயில் பெரும் பகுதியை மக்கள் ரொக்கமாக வைத்திருக்க விரும்பலாம். இது வருமான ஓட்டத்தில் ஓர் கசிவாகும் .அந்த அளவுக்கு பெருக்கியின் செயல்பாடு தடைப்படுகின்றது.

**பண வீக்கம்** : நாட்டில் பண வீக்கம் தோன்றி, விலைகள் உயருமானால், கூடிய வருவாய், விலை ஏற்றத்தினால் ஈடுபடுத்தப்பட்டு, உண்மையான வருவாயும் நுகர்வும் குறையும்

பழைய பங்குகளையும் பத்திரங்களையும் வாங்குதல்:

கூடிய வருவாயின் ஒரு பகுதியை நுகர்வுக்குப் பயன்படுத்தாமல், பழைய பங்குகளையும் பத்திரங்களையும் வாங்குவதற்காகப் பயன்படுத்தினால், அந்த அளவுக்கு வருமான ஓட்டம் குறைய பெருக்கியின் திறன் பாதிக்கப்படும்.

**காப்பு நிதி** : நிறுவனங்களின் இலாபம் பங்குதாரர்களிடம் பகிர்ந்தளிப்படாமல் காப்பு நிதியில் சேர்த்து வைக்கப்பட்டால், வருமான ஓட்டம் குறைந்து பெருக்கியின் திறன் குறையும்.

**வரி விதிப்பு :**

அரசு வரி விதிப்பை அதிகரிக்கும்போது மக்கள் அதிகளவு வரி செலுத்துகின்றனர். இதனால் வருவாய் ஓட்டம் குறையும் பெருக்கியின் ஆற்றல் குறையும்.

## 9.4 உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்க:

1. பெருக்கி என்றால் என்ன?

2.பெருக்கியின் இலக்கணம் தருக?

## 9.5 மாறா மற்றும் மாறும் பெருக்கி பொருளாதாரம்

**நிலையான டைனமிக் பெருக்கி**

பகுப்பாய்வு நோக்கதிற்காக சில நேரங்களில் நிலையான பெருக்கத்திற்கும் மாறும் பெருக்கத்திற்கும் அடையில் வேறுபாடு செய்யப்படுகிறது. நிலையான பெருக்கத்தை ஒப்பீட்டு நிலையான பல நேரங்கள் ஒரே நேரத்தில் பெருக்கி , தருக்க பெருக்கம், காலமற்ற பெருக்கல், காலமற்ற பெருக்கம் மற்றும் உடனடி பெருக்கியாக இருக்கும்.

நிலையான பெருக்கத்தின் கருத்து முதலீட்டிலுள்ள மாற்றங்கள் உடனடியாக வருமானத்தில் மாற்றம் ஏற்படுகின்றன என்பதைக்

குறிக்கிறது. அதாவது முதலீட்டு மாற்றத்திற்கும் வருமான மாற்றத்திற்கும் இடையில் எந்த காலத்திலும் தாமதம் இல்லை. முதலீட்டு திட்டத்தில் ஒரு ரூபாய் செலவழிக்கப்படும் தருணத்தில் சமூகத்தின் வருமானம் பல மடங்கு அதிகரிக்கிறது. காலம் மற்றும் பெருக்கம் என அறியப்படும் மாறும் பெருக்கத்தின் கருத்து முதலீட்டு மாற்றம் அல்லது வருமானத்தின் மற்ற உறுதிப்பாட்டின் விளைவாக வருவாய் மாற்றம் எந்த படிப்படியான செயல்முறை உள்ளது. வருமானத்தில் மாற்றத்தின் செயல்முறை ஒரு கால தாமதம் வருவாய் உற்பத்தி மற்றும் நுகர்வு செலவினத்தின் மூலம் பெருக்க செயல்முறை செயல்படுகிறது.

குறிப்பு

மாறும் பெருக்கி வருமானத்தில் மாற்றம் பெறும் செயல்முறை மற்றும் முதலீட்டில் மாற்றம் காரணமாக வெவ்வேறு கட்டங்களில் நுகர்வு மாற்றம் கணக்கில் எடுத்து அதை முதலீட்டிலான மாற்றத்தின் விளைவாக ஏற்படும் வருவாயின் மாற்றத்தின் நிலக் கணக்கீடு செய்யப்படும்

**பெருக்கியும் இறுதிநிலை நுகர்வு விருப்பமும்:**

பெருக்கி என்ற கருத்தானது நுகர்வுச் சார்புடன் பெருங்கிய தொடர்புடையது. பெருக்கியின் அளவு அல்லது மதிப்பானது இறுதிநிலை நுகர்வு விருப்பம் (ஆீஊ) அல்லது இறுதிநிலை சேமிப்பு விருப்பத்தைப் ( ஆீளு ) பொறுத்ததாகும். பெருக்கியின் மதிப்பை இறுதிநிலை நுகர்வு விருப்பத்தின் அளவைக் கொண்டு கணக்கிடலாம்.

MPC-d; அனவை அறிய 1 லிருந்து MPC I கழிக்க வேண்டும். பெருக்கியின் மதிப்பை ஆீளு மூலமாகவும் கணக்கிடலாம்

MPS = 1 – MPC

$$K = \frac{1}{1 - MPC}$$

$$\therefore K = \frac{1}{MPS}$$

குறிப்பு

இவ்வாறு பெருக்கியின் மதிப்பை ஆீஊ அல்லது ஆீளு மூலமாக கண்டுபிடிக்கலாம். பொதுவாக பெருக்கியின் மதிப்பானது 1க்கும்

| இறுதிநிலை நுகர்வு ( MPC) | இறுதிநிலை சேமிப்பு (MPS) | *பெருக்கி K)* |
|---|---|---|
| 0 | 1 | 1 |
| 0.5 | 0.5 | 2 |
| 0.75 | 0.25 | 4 |
| 0.8 | 0.2 | 5 |
| 0.9 | 0.1 | 10 |
| 1 | 0 | ယ |

ய க்கும் இடையில் என்பதை பின்வரும் அட்டவணைக் காட்டுகிறது.

MPC யின் மதிப்பு பூஜ்யம் அல்லது 1 என்று இருப்பது அரிதாகும். இதற்குக் காரணம் சாதாரணமாக வருமானத்தில் கசிவு ஏற்படுகின்றது. MPC பூஜ்யமாக இருப்பதில்லை. ஏனெனில் அதிகரித்த வருமானத்தை முழுவதும் மக்கள் சேமிக்கமாட்டார்கள் அதேபோல MPC யின் மதிப்பு 1 ஆக இருக்காது. ஏனெனில் அதிகரித்த வருமானத்தை எல்லாம் மக்கள் செலவிட மாட்டார்கள். எனவே கீன்ஸ் கருத்துப்படி யின் மதிப்பு ஒன்றுக்கு குறைவாகவேஇருக்கும்

(MPC < 1 )

மேற்கண்ட அட்டவணையிலிருந்து MPC > MPS> பெருக்கி இவைகளுக்கிடையே உள்ள தொடர்பை பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. MPC அதிகமாக இருக்கும் போது, பெருக்கியின் மதிப்பு அதிகமாக இருக்கும். MPC குறைவாக இருக்கும்போது பெருக்கியின் மதிப்பு குறைவாக இருக்கும். எனவே MPC-யும் பெருக்கியும் நேரடியான தொடர்புடையன.

2. MPS அதிகமாக இருந்தால், பெருக்கியின் அளவு குறைவாக இருக்கும். MPS குறைவாக இருந்தால் , பெருக்கியின் அளவு அதிகமாக இருக்கும். எனவே MPS யும் பெருக்கியும் தலைகீழ் தொடர்புடையன.

குறிப்பு

3.மீட்சி (Recovery ) காலங்களில் மக்கள் அதிகரித்த வருமானத்தைச் செலவிட விரும்புவதால் பெருக்கியின் அளவு அதிகமாக இருக்கும். செழிப்பான ( Prosperity ) காலங்களில் மக்கள் அதிகரித்த வருமானத்தை சேமிக்க விரும்புவதால் பெருக்கியின் அளவு குறைவாக இருக்கும்.

**பெருக்கி செயல்படும் விதம்.**

ஒரு பொருளாதார முதலீட்டில் ஏற்படும் அதிகரிப்பானது பெருக்கியின் விளைவால் அதிக வருமான அதிகரிப்பைப் கொண்டு வருகிறது என்பதை ஒரு எடுத்துக்காட்டின் மூலம் விளக்கலாம்.

பெருக்கியின் அளவு ஆக இருக்கும்போது ரூ. 100 கோடி பெறுமான புதிய முதலீடு மேற்கொள்ளப்படுகிறது. இப்போது ரூ 80 கோடியை மக்கள் நுகர்வுக்குச் செலவிடுவதால் நுகர்வுப் பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழிற்ச்சாலைகளுக்கு ரூ 80 கோடி வருமானம் கிடைக்கிறது.

இந்த வருமானமானது உற்பத்திக் காரணிகளுக்கு ஊதியமாக ( வாரம், கூலி, வட்டி , இலாபம்) வழங்கப்படுகிறது. இந்த ரூ 80கோடி வருவாயில் ரூ 64 கோடி நுகர்வுக்குச் செலவிடப்படுகிறது. இதனால் முதலீடு கூடும். மக்களின் வருமானமும் அதிகரிக்கும். மறுபடியும் அதிகரித்த வருமானமானது முதலீடாக மாறுகின்றது.

இவ்வாறு வருமானமானது முழுவதும் தீர்ந்து போகும் வரை இது தொடர்கின்றது. இறுதியில் முதலீட்டில் ஏற்பட்ட ரூ 100 கோடி அதிகரிப்பானது ரூ 500 கோடி வருமானத்தை கொண்டு வருகின்றது. MPC = 0.8 ஆக இருக்கும் போது பெருக்கியின் அளவு 5- ஆக இருக்கும்

குறிப்பு

$$K = \frac{1}{1 - MPC}$$

$$K = \frac{1}{1 - 0.8}$$

$$K = \frac{1}{0.2} = 5$$

(அல்லது)

$$K = \frac{\Delta Y}{\Delta I}$$

K = ரூ. 500 கோடி ∴ரூ. 100 கோடி

பின்வரும் அட்டவணையானது பெருக்கி செயல்படுவதைக் காட்டுகின்றது.


| பெருக்கியின் காலம் | ஆரம்ப முதலீடு ( கோடிகளில்) | நுகர்வு அதிகரிப்பு ( கோடிகளில் | வருவாய் அதிகரிப்பு ( கோடிகளில் ) |
|---|---|---|---|
| 0 | 100 | - | 100 |
| 1 | 100 | 80 | 180 |
| 2 | 100 | 144 | 244 |
| 3 | 100 | 195 | 295 |
| 4 | 100 | 236 | 336 |
| 5 | 100 | 269 | 369 |
| 6 | 100 | 295 | 395 |
| 7 | 100 | 316 | 416 |
| 8 | 100 | 333 | 443 |
| 9 | … | …. | … |
| 10 | … | … | … |
| N | 100 | 400 | 500 |

இவ்வாறு ரூ. 100 பெறுமான புதிய முதலீடானதுரூ. 500 கோடி பெறுமான வருமானத்தை பெற்றுத் தருகின்றது.

**வரைபட விளக்கம்**

பெருக்கி செயல்படுவதை பின் வரும் வரைபடத்தின் மூலமாக விளக்கலாம





.

வருவாய் = நுகர்ச்சி ௗ சேமிப்பு என்பதை OZ என்ற 45 கோடு காட்டுகின்றது. எல்லா வருவாய் நிலைகளிலும் MPC = 0.8 என்ற அனுமானத்தில் C>C+I>C+I+I கோடுகள் வரையப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் இருக்கும் நுகர்வு மற்றும் முதலீட்டை C+I கோடு காட்டுகின்றது. முதலீடு கூடுவதால் புதிய நுகர்வு முதலீட்டுக்கோடு C+I+I என மாறுகிறது. முதலீடானது முஆ லிருந்து EN ஆக அதிகரிக்கும்போது வருமானம் ழுஆ லிருந்து ON ஆக அதிகரிக்கிறது. C+If;Fk; C+I+I க்கும் உள்ள வேறுபாடு புதிய முதலீடாகும் . புதிய முதலீட்டின் விளைவாக ஏற்பட்ட வருமான அதிகரிப்பு ஆகும். Y என்பது I காட்டிலும் 4 மடங்கு அதிகம் . இதற்குக் காரம் MPC = 0.8 ஆக இருக்கும் போது பெருக்கியின் அளவு 5 ஆகும் . இவ்வாறு பெருக்கி செயல்படுவதால் முதலீட்டில் ஏற்பட்ட அதிகரிப்பானது வருமானத்தில் அதிக அதிகரிப்பை கொண்டுவருகின்றது

## 9.5. உங்கள் முன்னேற்றத்தைச் சரிப்பார்க்க

**1.** பெருக்கி என்பது ஓர் எண்ணிக்கையே ஆகும். அதனைக் கொண்டு முதலீட்டு மாற்றத்தைப் பெருக்கினால் வருவாயின் இறுதி மாற்றம்

குறிப்பு

என்னவாக இருக்கும் என்பதைக் காணலாம்” என்று சாமுவேல்சன் கூறுகிறார்.

2. பெருக்கியை **ஹேன்சன்** “ கூடுகின்ற வருவாயுடன் தொடர்புடைய ஓர் கெழுவே முதலீட்டுப் பெருக்கி எனப்படும் “ என்று வரையறுக்கிறார்.

**திறனாய்வு.**

பெருக்கிக் கருத்து, கால இடைவெளியின்றி, முதடலீட்டில் ஏற்படும் மாற்றம் உடனடியாக வருவாயிலும், மாற்றத்தை உண்டுபண்ணும் என்று கீன்ஸ் கூறுகிறார். இக் கருத்து கால இடைவெளிகளைக் கருத்தில் கொள்ளவில்லை.ஆனால் நடைமுறையில் கால இடைவெளிகளின்றி இம் மாற்றங்கள் நிகழ்வதில்லை.

பெருக்கிக் கருத்து ஓர் கற்பனைக் கருத்தேயாகும். உண்மை நடைமுறையில், முதலீட்டுக்கும் வருவாய்க்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை “கீன்ஸ் இறுதி நிலை நுகர்வு விருப்பம் மாறாது, நிலையாக இருக்கும் என்று கூறுகின்றார். ஆனால் உண்மை நடைமுறையில், இறுதி நிலை நுகர்வு விருப்பம் நிலையாக இல்லாமல் மாறிக் கொண்டேயிருக்கும் தன்மையைக் கொண்டது.பெருக்கி மட்டும் தனியாக பொருளாதார ஆய்வுகளில் எவ்வித பயனையும் தருவதில்லை, முடுக்கியுடன் இணைந்துதான் வாணிபச் சுழலை கட்டுப்படுத்துகிறது.

முதலீடு கூடுவதால் வருவாயில் என்ன மாற்றம் நிகழும் என்று கீன்ஸின் பெருக்கிக் கருத்து விளக்குகிறது. ஆனால் வருவாய் கூடுவதால் முதலீட்டில் மேலும் என்னென்ன மாற்றங்கள் நிகழும் என்பதைப் பெருக்கிக் கருத்து ஆராயவில்லை

நுகர்வு வருவாயை மட்டும் சார்ந்திருக்கிறது என்று பெருக்கிக் கருத்து கூறுகிறது. ஆனால் நுகர்வு வேறு பல காரணங்களாலும் பாதிக்கப்படுகின்றது. இவை பெருக்கியின் அளவை பாதிக்கும்.

இறுதி நிலை நுகர்வு விருப்பம் 0-க்கும் 1-க்கும் இடையே இருக்கும். வருவாய்க்கும் நுகர்வுக்கும் நேரடித் தொடர்பு நிலவும் என்று பெருக்கிக் கருத்து கூறுகிறது. ஆனால் வருவாய்க்கும் நுகர்வுக்குமிடையே வளைகோட்டுத் தொடர்புதான் நிலவுகிறது என்று புள்ளி விவரங்கள் விளக்குகின்றன.

பெருக்கிக் கருத்து மிகவும் எளிமையான பல எடுகோள்களின் அடிப்படையில் அமைக்கப் பெற்றுள்ளது. எனவே இக்கருத்து சிக்கலானதாக இருப்பதோடு நடைமுறைக்கு ஏற்றதாகவும் இல்லை.பெருக்கிக் கருத்து

தானெழுந்த முதலீட்டைப் பற்றி மட்டுமே கருத்தில் எடுத்துக் கொண்டு தூண்டப்பட்ட முதலீட்டை ஒதுக்கிவிட்டது.

குறிப்பு

**பெருக்கியின் பயன்களைள்**

**முதலீடு** : பெருக்கிக் கருத்து வருவாய் - வேலைவாய்ப்புக் கோட்பாட்டில் முதலீட்டின் முக்கியத்துவத்தை விளக்குகிறது. முதலீட்டின் முக்கியத்துவத்தை விளக்குகிறது. முதலீட்டில் ஏற்படும் மாறுதல்களால் , வருவாயிலும் வேலை வாய்ப்பிலும் எப்படி மாறுதல்கள் ஏற்படுகின்றன என்பதை விளக்குகிறது.

**வாணிபச் சுழல்** : பொருளாதாரத்தில் வாணிபச் சுழல் எவ்வாறு தோன்றுகிறது என்பதை பெருக்கிக் கருத்து விளக்குகிறது. முதலீடு குறைவதால் பொருளாதார மந்தமும், முதலீடு அதிகரிப்பதால் பொருளாதாரச் செழிப்பும் தோன்றுகின்றன என்பதை பெருக்கிக் கருத்து விளக்குகிறது.

**பொருளாதார கொள்கைகளை உருவாக்குதல்** :

வாணிபச் சுழல் பற்றாக்குறை நிதியாக்கம், பொதுத் துறை முதலீடு ஆகியன பற்றிய பொருளாதாரக் கொள்கைகளை பெருக்கியின் செயல்பாட்டால் உருவாக்குவது எப்படி என்பதை இக்கருத்து விளக்குகிறது.

**வேலை வாய்ப்பை அதிகரிக்க** : நாட்டில் முதலீட்டை அதிகரித்து, வேலை வாய்ப்புக்களைப் பெருக்கி, முழு நிறை வேலை வாய்ப்பு நிலையை எவ்வாறு அடைவது என்பதைப் பெருக்கிக் கருத்து விளக்குகிறது.

குறிப்பு

# அலகு-10 முடுக்கி( Accelerator )

10.1. நோக்கங்கள்
10.2. முடுக்கி கருத்துகள்.
10.3. முடுக்கிக் கோட்பாட்டின் செயல்பாடு
10.4. உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்க
10.5 முடுக்கியின் பயன்பாடு
10.6. உங்கள் முன்னேற்றத்தைச் சரிப்பார்க்க

## 10.1 நோக்கங்கள்

1. முடுக்கி கருத்துகள் பற்றி அறிந்து கொள்ள.

2. . முடுக்கிக் கோட்பாட்டின் செயல்பாடு பயன்பாடு பற்றி தெரிந்து கொள்ள.

முடுக்கிக் கோட்பாடு, வருவிக்கப் பெற்ற தேவையின் முடுக்கிக் கோட்பாடு பெரிதாக்கப் பெற்ற வருவிக்கப்பட்ட தேவையின் கோட்பாடு , தொடர்பானது என்னும் பல பெர்யர்களால் அழைக்கப்படுகிறது. ஆல்பெர்ட் ஆவ்டாலின், ஜே.எம் கிளார்ட், ஹர்ராடு, சாமுவேல்சன், ஹிக்ஸ், கால்டார் முதலியோரின் பெயர்களுடன் இக்கோட்பாடு நெருங்கிய தொடர்புடையது.

## 10.2. முடுக்கி கருத்துகள்.

முதலீட்டில் ஏற்படும் மாற்றத்திற்கிணையாக வருவாயிலும் மாற்றம் ஏற்படும் என்று பெருக்கிக் கருத்து கூறுகின்றது. நாட்டு வருவாயில் ஏற்படும் மாற்றம் முதலீட்டை முடுக்கும் - ஊக்கும் விரைவு படுத்தும் என்று முடுக்கிக் கருத்து கூறுகிறது. நுகர் பொருட்களின் தேவை அதிகரிக்கும் பொழுது, மூலதனப் பொருட்களுக்கும் தேவை பணமடங்கு அதிகரிக்கிறது என்று முடுக்கிக் கருத்து கூறுகிறது. அதாவது ஒரு குறிப்பிட்ட மாற்றம் பொதுவாக மூலதனப் பொருட்களின் தேவையில் ஏற்படுகின்ற மாற்றத்தை ஊக்குவிக்கின்றது என்பதே முடுக்கிக்

**முடுக்கித் தத்துவம்**

1. முடுக்கித் தத்துவத்தை முதன் முதலில் விளக்கியவர்கள் யு.ஆ ஃப்டலியன் மற்றும் வு.கோர்வர்
2. இத்தத்துவத்தை புகழ் பெறச் செய்தவர் து.ஆ.கிளார்க்
3. சு.கு.ஹராடு இத்தத்துவத்திற்கு தம்முடைய ‘‘இயங்கு நிலைப் பொருளாதாரத்தை நோக்கி என்ற நூலில் தொடர்பு எனப் பெயரிட்டுள்ளார்.
4. முடுக்கியானது இயந்திரத்தின் வாழ்நாளைப் பொறுத்தது.இயந்திரங்கள் நீண்ட நாள் நீடித்து உழைக்கும் போது முடுக்கியின் மதிப்பு அதிகமாக இருக்கும்.
5. முடுக்கி செயல்பட வரையறைகள்

   1) மிகைத்திறன் இன்மை

2) தேவையின் தன்மை
3) மூலதன – உற்பத்தி விகிதம்
4) வளங்களின் அளவு
5) நெகிழ்வுள்ள கடன் அளிப்பு கருத்தின் சாராம்சமாகும்.

குறிப்பு

“ தூண்டப் பெற்ற முதலீட்டிற்கும் தொடக்கத்தில் நுகர்வுச் செலவில் ஏற்படும் மாற்றத்திற்குமுள்ள விகிதமே முடுக்கி ஆகும்.” எனப்

பேரா. குரிகாரா முடுக்கியை வரையறுக்கிறார்.

**எடுகோள்கள்**

**1 நுகர்பொருட்கள் உற்பத்தியில் எச்ச சக்தியின்மை**

நுகர்வுப் பண்டங்களின் உற்பத்தித் துறையில் எச்ச சக்தி இருத்தல் கூடாது. நுகர்வுப் பண்டங்களின் உற்பத்தித் துறையில் எச்ச சக்தி இருந்தால், அங்கு தேவை கூடுவதால் தூண்டப்பட்ட மூலதனம் ஏதும் இராது.

**2 மூலதனப் பொருட்கள் உற்பத்தியில் எச்ச சக்தி**

மூலதப் பொருட்கள் உற்பத்தித் துறையில் எச்ச சக்தி இருக்க வேண்டும். அப்படியானால்தான் நுகர் பொருட்களுக்குத் தேவை அதிகரிக்கும் போது, அதிகரிக்கின்ற எதிரங்களின் தேவையை நிறைவு செய்ய, மூலதனத் தொழில்களில் முடுக்கி செயல்படும்.

**3 நீரோட்ட நிலை**

மூலதனப் பொருட்களின் தொழிலில் ஒரு நீரோட்ட நிலை ( கடரனைவைல ) இருக்க வேண்டும். நுகர் பொருட்களும் பணிகளும் விரைவில் உற்பத்தி செய்யப்பட்டு, அங்காடிக்கு அளிக்கப்பட்ட வேண்டும். அதற்கேற்ற வகையில் மூலப் பொருட்களையும் இயந்திரங்களையும் உற்பத்தி செய்து தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

**4 நிரந்தரத் தேவை**

நுகர் பொருட்களுக்கான தேவை கூடுமானவரை நிரந்தரமானதாக இருக்க வேண்டும். அப்படியானால்தான், முடுக்கி செயல்படும் உற்பத்தியாளர்களும் மூலதனத்தைக் கூட்டுவார்கள். தேவை தற்காலிகமானதாக இருந்தால், உற்பத்தியாளர்கள் முதலீட்டைக் கூட்ட மாட்டார்கள்.

**5 நிலையான மூலதன - உற்பத்தி விகிதம்**

மூலதன உற்பத்தி விகிதம் கூடுமானவரை நிலையானதாக இருக்க வேண்டும். அப்படியானால்தான் முடுக்கியானது முழுமையாகவும் எளிதாகவும் செயல்படும். ஆனால் உண்மை நடைமுறையில், உற்பத்தி

முறைகளில் புதிய கண்டுபிடிப்புக்களாலும் தொழில் நுட்ப முன்னேற்றங்களாலும் மூலதன உற்பத்தி விகிதம் நிலையாக இருப்பதில்லை.

குறிப்பு

**6 நெகிழ்வுள்ள மூலதன வளங்கள்**

உற்பத்திக்குத் தேவையான மூல வளங்கள் தங்கு தடையின்றிக் கிடைக்க வேண்டும் . நாட்டில் வேலையில்லா உற்பத்திக் காரணிகளும் தாராளமாபக் கிடைக்க வேண்டும். தொழில்களும் விரிவடைவதற்குத் தேவையான சூழ்நிலைகள் நிலவ வேண்டும்.

**7 கடன்கள் கிடைத்தல்**

உற்பத்திக்குத் தேவையான் அளவில் குறைந்த வட்டி விகிதத்தில் போதிய அளவு கடன்கள் கிடைக்க வேண்டும். தேவையான அளவில் கடன் வசதிகள் இல்லையெனில், முடுக்கியின் திறன் குறைவாகவே இருக்கும்.

**8 தொழில் முறை**

வேளாண்மைத் துறையைக் காட்டிலும் தொழில்துறையில் முடுக்கியின் பங்கு விரைவாகவும் முழுமையாகவும் இருக்கும்.

**9 எதிர்பார்ப்புகள்**

எதிர்பார்ப்புக்களைப் பொருத்தும் முடுக்கியின் செய்பாடுகள் தீவிரமாக அல்லது மெதுவாக இருக்கும்.

**பயன்கள்**

1. எப்படி வருவாய் பெருக்கம் ஏற்படுகிறது என்பவர் முடுக்கிக் கருத்து விளக்குகிறது.

2. வாணிபச் சுழலின் தன்மைகளை ஆராய முடுக்கிக் கருத்து உதவுகிறது

3. நுகர்வுப் பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழில்களைவிட , மூலதனப் பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழில்களில் ஏற்ற இறக்கங்கள் மிகவும் அதிகமாக இருக்கின்றன என்ற கருத்தினை விளக்குகிறது.

4. நுகர்வுப் பண்டத் தொழில்களின் ஏற்படும் சிறிய மாற்றங்கள் மூலதனப் பண்டத் தொழில்களில் பெரிய மாற்றங்களை உருவாக்குகின்றன என்னும் கருத்தை விளக்குகிறது.

முடுக்கியின் செயல்பாட்டில் சில நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன

1. முடுக்கிக் கோட்பாடு மூலதனப் பொருட்களை ( இயந்திரங்களை ) எல்லாம் முழுமையாகப் பயன்படுத்துவதாகவும், நுகர்பொருட்களின் தேவை

குறிப்பு

கூடுவதால் மூலப் பொருட்களின் ( இயந்திரங்களின்) தேவை கூடுமென்றும், இதனால் முதலீடு தூண்டப்பெற்று, முடுக்கி செய்ல்படுமென்றும் கூறுகிறது. ஆனால் உண்மை நடைமுறையில் மூலம் பொருட்கள் ( இயந்திரங்கள் ) மிகுதியாக இருக்கின்ற நிலை இல்லை. மேலும், இருக்கின்ற மூலப் பொருட்களை ( இயந்திரங்கள்) முழுமையாகப் பயன்படுத்துவதுமில்லை . இச் சூழ்நிலைகளில் முடுக்கி செயல்படாது.

2 மூலதனப் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழில்களில் எச்ச சக்தி இருக்க வேண்டுமென்று இக் கோட்பாடு கூறுகின்றது. ஆனால் உண்மை நடைமுறையில் எச்ச சக்தி இல்லாமலும் போகலாம்.

3 மூலதன உற்பத்தி வீதம் மாறாமல் நிலையாக இருக்க வேண்டுமென்று இக்கோட்பாடு கூறுகின்றது. ஆனால் மூல தன உற்பத்தி வீதம் மாறுகின்றது. மூல தன உற்பத்தி விகிதம் மாறாமல் இருக்கக் காரணங்கள் 1) புதிய கண்டு பிடிப்புக்கள் 2) உற்பத்தி முறையில் தோன்றும் புரட்சிகரமான மாறுதல்கள் 3) இருக்கின்ற மூலதனத்தைச் செறிவாகப் பயன்படுத்துதல் 4) வாணிபச் சுழல்கள் தோற்றம்.

4 நுகர் பொருட்களுக்கான தேவை கூடுதல் நிலையானதாக இருக்க வேண்டும் என்று இக்கோட்பாடு கூறுகிறது. ஆனால் உண்மை நடைமுறையில், நுகர் பொருட்களுக்கான கூடுதல் தற்காலிகமானதாகவே இருக்கும்.

5 நிதி வளங்கள் தாராளமாகக் கிடைக்க வேண்டுமென்று இக்கோட்பாடு கூறுகிறது. ஆனால் உண்மை நடைமுறையில், நிதி வளங்கள் தாரளமாகக் கிடைப்பதில்லை

6 முதலீடு அதிகரிக்கும் அதே வேகத்திலேயே மூலதனப் பொருட்களின் உற்பத்தி நடைபெறுமென்று இக்கோட்பாடு கருதுகிறது. ஆனால் உண்மை நடைமுறையில் முதலீடு அதிகரிக்கும் அதே வேகத்தில் மூலதனப் பொருட்களின் உற்பத்தி அதிகரிப்பதில்லை. அதாவது முதலீடு பொருட்களின் உற்பத்தி அதிகரிப்பதில்லை. அதாவது, முதலீடு செய்வதற்கும் மூலதனப் பொருட்களின் ஆக்கத்திற்குமிடையே அதிக கால இடைவெளி இருக்கும்.


7 மூல வளங்கள் தடையின்றிக் கிடைக்க வேண்டுமென்று இக்கோட்பாடு கூறுகிறது. ஆனால் உண்மை நடைமுறையில் மூல வளங்களுக்குத் தட்டுப்பாடு அடிக்கடி ஏற்படுவதுண்டு.

8 தேவை கூடும் பொழுதும் தேவை குறையும் பொழுதும் முடுக்கி செயல்படும், ஆனால் தேவை குறையும் பொழுது ஓரளவு தேவை குறையும் வரை தான் முடுக்கி செயல்படும். அதற்கு மேலும் தேவை குறையும் போது, முடுக்கி செயல்படாது.

பெருக்கி - முடுக்கி பின்னிய செயல் விளைவு என்கிறோம். முடுக்கியையும் பெருக்கியையும் இணைத்து அதனால் ஏற்படும் விளைவுகளை ஹேன்சன், ஹிக்ஸ், சாமுவேல்சன் ஹாராடு முக்கிய அறிஞர்கள் ஆராய்ந்தனர்

**குறிப்பு**

1 ஹேன்சனின் மிகைப் பெருக்கி உரு




ஹேன்சன் பெருக்கியையும் முடுக்கியையும் இணைத்து இவற்றின் கூட்டு விளைவால் முதலீட்டிலும், நுகர்விலும் என்னென்ன மாற்றங்கள் ஏற்படும் என்பதை விளக்குகின்றார். அவர் பெருக்கி, முடுக்கி பின்னிய செயல் விளைவினை மிகைப் பெருக்கி என்றும் நெம்புகோல் இயக்க விளைவு என்றும் குறிப்பிடுகின்றார்.தானெழும் முதலீட்டில் ஏற்படும் கூடுதல் எந்த ஒரு மாற்றமும் தேசிய வருவாயில் பெருக்கல் விளைவுகளை ஏற்படுத்துகின்றது. வருவாய் கூடுவதால், நுகர்வும் கூடும், நுகர்வு கூடுவதால் முதலீட்டில் விரைவாக - முடிக்கப்பட்ட விளைவு ஏற்படும். முதலீட்டு மாற்றம் மறுபடியுமாக வருவாயிலும் நுகர்விலும் மாற்றங்களை ஏற்படுத்தும். இந்த விளைவுகளை தொடர் வட்டமாக ஏற்படுகின்றன. விரிவடையும் பொழுது பொருளாதாரம் செழிப்பு நிலைக்கும், சுருங்கும் பொழுது மந்த நிலைக்கும் மாறி மாறிச் செல்லும் இறுதி நிலை சேமிப்பு விருப்புக்கும் இறுதி நிலை முதலீட்டு விருப்புக்குமுள்ள வித்தியாசத்தின் தலைகீழ்ப் பின்னமே பெருக்கிமுடுக்கி பின்னிய செயல் விளைவு ஆகும் என்றும் வரையறை செய்கின்றனர்.

**முக்கியத்துவம்**

1 நாட்டு வருவாய் எவ்வாறு விரைவாகப் பெருகுகிறது என்பதை மிகைப் பெருக்கிக் கருத்து விளக்குகிறது

2 வாணிபச் சுழல்களின் இயல்பையும், போக்கையும் அறியமிகைப் பெருக்கிக் கருத்து துணை செய்கிறது.

3 வாணிபச் சுழல்களில் ஏற்படும் திருப்பு முனைகளை விளக்குவதற்கு மிகை பெருக்கிக் கருத்து துணை செய்கிறது.

குறிப்பு

**ஹிக்ஸின் கோட்பாடு**

வாணிபச் சுழல் கோட்பாடு ஒன்றினை உருவாக்கினார் பேரா.ஹிக்ஸ், பெருக்கி முதலீடு கருத்துக்களை ஏற்கனவே கீன்ஸ் அறிமுகப்படுத்தியுள்ளார். ஹிக்ஸ் முதலீட்டை தானெழுந்த முதலீடு, தூண்டப் பெற்ற முதலீடு என இரண்டு வகையாகப் பகுத்துள்ளார்.

தானெழுந்த முதலீடு

முதலீட்டுத் தேவை மற்றும் பல காரணிகளுக்காக ஏற்படும் முதலீடு தானெழுந்த முதலீடு எனப்படும். தானெழுந்த முதலீடு ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் அதிகரித்துக் கொண்டே செல்லும். தானெழுந்த முதலீட்டின் காரணமாக மக்கள் வருவாய் ஒரு குறிப்பிட்ட அளவில் அதிகரிக்கும். பெருக்கி - முடுக்கி பின்னிய செயல்விளைவே இது ஆகும்.

**தூண்டப் பெற்ற முதலீடு**

உற்பத்தியில் ஏற்படும் மாறுதல்களால் தூண்டப்படும் முதலீடு தூண்டப் பெற்ற முதலீடு எனப்படும். உற்பத்தி அதிகரிக்கும் பொழுது, தூண்டப் பெற்ற முதலீடும் அதிகரிக்கும், எடுத்துக்காட்டு தேவை அதிகரிப்பு நிரந்தரமானதாக இருக்கும் எனக் கருதப்பட்டால், அதிகளவு உற்பத்தியை மேற்கொள்வது இன்றியமையாதது ஆகும். இதனால் மூலதனப் பண்டங்களின் இருப்பு தொழிலில் அதிகரிக்கும்

**எடுகோள்கள்**

1. தானெழுந்த முதலீடு தொடர்ச்சியாக ஒரு குறிபிட்ட வேகத்தில் அதிகரித்துக் கொண்டே செல்ல வேண்டும்.

2 காலப் போக்கில் சேமிப்பு முதலீடு கெழுக்கள் பாதிக்கப்படுகிறது. இதனால் மேல் நோக்கிச் செல்லும் சமநிலையானது சீராக இல்லாமல் சறுக்கும் சமநிலையாக மாறும்

3. பெருக்கி, முடுக்கி இவை மாறாத நிலையான மதிப்பைப் பெற்றிருக்க வேண்டும்.

4. முழு நிறை வேலை வாய்ப்பு நிலைக்கு ஓர் உச்ச வரம்பு இருக்கிறது. இந்நிலைக்கு மேலாகப் பொருளாதாரம் விரிவுடைய முடியாது.

குறிப்பு

**குறைகள்**1. கீன்ஸின் நுகர்வுச் சார்பு நிலையானதாகும் அடிப்படையில் வாணிபச் சுழலின் பல்வேறு நிலைகளிலும் பெருக்கியின் மதிப்பு நிலையாக இருக்கும் என ஹிக்ஸ் கருதுகிறார்.

2. முடுக்கியின் மதிப்பும் நிலையானதென ஹிக்ஸ் எடுத்துக்கொண்டுள்ளார் . இதுவும் தவறே ஆகும்.

3. தானெழுந்த முதலீடு வாணிபச் சுழலின் பல்வேறு நிலைகளிலும் தொடர்ச்சியாக இருக்கும் என்று ஹிக்ஸ் கருதுகிறார் இதுவும் உண்மைக்குப் புறம்பானதே ஆகும்.

4. நானெழுத்த முதலீட்டுக்கும், தூண்டப்பெற்ற முதலீட்டுக்கும் வித்தியாசம் காண்பது கடினமாக இருக்கிறது. ஏனெனில் குறுகிய காலத்தில் தூண்டப் பெற்ற முதலிடாக மாறுகிறது.

5. வாணிபச் சுழலுக்கு மேல் வரம்பு நிர்ணயித்த ஹிக்ஸின் கோட்பாடு மந்தம் தோன்றுவது எவ்வாறு என்பதைச் சரிவர விளக்கத் தவறிவிட்டது.

6. பணக் காரணிகளின் பங்கு ஹிக்ஸின் கோட்பாட்டில் குழப்பப்பட்டுள்ளது. தனது நூலின் ஒரு பகுதியில் பணவாட்டம் தோன்ற பணக் காரணிகள் தான் காரணமென்றும், மற்றொரு பகுதியில் பெருக்கி - முடுக்கி தான் காரணமென்றும் அவர் கூறுகிறார்

**உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்க:**

**1.** தூண்டப் பெற்ற முதலீடு என்றால் என்ன?

**2.** ஹேன்சனின் மிகைப் பெருக்கி உரு என்பது என்ன

# அலகு-11 வேலை வாய்ப்புக் பெருக்கி

11.1. நோக்கங்கள்
11.2. வேலை வாய்ப்பு பெருக்கி
11.3 கருத்துகள்
11.4. உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்க
11.5 .வருவாய் மற்றும் வேலை வாய்ப்புகளுக்கான கொள்கை

குறிப்பு

## 11.1. நோக்கங்கள்

1. வேலை வாய்ப்பு பெருக்கி அதன் கருத்துகள் பற்றி அறிந்து கொள்ள.

2. வருவாய் மற்றும் வேலை வாய்ப்புகளுக்கான கொள்கையினை தெரிந்து கொள்ளுதல்

## 11.2 கானின் வேலை வாய்ப்புக் பெருக்கி

## . அறிமுகம்

வேலைவாய்ப்புக் பெருக்கி (employment multiplier ) என்னும் கருத்தினை சு.கு. கான் என்னும் பொருளியல் மேதை 193-ம் ஆண்டில் அறிமுகம் செய்தால் முதலில் ஏற்படும் ஒரு வேலை வாய்ப்பு கூடுதலுக்கும் இறுதியாக ஏற்படும் மொத்த வேலை வாய்ப்புக் கூடுதலுக்குமுள்ள தொடர்பினை விள்ளக்கவே இவர் வேலை வாய்ப்புப் பெருக்கி என்னும் இக்கருத்தினை அறிமுகம் செய்தார் “ இறுதியாக மொத்த வேலைவாய்ப்பில் ஏற்படும் கூடுதலுக்கும், ஆரம்பத்தில் ஏற்பட்ட வேலை வாய்ப்புக் கூடுதலுக்குமுள்ள விகிதம் வேலைவாய்ப்புப் பெருக்கி ஆகும்” என வரையறை செய்கிறார்.

“ பொதுப் பணிகள் உள்ள அடிப்படை வேலை வாய்ப்பில் ஏற்படும் கூடுதலுக்கும், இறுதியாக அடிப்படி மற்றும் இரண்டாம் நிலை சேர்ந்த மொத்த வேலைவாய்ப்புக் கூடுதலுக்குமுள்ள தொடர்பை விளக்கும் ஓர் கெழுவே வேலை வாய்ப்புக்கெழு ஆகும்” என்று ஹேன்ஸன் விளக்குகிறார்.

**கின்ஸின் முதலிட்டுப் பெருக்கி:-விளக்கம்**

குளம் ஒன்றில் நாம் ஒரு கூழாங்கல்லை எறியும் போது சிற்றலைகள் அனேகம் ஏற்படுகின்றன. அதே போன்று முதலீட்டில் ஏற்படும் கூடுதல் வருவாயிலும் கூடுதலைத் தோற்றுவிக்கிறது. முதலீட்டில் ஏற்படும் ஆரம்பக் கூடுதலுக்கும் வருவாயில் ஏற்படும் இறுதிக் கூடுதலுக்குமுள்ள உறவே பெருக்கி ( multiplier) எனப்படுகிறது. இதனை வருவாயில் ஏற்படும் கூடுதலுக்கும் முதலீட்டில் ஏற்பட்ட கூடுதலுக்குமுள்ள விகிதம் என்றும் கூறுவதுண்டு. இதனை முதலீட்டுப் பெருக்கி ( investment multiplier) அல்லது வருவாய்ப் பெருக்கி ( income multiplier ) என்று கீன்ஸ் அழைக்கிறார்.

குறிப்பு

**வேலைவாய்ப்புப் பெருக்கியும் முதலீட்டுப் பெருக்கியும்- ஓர் ஒப்பீடு**

1. கீன்ஸின் பெருக்கி மு.கானின் வேலை வாய்ப்புப் பெருக்கி மு இரண்டும் வெவ்வேறானவை ஆகும். கீன்ஸின் பெருக்கி மு வருமானப் பெருக்கி என்றும், முதலீட்டுப் பெருக்கி என்றும் அழைக்கப்படுகிறது. கானின் வேலை வாய்ப்புப் பெருக்கி வேலை வாய்ப்பை மட்டுமே கருத்தில் கொள்கிறது.

2 கீன்ஸின் முதலீட்டுப் பெருக்கி முதலீட்டு மாற்றத்தால் நுகர்வில் ஏற்படும் மாற்றம் பற்றி ஆய்வு செய்கிறது. ஆனால் கானின் வேலை வாய்ப்புப் பெருக்கி பொதுப் பணிகளின் வேலை வாய்ப்புக்கும் மொத்த வேலை வாய்ப்புக்குமுள்ள தொடர்பு பற்றி ஆராய்கிறது.

3 கீன்ஸின் முதலீட்டுப் பெருக்கி சுக்கமானதாகவும், திட்டவட்டமானதாகவும் இருக்கிறது. ஆனால் கானின் வேலை வாய்ப்புப் பெருக்கி தெளிவற்றதாகவும் குழப்பமானதாகவும் இருக்கிறது.

பொதுத்தறை முதலீட்டில் மொத்த வேலைவாய்ப்பில் ஏற்படக்கூடிய சாதக விளைவுகளைப் பற்றி ஆராய்கையில் 1931-இல் பேராசிரியர் ஆர்.எப்.கான் வேலைவாய்ப்புக் கருத்தைக் கூறினார்.

வேலை வாய்ப்புக் கூடுவதன் விளைவாக மொத்த வேலை வாய்ப்புக் கூடும் வீதத்தைக் குறிக்கின்றது

.இதனை $K1 = \Delta N / \Delta N1$˙

K1 = வேலைவாய்ப்புப் பெருக்கி.

$\Delta N$ = என்பது மொத்தவேலைவாய்ப்புக் கூடுவது.

$\Delta N1$= என்பதுஅடிப்படைவேலைவாய்ப்பில்ஏற்படும் அதிகரிப்பைக் கூறுகின்றது.

இதனை ஓர் எடுத்துக்காட்டின் மூலம் விளக்கலாம் .பொதுத் துறையில் 30,000 பேரை புதிதாக வேலைக்குஅமர்த்துவாதகக் கொள்வோம். இதன் விளைவாக நாட்டில் மொத்த வேலைவாய்ப்பில் கூடுவது 90,000 ஆக இருந்தால் வேலைவாய்ப்புப் பெருக்கி 90,000 = 3.

கான ˙வலைவாய்ப்புப் பெருகுவதற்கான காரணத்தை விளக்கினார்.அடிப்படையாகபொதுத்துறையில் வேலைசெய்பவர்களின் எண்ணிக்கை கூடுகின்றபொழுதுபுதிதாகவேலையைப் பெற்றவர்களுக்குநுகர் பொருட்கள் தேவைப்படும்.அவற்றைஉற்பத்திசெய்யப் பலரைவேலைக்குஅமர்த்தவேண்டும்.அப்படிவேலைபார்ப்பவர்கள் தங்கள் வருவாயில் ஒருபகுதியைநுகர் பொருட்களுக்குச் செலவிடுவார்கள்.இதனால்

மேலும் வேலைவாய்ப்புகூடும். இது தொடர் சங்கிலியாக இருப்பதால,வேலைவாய்ப்புபலமடங்கு கூடுகின்றன

## 11.3 கருத்துக்கள்

குறிப்பு

கீன்சின் பெருக்கிக் கருத்தையும் கானின் பெருக்கிக் கருத்தையும் ஒப்பிடலாம்.கீன்ஸ் தனதுபெருக்கியைΔலுஶ்ரீமுΔ1என்று கூறினால்இகான் தனதுபெருக்கியை

ΔN=K1ΔN1என்று கூறுகின்றார்.

ஆனால்கீன்ஸ் k=k1mẏலவென்றுவாதிடுகின்றனர்.அவரதுகருத்துப்படி கூலியின் அலகுகளைளகொண்டவருவாய் வேலைவாய்ப்பைவிடமிகுதியாகக் கூடும். அதாவது கூலியற்றஊதியம் பெறுபவர்களின் வருவாய் கூலியாட்களின்வருவாயைவிடவீதாசாரத்தைவிடஅதிகமாகவே கூடும்.மேலுமஇ குறைந்துசெல்விளைவுவிதிசெயல்படுவதால்இவேலைவாய்ப்பைவிடக்குறைந்த வீதத்திலேயேமொத்தஉற்பத்திகூடும்.அதாவது,கூலிகளைக் கொண்டவருவாய் மிகவும் வேகமாகக் கூடும்.அதற்கடுத்தநிலையில் வேலைவாய்ப்பும்,அதற்கும் குறைந்தநிலையில் உற்பத்தியும் கூடும்.

ஹேன்சன் குறுகியகாலத்தில் மூன்றும்ஒன்றுபோலஇகீன்சின் வருவாய்இவேலைவாய்ப்புக் கோட்பாடு கூறுவதைப் போலஇகூடவும் குறையவும் செய்யு மென்று சுட்டிக்காட்டி ஆதலால் நடைமுறையில் கானின் வேலைவாய்ப்புப் பெருக்கியும் கீன்சின் முதலீட்டுப் பெருக்கியும் ஒன்றென்றுமுடிவுசெய்வதில் பெரிய தவறு இல்லைஎன்கின்றார். ஆனால்இமுழுநிலைவேலைவாய்ப்பு–உற்பத்தியை நோக்கி உற்பத்தி கூடும்பொழுதுஇ குறைந்துசெல் விளைவுகளின் காரணமாக உழைப்பின் ஓரலகுஉற்பத்திகுறையும்.இதனால் உற்பத்தியையும் வேலைவாய்ப்பையும் கூட்டும் வகையில் பெருக்கிசெயல்படும்பொழுதுமு’ குறைவாகவும் மு மிகுதியாகவும் இருக்கும்.

டில்லார்டு , பொதுப்பணிகளினால் ஏற்படும் அடிப்படை வேலைவாய்ப்புகளுக்கும் இரண்டாம்நிலைவேலைவாய்ப்புக்களுக்கும் உள்ள தொடர்பைக் காட்டுவதால் வேலைவாய்ப்புப் பெருக்கிக் கருத்தைமிகவும் பயனுடைய தென்கின்றார்.ஆனால் குட்வின் கீன்சின் பெருக்கி இன்றைய வருவாயை உருவாக்கும் வழிமுறைஆய்வுக்குப் பெரிதும் பயன்படும் வகையில் மாற்றப்பெற்ற கருவியான இருப்பதால் கானின் வேலைவாய்ப்புப் பெருக்கியை விடச் சிறந்ததென்று கருதுகின்றார்.

குறிப்பு

## 11.4 உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்க:

**1. பெருக்கி என்றால் என்ன?**

**2. முடுக்கி என்றால் என்ன?**

**வேலைவாய்ப்புப் பெருக்கியும் முதலீட்டுப் பெருக்கியும்- ஓர் ஒப்பீடு**

1. கீன்ஸின் பெருக்கி மு .கானின் வேலை வாய்ப்புப் பெருக்கி மு இரண்டும் வெவ்வேறானவை ஆகும். கீன்ஸின் பெருக்கி மு வருமானப் பெருக்கி என்றும், முதலீட்டுப் பெருக்கி என்றும் அழைக்கப்படுகிறது. கானின் வேலை வாய்ப்புப் பெருக்கி வேலை வாய்ப்பை மட்டுமே கருத்தில் கொள்கிறது.

2 கீன்ஸின் முதலீட்டுப் பெருக்கி முதலீட்டு மாற்றத்தால் நுகர்வில் ஏற்படும் மாற்றம் பற்றி ஆய்வு செய்கிறது. ஆனால் கானின் வேலை வாய்ப்புப் பெருக்கி பொதுப் பணிகளின் வேலை வாய்ப்புக்கும் மொத்த வேலை வாய்ப்புக்குமுள்ள தொடர்பு பற்றி ஆராய்கிறது.

3 கீன்ஸின் முதலீட்டுப் பெருக்கி சுக்கமானதாகவும், திட்டவட்டமானதாகவும் இருக்கிறது. ஆனால் கானின் வேலை வாய்ப்புப் பெருக்கி தெளிவற்றதாகவும் குழப்பமானதாகவும் இருக்கிறது

# அலகு-12 பேரியல் பொருளாதாரக் கொள்கை

குறிப்பு

12.1. நோக்கங்கள்
12.2. பேரியல் பொருளாதாரக் கொள்கை
12.3. உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்க
12.4 பேரியல் பொருளாதாரக் கொள்கையின்நோக்கங்களை
12.5. உங்கள் முன்னேற்றத்தைச் சரிப்பார்க்க
12.6. பேரியல் பொருளாதாரக் கொள்கை-பொருள் பற்றி அறிய

## 12.1. நோக்கங்கள்

2. பேரியல் பொருளாதாரக் கொள்கையின்நோக்கங்களை பற்றி அறிந்து கொள்ள.

## 12.2 பேரியல் பொருளாதாரக் கொள்கை-விளக்கம்

பொருளாதாரக் கொள்கையை நுண்ணியல் பொருளாதாரக் கொள்கை, பேரியல் பொருளாதாரக் கொள்கை என இரண்டாக பிரிக்கலாம். ஒரு தனிப்பட்ட அல்லது சிறிய பொருளாதரப் பிரிவைப் பற்றிய கொள்கை நுண்ணியல் பொருளாதாரக் கொள்கை எனப்படும்

பற்றாக்குறையாக உள்ள ஒரு பண்டத்தின் விலைக் கொள்கையை தீர்மானிப்பதும் பேரியல் பொருளாதாரப் பிரச்சனைகளை ஆராய்வதும் பேரியல் பொருளாதார குறிக்கோள்களை அடைவதையும் பற்றியதே பேரியல் பொருளாதாரக் கொள்கையாகும் .ஜி.கே ஷா கருத்துப்படி “ பேரியல் பொருளாதாரக் கோட்பாட்டின் நெறியியல் சார்ந்த பகுதியே பேரியல் பொருளாதாரக் கொள்கையாகும் “ சில நிர்ணயிக்கப்பட்ட குறிக்கொள்களை அடைய பணக் கொள்கை ∴

நிதிக் கொள்கை கருவிகளை ஒரு நாட்டின் அரசானது பன்படுத்துவதே பேரியல் பொருளாதாரக் கொள்கை எனப்படும். பொதுவிலை மட்டத்தை நிலைப்படுத்தல், முழுவேலை நிலை அடைதல் மற்றும் இது போன்ற பொருளாதாரம் முழுவதற்கும் பொருந்தும் நடைமுறைக் கொள்கைகள்

1929-33 ல் ஏற்பட்ட் உலகப் பெருமந்தத்திற்குப் பின்பு தான் பொருளியல் அறிஞர்கள் தேசியப் பிரச்சனைகளைப் பற்றி ஆராய்ந்தார்கள் எனெனில் அதற்கு முன்பு பொருளாதாரமானது தானாக செயல்படுகிறது. முழுவேலை நிலை நிலவுகிறது. என்ற கருத்தில் நம்பிக்கை ஆராய்ந்து அவைகளுக்கு சரியான தீர்வுகளைக் கூறியவர் கீன்ஸ் ஆவார்.

குறிப்பு

## 12.3. உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்க

1.பேரியல் பொருளாதாரக் கொள்கை என்றால் என்ன.

-2. நிதிக்-கொள்கை என்றால் என்ன

---------------------------------------------------------------------------------------

3.. பேரியல் பொருளாதாரக் கொள்கையின் நோக்கங்கள் எத்தனை வகை?

---------------------------------------------------------------------------------------------------------

## 12.4 பேரியல் பொருளாதாரக் கொள்கையின் நோக்கங்கள்

பேரியல் பொருளாதாரக் கொள்கையின் குறிக்கோள்கள் பொன்திட்ட காலம் முதல் இன்று வரை மாறிக் கொண்டே வந்திருக்கின்றன. பேரியல் பொருளாதாரக் கொள்கையின் குறிக்கோள்களை இரு வகையகப் பிரிக்கலாம் முதல்நிலைக் குறிக்கோள்கள், இரண்டாம் நிலை குறிக்கோள்கள்

### முதல்நிலைக் குறிக்கோள்கள்

1 **முழுவேலை நிலை**

கீன்ஸின் “ பொதுக்கோட்பாடு” 1936 வெளியிடப்பட்டபின்பு முழுவேலைநிலையை அடைவதுதான் பேரியல் பொருளாதாரக் கொள்கையின் முக்கியக் குறிக்கோளாகக் கருதப்டுகிறது. பிகு கருத்துப்படி “ நிலவும் கூலி மட்டத்தில் வேலை செய்ய விரும்பும் அனைவரும் வேலையைப் பெற்றிருக்கும் நிலையே முழுவேலை நிலையாகும் “ ஒரு நாட்டில் பொருளாதாரமானது முழுவேலை நிலைக்கு கீழே இருந்தால், முழுவேலை நிலையை அடைவது அரசின் இலட்சியமாக இருக்கவேண்டும் , முழுவேலை நிலையை அடைவது அரசின் இலட்சியமாக இருக்கவேண்டும் முழுவேலை நிலையைஅடைந்தபின்பு, சேமிப்பு மற்றும் முதலீட்டை சமப்படுத்துவதன் மூலம் அதனை தக்கவைத்துக் கொள்ள வேண்டும். வேலையின்மை குறைவேலைநிலை ஆகியவை நிலவும் இன்றைய சூழ்நிலையில் முழுநிலை நிலையானது பேரியல் பொருளாதாரக் கொள்கையின் முக்கிய நோக்கமாகும் உச்ச சமுதாய நலனை அடைய முழுவேலை நிலை அசவசியமாகும்

2) **விலையை நிலைப்படுத்தல்** :

குறிப்பு

உள்நாட்டு விலைமட்டத்தை நிலைப்படுத்தல் பேரியல் பொருளாதாரக் கொள்கையின் முக்கிய நோக்காமாக கருதப்படுகின்றது. பொதுவிலை மட்டத்தில் கடுமையான குறுகியகால மாற்றங்கள் இல்லாத நிலையே விலையை நிலைப்படுத்தல் எனப்படும், விலை நிலையாக இருந்தால்தான் பண்மானது சேமிப்புப் பணியையும் திறம்பட ஆற்றமுடியும். உள்நாட்டு விலைகளை நிலைப்படுத்துதலானது வணிக நடவடிக்கைகள் விரிவடைய உதவுகின்றன. செல்வ ஏற்றத்தாழ்வுகளை குறைக்கின்றன சமூக நீதியை நிலைநாட்டுகின்றது. நாட்டின் பொருளாதார நலனை அதிகரிக்க உதவுகின்றது.

3 **பொருளாதார வளர்ச்சி**

தற்போது பொருளியல் அறிஞர்கள் பேரியல் பொருளாதாரக் கொள்கையை நீண்டகாலக் கண்ணோட்டத்தோடு அணுகுவதால் பொருளாதார வளர்ச்சியோ பேரியல் பொருளாதார வளர்ச்சியோ பேரியல் பொருளாதாரக் கொள்கையின் தலையாய நோக்கமாகும் . மொத்த தேசிய உற்பத்தி விகிதத்தை அதிகரிப்பதே பொருளாதார வளர்ச்சி எனப்படும். ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை விரைவுப்படுதுவதில் பேரியல் பொருளாதாரக் கொள்கையின் கருவிகள் உதவுகின்றன . குறுகிய காலத்தில் விரைவான பொருளாதார வளர்ச்சியை அடைவது பின் தங்கிய நாடுகளின் நோக்கமாகவே உள்ளது. பொருளாதார வளர்ச்சியானது மக்களின் வறுமையைப்போக்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த பொருளாதார வளர்ச்சி இருக்கும் போது விலையை நிலைப்படுத்தல் நாணயமற்ற வீதத்தை நிலைப்படுத்தல் ஆகிய நோக்கங்கள் நிறைவேறுகின்றன

**4. சமநிலை வட்டார வளர்ச்சி**

சமநிலை வட்டார வளர்ச்சியடைவது பேரியல் பொருளாதரக் கொள்கையின் மற்றோரு முக்கிய நோக்கமாகும் வருமான மற்றும் செல்வத்தை சீராகக் பகிந்தளிக்க சமநிலை வட்டார வளர்ச்சி அவசியமாகும் இக்கொள்கையின் கீழ் வளர்ச்சியடைந்த பகுதிகளைவிட பின் தங்கிய பகுதிகளுக்கு முன்னுரிமை தரப்படுகின்றது இதன் மூலம் வட்டார ஏற்றதாழ்வுகள் மறைகின்றன

**இரண்டம் நிலைக் குறிக்கோள்கள்**

1. **முழு உற்பட்தி**

மனித ஆற்றலை குறைவாக பயன்படுத்துவதை மொத்த தேசீய உற்பத்தி இடைவெளி அளவீடுகின்றது மொத்த தேசீய உற்பத்தியானது பொருளாதாரத்தில் முழுவேலை நிலை அடையுபோது , மேலும் எவ்வளவு உற்பத்தி செய்யமுடியும் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது முழுவேலை நிலை உற்பத்திக்கும் நடப்பு வேலை நிலை உற்பத்திக்கும் உள்ள வேறுபாடே மொத்த தேசீய உற்பத்தி இடைவெளியாகும்

குறிப்பு

2 **உயர்ந்த வாழ்க்கை தரம்**

மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது பேரியல் பொருளாதாரக் கொள்கையின் மற்றொரு நோக்கமாகும் நாட்டு உற்பத்தியை அதிகரிக்கின்ற மற்றும் மக்கட்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துகின்ற நடவடிக்கைகள் இதில் அடங்கும் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுகின்ற மற்றும் மக்கட் தொகை பெருக்கத்தைக் கட்டுப்படுத்துகின்ற நடவடிக்கைகள் பேரியல் பொருளாதாரக் கொள்கையின் கீழ் வருகின்றன

**3. ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல்**

நாட்டு வருமானத்தை நியாயமாகப் பகிர்ந்தளிப்பது பேரியல் பொருளாதாரக் கொள்கையின் மற்றொரு நோக்கமாகும். வருமான ஏற்றத்தாழ்வுகள் இருக்கும் போது பணக்காரர்கள் மேலும் பணக்காரர்கள் ஆகிறார்கள் ஏழைகள் மேலும் ஏழையாகின்றனர் சிலரது கையில் பொருளாதார சக்திகள் குவிகின்றன இது நாட்டு நலனுக்கு எதிராக உள்ளது. பொருளாதார வளர்ச்சியின் பலனை பணக்காரர்கள் மட்டுமல்ல் அனைவரும் அனுபவிக்க வேண்டும் .இவ்வாறு பேரியல் பொருளாதாரக் கொள்கையானது வருமானம் வேலைவாய்ப்பு ஆகியவற்றில் அனைவருக்கும் சமவாய்ப்பு அளிப்பதை நோக்கமாக கொண்டுள்ளது

4. **சமூக நீதி**

சமூக பொருளாதார ரீதியாக சமுதாயத்தை உயர்த்ஹுவது பேரியல் பொருளாதாரக் கொள்கையின் நோக்கமாகும் சமூக நலனை உயர்த்த அரசு மேற்கொள்ளும் அனைத்துப் பொதுச் செலவு திட்டங்களும் பேரியல் பொருளாதாரக் கொள்கையில் அடங்கும் முதியோர் கல்வி பெண்கள் மற்றும் சிறுவர்கள் நலன் ஒப்புக்கால ஊதியம் மருத்துவ வசதி வேலையின்மை நிவாரணம் ஆகிய சமூக நலத் திட்டங்கள் பேரியல்

5 . **சர்வாதீனத்தைக் கட்டுப்படுத்தல்**

முதலாளித்துவப் பொருளாதாரத்தில் பேரியல் பொருளாதாரக் கொள்கையின் நோக்கம் சர்வாதீன வளர்ச்சியானது சிலரது கையில் பொருளாதார அதிகாரம் குவிவதற்கும் நுகர்வோரை உற்பத்தியாளர்கள் சுரண்டுவதற்கும் வழிவகுக்கின்றது. இத்தீங்கினை சர்வதீனத்திற்கு எதிரான சட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் தடுக்க முடியு

6 . **வாணிபச் சுழலைக் கட்டுப்படுத்தல்**

முதலாளித்துவப் பொருளாதாரத்தில் செழிப்பு மற்றும் மந்தம் போன்ற வாணிப ஏற்ற இறக்கங்கள் மாறிமாறி வருகின்றன. பொருளாதாரத்தில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள் முழுவேலைநிலை மற்றும் சீரான வளர்ச்சி

அடைவதற்கு தடையாக உள்ளன. என்வே வாணிபச் சுழலைத் தடுப்பது பேரியல் பொருளாதாரக் கொள்கையின் நோக்கமாகும்

**7 .சமநிலை அயல்நாட்டு செலுத்தல் நிலை**

அயல்நாட்டு செலுத்தல் நிலையில் சமநிலையை அடைவது பேரியல் பொருளாதரக் கொள்கையின் மற்றொரு நோக்கமாகும் .அயல்நாட்டு செலுத்தல் நிலை பாதகமாக இருக்கும்போது நாட்டைவிட்டு தங்க வெளியேறுகின்றது. அத்துடன் பிற குறிக்கோள்களை அடைவதை தடை செய்கின்றது. எனவே அயல்நாட்டு செலுத்தல் நிலையில் சமநிலையை ஏற்படுத்துவது பேரியல் பொருளாதாரக் கொள்கையின் நோக்கமாகும்.

**குறிப்பு**

8. **பொருளாதார சுதந்திரம்**

வணிகக் கட்டுப்பாடுகள் தனிநபர் சுதந்திரத்தை பாதிக்கின்றன பொருளாதார சுந்தந்திரம் என்பது தலையிடாக் கொள்கை அல்ல மாறாக் தனிநபரின் நடவடிக்கைகளில் குறைவான கட்டுப்படுகள் இருக்கின்றன நிலையைக் குறிக்கின்றது. எனவே பேரியல் பொருளாதார கொள்கையின் மற்றொரு நோக்கம் பொருளாதார சுதந்திரம் ஆகும்.

## 12.5 உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்க

1.

பேரியல் பொருளாதார குறிக்கோள்களை அடைவதையும் பற்றியதே பேரியல் பொருளாதாரக் கொள்கையாகும

2.. பேரியல் பொருளாதாரக் கொள்கையின் குறிக்கோள்களை இரு வகையகப் பிரிக்கலாம்

1. முதல்நிலைக் குறிக்கோள்கள்,
2. இரண்டாம் நிலை குறிக்கோள்கள்

**பேரியல் பொருளாதாரக் கொள்கையின் கருவிகள்**

( Instruments of Macro economic policies)

1. **நிதியியல்˙ கொள்கை**
2. **பணவியல் கொள்கை**
3. **பண்ணாட்டு பொருளாதாரக் கொள்கை**
4. **வருமானக்கொள்கைகள்**

குறிப்பு

# அலகு-13 வளர்ச்சி மற்றும் விநியோகம்

13.1. நோக்கங்கள்
13.2 வளர்ச்சி மற்றும் விநியோகம்
13.3. உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்க
13.4. உங்கள் முன்னேற்றத்தைச் சரிப்பார்க்க
13.5. பொருளாதார வளர்ச்சி

## 13.1 நோக்கங்கள்

1. வளர்ச்சி மற்றும் விநியோகம் பற்றி அறிந்து பொள்ளுதல்
2. பொருளாதார வளர்ச்சி பற்றி அறிந்து பொள்ளுதல்

முழு நிறை வேலை வாய்ப்பை அடைய எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள்.முழு நிறை வேலை வாய்ப்பை அடைதல் என்பது பேரியல் பொருளாதாரத்தின் மிக முக்கியமான கொள்கையாகும். திறனுள்ள தேவை அளவை அதிகரிப்பதற்கு நாம் முதலீடு அல்லது நுகர்வு அல்லது இரண்டையும் ஊக்குவிக்க வேண்டும். இதற்காக தற்கால அரசுகள் பொருத்தமான பணக் கொள்கை, நிதிக் கொள்கை மற்றும் இதரக் கொள்கைகளையும் பின்பற்ற வேண்டும். இவை பற்றி இங்கு சுருக்கமாக ஆராய்வோம்.

**பணக் கொள்கை (** Monetary Policy **)**

பணத்தால் ஏற்படும் நன்மைகளை மிகைப்படுத்தவும், பணத்தால் விழையும் தீமைகளை குறைத்திடவும் ஒவ்வொரு நாட்டின் மைய வங்கியும் பின்பற்றும் கொள்கை பணக் கொள்கை எனப்படும். முழு நிறை வேலை வாய்ப்பு நிலையை அடையப் பின்வரும் பணக் கருவிகளைப் பயன்படுத்த வேண்டும்.

1. வங்கி வீதத்தை மைய வங்கி குறைக்க வேண்டும்

2. மைய வங்கி வெளி அங்காடியில் விற்பனையாகும் குறுங்கால, நீண்ட காலக் கடன் பத்திரங்களை விலைக்கு வாங்க வேண்டும்.

3. மைய வங்கி, வணிக வங்கிகள் வைத்திருக்க வேண்டிய ரொக்க இருப்பு விகிதத்தைக் குறைக்க வேண்டும்.

இம்முறைகளைப் பின்பற்றுவதனால், நாட்டில் பண அளிப்பு அதிர்கரித்து, முதலீட்டளவு உயர்ந்து, உற்பத்தியும், தேசிய வருவாயும், வேலை வாய்ப்பும் அதிகரிக்கிறது. முழு நிறை வேலை வாய்ப்பு நிலையில் சேமிப்பும் முதலீடும் சமமாக இருக்கும்.

**2. நிதிக் கொள்கை (** Fiscal Policy **)**

வரி விதித்தல், பொதுச் செலவு, பொதுக் கடன், பற்றாக் குறை நிதியாக்கம், நிதி நிர்வாகம், சம்பந்தமான ஓர் அரசின் கொள்கை அந்த

அரசின் நிதிக் கொள்கை எனப்படும். பல்வேறு நோக்கங்களில் முழு நிறை வேலைவாய்ப்பு நிலையை அடைதல் என்பது நிதிக் கொள்கையின் ஓர் முக்கியமான நோக்கமாகும். முழு நிறை வேலை வாய்ப்பை அடைவதற்கு அரசு பின்வரும் நிதிக் கருவிகளைப் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு

1. அரசு பற்றாக் குறை வரவு - செலவுத் திட்டத்தை தயாரித்து, பற்றாக்குறை நிதியாக்கத்கை மேற்கொள்ள வேண்டும்.

2. வரிகள் குறைக்கப்பட வேண்டும். 'புதிய வரி விதிப்பு தவிர்க்கப்பட வேண்டும்'.

3. பொதுச் செலவு அதிகரிக்கப்பட வேண்டும். பொதுச் செலவை அதிகரிப்பதற்கு குழாய் நிரப்புகை ( pump priming)ஈடு கட்டும் செலவு ( compensatory spending ) ஆகிய முறைகளைப் பின்பற்றலாம்.

4. அரசு எழுப்பும் பொதுக் கடன் அளவைக் குறைத்து, ஏற்கனவே அரசு பெற்றிருந்த கடன்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்

கீன்ஸ் " வாணிபச் சூழல்களிலுள்ள பின்னோட்டத்தையும் முன்னோட்டத்தையும் குறைப்பதுவும், வேலை நிறைவை அடையும் வகையில் சேமிப்புக்கும் முதலீட்டிற்கும் இடையில் சமநிலையைக் கொண்டுவருவதும் பணக்கொள்கையின் நோக்கமாகும். என்று கூறியிருக்கின்றார். பேராசிரியர் ஹாமும் இந்த பணகொள்கையின் நோக்கங்களையும் ஆராய்ந்த கிரௌதர் , வேலை நிறைவை அடையும் வகையில் சேமிப்பையும் முதலீட்டையும் சமநிலைக்குக் கொண்டுவருகின்ற பணக் கொள்கையே சிறந்ததென்ற முடிவுக்கு வருகின்றார்

**வேலை நிறைவு விளக்கம்**: முழு நிறை வேலை வாய்ப்புக் கருத்தை பல்வேறு பொருளியலறிஞர்களும் வெவ்வேறு வகையில் விளக்குவதால் அதனைப்பற்றிய தெளிவு சரியான முறையில் ஏற்படவில்லை, பொதுவாக வேலை நிறைவு என்றால் வேலையின்மையே இருக்கக்கூடாதென்ற பொருளல்ல . தகுதியும் திறமையுமுடைய எல்லோருக்கும் ஆக்கப்பூர்வமாக வேலை செய்து கொண்டிருக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை. பருவகாலத்தை ஒட்டியும், உழைப்பாளிகளின் விருப்பத்தைச் சார்ந்தும் ஓரளவு வேலையிண்மை இருக்கலாம். ஆனால் எந்த அளவிற்கு வேலையற்றவர்கள் இருக்கலாமென்பதில் பொருளியலறிஞர்களுக்கிடையில் கருத்து வேறுபாடு இருந்தது. வேலையற்றிருப்பவர்களுக்குக்கெல்லாம் நடைமுறைக் கூலியில் விரைவில் வேலை கிடைக்கும் வாய்ப்புள்ள நிலையையே முழுநிறை வேலைவாய்ப்பு என்கின்றோம்.

முழுநிறை வேலை வாய்ப்பை அடைவது மட்டுமே பணக்கொள்கையின் நோக்கமாக இருக்கமுடியாது. அதன் மூலமாக

குறிப்பு

சமுதாய நலம் உச்சநிலைக்கு உயர வேண்டும் . இந்தநிலையை அடைய உழைப்போடு எல்லா உற்பத்திச் சாதனங்களையும் முழுமையாகப் பயன்படுத்த வேண்டும்.எப்படி வேலை நிறைவை அடைவது. கீன்சின் கருத்துப்படி நாட்டிலுள்ள உற்பத்திச் சாதனங்களை எல்லாம் முழுமையாகப் பயன்படுத்தி உச்ச நிலையில் உற்பத்தியைப் பெற வேண்டுமானால் நாட்டின் மொத்தச் செலவு சரியான அளவில் இருக்க வேண்டு, .வேலையின்மைச் சிக்கலைத் தீர்க்க பண நிர்வாகத்தினர் நுகர்வுச் செலவையும் முதலீட்டையும் கூட்ட வேண்டும். குறுகிய காலத்தில் நுகர்வின் அளவு ஏறத்தாழ நிலையாக இருக்கும். ஆதலால் பண நிர்வாகத்தினர், முதலீட்டுச் செலவைக் கூட்டத்தக்க நடவடிக்கை வேண்டும். மலிவும் பணக்கொள்கையின் மூலம் முதலீட்டாளர்களைக் கடன் வாங்கத் தூண்டலாம். முதலீடு கூட வேலை வாய்ப்புக் கூடும்.

**மலிவுப் பணக்கொள்கையின்** மூலம் வேலைநிறைவை அடையலாம். ஆனால் வேலை நிறைவை அடைந்தபிறகு மலிவுப் பணக் கொள்கைக்குப் பதிலாக அருமைப் பணக்கொள்கையைப் பின்பற்ற வேண்டும் வேலை நிறைவுக்குப் பின்னரும் மலிவுப் பணக்கொள்கையேயே பின்பற்றினால் பணவீக்கம் ஏற்படும்

முழு நிறை வேலை வாய்ப்புக் கொள்கையை மற்றைய பணக்கொள்கைகளோடு சேர்த்துப் பின்பற்றலாம். விலையேற்றக் கொள்கை வேலை நிறைவை அடையத் துணை செய்யும் வேலை நிறைவை அடைந்த பிறகு நிலையான விலைக்கொள்கையைப் பின்பற்றவேண்டும். அன்னியச் செலாவணி மாற்று வீதத்தை நிலைப்படுத்துவது, செலுத்து நிலையில் சமநிலையைக் கொண்டு வருவதும் ஓரளவு வேலை நிறைவுக் கொள்கையோடு இணைந்தவைகளே. இதனால் தான் மற்றைய பணக்கொள்கைகளைவிட வேலை நிறைவுப் பணக் கொள்கையைச் சிறந்ததாகக் கருதுகின்றனர்.

**காரணங்கள்**

1. **காலத்தேவை** : இன்றைய உலகின் மிகப் பெரிய சிக்கலாக வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கின்றது. எண்ணற்ற மக்கள் முழு நேரமும் வேலையின்றியும், பகுதிநேர வேலையின்றியும் அல்லற்படுகின்றனர். இவர்களுக்கெல்லாம் வேலைவாய்ப்பை வழங்குகின்ற வேலை நிறைவுப் பணக் கொள்கைகள் தற்காலத் தேவைக்கு ஏற்றதாக இருக்கும்.

2. **மனிதாபிமானக் கொள்கை** : வேலையின்மைக் கொடுமையால் எண்ணற்றவர்களின் தனிமனித வாழ்க்கையும் சமுதாய அமைதியும் பாதிக்கப்படுகின்றன. வேலையற்றவர்களுக்கு வேலைவாய்ப்பளிப்பதென்பது வாழ்வளிப்பதாகவே இருக்கும். ஆதலால் வேலை நிறைவுக் கொள்கை சிறந்த மனிதாபிமானக் கொள்கையாகக் கருதப் பெறுகின்றது.

3. **சமுதாய நலக்கொள்கை**: சமுதாயத்தின் கடைநிலையிலிருக்கும் பலருக்கு வேலை வாய்ப்பை தருகின்ற பணக்கொள்கை சமுதாயத்தின் மொத்த நலனை உயர்த்தும் கொள்கையாகத் திகழ்கின்றது.

4**. ஏற்றத் தாழ்வுகளைத் தவிர்த்தல்:** முழுநிறை வேலைவாய்ப்புக்கொள்கை செயல்பட்டால் பொருளாதார நடவடிக்கைகளில் தோன்றும் ஏற்றத்தாழ்வுகள் தவிர்க்கப்படும்.

**குறிப்பு**

**விநியோகம் பற்றிய பேரியல் கோட்பாடுகள்**

பொருளாதாரத்தில் விநியோகம என்பது ஒரு நாட்டின் தேசீய வருமானம் எவ்வாறு சமுதாயத்தில் உள்ள பல்வேறு மக்களிடையே விநியோகம செய்யப்படுகிறது என்பதை குறிப்பிடுகிறது. அது ஆள்சார் பகிர்வாகவோ, பணிசார் பகிர்வாகவோ இருக்கலாம். ஆள்சார் பகிர்வு என்பது தேசிய வருமானம் எவ்வாறு ஒரு நாட்டில் உள்ள பல்வேறு தனிமனிதரிடையே பகிரப்படுகிறது என்பது பற்றிய ஆய்வு ஆகும்.

தேசிய வருமானம் தனி மனிதரிடையே சமமாகப் பங்கிடப்படவில்லை என்பதை நாம் அறிவோம். செல்வமும், வருமானமும் பகிரப்படுவதில் சமமின்மை உள்ளது. ஆள்சார் பகிர்வில் வருமானம் மற்றும் செல்வம் பகிரப்படுவதில் ஏன் ஏற்றத்தாழ்வு உள்ளது. அதன் விளைவுகள் என்ன, ஏற்றத் தாழ்வுகளை நீக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றி ஆய்வு செய்கிறோம்.

மாறாக, பணிசார் பகிர்வு என்பது உற்பத்திக் காரணிகளின் வருவாய் பற்றிய ஆய்வு ஆகும். அதாவது, உற்பத்திக் காரணிகள் தங்கள் உற்பத்திவழிப் பணிகளில் ஈடுபடும்போது எவ்வாறு ஊதியம் பெறுகின்றன என்பதை இது குறிப்பிடுகிறது. எனவே பணிசார் பகிர்வில் எவ்வாறு நிலத்திற்கான வாரம், உழைப்பிற்கான கூலி, முதலுக்கான வட்டி மற்றும் தொழில் முயல்வோருக்கான இலாபம் நிர்ணயிக்கப்படுகிறது என்பதை நாம் ஆராய்கிறோம்.

பேரியல் பகிர்வுக் கோட்பாடுகள் பணிசார் பகிர்வையே தொடர்புபடுத்திக் கூறுகின்றன. முதன் முதலில் பேரியல் அடிப்படையில் பகிர்வைப் பற்றி ஆராய்ந்தவர் டேவிட் ரிக்கார்டோ, இவருக்குப் பின் கார்ல் மார்க்ஸ், காஸ்டர் போன்றவர்கள் இதைப் பற்றி ஆராய்ந்தனர்.

**கார்ல் மார்க்சின் கோட்பாடு**

ரிக்கார்டோவின் உபரிக் கொள்கையிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டது தான் மார்க்சின் வருமானப் பகிர்வுக் கொள்கை ஆகும்.

அவரது மொத்தக் கோட்பாடும் உபரிமதிப்பு ஆய்வை அடிப்படையாகக் கொண்டது தனது ஆய்வில் கூலி மற்றும் இலாபத்திற்கிடையே வருமானப் பகிர்வு அமைவதைப் பற்றி எண்ணினார். கூலி அல்லாத வருமானமான வாரம் மற்றும் வட்டியை இலாபத்தோடு சேர்த்தார்.

குறிப்பு

**உபரி மதிப்பு** :

மார்க்சின் கருத்துப்படி எப்பொழுதும் இரண்டு வகையான மக்கள் இருப்பர் – தொழிலாளிகள் மற்றும் முதலாளிகள். முதலாளித்துவச் சமுதாயத்தில் எல்லா உற்பத்தி மூலங்களும் முதலாளிகள் என அழைக்கப்படும் மக்களில் ஒரு சிறு பகுதியினரிடமே இருக்கும்.

மாறாக தொழிலாளர்கள் தங்கள் உழைப்பை முதலாளிகளுக்கு விற்பர். எந்திரங்களையும் மூலப்பொருட்களையும் பயன்படுத்தி, அவற்றோடு உழைப்பையும் பயன்படுத்தி முதலாளிகள் பொருளை உற்பத்தி செய்கின்றனர். இவ்வுற்பத்தி நடவடிக்கையே உபரி மதிப்பை உருவாக்குகிறது. அவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட பொருள் அங்காடியில் ஒரு மதிப்பு பெறுகிறது.

அப்பொருளின் அங்காடி மதிப்பை விட தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் கூலி குறைவாக இருக்கிறது. உற்பத்தியின் அங்காடி மதிப்பிற்க்கும் தொழிலாளர்கட்கு அளிக்கப்படும் கூலிக்கும் இடையேயுள்ள வேறுபாடு உபரிமதிப்பாக அமைகிறது. இதுதான் தொழிலாளர் வர்க்கத்தை சுரண்டும் எளிதான முறையாக உள்ளது என்றார் மார்க்ஸ். உபரி மதிப்பின் அளவு அதிகமாக அதிகமாக சுரண்டல் அதிகமாக உள்ளது.

சமுதாயத்திற்குப் பயன்படும் பொருட்களைச் செய்வதில் முதலாளிகள் ஆர்வம் காட்டுவதில்லை. ஆனால் உபரி மதிப்பை அதிகம் பிரித்து எடுத்தலிலேயே ஆர்வமாக உள்ளனர். எனவே உழைப்பைச் சுரண்டுவதனால் உபரி மதிப்பு உருவாகிறது.

ஒரு தொழிலாளி 12 மணி நேரம் வேலை செய்கிறார் என வைத்துக் கொள்வோம். இதில் தனக்கு வேண்டிய பொருட்களைப் பெற ( பராமரிப்பு மட்டம்) 6 மணி நேரம் உழைக்க வேண்டியதிருக்கிறது. இதனை அவசிய உழைப்பு நேரம் ( Nevessary Labour Time ) என மார்க்ஸ் குறிப்பிடுகிறார். உழைப்பாளியின் வேலை நேரத்தில் உபரி மதிப்பு உருவாகிறது. அதன் மதிப்பை உபரி நேரம் ( Surplus Labour Time ) என மார்க்ஸ் குறிப்பிடுகிறார்.

**சுரண்டல் வீதம்** ( Rate of Exploritation)

மூலதனத்தை நிலையான முதல் ( Constant Capital ) மாறும் முதல் ( Variable Capital ) என இரண்டாக மார்க்ஸ் பிரிக்கிறார். இயந்திரங்கள், கருவிகள், கட்டிடங்கள், கச்சாப் பொருள்கள் இவைகளில் முதலீடு செய்யப்பட்டது. நிலையான முதலாகும். உழைப்புக்கு கொடுக்கப்படும் கூலி மாறும் முதலாகும். மார்க்ஸ் கருத்துப்படி மாறும் முதலே உபரி மதிப்பை உருவாக்குகிறது. உபரி மதிப்பை முதலாளிகள் எடுத்துக் கொள்வதை மார்க்ஸ் சுரண்டல் என்கிறார். உபரி மதிப்பிற்கும், மாறும் மூலதனத்திற்கும் உள்ள விகிதமே சுரண்டல் வீதம் எனப்படும்.

சுரண்டல்வீதம் = உபரி மதிப்பு / மாறும் முதல் = S / V

மேற்கண்ட எடுத்துக்காட்டில்

சுரண்டல் வீதம் = 6 / 6 = 1

அல்லது

100 %

மார்க்ஸ் கருத்துப்படி மாறும் மூலதனம் மட்டுமே உபரி மதிப்பை உருவாக்குகின்றது. கீழ்க்கண்ட மூன்று வழிகளில் உபரி மதிப்பை முதலாளிகள் அதிகப்படுத்தலாம் : அ) தொழிலாளர்களின் வேலை நேரத்தை அதிகப்படுத்துவது ஆ) கூலியை பராமரிப்பு மட்டத்திற்குக் கீழ் குறைப்பது அல்லது தொழிலாளர்கள் தங்களுக்காக உழைக்கின்ற அவசிய உழைப்பு நேரத்தை குறைப்பது. இ) தொழிலாளர்களின் உற்பத்தித் திறனை பெருக்குவது.

**இலாபவிகிதம் வீதம் (Falling Rate of Profit )**

நீண்டகாலத்தில் முதலாளித்துவ இலாபவிகிதம் குறைவதாக மார்க்ஸ் கருதினார். உபரி மதிப்புக் கோட்பாடு , மூலதனக் குவிப்பு, முதலின் தொகுப்புக் கூட்டிணைப்பு ஆகிய கருத்துக்களின் அடிப்படையில் இலாப விகிதம் குறைந்து செல்லும் போக்கை மார்க்ஸ் விளக்குகிறார்.

முதலின் தொகுப்புக் கட்டிணைப்பில் ( நிலையான முதல், மாறும் முதல் ) மாற்றம் ஏற்படுகின்றன. முதலாளிகள் இயந்திரங்களை ( நிலையான முதல் ) அதிகமாகப் பயன்படுத்தி தொழிலாளர்களின் அளவைக் குறைக்கின்றனர். மேலும் மூலதனத்தைத் திரட்ட முதலாளிகள் விரும்புவதால் நிலையான முதலை அதிகரிக்கின்றனர்.

குறிப்பு

குறிப்பு

இதனால் இலாப விகிதம் குறையும் அதாவது முதலாளித்துவம் வளர வளர் இலாபவிகிதம் குறைந்து கொண்டே செல்லும்.

மார்க்ஸின் எடுத்துக்காட்டை வைத்து குறைந்து வரும் இலாபவிகித விதியை விளக்கலாம். எடுத்துக்காட்டாக உபரி மதிப்பின் விகிதம் ( S/V ) 100 சதவிகிதம் என கொள்வோம். தொழிலாளர் கூலியை 100 என கொள்வோம்.

இவ்வாறு உபரி மதிப்பின் விகிதம் மாறாதிருத்தாலும் இலாப விகிதம் குறைகிறது . இத்தைய இலாபவிகிதம் குறைந்துவரும் போக்குவதை நிலையான முதலில் அதிகரிப்பே காரணம். இதனைச் சரி செய்ய மேலும் வேலை நேரத்தை உயர்த்த முற்படுவர்.

**வேலையில்லாதோர் படை ( Industrial Reserve Arumy )**

மூலதனத் திரட்சியின் பின் விளைவுகளில் ஒன்று வேலையில்லாத பாட்டாளிப் பெருக்கமாகும். தொழில் நுட்பப் பெருக்கத்தினால் முடிகிறது. அதோடு, சிறுதொழில்களின் அழிவு, வேலை தேடி கிராம மக்கள் நகரங்களுக்கு இடம் பெயர்தல் ஆகிய காரணங்களால் வேலையில்லாதோர் படை வளர்வதை முதலாளிகள் ஆதரிப்பார்கள். ஏனெனில் அவர்களுக்கு குறைந்த கூலியில் தொழிலாளர்கள் கிடைப்பார்கள். ஆனால் வேலையில்லாதோர் படை பெருகும்போது பாட்டாளிகளின் துன்பமும் துயரமும் அதிகரிக்கின்றன.

**குறைகள்:**

மார்க்ஸ் வாரத்தையும் வட்டியையும் தனித்தனி ஊதியாக கருதாதது தவறு. அவர் கூலி அல்லாத வருவாய் அனைத்தையும் இலாபத்தில் சேர்த்தது தவறு.

இலாபத்தை நிர்ணயிப்பதில் தொழில்முனைவோரின் முக்கியத்துவத்தை ஆராயாமல் விட்டுவிட்டது தவறு.

மார்க்ஸின் அதிகரித்து வரும் முதலின் தொகுப்புக் கூட்டிணைப்பு என்பதில் உள்ளார்ந்த முரண்பாடுகள் உள்ளன. மாறும் முதல் உபரி முழுவதற்கு வழியாக இருப்பதால், முதலின் தொகுப்புக் கூட்டிணைப்பில் மேலும் அதிகமான நிலைமுதலை புகுத்துவது பொருளற்றது.

கால்டர் மற்றும் ராபின்சன் கருத்துப்படி , மார்க்ஸின் முதலின் தொகுப்புக் கூட்டிணைப்பு விதியின் மூலம் குறைந்துவரும் இலாப விகித விதியை பெறமுடியாது.

பொருளாதார வளர்ச்சி ஏற்படும் பொழுது நாட்டு வருமானத்தில் தொழிலாளரின் பங்கு குறையும் என மார்க்ஸ் குறிப்பிட்டது தவறு தொழிலாளர் சங்கங்களின் பலத்தால் தொழிலாளரின் கூலி அதிகரித்து வருகிறது.மார்க்சியச் சிந்தனை இன்றும் நிலவுகிறது. நாட்டு வருமானப் பகிர்வில் உள்ள ஏற்றத்தாழ்வை அவர் எடுத்துக் காட்டியுள்ளார்.

குறிப்பு

## 13.2 பொருளாதார வளர்ச்சி ( Economic Growth )

இப்பொழுது பணக்கொள்கையின் நோக்கமாக முழுநிறை வேலை வாய்ப்புக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் குறைய, பொருளாதார வளர்ச்சியைப் பெறுவது பணக் கொள்கையின் தலையாய நோக்கமாகக் கருதிவருகின்றனர். சரியான பணக் கொள்கையின் மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் துணை செய்ய வேண்டுமென்ற கருத்து மிகவும் செல்வாக்குப் பெற்று வருகின்றது.

முன்பு பொருளியலறிஞர்கள் பணக்கொள்கையை ஒரு நீண்டகாலக் கண்ணோட்டத்தோடு அணுகின்றனர் இதனால் பொருளாதார வளர்ச்சியையே பணக் கொள்கையின் தலைசிறந்த நோக்கமாகக் கருதுகின்றனர்.

பொருளாதார வளர்ச்சி பணக்கொள்கையின் முக்கிய நோக்கமாக மாறி இருப்பதை அமெரிக்காவின் பணக்கொள்கை மாற்றத்திலிருந்து அறியலாம். அமெரிக்காவின் 1946-ஆம் ஆண்டின் வேலை வாய்ப்புச் சட்டம் வேலை வாய்ப்பை உச்சநிலைக்கு உயர்த்துவது மட்டுமல்லாமல் உற்பத்தியையும் உச்சநிலைக்கு கொண்டுவருவதை அமெரிக்கக் கூட்டரசின் பொறுப்பாக்கியுள்ளது. இந்த நோக்கத்தோடு அமெரிக்காவின் பணக்கொள்கையை உருவாக்கிச் செயலபடுத்துகின்றன.

பின் தங்கிய பொருளாதாரமுள்ள நாடுகளில் பொருளாதார வளர்ச்சிக்குக் கொடுக்கின்ற முக்கியத்துவம் மிகுந்துவருகின்றது. நீண்டகால அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்தி, பொருளாதார வளர்ச்சிக்கு ஆக்கம் தரும்வகையில் பிந்தங்கிய நாடுகளின் பணக்கொள்கை அமைய வேண்டியதன் அவசியத்தைப் பொருளியலறிஞர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். ஆனால் ஹோவார்டு எல்லிஸ் போன்ற சில பொருளியலறிஞர்கள், பின் தங்கிய நாடுகளில் பொருளாதார வளர்ச்சியைப் பெறும் நோக்கில் அமைகின்ற பணக்கொள்கை பணவீக்கத்தை ஏற்படுத்தி பொருளாதாரத்தை சீர்குலைக்குமென்று கருதுகின்றனர்.

ஆனால் இந்தக் கருத்தைப் பெரும்பாலான பொருளியலறிஞர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை

பொருளாதார வளர்ச்சிக்கேற்ற பணக்கொள்கை பொருளாதார வளர்ச்சிக்கு துணை செய்கின்ற பணக் கொள்கையில் குறிப்பாக இரண்டு இயல்புகள் இருக்கவேண்டும்

குறிப்பு

1. நெகிழ்வுத் தன்மை : மொத்தப் பணத் தேவையும் பொருட்களின் பணிகளின் மொத்த அளிப்பும் சமமாக இருக்கும்படி செய்வது பண நிர்வாகத்தினரின் பொறுப்பாகும். இந்தப் பொறுப்பினைச் சரியான முறையில் மேற்கொள்ளவேண்டுமானால் பணக்கொள்கை நெகிழ்வுடைவதாக இருக்கவேண்டும் . பணக்கொள்கையில் அமைகின்ற நெகிழ்வுத்தன்மையின் மூலமாகத்தான் உள்நாட்டுப் பொருளாதாரத்தில் சமநிலையை உருவாக்க இயலும் . இதனால் விலை நிலைபெற பொருளாதார வளர்ச்சி ஏற்படும்.

2. முதலாக்கத்தைத் தூண்டுதல்: பணக்கொள்கை நாட்டில் மூலதனத்தைப் பெருக்கக் கூடியதாக இருக்கவேண்டும். விலை ஏற்றத் தாழ்வைத் தவிர்த்து பணக்கொள்கை முதலாக்கத்திற்குத் துணை செய்தால் பொருளாதார வளர்ச்சி ஏற்படும்.

**சிறப்பு:**

மற்றைய பணக்கொள்கையின் நோக்கங்களைவிட பொருளாதார வளர்ச்சி நோக்கத்தைக் கீழ்க்கண்ட காரணங்களுக்காகச் சிறந்ததாகக் கருதுகின்றனர்.

1. நீண்டக்கால கண்ணோட்டம்: விலையை நிலைப்படுத்துதல், அன்னியச் செலாவணி மாற்றுவீதத்தை நிலைப்படுத்துதல்.வேலை நிறைவு ஆகிய நோக்கங்கள் குறுகிய காலக் கண்ணொட்டத்தில் அமைந்தவை. ஆனால் பொருளாதார வளர்ச்சி நோக்கம் நீண்ட காலக் கண்ணோட்டத்தில் அமைந்துள்ளது.

2. எல்லா நாடுகளுக்கும்: பொருளாதார வளர்ச்சி நோக்கம் வளர்ச்சி பெற்ற, வளர்ச்சி பெறாத நாடுகளுக்கும் ஏற்ற பணக்கொள்கையாகும், ஒவ்வொரு நாட்டின் பணநிர்வாகத்தினரும் பொருளாதார வளர்ச்சி வீதத்தைக் கூட்டுவது இக்காலத் தேவையாக இருக்கின்றது.

பொருளாதார வளர்ச்சியைப் பணக்கொள்கையின் நோக்கமாக ஏற்றுக்கொள்கின்றபொழுது எத்தகைய பொருளாதார வளர்ச்சியை நோக்கி முயலவேண்டுமென்ற கேள்விபிறக்கின்றது. இதற்கு கோட்பாட்டின் அடிப்படையில், வளர்ச்சியின் இறுதிநிலைச் செலவும் சமமாக இருக்கின்ற வகையில் உத்தம பொருளாதார வளர்ச்சி வீதத்தை அடைய வேண்டுமென்று விடையளிக்கின்றனர். ஆனால் நடைமுறையில் இந்த உத்தம அளவு வளர்ச்சி வீதத்தை நிர்ணயிக்க இயல்வதில்லை

## வருமானம் சார்ந்த கொள்கைகள்

அ) மோதுகின்ற நோக்கங்களுக்கிடையில் சரியான நோக்கத்தைத் தீர்மானித்தல் பல்வேறு வகையான பண நோக்கங்களின் சிறப்புக்களையும்

குறிப்பு

குறைகளையும் ஆராய்ந்தோம். பொதுவாக அவை எல்லாம் ஒன்றோடொன்று தொடர்புடையவையாகவும், துணை செய்வனவாகவும் இருக்கின்றன. ஆனால் அவற்றை எல்லாம் ஒரே நேரத்தில் பின்பற்ற இயலாது. நடைமுறைக்குக் கொண்டு வருகின்ற பொழுது நோக்கங்கள் ஒன்றோடொன்று முரண்படுவதையும் காணலாம்.

எடுத்துக்காட்டாக, உலகப் போருக்குப் பின்னால் நுகர் பொருட்களின் விலைகள் தொடர்ந்து கூடின . ஆனால் உற்பத்தி வேலைவாய்ப்பு , வருவாய் ஆகியாஇ குறைந்திருக்கின்றன. அந்தச் சூழ்நிலையில் விலையை குறைக்க பண அளிப்பைக் குறைப்பதும் வாணிப நடவடிக்கைக் கூட்ட மலிவுப் பணத்தின் அளவைக் கூட்டுவதும் பணக்கொள்கையின் நோக்கங்களாக இருக்க வேண்டும்.இந்த நோக்கங்கள் ஒன்றோடொன்று முரண்பட்டு மோதிக்கொள்வதைக் காணலாம். அப்படிப்பட்ட் சூழ்நிலையில் சரியான பணக்கொள்கையின் நோக்கத்தைத் தீர்மானிப்பது பண நிர்வாகத்தின் பொறுப்பாகும்.

ஆ) **வளர்கின்ற பொருளாதாரத்தில் பணக்கொள்கையின் பங்கு**: பொருளாதார வளர்ச்சி பெற்ற நாடுகளிலுள்ள சூழ்நிலை பொருளாதார வளர்ச்சி பெற்ற நாடுகளிலுள்ள சூழ்நிலையிலிருந்து வேறுபடும். ஆதலால் வளர்ச்சிப்பெற்ற நாடுகள் பின்பற்றுகின்ற பணக்கொள்கையின் நோக்கமும் வளர்ச்சி பெற்றுக்கொண்டிருக்கின்ற நாடுகள் கையாள்கின்ற பணக்கொள்கை நோக்கமும் வேறுபட்டிருப்பதைக் காணலாம். வளர்ச்சி பெற்ற நாட்டில் விலையை நிலைப்படுத்துதல் , வெலை நிறைவை ஏற்படுத்துதல் போன்றவை பணக்கொள்கையின் நோக்கங்களாக இருக்கலாம். ஆனால் பின் தங்கிய நாடுகளில் பொருளாதார வளர்ச்சி ஒன்றுதான் பணக்கொள்கையின் நோக்கமாக இருக்க முடியும்.

இ) **பணக் கொள்கை -** ஒரு பொது மதிப்பீடு

பொருளாதரப் பெருமத்தம் ஏற்படுவதற்கு முன்னால் நாட்டில் பொருளாதார நிலைப்பேற்றிற்கு பணக்கொள்கை பெருந்துணை புரிவதாகக் கருதினர். மத்ததிலிருந்து விடுபட்டு மீள பணக்கொள்கை துணை செய்யததால் பணக்கொள்கை தனது முக்கியத்துவத்தை இழந்தது.

இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் தோன்றிய பணவீக்கத்தை அரசிதைக் கொள்கையால் தடுத்த நிறுத்த இயலவில்லை . மறுபடியும் பணக்கொள்கை முக்கியத்துவம் பெற்றது.

**பணக்கொள்கையின் நன்மைகளைத்** தொகுத்துக் கூறாலாம்

1. பணக் கொள்கை மிகவும் நெகிழ்ச்சிடையது. மாறுகின்ற சூழ்நிலைகளுக்கேற்பப் பயன்படுத்தலாம்

குறிப்பு

2. பொருளாதார நடவடிக்கைகளில் அரசின் தலையீடு குறைவாக இருக்கும்

3. பணக் கொள்கையின் மூலம் பொருளாதாரக் கட்டுப்பாடுகளைக் கொண்டுவரலாம்

4. கடனைச் சார்ந்து நடைபெறும் தனியார் முதலீட்டின் வேறுபாட்டைத் தவிக்க முடிக்கின்றது.

ஈ) பணக்கொள்கையும் அரசிறைக் கொள்கையும்

1930- ஆம் ஆண்டிற்கு முன்னாள் பொருளாதார நெருக்கடிக் காலங்களில் அரசின் பொதுப்பணிகளை மேற்கொள்வதோடு அரசிறைக்கொள்கை நின்றுவிட்டது. ஆனால் பின்னால் அரசிறைக் கொள்கை முக்கியத்துவம் பெற்றது. அரசின் வரவு - செலவுத் திட்டம் பொருளாதார நடவடிக்கைகளைப் பாதிப்பதையும், மாற்றுவதையும் காண்கின்றோம்.

பணக்கொள்கையால் மந்த நிலையிலிருந்து பொருளாதாரத்தை மீட்சியுறச் செய்ய இயலவில்லை என்றால், அரசிறைக் கொள்கை அதனைச் சாதித்து விடுகின்றது. ஆனால் பணக்கொள்கை சிறந்ததாக இருக்கின்றது. இந்த வகையில் இரண்டும் ஒன்றுக்கொன்று துணைசெய்கின்றன. இந்திய ரிசர்வ் வங்கியின் பணக் கொள்கை: இந்திய ரிசர்வ் வங்கியின் பணக்கொள்கை நாட்டின் பொதுவான பொருளாதார நோக்கங்களை ஒட்டியே அமைகின்றது.

## 13.3 உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்க:

1. பணக்கொள்கையில் இருக்கின்ற நன்மைகன்ள் யாவை?

### பணத் தொடர்புடைய கோட்பாடுகள்:

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வணிகச்சுழல் பற்றிய விளக்கங்கள் வேளாண்மை, தொழில்துறை ஆகியவற்றின் உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டவை. இருபதாம் நூற்றாண்டில் பணப்புழக்கத்தின் அடிப்படையில் வணிகச்சுழலை விளக்க முற்பட்டவர்களில் ஆர்.ஜி.ஹார்ட்ரி முதன்மையானவர். அவரது கோட்பாடு தூய பணவழிக்கோட்பாடு என அழைக்கப்படுகிறது. ‘‘வணிகமும் கடனும்’’ என்ற அவரது நூலில் இக்கோட்பாடு விளக்கப்பட்டிருப்பதை காணலாம். அவரின் கருத்துப்படி, வணிகச்சுழல் முற்றிலும் ஒரு பணத்துறை நிகழ்ச்சியே. பொருளாதார நிலையில் செழுமையும் மந்தமும் மாறிமாறி வருவதற்குக் காரணமான பண ஓட்டத்தின் ஏற்றத்தாழ்வுகளை அவர் குறிப்படுகிறார். புழங்கும் பணத்தின் அளவு அதிகரிக்கும்பொழுது உற்பத்தி, வருவாய், வேலைவாய்ப்பு ஆகியன உயருகின்றன. இதனால் வணிகம்

தழைத்தோங்கி செழுமையின் எல்லா அம்சங்களும் தோன்றுகின்றன. பணப்பழக்கம் குறையும்போது இதற்கு மாறான நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன. ஹாட்ரியின் கருத்துப்படி, பணவியல் அல்லாத காரணங்களான போர், பூகம்பம், வேலைநிறுத்தம், பஞ்சம், வெள்ளம் முதலியவற்றில் ஓரளவு மந்தம் தோன்றலாமே தவிர முழு அளவிலோ, நிலையான அளவிலோ மந்தம் தோன்ற முடியாது.

குறிப்பு

**வணிகச் சுழல் என்பது பணவீக்கம், பணவாட்டம் இவற்றின் மறுபதிப்பே:**

அரசினால் வெளியிடப்பட்ட பணத்தின் அளவைவிட வங்கிகளினால் தோற்றுவிக்கப்படும் கடன் பணமே வணிகச் சுழலைப் பெரிதும் பாதிக்கிறது. என்பது ஹாட்ரியின் கருத்தாகும். குடன் பணத்தின் அளவு வங்கிகளின் கடன் கொள்கையைப் பொறுத்தது. வங்கிகள் மலிவுப் பணத்திட்டத்தை கையாழும்போது வட்டி விகிதம் குறைகிறது. இதனால் வணிகர்கள் பெரும் அளவில் கடனைப் பெற்று தங்கள் பண்ட இருப்பை அதிகரிக்கின்றனா் சில்லரை விற்பனையாளர்களின் பண்ட இருப்பு அதிகமாகும் போது அவர்கள் மொத்த விற்பனையாளர்களுக்குயிடும் ஆணைகளை அதிகரிப்பார்கள்.

இதனால் மொத்த விற்பனையாளர்கள் உற்பத்தியாளர்களுக்கு கூடுதலான ஆணைகளை அனுப்புவார்கள். எனவே உற்பத்தி பல மடங்கு பெருகி, வேலைவாய்ப்பு, வருவாய் ஆகியன அதிகரித்து, பொருளாதார நடவடிக்கைகள் தீவிரமடைகின்றன. முதலில் நுகர்ச்சிப் பண்டங்களின் உற்பத்தியில் தோன்றும் செழுமை கனரகப் பொருட்களுக்கு தாவி விரைவில் பொருளாதாரம் முழுவதற்கும் பரவுகின்றது. இதன் விளைவு குறிப்பாக விலைவாசி ஏற்றத்திலும் ஊக வாணிக அதிகரிப்பிலும் காணப்படும்.

**பூரிப்பு ஏன் திடீரென்று வெடிக்கிறது?**

ஓரளவுக்கு மேல் பூரிப்பு வெடித்து வீழ்முகம் தொடங்குவதற்கும் வங்கிகளே காரணமென்கிறார் ஹாட்ரி, பணப்புழக்கம், விலைவாசி ஆகியவற்றை கட்டுப்படுத்துவதற்காக மை வங்கியின் வங்கிவீதத் உயர்த்தப்படுகிறது. இதனால் வங்கிகளில் கொடுக்கப்படும் கடன் வசதிகள் குறைகின்றன. வணிகர்களிடம் புழங்கும் பணத்தின் அளவு குறைவதனால்அவர்களின் பண இருப்புகளும் குறைகின்றன. இந்நிலையில் புதிய கடன்கள் மறுக்கப்படுவதோடு ஏற்கனவே கொடுக்கப்பட்ட கடனின் ஒரு பகுதி வற்புறுத்திதத் திரும்பப் பெறப்படலாம். நிபுணா் ஒருவர் கூறியது போல, வேனிற்காலத்தில் கடனாகக் கொடுத்த பணத்தை வங்கிகள்மழைக்காலத்தில் திரும்பக் கேட்க ஆரம்பிக்கின்றன. (டீயமௌ யசந ளைௌவவைரவழைௌ ஙாஉைா டநனெ யெ ரூஅடிசநடடய ஙாநெ வாந ஸரளொஙைநௌ யனெ வயமந வை யறயல ஙாநெ வை ளவயசவள

குறிப்பு

சயமைைபெ). இதனால் பல வணிகர்கள் பண்டங்களை விற்று வங்கிக்க கடன்களை அடைக்க முயலும்போது விலைமட்டம் சரிகிறது. பின்னிறக்கம் ஆரம்பமாகிறது. முதலில் சில்லரை வியாபாரத்தில் காணப்படும். பின்னிறக்கம் மொத்த வியாபாரத்திற்குத் தாவி பின்னர் உற்பத்தியைப் பாதிக்கிறது. தொழிற்கூடங்களில் பண்டங்களின் தேக்கமும். விலைவாசிச்சரிவும்,தொழிலாளர் வேலை நீக்கமும், அரைகுறை உற்பத்தியும் தோன்றுகின்றன. வங்கிக் கடன் கொஞ்சம் கொஞ்சமாகத் திரும்ப அடைக்கப்படுகின்றன.

**மீட்சி எவ்வாறு தோன்றுகின்றது?**

மந்தத்தின் தாழ்ந்த நிலையான வீழ்ச்சியை அடைந்த பின்னர் மீட்சிக்கான சில அறிகுறிகள் தோன்றுகின்றன. மந்தம் தொடங்கிய காலம் முதல் வங்கிகளின் கையிருப்பு பெருகுவதனால் வங்கிககள் மீண்டும் கடன் வழங்க முன்வருகின்றன. அதோடு மந்தகாலத்தில் வட்டி வீதம் இறங்கிவிடுவதனால் பலர் முதலீடு செய்ய முன்வருகின்றனர். இதனால் மீட்சி ஆரம்பமாகி பொருளாதார நடவடிக்கைகள் சுறுசுறுப்பாகின்றன. இவ்விதமான மீட்சி நடவடிக்கைகளுக்கு மைய வங்கியின் வங்கி வீதக்குறைப்பும் வெளி அங்காடி நடவடிக்கைளும் துணை நிற்கின்றன.

**கோட்பாட்டின் சிறப்புகள்:**

1. பணத்துறை நிகழ்ச்சிகளே பொருளாதார நோய்களைத்தோற்றுவிக்கின்றன என்பதை இக்கோட்பாடு விளக்குகிறது.
2. அமெரிக்கப் பொருளாதார வல்லுநர்கள் மில்டன் பிரீடுமென் கிளார்க், வார்பர்டன் போன்றவர்கள் ஒவ்வொரு மந்தத்திலும் பணவியல் காரணங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன என கருத்துத் தெரிவித்து உள்ளனர்.

**குறைகள்:**

1. பணவியல் அல்லாத காரணிகளும் வணிகச் சுழலுக்குக்காரணமாகஇருக்கின்றன. அவற்றை இக ்கோட்பாடு கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. எனவே இக்கோட்பாடு நிறைவானதல்ல.
2. இக்கோட்பாடு வட்டி வீதத்திற்கு தேவையற்ற முக்கியத்துவம் கொடுத்துள்ளது. வட்டிவீதம் முதலீட்டைப் பெருமளவு பாதிக்காது என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது. தொழில் முனைவோர் எந்தத் தொழிலையும் துவங்கும் முன்னர் பொருட்களுக்கு என்ன விலை வைத்து விற்றால் நல்லது என்பதையே சிந்திக்கின்றனர்.
3. வங்கிகளின் நடவடிக்கையால் வணிகச்சுழல்கள் ஏற்படுகின்றன என்று கூறுவது சரியல்ல. கடனின் அதிகரிப்போ குறைப்போ, பூரிப்பையோ, மந்தத்தையோ ஏற்படுத்தாது. ஆனால் பூரிப்போ

மந்தமோ ஏற்பட்ட பிறகு கடன் அதிகரிப்போ குறைப்போ அதனை விரைவுபடுத்தும்.

4. கீன்சீன் கருத்துப்படி வணிகச்சுழலுக்கு வட்டிவிகிதம் உண்மையான காரணமல்ல. முதலின் இறுதிநிலை ஆக்கத்திறன் தான் காரணமாகும்.

குறிப்பு

5. தற்காலத்தில் பல நிறுவனங்கள் இலாபத்தை மீண்டும் தொழிலிலேயே பயன்படுத்துகின்றனர். எனவே வங்கிகளின் நிதியை நமபி அவையில்லை.

6. இக்கோட்பாட்டின்படி, மந்தத்தின்போது முதலீடு அதிகமாக இருக்கும். ஏனெனில் இந்தக் காலத்தில் வட்டிவீதம் குறைவாக இருக்கும். ஆனால் நடைமுறைநிலை மாறாக உள்ளது.

7. உலகநாடுகள் குறிப்பாக அமெரிக்கா 1829-ஆம் ஆண்டு தெரில் மந்தத்தால் பாதிக்கப்பட்ட போது, பணத்தின் அளவு அதிகரித்த போதிலும் தொழில் மந்தத்தை தவிர்க்க முடியவில்லை. எனவே நடைமுறையில் இக்கோட்பாடு பொய்ப்பிக்கப்பட்டது எனலாம்.

## 13.4 உங்கள் முன்னேற்றத்தைச் சரிபார்க்க:

பணக் கொள்கையின் நன்மைகள் யாவை?

பணக் கொள்கை மிகவும் நெகிழ்ச்சிடையது. மாறுகின்ற சூழ்நிலைகளுக்கேற்பப் பயன்படுத்தலாம்

2. பொருளாதார நடவடிக்கைகளில் அரசின் தலையீடு குறைவாக இருக்கும்

3. பணக் கொள்கையின் மூலம் பொருளாதாரக் கட்டுப்பாடுகளைக் கொண்டுவரலாம்

4. கடனைச் சார்ந்து நடைபெறும் தனியார் முதலீட்டின் வேறுபாட்டைத் தவிக்க முடிக்கின்றது.

### ஹேயக்கின் பண மிகை முதலீட்டுக் கோட்பாடு

கு.யு. ஹேயக் என்னும் ஆஸ்திரியப் பொருளியல் அறிஞரால் உருவாக்கப்பட்ட இக்கோட்பாடு பணத்தின் அடிப்படையில் வணிகச் சுழலுக்கு விளக்கமளிக்கிறது. வங்கிப் பணப்பெருக்கத்தின் காரணமாகத் தோன்றக்கூடிய மிகை முதலீட்டை வலியுறுத்துகிறது. இதன் காரணமாகப் பொருளாதாரச் சமநிலை பாதிக்கப்படுவதாக இக்கோட்பாடு கூறுகிறது. ஹேயக்கின் கருத்துப்படி வங்கிப்பண அளிப்பு பெருகும்போது அது உடனடியாக கனரகத் தொழில்களின் விரிவாக்கத்திற்கு அடிகோலுகிறது. ஆனால் நுகர்வுப்பொருள் தொழில்கள் விரிவடைவதில்லை. எனவே குறுகிய காலத்தில் இவை இரண்டிற்கும் இடையே சமனறுநிலை ஏற்படுகிறது.

குறிப்பு

### கெயின்சன் கோட்பாடு

கெயின்ஸ் 1935-ல் வேலை, வட்டி, பணம் பற்றிய பொதுக் கோட்பாடு என்ற நூலை வெளியிட்டார். இதில் வணிகச் சுழலுக்கான காரணங்களை விளக்குகிறார்.மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத் திறனால் (ஆயசபயைெட நககழைஉநைெஉல ழக உயிவையட) ஏற்படும் மாறுதல்களால் வாணிபச்சுழல் ஏற்படுகிறது என்று கெயின்ஸ் குறிப்பிடுகிறார்.

### செயல் விளைவுடைய தேவை

கெயின்சன் கருத்துப்படி, வேலைமட்டம், வருமானம், உற்பத்தி இவற்றின் அளவு விளைவுள்ள தேவையயை ஒட்டி அமைகிறது. விளைவுள்ள தெவை மொத்த நுகர்வுச் செலவையும், முதலீட்டுச் செலவையும் குறிப்பதாகும். நுகர்வுச் செலவு பொதுவாக நிலையக இருப்பதால் வணிக நடவடிக்கைகளின் மாறுதல்களுக்கு முதலீட்டுச் செலவில் தோன்றும் மாறுதல்களே காரணமாக அமைகின்றன.

முதலீட்டில் ஏற்படும் உறுதியற்ற நிலையே சமுதாயத்தின் வருமானத்தில் ஏற்ற இறக்கங்கட்கு காரணமாக அமைகிறது. முக்கள் தங்கள் வருமானத்தில் ஒரு பகுதியை நுகர்வுக்காகச் செலவு செய்கின்றனர். மீதியைச் சேமிக்கின்றனர். முதலீட்டின் அளவை நடப்பு வட்டிவீதமும் முதலின் இறதிநிலை ஆக்கத்திறனும் நிர்ணயிக்கின்றன. வட்டிவீதம் பொதுவாக நிலையாக இருப்பதாக கெயின்ஸ் கருகிறார். அது வணிகச்சுழலை ஏற்படுத்துவதில் மிக முக்கிய காரணியல்ல என்கிறார். வட்டி வீதத்தைவிட மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறனே வணிகச் சுழலைத் தோற்றுவிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இறுதிநிலை ஆக்கத்திறனை கீழ்க்கண்ட காரணிகள் பாதிக்கின்றன. வணிகத் துறையினரின் மனப்பான்மை, வருங்கால விலைவாசிப் போக்குகள், தொழில்களில் காணப்படும். இடர்கள், இருப்பிலுள்ள மூலதனப் பொருட்களின் அளவு.

### மீட்சியும், விரிவாக்கமும்

பூரிப்புக்க் கொண்டு செல்லும் விரிவாக்கக் காலத்தில் வணிகர்கள் அதிக இலாபம் ஈட்டுவார்கள். அவர்கள் எதிர்காலம் நன்றாக அமையும் என்று எண்ணுவார்கள். நல்ல காலம் தொடர்ந்து இருக்கும் என்று அவர்கள் நம்பவார்கள். மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறன் அதிகமாகக் காணப்படும். இதனால் முதலீடு வேகமாகப் பெருகும். முதலீட்டில் அதிகரிக்கும் ஒவ்வொரு பகுதியும் வருமானத்தில் மிக அதிகமான அதிகரிப்பை ஏற்படுத்தும். இது பெருக்கியினால் ஏற்படுகிறது. இவ்வித விரிவாக்கம் பூரிப்புக்குக்

கொண்டு செல்லும் மந்த காலத்தில் வட்டி விகிதம் குறைவாக இருக்கும்.

குறிப்பு

**பின்னிறக்கமும் வீழ்ச்சியும்**

காலம் செல்லச் செல்ல மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறன் குறையத் தொடங்குகிறது. வேலையாட்கள், மூலப்பொருட்கள் இவற்றில் பற்றாக்குறையால் எந்திரங்கள் போன்ற மூலதனச் சொத்துக்களின் உற்பத்திச் செலவு அதிகரிக்கிறது. புதிதாகக் கட்டப்பட்ட தொழிற்சாலைகள் பொருள் உற்பத்தியைத் துவங்கிவிட்டதால் பொருள்களின் அளிப்பு அதிகமாகியது. இதனால் உண்மையான இலாப விகிதம் எதிர்பார்த்ததைவிடக் குறைவாக அமைந்தது. வணிகர்கள் தங்கள் எதிர்காலம் நன்றாக அமையாது என்ற கருத்துக்கு வந்துவிட்டனர். இதனால் மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறன் திடீரெனக் குறைந்தது. முதலீடு மிகவும் குறைந்தது. வேலையின்மை பரவியது. வுணிகர்கள் நம்பிக்கையை இழப்பர், கீழ்நோக்கிச் செல்லும் வணிகச்சுழலை பெருக்கி மேலும் விரைவுபடுத்தும், மந்தகாலத்தில் வட்டிவீதம் அதிகரிக்கும். இவ்வாறு மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறனில் தோன்றும் ஏற்ற இறக்கங்கள் வணிகச்சுழலுக்கு அடிப்படைக் காரணமாகும். முதலீட்டின் வீதம் சேமிப்பின் வீதத்தைவிட அதிகரிப்பதால் பூரிப்பு ஏற்படுகிறது சேமிப்பின்வீதம் முதலீட்டின் வீதத்தைவிட அதிகமாகும்போது மந்தநிலை தோன்றுகிறது. கேயின்சின் இக்கோட்பாடு சேமிப்பு-முதலிட்டுக் கொட்பாடு என்றழைக்கப்படுகிறது.

**கோட்பாட்டின் குறைகள்**

1. டில்லார்டின் கருத்துப்படி கெயின்சன் கோட்பாடு வணிகச்சுழல் பற்றிய முழுமையான கோட்பாடல்ல. காரணம் வணிகச் சுழலின் எல்லாப் பகுதிகளைப் பற்றியும் இது விளக்கிச் சொல்லவில்லை.
2. கெயின்சன் கோட்பாட்டிற்கு அடித்தளமாகவுள்ள மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறன், தொழில் முயல்வோரின் மனப்போக்கை ஒட்டி அமைகிறது. எனவே இது பிகுவின் உளவியல் கோட்பாட்டை ஒட்டி அமைகிறது என சொல்லப்படுகிறது.
3. வட்டிவீதம் பற்றி கெயின்ஸ் குறிப்பிட்டிருப்பது நடைமுறையில் நிகழவில்லை.
4. மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறன் திடீரென என் குறைந்தது என்பதை கெயின்ஸ் குறிப்பிடவில்லை.

குறிப்பு

5. பின்றிக்கத்தின்போது வணிகர்களிடையே எழும் மனத்தளர்ச்சி எவ்வாறு மாறுகிறது என்பதை இக்கோட்பாடு விளக்கவில்லை.

1929 - ஆம் ஆண்டில் ஏற்பட்ட உலகமந்த காலத்தில் பணத்துறை நடவடிக்கைகளுக்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. ஆயினும் இம்முயற்சிகள் முழு வெற்றியை தரவில்லை. இதுபற்றி பொருளாதார நிபுணர்களிடையே நிலவும் கருத்தாவது " மீட்சியைத் தோற்றுவிக்கும் அளவிற்கு பணத்துறை நடவடிக்கைகள் பயன்பாடாவிடினும் செழுமையின் சீர்கேட்டைக் குறைக்க இந்நடவடிக்கைகள் பெரிதும் உதவுகின்றன" என்பதே ஆகும்.

பணத்துறை நடவடிக்கையில் " நூறு சதவீதம் பணத்திட்டம்" என்பதை அமெரிக்கப் பொருளாதார நிபுணர்கள் எடுத்துக் கூறியுள்ளனர். இத்திட்டப்படி வங்கிகளில் பழங்கும் நிதியின் பெரும்பகுதியை வெளி அங்காடி நடவடிக்கைகள் மூலமாக அரசு பெற்றுக்கொள்ள வேண்டும். அதாவது விற்கப்படும் அரசாங்கப் பத்திரங்கள் பெரும்பகுதி வங்கிகளுக்கு விற்கப்பட வேண்டும். இதனால் செழுமையின் மிகுதியை ஓரளவுக்கு தடை செய்ய இயலும். மந்தநிலை நிலவும்போது வங்கிகளிடமிருந்து பெரும்பகுதிப் பத்திரங்கள் வாங்கப்படவேண்டும். மொத்தத்தில் மலிவுப் பணக்கொள்கையை மந்த காலத்திலும் அரும்பணக்கொள்கையைச் செழுமைக் காலத்திலும் மைய வங்கிகள் கடைப்பிடிக்க வேண்டும்.

**நிதித்துறை நடவடிக்கைகள் :**

நிதித்துறை நடவடிக்கைகளைச் சுழலின் வீழ்ச்சிக்கேற்ப மேற்கொள்வதின் மூலமும், செழிப்பு, மந்தம் இவற்றின் கடுமையைக் கட்டுப்படுத்தலாம். நிதித்துறை நடவடிக்கைகளைச் சிலாகித்து இங்கிலாந்தின் கெயின்ஸ் பிரபுவும், அமெரிக்காவின் ஹான்சனும் கூறியுள்ளனர். அரசாங்க வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் வரிகளை, குறிப்பாக நேர்முக வரிகளை அதிகரித்து, அரசாங்கச் செலவுகளைக் குறைத்து செழுமை முறியாமல் பார்த்துக் கொள்ள இயலும். அத்தோடு செழுமையைக் கட்டிக்காக்க அரசாங்கக் கடன்களையும் அதிகரிக்கலாம். இவற்றால் பணப்புழக்கம் குறைந்து அளவுக்கு மிஞ்சிய விலைவாசி ஏற்றம் தணிக்கப்படும். அதோடு முதலீடுகள், வருவாய் ஆகியன அளவோடு கட்டுப்படுத்தப்படும். தொழில் பின்னிறக்கக் காலங்களிலும், மந்த காலங்களிலும் இதற்கு நேர்மாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்

# அலகு 14 வளரும் நாடுகளின் நாணய நிதி மற்றும் வருமானம் சார்ந்தகொள்கைகள்

14.0: நோக்கங்கள்
14.1: வளரும் நாடுகளின் நாணய நிதி
14.2: உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்க
14.3: வருமானம் சார்ந்தகொள்கைகள்
14.4: உங்கள் முன்னேற்றத்தைச் சரிப்பார்க்க

குறிப்பு

## 14.0: நோக்கங்கள்

1. வளரும் நாடுகளின் நாணய நிதி பற்றிய அறிவு பெற
2. வருமானம் சார்ந்த கொள்கைகள் பற்றி அறிந்து கொள்ள.

## 14.1: வளரும் நாடுகளின் நாணய நிதி

1950ஐச் சேர்ந்த ஆண்டுகளிலும் , 1960 ஐச் சேர்ந்த ஆண்டுகளிலும் இந்த அணுகுமுறை பிரபலமடைந்தது. முழு வேலை நிலையைப் பெறுதல் என்பதை மட்டுமல்லாமல் பல்லாண்டுகளுக்குத் தொடர்ச்சியான பொருளாதார வளர்ச்சியைப் பெறுதல் என்பதையும் நிதிக் கொள்கை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதே இந்த அணுகுமுறை. உற்பத்திச் செய்யும் ஆற்றலை அதிகரிப்பதையும் இந்த அணுகுமுறை வலியுறுத்துகிறது

அரசு இரு வழிகளில் செயல்படவேண்டும் முதலாவதாக , முதலிடுபவர், இரண்டாவதாக நிலை நிறுத்துபவர். எவ்வெப்பொழுது மொத்தச் செலவு குறைகிறதோ அப்போதெல்லாம பல திட்டங்களுக்காகச் செலவிட வேண்டும். எப்போதெல்லம் மொத்தச் செலவு அதிகமாக இருக்கிறதோ அப்போதெல்லாம வரிகளை அதிகரித்தல் போன்ற பல வழிகளால் மொத்தச் செலவைக் குறைக்க வேண்டும். வளர்ச்சி பெற்ற நாடுகளில் வருமானம் பெருகுகிறது. சேமிக்கும் நாட்டம் அதிகமாக இருக்கிறது. இதனால் பண வாட்டம் தோன்றுவதற்கான வாய்ப்புகள் தோன்றுகின்றன. இத்தகைய நாடுகளில் பணத்தைச் செலவிடுவதாக நிதிக் கொள்கை அமைதல் வேண்டும். ஆனால் வளரும் நாடுகளில் விரைவாக அதிகரித்துச் செல்லும் செலவுகள் பண வீக்க நிலையைத் தோற்றுவிக்கத் தக்கவைகளாக இருக்கின்றன. இச்சூழ்நிலையில் நுகர்வைக் குறைப்பதாகவும், அதே நேரத்தில் உற்பத்தித் திறனை அதிகரிப்பதாகவும் நிதிக் கொள்கை அமைதல் வேண்டும்

### குறிக்கோள்கள்

**1. பொருளாதார மூல வளங்களை உத்தம அளவில் பகிர்ந்தளித்தல்**

நாட்டில் இருக்கும் மக்கள் , பணம், பிற மூலவளங்கள் ஆகிய எல்லாவற்றையும் உத்தமமான அளவில் பகிர்ந்தளித்தால் அது

குறிப்பு

அவர்களிடமிருந்து உச்ச அளவு உற்பத்தித் திறனைப் பெற உதவுவதாக அமையும். எனவே இக்குறிக்கோளை அடையும் வண்ணம் நிதியில் கொள்கையின் கருவிகளை பயன்படுத்த வேண்டும்.

**2. செல்வம், வருமானம் ஆகியவற்றைச் சமமாகப் பங்கிடுதல்**

செல்வமும் வருமானம் பெறும் திறனும் பொருளாதார ஆற்றலும் ஒரு சிலரிடத்தில் மட்டும் குவிந்திருந்தால் அது நாட்டுக்கு நல்லதல்ல. எனவே செல்வந்தர்கலைப் பாதிக்கா வண்ணம், அவர்களிடமிருக்கும் செல்வத்தையும் வருமானம் பெறும் ஆற்றலையும் வறியவர்களுக்கும் கிடைக்கச் செய்தல் நிதியியயல் கொள்கையின் அடிப்படைக் குறிக்கோள்களில் ஒன்று

**3. விலை உறுதித் தன்மையைப் பெறுதல்**

விலைகளில் பேரளவு மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டே இருந்தால் சமுதாயத்தின் ஒரு சிலப் பிரிவினர் நன்மைகளையும் பிற பிரிவினர் விரும்பத்தகாத விளைவுகளையும் பெறுவர். இது நல்லதல்ல இதனை மாற்ற உறுதியான விலை அமைப்பை பெற வேண்டும் . நிதியியல் குறிக்கோள்களில் இது மிகவும் முக்கியமானதொன்று

**4. முழுவேலை நிலையைப் பெறுதல்**

வேலையின்மை நிலை பல தீமைகளுக்க அடிப்படைக் காரணமாகின்றது. எல்லோருக்கும் வேலை கிடைக்கும் நிலை இருந்தால் பல சிக்கல்கள் அவைகளாகவே அகன்றுவிடும். எனவே வேலை நிறைவு நிலையை அல்லது முழு வேலை நிலையைப் பெறுவதை நிதியியல் கொள்கை ஒரு குறிக்கோளாகப் பெற்றிருக்கிறது. இவ்வாறாக , இன்றைய நாட்களில் உள்ள அரசுகள் அவைகளின் நிதியியல் கொள்கையின் மூலம் முதலீடு செய்பவைகளாகவும், சேமிப்பவைகளாகவும், வருமானத்தைப் பகிர்ந்தளிப்பவைகளாகவும், உறுதித் தன்மையை நிலைபேறு கொள்ளச் செய்பவைகளாகவும் இயங்கி வருகின்றன.

**முழுவேலைக்கான நிதிக் கொள்கை அல்லது வாணிகச்சுழல் மாற்று நிதிக்கொள்கை**

பணவீக்கம் அல்லது பண வாட்டத்தினால் முழு வேலை நிலையிலிருந்து பொருளாதாரம் வேறுபட்டிருக்கலாம். அச்சூழ்நிலைகளில் தகுதியான வாணிகச் சுழல் மாற்று நிதிக்கொள்கையைக் கையாளுவதன் மூலம் விலை உறுதித் தன்மையைப் பெற வேண்டும்

**பணவீக்க இடைவெளியும் பண வாட்ட இடைவெளியும்**

மொத்த விளைவை முழு வேலை நிலையில் நிலை நிறுத்த முடியாத அளவினதாக மொத்தச் செலவு அமையுமானால அப்போது பணவாட்ட இடைவெளி தோன்றுகிறது. மொத்த விளைவை முழு வேலை நிலையில்

நிலை நிறுத்துவதற்குத் தேவையான அளவிற்கு அதிகமானதாக மொத்தச் செலவு அமையும் போது பணவீக்க இடைவெளி தோன்றுகிறது.

குறிப்பு

**பணவாட்ட இடைவெளியை அடைத்தல்**

தேவையான அளவுக்கு அதிகப்படியானச் செலவுகளைச் செய்வதன் மூலம் அரசாங்கம் பணவாட்ட இடைவெளியை அடைக்க முயலலாம். இதற்கெனப் பற்றாக்குறை நிதியாக்கத்தை அரசு கையாளலாம். பெருக்கி விளைவு வலுவானதாக இருக்கும்போது அதிகமான அளவில் பற்றாக்குறை நிதியாக்கத்தை கையாளத் தேவை இராது. அரசு அதிகமாச் செலவு செய்யும்போது பெருக்கி, ஊக்கி (அல்லது) முடுக்கி விளைவுகளினால் மக்களின் வருமானமும் நுகக்ர்வும், தேவையும் பெருகி பொருளாதாரத்தை முன்னேற்றப் பாதையில் செலுத்த முடிகிறது.

அரசு பற்றாக்குறை நிதியாக்கத்தைக் கையாளும்போது மக்களிடம் கடன் வாங்குவதைத் தவர்த்து , பாங்கு அமைப்புகளிடமிருந்து கடன் வாங்க வேண்டும். அப்போதுதான் பொருளாதாரத்தில் பண ஓட்டம் அதிகரிக்கும். பற்றாக்குறை நிதியாக்கதின் மூலம் செலவழிக்கப்படும் பணம் அதிகமான நுகர்வு நாட்டமுள்ள மக்களிடம் போய்ச் சேர வேண்டும் .அப்போதுதான் பெருக்கி விளைவும் அதிகமாக இருக்கும்.

**பண வீக்க இடைவெளியை அடைத்தல்**

மென்மையான முறையில் அரசுச் செலவுகளைக் குறைத்துக் கொள்ளுவதன் மூலமும் சமுதாயத்தின் வரிப்பளுவை அதிகரிப்பதன் மூலமும் பண வீக்க இடைவெளியை அடைக்க முடியும். இதனைப் பெற உபரி வரவுச் செலவுத் திட்டத்தை அரசு கையாள வேண்டும். அரசிடம் உள்ள உபரி வருமானத்தைக் கொண்டு பழையக் கடன்களைத் தீர்க்க முயலலாம்.

தனியார் துறைப் பொருளாதாரம் இலாப நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்படுகிறது. அதனால் வாணிகச் சூழல் மாற்று நிதிக் கொள்கையைக் கையாள்வதன் மூலம் இவ்வேற்றத்தாழ்வுகளைச் சரிசெய்ய முடியும் ஆனால் இக்கொள்கை மந்த நிலையிலிருந்து மலர்ச்சிப் போக்கைப் பெறும் முயற்சியில் மட்டுமே எதிர்பார்க்கும் விளைவுகளைத் தோற்றுவிக்கத் தக்கது.

முழுவேலை நிலையை அடைவதற்கு நிதிக் கொள்கையைக் கையாளுதல் மட்டும் போதாது. நிதிக்கொள்கை தவிர,

1. சர்வாதீன நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்ததல்
2. பாங்கு முறையை சீர் செய்தல்
3. பன்னாட்டுப் பொருளாதாரத் தொடர்புகளை நல்ல முறையில் அமைத்துக்கொள்ளுதல்

குறிப்பு

போன்ற நிதிக்கொள்கையற்ற பல்வேறு பிற வகைக் கொள்கைகளையும் சேர்த்துக் கையாளும்போதுதான் முழுவேலை நிலையை அடைய இயலும்.

**வளர்ச்சியடைந்த நாடுகளின் : வளரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியில் நிதிக் கொள்கையின் பங்கு**

உலக நாடுகளை பொருளாதார அடிப்படையில் வளர்ச்சி பெற்றவைகள், வளருபவைகள் எனப் பகுக்கலாம்

இரு வகை நாடுகளில் நிலைகளும் முற்றிலும் மாறுபட்டவை எனவே அந்நாடுகளின் நிலைகளுக்கேற்ப நிதிக்கொள்கைகளை மாற்றிப் பயன்படுத்த வேண்டும்

**வளர்ச்சிடைந்த பொருளாதாரம்**

இந்நாடுகளில் மூலதனமும் உழைப்பும் மிகவும் நல்ல வளர்ச்சியைப் பெற்றிருக்கின்றன. தொழிலாளர்கள் நல்ல பல பயிற்ச்சிகளைப் பெற்றவர்களாகவும் திறமை மிக்கவர்களாகவும் இருக்கின்றனர். சராசரி தொழிலாளர்களுக்காகப் பயன்படுத்தப்படும் மூலதனத்தின் அளவும் அதிகமாக இருக்கிறது. இவ்வாறாக உற்பத்தி ஆற்றல் ஏற்கெனவே மிகுந்திருக்கும் நிலையில் இந்நாடுகள் இருக்கின்றன . இத்தகைய நாடுகளில் தோன்றும் உறுதியற்றத் தன்மை உழைப்பையும் மூலதனத்தையும் செயலற்றதாக்கிவிடுகிறது அல்லது தேவைக்கும் அதிகமாகச் செயல்பட வைக்கிறது.

பணவாட்டக் காலங்களிலும் மந்த நிலைகளிலும் பற்றாக்குறைச் செலவு என்ற வடிவத்தில் தேவையான அளவுக்கு வாங்கும் சக்தியைப் பொருளாதாரத்தில் புகுத்துவதாக நிதிக்கொள்கை அமைகிறது. இதனால் மொத்தச் செலவு அதிகரிக்கின்றது.

வளரும் பொருளாதாரங்கள் இந்நாடுகளில் மூலதனம் பற்றாக்குறையாக இருக்கிறது . வளர்ச்சியடைந்த நிலையில் இல்லை. ஆனால் திறமையற்றவர்களாளவும், பயிற்சி பெறாதவர்களாகவும் உள்ள தொழிலாளர்களின் அளிப்பு அதிகமாக இருக்கிறது. மக்கட் பெருக்கத்தினாலும் , போதா வளர்ச்சியாலும் நுகர்வு முதலீடு ஆகியவைகளின் அளவும் நிலையும் குறைவாக இருக்கின்றன. வேலையின்மையும் குறைந்த வேலையும் பரவலாக நிலவுகின்றன. ஏழ்மை என்னும் நச்சு சுழலுக்குள் இந்நாடுகள் சிக்கி வறுமைப்பிடியிலிருந்து தப்பிக்க முடியாமல் திணறிக்கொண்டிருக்கின்றன.

**அரசாங்கம் வழிகாட்ட வேண்டிய அவசியம்**

உற்பத்தித்திறனைப் பெருக்கி வறுமையிலிருந்து விடுபடவும் வேலையின்மையைப் போக்கவும் தனியார் துறை முன்வராத

முன்வரமுடியாத இந்நாடுகளில் அரசாங்கமே பல பணிகளையும் வளர்ச்சித் திட்டங்களையும் மேற்கொண்டு நாட்டு மக்களுக்கு நல்வழி காட்ட வேண்டிய அவசியம் உள்ளது. இதற்குப் பொதுத்துறையில் உண்மை மூலவளங்களை வாங்கவும் பெருக்கவும் வேண்டும். அதற்குத் தேவையான நிதியை அரசுக்குத் திரட்டித் தருவதாக வரி விதித்தல் அமைதல் வேண்டும். செலவுப் பகுதியில் தனியார் துறையோடு சேர்ந்து அதைக்காட்டிலும் அதிகமாகப் பொதுத் துறையும் முதலீட்டுச் செலவுகளை மேற்கொள்ள வேண்டும். இந்நாடுகளில் நிதிக்கொள்கையை இவற்றிற்கேற்ப அமைக்க வேண்டும்.

குறிப்பு

### நிதிக் கொள்கையும் பங்கீட்டு நிதியும்

மக்களாட்சி முறையில் எல்லோரும் சமம் என்ற கொள்கை மிகவும் முக்கியமானது. அரசியல் அடிப்படையில் சட்டங்களை உருவாக்கி இத்தகைய சமத்தவத்தை ஏற்படுத்திவிட முடியும் . ஆனால் பொருளாதார அடிப்படையிலும் எல்லோருக்கும் சமமான வருமான, செல்வப் பங்கீடு இருக்க வேண்டும். இதனைச் சொல்வது எளிதாக இருக்கலாம். நடைமுறையில் செயல்படுத்துவது மிகவும் கடினம். நாட்டில் நிலவும் வாரிசு உரிமை அமைப்புகள் பிறப்பிலேயே ஒவ்வொவருக்கும் இயற்கையாக அமையும் திறமை, கல்வி, வசதி வாய்ப்புகள், கொடுக்கப்படும் பயிற்ச்சிக்கான வாய்ப்புகள் பயி◌ற்சியின் தன்மை , சமுதாய இடப்பெயர்ச்சி , அங்காடி அமைப்பு போன்ற பலவற்றிலும் முனைப்பான வேறுபாடுகள் இருப்பதால் இச்சமத்துவத்தை பெறுவது மிகக் கடினமானதாக இருக்கிறது. எல்லோருக்கும் ஒரே மாதிரியான கல்வி, பயிற்சி, வேலைவாய்ப்புகள் இல்லை. எனினும் இவை எல்லாவற்றிலும் சம வாய்ப்புகளை மக்களுக்கு அளித்து சமமான செல்வ, வருமானப் பங்கீட்டைப் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வது மிகவும் அவசியம்.

வரி கொள்கையும் செலவுக் கொள்கையையும் நல்ல முறையில் பயன்படுத்துவதன் மூலம் மக்களிடையே பொருளாதார சமத்துவத்தை ஏற்படுத்த நிதிக் கொள்கையம் ஓரளவுக்கு உதவு செய்கிறது

### வரி அமைப்பில் மேற்கொள்ளத்தக்கவை

அதிக வருமானக்காரர்களுக்கு வளர் விகித முறையில் அதிக நேர்முக வரியை விதிக்கலாம். குறைந்த வருமானக்காரர்களுக்கு குறைவான வரியை விதிக்கலாம் . குறிப்பிட்டதொரு அளவுக்கும் குறைவான வருமானம் பெறுவர்களுக்கு வரி விலக்கு அளிக்கலாம். பெரும் சொத்துகளுக்கு அதிக வரியும் சிறிய சொத்துக்களுக்கு குறைந்த வரியும் விதித்து மிகச் சிறிய சொத்துக்களுக்கு வரிவிலக்கு அளிக்கலாம்.

மறைமுக வரிகள் விலையை உயர்த்தும்.. இதனால் அதிகமாக பாதிக்கப்படுவர்கள் ஏழைகள். எனவே குறைந்த வருமானக்காரர்கள் பயன்படுத்தும் பண்டங்களுக்கு மறைமுக வரியை விதிக்கக் கூடாது. அதே நேரத்தில் செல்வந்தர்கள் பயன்படுத்தும் ஆடம்பர பண்டங்களுக்கு மிகவும் அதிகமான விகிதத்திலான மறைமுக வரியை விதிக்கலாம்.

குறிப்பு

மேற்குறிப்பிட்ட வண்ணம் வரியமைப்புகளை பயன்படுத்தி பொருளாதார சமத்துவத்தைப் பெற முயலலாம். ஆனால் அதே நேரத்தில் உற்பத்தி முயற்சி, உற்பத்தித் திறன் ஆகியவகைகளையும் கருத்தில் கொள்ள வேண்டும். வளர் விகித வரி முறை சேமிப்பையும் முதலீடும் வாய்ப்புகளையும் முதலீட்டு முயற்சிகளையும் பாதிக்கமால் பார்த்துக்கொள்ளவேண்டும்.

பொதுச்செலவில் மேற்கொள்ளத்தக்கவை குறைந்த வருமானக்காரகளுக்கு நன்மைத் தரத்தக்க பல வளர்ச்சித் திட்டங்களை அரசு மேற்கொள்ளலாம். ஏழைகளுக்கு இலவசக் கல்வி , இலவச மருந்து வசதிகள், இலவச உடை, இலவச உணவுத் திட்டங்களை நிறைவேற்றலாம். குறைந்த வருமானக் காரர்களுக்குச் சலுகை விலையில் வீட்டு வசதிகலை அரசு ஏற்படுத்திக் தரலாம் . மொத்ததில் ஏழைகளின் பொருளாதார மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு அவர்களது வருமானத்தை அதிகரிக்கத்தக்க பல திட்டங்களை அரசு மேற்கொள்ளலாம்.

**நிதிக் கொள்கையில் தடங்கல்கள்**

அதிகமான உற்பத்தியைப் பெறும் வகையில் மூல வளங்களை திறம்பட பயன்படுத்துதல் சீரிய செல்வ வருமானப் பங்கீட்டைப் பெறுதல் , பொருளாதார வளர்ச்சியைப் பெறுதல் போன்ற பல நல்ல முயற்சிகளுக்கு நிதிக் கொள்கையை பயன்படுத்துகிறது. ஆனால் நிதிக் கொள்கையால் மட்டும் இந்நோக்களில் வெற்றி பெறுதல் இயலாது. நிதிக் கொள்கை பல வரையறைகளுக்கு உட்பட்டிருப்பதே இதற்கான காரணம். நிதிக் கொள்கை வெற்றி பெறுவதில் ஏற்படும் ஒரு சிலத் தடங்ககளைக் கீழே குறிப்பிட்டுள்ளோம்

**1. தனியார் துறையின் எதிர்மறைப்போக்கு**

பொருளாதார நடவடிக்கைகளை முடக்கி விடுவதற்காக அரசு பல செலவுத் திட்டங்களை மேற்கொள்ளும்போது தனியார் துறையின் செலவுகள் குறையாமல் இருக்க வேண்டும். தனியார் துறையில் செலவுகள் குறைந்தால் பொதுத் துறை முதலீட்டு முயற்சியின் முழு பலனையும் பெற இயலாது.

**2. அறிதலில் தடங்கல்**

பலவிதமான பொதுச் செலவுத் திட்டங்களின் விளைவுகளை முன் கூட்டியே அறிந்துகொள்ள இயலாமல் போகலாம். எனவே ஒரு திட்டத்தை வரையும்

காலம், அதனை அமல்செய்யும் காலம் ஆகிய இரண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் தோன்றும் மாற்றங்களினால் திட்ட முயற்சியில் ஏற்படும் விளைவுகளை அறிய முடியவில்லை

**குறிப்பு**

**3. காலத் தடங்கல்**

ஒரு திட்டத்தை மேற்கொள்ளுவதற்கான அவசியம் ஏற்படுவதற்கும், அத்திட்டத்தை விரைந்து அரசு ஒப்புதல் தந்து செயல்படுத்துவதற்கும் இடையே பல மாதங்கள் அல்லது சில நேரங்களில் பல ஆண்டுகள் கழிந்து விடலாம்.

**4. தீர்மானத் தடங்கல்**

ஒரு திட்டத்தை மேற்கொள்ள வேண்டிய அவசியத்தை அரசு உணர்ந்திருந்தாலும் பல காரணங்களால் உடனடியாக அரசினால் அத்திட்டத்தை நிறைவேற்ற முடியாமற் போகலாம். அரசு பல விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு செயல்பட வேண்டியிருப்பதால் இத்தடங்கள் ஏற்படுகிறது. எடுத்துக்காட்டாக , ஒரு திட்டத்தை அமுல் செய்ய பாராளுமன்றத்தின் அல்லது சட்டமன்றத்தின் ஒப்புதலைப் பெற வேண்டியிருக்கலாம் சட்டமன்றம் அல்லது பாராளுமன்றம் கூடும் வரை அரசு காத்திருக்க வேண்டிய சூழ்நிலை உருவாகலாம்.

**5. பொருளாதாரத்தின் அமைப்பு**

பொருளாதாரத்தின் அமைப்பின் காரணமாகவும் ஒரு சில இடையூறுகள் தோன்றலாம். எதாவது ஒரு துறையில் விரைவான பொருளாதார வீழ்ச்சி ஏற்படலாம். இதுவும் நிதிக் கொள்கையை செயலற்றதாக்கி விடலாம்.

**6. தொழிலாளர்கள் அமைப்புகளின் செயல்கள்**

அதிகமான செலவினால் தோன்றுவது பணவீக்கம் . எனவே இக்காலத்தில் செலவைக் குறைக்க நிதிக் கொள்கையின் மூலம் முயற்சிகளை மேற்கொள்கிறோம். ஆனால் தொழிலாளர் சங்கங்கள் போன்ற அமைப்புக்கள் வலுவாக இருந்து கூட்டு பேரச் சக்தியினால் கூலி மட்டத்தை உயர்த்தும் போது குறிப்பாக உற்பத்தித் திறனில் எவ்வித உயர்வும் இல்லாமலே பணக்கூலி உயர்வை ஏற்படுத்தும்போது நிதிக்கொள்கை செயலற்றதாகி விடுகிறது.

**7. தனித்து வெற்றி காண முடியாமை**

நிதிக் கொள்கையை மட்டும் பயன்படுத்தி வெற்றி காண்பது இயலாது . தகுதியான பணக்கொள்கையும் பிறக்கொள்கைகளையும் சேர்த்து பயன்படுத்தும் போதுதான் நிதிக்கொள்கை முழுவெற்றியைத் தர இயலும்.

நல்லதொரு நிதிக்கொள்கையை உருவாக்குவதற்கு நிதிக்கொள்கையில் உள்ள தடங்கல்கள் பற்றிய அறிவு மிகவும் உதவியாக இருக்கும்.

நிதியியல் கொள்கை அல்லது நிதிக் கொள்கை அல்லது அரசிறைக் கொள்கை

**குறிப்பு**

**நிதியியல் கொள்கை என்றால் என்ன?**

ஒரு சில அடிப்படைக் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக பொதுச் செலவு, பொதுக் கடன் , வரி விதித்தல் போன்றவற்றை மாற்றியமைத்துக் கொள்வதற்கான கொள்கையை நிதியியல் கொள்கை அல்லது அரசிறைக் கொள்கை என்கிறோம். 1930ஐச் சார்ந்த ஆண்டுகளில் நிலவிய உலகப் பெரு மந்தத்திற்குப் பின் பொருளாதார உறுதித்தன்மையைப் பெறுவதற்கான அடிப்படைக் கருவியாக நிதியியல் கொள்கை பிரபலமடைந்துவருகிறது. அதற்கு முன் பணவாக்கக் கொள்கை சிறப்பைப் பெற்றிருந்தது.

தோற்றுவாய் தொழில் வளர்ச்சி பெற்ற மேலை நாடுகளில் உள்ள நிலைகளுக்கேற்பத் தோற்றுவிக்கப்பட்டது. நிதிக்கொள்கை இருப்பினும் வளரும் நாடுகளிலும் இக்கொள்கை பெருமளவில் நன்கு பயன்படுத்தப்படுகிறது.

**நிதிக்கொள்கையின் கருத்து வளர்ச்சியைக் கீழ்வரும் பல நிலைகளில் காணலாம்.**

1.நிதிக் கொள்கை பற்றிய தொன்மைப் பொருளாதாரக் கருத்து ( அல்லது ) நடுநிலை நிதிக் கொள்கை அல்லது நோக்கமில்லா நிதிக் கொள்கை அல்லது நிதிக் கொள்கையின் சரியான நிதி அணுகுமுறை

முதல் உலகப் போருக்கு முன் முதலாளித்துவப் பொருளாதார அமைப்பு மிகச் சிறப்புடன் நிகழந்தது.

1. விரைவான மக்கள் பெருக்கம்
2. மிக விரைவான தொழில்நுட்ப வளர்ச்சி
3. பேரவிலான இலாபத்தைப் பெறுதல்
4. இலாபத்திலிருந்தே மேன்மேலும் வாணிகத்தைப் பெருக்கிய விதம்

போன்ற தன்மைகளுடன் முதலாளித்துவப் பொருளாதாரம் பெருமையுடன் திகழ்ந்தது. வாணிக வளர்ச்சியின் அடிப்படையில் பொருளாதார முன்னேற்றத்தைத் தொன்மைப் பொருளியல் அறிஞர்கள் கண்டு மகிழ்ந்தனர்.

தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் கருத்தின்படி வரியும் அரசாங்கச் செலவும் மொத்த உற்பத்திப் பெருக்கத்திற்கு உதவவில்லை என்பதோடு மட்டுமல்லாமல் வரி விதித்தல் உற்பத்திச் செலவையும் தேவையில்லாமல் அதிகரித்து விடுகிறது என்றும் அவர்கள் கருதினார்கள். எனவே அரசாங்கம் மக்களிடமிருந்து பெறும் வரி மிக மிகக் குறைந்த அளவில் இருக்க வேண்டும் செலவுகளை அரசு மேற்கொள்ளகூடாது. அரசின் வரவுச் செலவுத் திட்டம் பெரும்பாலும் சமப்படுத்தப்பட்டதாக இருக்க வேண்டும் என்றெல்லாம் அவர்கள் பரிந்துரைத்தனர். மிகக் குறைந்த வரி விதிப்பும் ஆண்டுதோறும் சமப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை மேற்கொள்ளுவதுமே நடுநிலை நிதிக்கொள்கை என்று அவர்கள் குறிப்பிட்டார்கள்

**நிதிக் கொள்கையின் சமன்படுத்தும் பணி ( அல்லது ) கெயின்சின் நிதிக் கொள்கை**

1930 ஐச் சேர்ந்த ஆண்டுகளில் தோன்றிய மந்த பொருளாதார நிலையும் பணவாக்கக் கொள்கையால் மந்த நிலையிலிருந்து மீட்சியை ஏற்படுத்த முடியாத நிலையும் வேலையின்மையும் விலை வீழ்ச்சியையும் ஏற்படுத்தின. பொருளாதார நடவடிக்கைகள் மிகக்குறைந்த வீழ்ச்சி நிலைக்குச் சென்று விட்டன. எனவே நிதிக் கொள்கை பற்றிய தொன்மைப் பொருளாதாரக் கருத்து சிறப்பிழந்து கெயின்சின் நிதிக் கொள்கை சிறப்படைய தடைப்பட்டது. பணவாட்டத்தைப் போக்க அரசு அதிகமான அளவில் செலவுகளை மேற்கொள்ள வேண்டுமென கெயின்சு வலியுறுத்தினர், தவிர செல்வம் ஒரு சிலரிடம் குவிதலைத் தடுப்பதற்காகவும் அரசின் வருமானத்தைப் பெருக்கவும் , வளர் விகித வரி முறையையும் சீரான செல்வப் பங்கீட்டையும் அரசு செயல்படுத்த வேண்டும் என்றும் வளர்ச்சித் திட்டங்கள் பலவற்றை மேற்கொள்ளுவதன் மூலம் வருமானத்தையும் வேலையையும் பெருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார் .

**நிதிக்கொள்கையின் வினையாற்றும் நிதி அணுகுமுறை**

1930 ஐச் சேர்ந்த ஆண்டுகளின் தொடக்க காலத்தில் நிலவிய பொருளாதார மந்த நிலையைச் சீர் செய்வதை அடிப்படை நோக்கமாகக் கொண்டிருந்தார் . ஜான் மேனார்டு கெயின்சு எனவே, அவரது நோக்கமாகக் கொண்டிருந்தது. பணவீக்கம் என்ற சிக்கலைத் தவிர்ப்பதற்கென இக்கொள்கை வகுக்கப் பெறவில்லை. எனவே கெயின்சின் நிதிக்கொள்கை பொருளாதார வளர்ச்சிச் சிக்கல்களுக்குத் தேவையான இயங்குநிலை அணுகுமுறையைப் பெற்றிருக்கவில்லை . 1940 ஐச் சேர்ந்த ஆண்டுகளின் முன்பகுதியில் ஐக்கிய அமெரிக்க நாட்டைச் சேர்ந்த அப்பா ஏ.பி . லெர்னர் என்பவர் புதிய நிதிக் கொள்கை அணுகுமுறையைக் கண்டுபிடித்ததாக அதனை வினையாற்றும் நிதி அணுகுமுறை என்கிறோம்.

சரியான நிதியிலாக இருப்பதைக் காட்டிலும் வினையாற்றும் நிதியியலாகப் பொது நிதியியல் நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். தேசிய வருமானத்தைப் போதுமான அளவில் நிலைப்படுத்துவதை வினையாற்றும் நிதியியல் நோக்கமாகக் கொண்டிருக்கவேண்டும். அதனைப் பெற பண வீக்கத்தையும் பண வா

**குறிப்பு**

ட்டத்தையும் தவிர்க்க வேண்டியது அவசியம்

## 14. 2 உங்கள் முன்னேற்றத்தைச் சோதிக்க:

**1. பணக் கொள்கை என்றால் என்ன?**

**2.. நிதியியல் கொள்கை என்றால் என்ன?**

**லெர்னரின் பரிந்துரைகள்**

அதிகமாகச் செலவுகளைச் செய்வதனால் பணவீக்கமும் தேவைக்குக் குறைவானச் செலவுகளைச் செய்வதினால் பண வாட்டமும் தோன்றுவதாக லெர்னர் கருதினார். பண வீக்கத்தையும் பண வாட்டத்தையும் தவிர்த்து முழுவேலை நிலையைப் பெறுவதற்கு கீழ்வரும் நிதி நடவடிக்கைகளை லெர்னர் பரிந்துரைத்தார். பணவாட்டச் சூழ்நிலையைப் போக்குவதற்க்கு

1. அரசாங்கமே பண்டங்களையும் பணிகளையும் வாங்குதல் வேண்டும்

2. பொதுப் பண்டங்களுக்கு உதவித் தொகையை அரசு அளிக்க வேண்டும்
3. குறைவான வட்டி விகிதத்தில் கடன்களை அளித்தல் ஆகிய நடவடிக்கைகள் பயன் தரத்தக்கவை

**பண வீக்கச் சூழ்நிலையைப் போக்குவதற்கு**

1. பண்டங்களையும் பணிகளையும் அரசாங்கமே விற்றல்

2. பண்டங்கள் , பணிகள் மீது வரி விதித்தல் 3. மக்களிடமிருந்து அரசு கடன்களை பெறுதல் ஆகிய நடவடிக்கைகள் நல்ல பலனைத் தரும்

வினையாற்றும் நிதியியலில் வரி , கடன் கொள்கையின் சிறப்பு வருமானத்தைப் பெறுவதற்காக அல்லாமல் நுகர்வோரிடம் குறைவான அளவில் பணத்தை இருக்கச் செய்வதற்காகவே வரி விதிக்கப்பட வேண்டும். பண வீக்கக் காலங்களில் வரிகளை அதிகமாக விதித்தல் நல்ல பலனைத் தரும் . வருமானம் தேவைப்பட்டால் அரசு பணத்தை அச்சிட்டுக் கொள்ளலாம் அல்லது பண அங்காடியில் கடன் வாங்கிக் கொள்ளலாம்.

வட்டி விகிதத்தை அதிகரித்து அதன் மூலம் முதலீட்டுச் செலவுகளைக் குறைக்க வேண்டிய அவசியம் இருக்கும்போது தான் அரசு

கடன்களை வாங்க வேண்டும் .அரசு கடன் வாங்கும் போது பணத்தேவை அதிகரித்து வட்டி விகிதம் அதிகரித்து முதலீட்டுச் செலவுகள் குறைந்துவிடும்.

**லெர்னர் கொள்கையின் சிறப்பு**

குறிப்பு

முதலாளித்துவப் பொருளாதாரமாயினும் , சோசலிசப் பொருளாதாரமாயினும் , சர்வாதிகாரப் பொருளாதாரமாயினும் நிதியியலின் வினையாற்றும் அணுகுமுறை பொருத்தமாக இருக்குமென்று லெர்னர் குறிப்பிடுகிறார்.

இவ்வணுகுமுறை மிகவும் நல்லதொரு முறையாகத் தோன்றினாலும் இது மிகவும் தீவிரமான தொரு அணுகு முறையாதலால் இதனை முழுமையாக எந்த அரசும் பயன்படுத்திப் பார்க்கவில்லை

**நிதிக்கொள்கையும் பணக்கொள்கையும் ஒன்றுக்கொண்டு உதவியாக செயல்படும் விதம்**

பெரும்பான்மையான பொருளாதாரச் சிக்கல்கள் பல காரணங்களால் தோன்றுகின்றன. எனவே பல வழிகளில் அவற்றைத் தீர்க்க வேண்டும் . நிதிக்கொள்கை மட்டுமோ, பணக்கொள்கை மட்டுமோ நல்ல பலனைத் தராது. எந்தெந்த சூழ்நிலைகளில் எந்தெந்த வழிகளில் முடியுமோ அந்தந்த வழிகளின் மூலம் முயன்றால் தான் பலன் கிடைக்கும்.

ஒரு சில நேரங்களில் பணவாக்க முறைகளைக் காட்டிலும் நிதிக் கொள்கை முறைகள் சிறந்த பலனையும் தரலாம். இன்னும் ஒரு சில நேரங்களில் பணவாக்க முறைகளும் , நிதியியல் முறைகளும் பலனைத் தராமல் போகலாம். அச்சூழ்நிலைகளில் பொதுவான ஒரு சில முறைகளை கடைபிடிக்க வேண்டியிருக்கலாம். எனவே பொருளாதாரத்தில் நிலவும் நிலைகளுக்கேற்பத் தகுதியான கொள்கைகளையும் முறைகளையும் பயன்படுத்த வேண்டியது அவசியம்

பண வீக்கச் சிக்கலை எடுத்துக்காட்டாகக் கொண்டு மேற்கொண்ட கருத்தை விளக்கலாம்

பணத்தின் அளவில் தோன்றும் மாற்றங்களினால் விலையில் மாற்றங்கள் தோன்றுவதாக பணக்கொள்கையை ஏற்றுக்கொள்பவர்கள் குறிப்பிடுகிறார்கள். இது நிலைமையை மிக எளிமையாக குறிப்பிப்பிடுவதாகும். இக்கருத்து முற்றிலும் தவறுமல்ல, சரியுமல்ல. நிதிக் கொள்கையை ஏற்றுக் கொண்டிருப்பவர்கள் விலை மாற்றத்திற்கு நுகர்வோர் , வணிகர்கள் , அரசு ஆகிய எல்லோரும் சேர்ந்து மேற்கொள்ளும் மொத்தச் செலவில் சேர்ந்து மேற்கொள்ளும் மொத்தச்

குறிப்பு

செலவில் தோன்றும் மாற்றமே காரணம் என்று குறிப்பிடுகிறார்கள் . இதுவும் எப்போதும் சரியல்ல

பணவீக்கச் சிக்கல் பணக் கொள்கையையோ , நிதிக் கொள்கையையோ மட்டும் சார்ந்திருப்பதில்லை, பொருளாதாரத்தில் எதிர்பாராமல் பல இடையூறுகளும் சிக்கல்களும் கையாள வேண்டியது மிகவும் அவசியமாகும்.

இந்தியாவைப் பொறுத்தமட்டில் வளர்ச்சிச் செலவுகளும் , வளர்ச்சிக்காக அல்லாத செலவுகளும் மிக விரைவாக அதிகரித்துக் கொண்டு செல்வதனால் மொத்தப் பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் அளிப்பைக் காட்டிலும் அவற்றின் மொத்தப் பணத் தேவை அதிகமாக இருக்கிறது, உணவு அத்தியாவசியப் பண்டங்கள் குறிப்பிட்ட வகை இயந்திரங்கள், பண்டங்கள் ஆகியவற்றில் பற்றாக்குறை இருப்பது உண்மைதான் ஆனால் மொத்த அளிப்பைக் காட்டிலும் அவற்றின் மொத்தப் பணத்தேவை அதிகமாக இருக்கிறது.

இந்நிலையைச் சமாளிப்பதற்கு கோட்பாடு அடிப்படையில் நிதிக்கொள்கையைப் பயன்படுத்தலாம் என்று நாம் குறிப்பிடலாம் . அரசு செலவைக் குறைக்க வேண்டும் வரிகள் மிகுதியாக்கப்பட வேண்டும் என்றெல்லாம் குறிப்பிடலாம். ஆனால் இந்நடவடிக்கைகள் பணவாட்டச் சூழ்நிலையை உருவாக்கிவிடும்.

எனவே நிலைமையைக் சமாளிக்க முழுக்க முழுக்க நிதிக் கொள்கையை மட்டும் பின்பற்றக் கூடாது. பணவாக்கக் கொள்கையை மட்டும் கடைபிடிக்க விரும்பும் பொது பண வீக்கத்தைக் கட்டுப்படுத்த வட்டி விகிதத்தை உயர்த்துதல், மைய பாங்கிடம் வாணிக பாங்குகள் வைத்திருக்கும் வைப்பு நிதி விகிதத்தை அதிகரித்தல் போன்ற நடவடிக்கைகளைப் பரிந்துரைக்கலாம்.

இந்நடவடிக்கைகளும் குறிப்பிட்ட அளவுக்குத் தான் பயன் தரக்தக்கவை. அதிகமான அளவில் பயன்படுத்தினால் பொருளாதாரத்தைச்சீர்குலைத்துவிடும்.மேற்குறிப்பிட்ட விளக்கத்திலிருந்து இந்தியாவில் பண வீக்கத்தைக் கட்டுப்படுத்த நிதிக்கொள்கை, பணக்கொள்கை மற்றும் பல கொள்கைகளைக் கையாளுவது மிகவும் அவசியமானது என்பது தெளிவாகிறது.

**முதலாவதாக** பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த வரவு செலவுத் திட்ட உபரியைத் ( வரிகள் மூலம்) தோற்றுவிக்க வேண்டும். அரசாங்கத்தின் செலவுகளைக் குறைத்து தேவையான அளவில் நிலை நிறுத்தி கொள்ள வேண்டும் ( நிதிக்கொள்கை)

குறிப்பு

**இரண்டாவதாக** நுகர்வோர் கடன்களை குறைக்க வேண்டும் எங்கு அவசரமாக உற்பத்தி அதிகரிக்க வேண்டுமோ அங்கு மட்டும் முதலீட்டுக் கடன்களை அனுமதிக்க வேண்டும் ( பணக்கொள்கை)

**மூன்றாவதாக** , கூலிக் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் உற்பத்தித் திறனுக்கு அதிகமாகப் பணக்கூலி அதிகரிப்பதை உறுதியாகத் தடுக்க வேண்டும் ( வருமானக் கொள்கை)

**நான்காவதாக** , சிறு சேமிப்புகளையும், பிற வகை சேமிப்புகளையும் மேற்கொள்ள வேண்டும். நிலம் மனைகள் ஆகியவைகளின் பேரங்களில் நிகழும் ஊக வாணிகத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். குறிப்பிட்ட துறைகளில் வரையறைக்குட்பட்ட பங்கீட்டு முறைகளையும் விலைக் கட்டுப்பாடுகளையும் பயன்படுத்த வேண்டும் ( பொதுக்கொள்கை)

## 14.4 வருமானம் சார்ந்த கொள்கைகள்:

“ தன்னார்வ ஊதியம் மற்றும் விலையிடல் வழிகாட்டுதல்கள் விலை ∴ ஊதிய முடக்கம் போன்ற கட்டாய கட்டுப்பட்டிற்கு மாறுபடும் ஒரு மாறுபாடு வரி அடிபடையிலான வருமானம் கொள்கைகள் “ ஆகும். கட்டுப்பாடு அனுமதிகளை விட விலை அல்லது ஊதியங்களை அதிகரிக்கும் நிறுவனங்கள் மீது அரசாங்க கட்டணம் விதிக்கப்படுகிறது.

நம்பகமான வருமானம் கொள்கை பணவீக்கத்தை தடுக்க உதவும் என்று நில பொருளாதார நிபுணர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். இருப்பினும், விலை சமிஞ்சைகளுடன் தன்னிச்சையாக தலையிடுவதன் மூலம் , இது பொருளாதார செயல்திறனை அடைவதற்கான ஒரு கூடுதல் பட்டியை வழங்குகிறது. இது சந்தையில் பொருட்களின் தரத்தில் பற்றாக்குறையையும் சரிவையையும் வழிவகுக்கும் மற்றும் அமல்படுத்தலுக்கான பெரிய அரசாங்க அதிகாரத்துவங்களைக் கோருகிறது. 1970 களின் ஆரம்பத்தில் அமெரிக்காவில் இது நடந்தது. ஒரு நன்மைக்கான விலை செயற்கை முறையில் குறைக்கப்படும்போது, அது குறைவான சப்ளை மற்றும் உற்பத்திக்கான அதிகமான தேவையை உருவாக்கிறது. இதனால் பற்றாக்குறையை உருவாக்குகிறது. குறைந்த வருமானம் கொண்ட பணவீக்கத்திற்காக , பணவீக்கத்தை எதிர்ப்பதற்கு வழிவகுக்கும் வகையில் வருவாய் கொள்கைகளை விட குறைவான விலையுயர்வை ( மிகவும் திறமையானது ) வருமானம் என்று சில பொருளாதார நிபுணர்கள் வாதிடுகின்றனர். சிலர் கட்டுப்பாடுகள் மற்றும் மிதமான மந்தநிலைகள் ஒப்பீட்டளவில் மிதமான பணவீக்கத்திற்கான முழுமையான தீர்வுகளாக இருக்கக் கூடும் என்று மற்றவர்கள் வாதிடுகின்றனர்.

குறிப்பு

இந்த தொழிற்சங்கங்கள் நம்பகத் தன்மை, வாய்ந்தவை மற்றும் பயனுள்ளவையாக இருக்கின்றன. தொழிலாளர் சங்கங்களில் ஏற்பாடு செய்யப்படும் தொழில் துறையின் கணிசமான துறையுடன் ஏகபோகங்கள் அல்லது தன்னலக் குழுக்கள் குறிப்பாக தேசியமயமாக்கப்பட்ட தொழில்துறை ஆகியவற்றால் மேலாதிக்கம் செய்யப்படும் பொருளாதாரத்தின் துறைகளுக்கு. இத்தகைய நிறுவனங்கள் ஊதியம் மற்றும் விலை ஒப்பந்தங்களின் கூட்டு பேச்சுவார்த்தைகள் மற்றும் கண்காணிப்புகளை செயல்படுத்துகின்றன.

மற்ற பொருளாதார வல்லுநர்கள் பணவீக்கம் அடிப்படையில் பணவியல் நிகழ்வு என்று வாதிடுகின்றனர் மற்றும் அதை சமாளிக்க ஒரே வழி பணம் அளிப்புகளை நேரடியாகவோ அல்லது வட்டி விகிதங்களை மாற்றுவதன் மூலமாகவோ உள்ளது. விலைவாசி , பணவீக்கம் மத்திய வங்கியின் பண உருவாக்கம் காரணமாக ஏற்படும் முந்தைய பணவீக்கத்தை ஒரு அறிகுறியாகும் என்று அவர்கள் வாதிடுகின்றனர் முற்றிலும் திட்டமிட்ட பொருளாதாரம் இல்லாமல் வருமானம் கொள்கையில் ஒருபோதும் பணியாற்ற முடியாது என்று அவர்கள் நம்புகிறார்கள் , பொருளாதாரம் மிகுந்த பணம் மற்ற பகுதிகளில் பரவலாக பாலிசிடம் இருந்து விலக்குகிறது.

## 14.5 உங்கள் முன்னேற்றத்தைச் சரிப்பார்க்க

. 1.பணத்தால் ஏற்படும் நன்மைகளை மிகைப்படுத்தவும், பணத்தால் விழையும் தீமைகளை குறைத்திடவும் ஒவ்வொரு நாட்டின் மைய வங்கியும் பின்பற்றும் கொள்கை பணக் கொள்கை எனப்படும்

2. ஒரு சில அடிப்படைக் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக பொதுச் செலவு, பொதுக் கடன் , வரி விதித்தல் போன்றவற்றை மாற்றியமைத்துக் கொள்வதற்கான கொள்கையை நிதியியல் கொள்கை அல்லது அரசிறைக் கொள்கை என்கிறோம்.

**கால்டரின் கோட்பாடு அல்லது கீன்சின் கோட்பாடு** :

பேராசிரியர் கால்டர் கீன்சின் கோட்பாடு அடிப்படையைக் கொண்டு ஒரு வருவாய்ப் பகிர்வு கோட்பாட்டு மாதிரியை உருவாக்கியுள்ளார். கால்டர் ஒரு நாட்டின் வருவாயை இரு பகுதிகளாகப் பிரிக்கின்றார் – ஒன்று கூலியின் பங்கு மற்றொன்று இலாபத்தின் பங்கு. நாட்டு வருவாயில் தொழிலாளர் பெறுகின்ற பங்கு கூலி ஆகும். இலாபம் என்பது சொத்து உள்ளவரின் பங்காகும் இலாபத்தில் வாரமும் வட்டியும் சேரும்.

**எடுகோள்கள்**

குறிப்பு

கால்டரின் வருமானப் பகிர்வு கோட்பாடு முழு வேலைவாய்ப்பு என்ற எடுகோளை அடிப்படையாகக் கொண்டது. எனவே நாட்டின் மொத்த உற்பத்தி அல்லது வருவாய் நிலையாக இருக்கும்.

தேசிய வருவாயில் கூலி (W) மற்றும் இலாபம் (°) அடங்கியிருக்கும். கூலி என்பதில் உடல் உழைப்புக் கூலியும், சம்பளம் அல்லது ஊதியமும் உள்ளடங்கும். இலாபத்தில் தொழில்முனைவோரது வருமானமும் சொத்துரிமையாளரின் வருமானமும் உள்ளடங்கியிருக்கும்.

தொழிலாளரது இறுதிநிலை நுகர்வு நாட்டம் முதலாளிகளது இறுதிநிலை நுகர்வு நாட்டத்தை விட அதிகமாக இருக்கும். இக்காரணத்தால் முதலாளிகளது இறுதிநிலை சேமிப்பு நாட்டம் கூலியாட்களின் சேமிப்பு நாட்டத்தை விட அதிகமாக இருக்கும்.

முதலீட்டு உற்பத்தி விகிதம் தவித்தியங்கும் மாறிவியாகும்.

அங்காடியில் நிலையான போட்டியின் இயல்புகள் அல்லது முன்னுரிமைச் சக்தி நிலவும்.

**கால்டரின் மாதிரி:**

கால்டரின் பகுத்தாய்வின் முக்கிய இயல்புகளை சில சமன்பாடுகள் மூலம் அறியலாம். மேற்கூறிய எடுகோள்களின் அடிப்படையில் தேசிய வருமானம் ( Y) கூலி வருமானம் ( W) இலாப வருமானம் இவற்றின் மொத்தத் தொகையாகும் எனவே நமக்கு கிடைப்பது.

$Y = W + P^{e}$ ....................................... (1)

இரண்டாவது சமன்பாடு வருமானச் சமநிலைக்கான அடிப்படை நிபந்தனையைக் கூறுகிறது. அதாவது திட்டமிட்ட முதலீடும் திட்டமிட்ட சேமிப்பும் சமமாக இருக்க வேண்டும். எனவே

$I = S$ ............................................ (2)

தேசீய வருமானத்தைப் போல பொருளாதாரத்தின் மொத்தச் சேமிப்பு (S) இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. கூலியிலிருந்து உருவாகும் சேமிப்பு Sw , மற்றொன்று இலாபத்திலிருந்து வரும் சேமிப்பு Sp எனவே

$S = S_w + S_p$ ……………………… (3)

குறிப்பு

Sw = Sw X W ………………………. (4)

Sw = கூலி ஆட்களின் சேமிப்பின் மொத்தம்

Sw x W= கூலியாட்களின் சேமிப்பு நாட்டத்தை கூலியாட்களின் வருமானத்தால் பெருக்குவது.

Sp = Sp X P ………………………… (5)

Sp x P = இலாபம் பெறுவோரது சேமிப்பின் நர்ட்டத்தை இலாப வருமானத்ால் பெருக்குவது

- S = Sw X W + SP x P………………………………(6)

I= Sw x W + Sp…………………………………………..(7)

W=Y-P…………………………………………(8)

என்பது I=Sw(Y-P) + SpxP

அதாவது I=P (Sp-Sw)xSwXY

எல்லாவற்றையும் Y யினால் வகுத்தால்…………….(9)

I/Y=P/Yx(Sp-Sw)+Sp-Sw)+Sw

அதாவது I/Y=P/Yx(Sp-Sw)+Sw

அமாற்றியமைத்த பிறகு 9 வது சமன்பாட்டை இவ்வாறு எழுதலாம்

∴ P/Y=I/Sp-SwxI/Y=Sw/(Sp-Sw)

எனவே I/Y ஏற்படும் எந்த அதிகரிப்பும் தேசீய வருமானத்தில் இலாபத்தின் பங்கை அதிகரிக்கும் இதற்கு Sp˙யும்; Sw ம் மாறாமலும் SP>SW ஆகவும் இருக்க வேண்டும்

Sp = இலாபம் பெறுவோரது சேமிப்பின் மொத்தம்.

பேராசிரியர் கால்டர் ஒரு எண்கணித எடுத்துக்காட்டு கொடுக்கிறார். அதாவதுSp என்பதை 50 சதவிகிதமாகவும Sw என்பதை 10 சதவிகிதமாகவும் I / Y என்பதை 20 சதவிகிதம் எனவும் கொள்கிறோம்.

10வது சமன்பாட்டி ன்படி P /Y ன் மதிப்பு வருமாறு:

$$1 / (50-10) \; X \; 20 - 10 / (50 - 10)$$

அதாவது 1/40 X 20 – ¼ = 25 சதவிகிதம்.

குறிப்பு

I/Y 21 சதவிகிதமாக அதிகரித்தால், P/Y 27.5 சதவிகிதமாக அதிகரிக்கும்.

மாறாக, Sw = 0 என நாம் வைத்துக் கொண்டால் மற்ற மாறிலிகள் மாறாதிருந்தால் ‶ P/Y என்பது 40 சதவிகிதமாக ஆகும். (P/Y) என்பது தேசிய வருமானத்தில் இலாபத்தின் வீதம்.

**முக்கிய முடிவுகள்:**

முதலாளிகள் மற்றும் தொழிலாளரது இறுதிநிலை சேமிப்பு நாட்டம் கொடுக்கப்பட்டிருக்கும்போது, தேசிய வருமானத்தில் இலாபத்தின் பங்கு மொத்த உற்பத்தியில் ( I/Y) முதலீட்டின் விகிதத்தைப் பொறுத்து அமைகிறது.

முழுவேலைவாய்ப்பு நிலையில் முதலீடு அதிகரிக்கும்பொழுது உற்பத்தியில் சேமிப்பின் விகிதத்தை (ஞ.⁚லு) அதிகரிக்கிறது. S/Y அதிகரிக்காவிடில் முதலீட்டுப் பெருக்கம் தொடர்ந்த விலைவாசி உயர்வை ஏற்படுத்தும்.

முதலாளிகள் குறைவாக சேமிக்கும் பொழுது , முதலுக்கான ஆதாயம் அதிகமாக இருக்கும். எனவே தேசிய உற்பத்தியில் இலாபத்தின் பங்கு அதிகமாக இருக்கும். அதாவது முதலாளிகள் அதிகம் செலவு செய்யும்பொழுது அவர்கள் அதிகம் சம்பாதிக்கின்றனர். இதற்கு எதிர்மாறானது தொழிலாளரைப் பொறுத்தவரையில் செயல்படும்.

கால்டர் SP > SW என அனுமானம் செய்திருப்பதால் முதலீட்டில் ஏற்படும் எந்த அதிகரிப்பும், இலாபத்திற்கு அதாவது முதலாளிக்கு சார்பாகவே வருவாயை மறுபகிர்வு செய்யும். அதேபோல், முதலீட்டுக் குறைவு இலாபத்திற்கு எதிராக வருமானத்தை மறுபகிர்வு செய்யும்.

**மாதிரியின் குறைகள்:**

கால்டரின் மாதிரி முழு வேலைவாய்ப்பை அடிப்படையாக கொண்டது. அது முழுவேலைவாய்ப்புக்கு குறைவான வருவாய் பங்கீட்டு நிலையைப் பற்றி எடுத்துக் கூறவில்லை.கூலி மற்றும் இலாபத்தின் பங்குகள் முதலீடு – வருமான விகிதத்தை அடிப்படையாகக் கொண்டவை என கால்டர் மாதிரி

குறிப்பு

குறிப்பிடுகிறது. ஆனால் சில நிபந்தனையின் பேரிலேயே இது உண்மையாக அமையும்.

அதாவது

அ) பிழைப்பூதியத்திற்குக் கீழே அங்காடிக் கூலி விகிதம் குறையாது.

ஆ) குறைவான அளவுக்குக் கீழே இலாபத்தின் பங்கு குறையாது.

இ) இலாப வீதத்திலிருந்து முதலீடு – உற்பத்தி விகிதம் தனித்துச் செயல்படும்.

முதலீடு - வருமான அதிகரிக்கையில், தேசீய வருவாயில் இலாபத்தின் பங்கு அதிகமாகும் என முதலாளிகள் மகிழ்ச்சியடைவர் என கால்டர் குறிப்பிட்டார். ஆனால் உண்மை வாழ்க்கையில் அது நிகழாது.1/Y தொடர்ந்து அதிகரித்தால் அதிகச் செலவு ஏற்படும். கூலி – விலை சுழல் தோன்றும். இந்த விளைவுகள் வருமானப் பகிர்வை நிர்ணயிக்கும்.கால்டரது கோட்பாடு வருவாய்ப் பகிர்வில் தொழில்நுட்ப வளர்ச்சியின் தாக்கத்தை புறக்கணித்துவிட்டது.தேசீய வருமானப் பகிர்வு நிர்ணயத்தில் மனித மூலதனத்தின் முக்கியத்துவத்தை இக்கோட்பாடு கருத்தில் கொள்ளவில்லை.கால்டரின் வருமானப் பகிர்வு மாதிரி நிலம் மற்றும் முதலின் பங்கினை ஒதுக்கித் தள்ளியதை சிலர் குறை கூறியுள்ளனர்.

மாதிரி வினாக்கள்

**தொலைதூர கல்வி - CBCS - (2019-2020 கல்வி ஆண்டு முதல்)**

**பேரியல் பொருளாதாரம் -I**

குறிப்பு

**நேரம்: 3 மணிநேரம்**

**மதிப்பெண்கள்: 75 பகுதி – A (10 x 2 = 20)**

**எல்லா கேள்விகளுக்கும் பதிலளிக்கவும்.**

1) பணவியல் கொள்கையின் முக்கியத்துவம் யாது ?

2) பேரியல் பொருளாதாரத்தின் கொள்கையைப் பற்றி விளக்குக.

3) நிதிக்கொள்கையின் முக்கிய நோக்கங்களை விவரிக்க ?

4) பேரியல் பொருளாதாரம் வரையறைச் செய்து, இதன் முக்கியத்துவத்தை விளக்குக.

5) தேசிய வருமானம் அளவிடுவதின் ஒரு முறையைத் தெளிவாக விளக்குக.

6) சே என்பவரின் சந்தை விதியினை விளக்குக.

7) முதலின் இறுதிநிலை ஆக்கத்தை விளக்குக.

8) முடுக்கித் தத்துவத்தை விளக்குக.

9) கெயின்சின் முதலீட்டுப் பெருக்கியை விளக்குக.

10) பணவியல் கொள்கையின் நோக்கங்கள் யாவை ?

**பகுதி – B (5 x 5 = 25 மதிப்பெண்கள்)**

**(அ) அல்லது (ஆ) எல்லா கேள்விகளுக்கும் பதிலளிக்கவும்**

1. a) பேரியல் பொருளாதாரத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி விவாதி or
   b) பேரினப் பொருளாதாரத்தின் வரையறைகளை எழுதுக
2. a) தேசிய வருவாய் ஆய்வின் முக்கியத்துவத்தை விளக்குக or
   b) தேசிய வருவாய் கணக்கீட்டிலுள்ள சிரமங்களை எழுதுக.
3. a) சேயின் அங்காடி விதியினை சுருக்கமாக விளக்குக. or
   b) விளைவுள்ள தேவை பற்றிய கருத்தினை விவாதி
4. a) நுகர்வுச் சார்பின் பண்புகளைக் குறிப்பிடுக or
   b) பெருக்கியின் பல்வேறு கசிவுகளை ஆராய்க
5. a) பணவியற் கொள்கையின் கருவிகள் யாவை ? or
   b) பணவீக்கத்தைக் கட்டுபடுத்தும் நிதிக் கொள்கை முறைகளை விவரிக்க.

**பகுதி – C (3 x 10 = 30)**

**5 கேள்விகளில் 3 க்கு பதிலளிக்கவும்.**

16. நுண்ணினப் பொருளாதாரத்திற்கும் பேரியல் பொருளாதாரத்திற்க்கும் உள்ள தொடர்பினைப் ஆராய்க

17. தேசிய வருவாய் என்பதை வரையறு அதனை கணக்கிடும் பல்வேறு முறைகளை விளக்குக

18தொன்மை மற்றும் கீன்சின் வேலைவாய்ப்பு மற்றும் வருவாய் நிர்ணயக்கோட்பாடுகளை பற்றி ஒப்பிடுக

19. கீன்சின் உளவியல் நுகர்வு விதியினை கூறி அதனை விளக்கி அதன் வரையறைகளையும் கூறுக

20. வளர்ந்துவரும் பொருளாதாரத்தின் பணவியற்கொள்கையின் பங்கு மற்றும் வரையறைகலை விவாதி .